செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்
திட்ட இயக்ககம்

# மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி

முனைவர் கோ.விசயராகவன்
இயக்குநர்

தமிழ்நாடு அரசு
2021

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி |
| முதல் பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2052<br>துலை (ஐப்பசி) 2021 நவம்பர் |
| பதிப்புரிமை | : | தமிழ்நாடு அரசு |
| பக்கம் | : | 8 + 312 |
| தாள் | : | 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ |
| விலை | : | உருபா |
| நூலின் அளவு | : | டெம்மி 1 /8 |
| நூல் வெளியீடும்,<br>கிடைக்குமிடமும் | : | **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,**<br>எண் 75, முதல் தளம்,<br>நகர் நிருவாக அலுவலக வளாகம்,<br>எம்.ஆர்.சி. நகர்,<br>சாந்தோம் நெடுஞ்சாலை,<br>சென்னை–28.<br>தொலைபேசி எண்: 044–29520509<br>044–29520462<br>மின்னஞ்சல் முகவரி :<br>dtedp1974@gmail.com |
| அச்சீடு | : | அரசு மைய அச்சகம்,<br>சென்னை–600 079. |

**தங்கம் தென்னரசு**
மாண்புமிகு அமைச்சர்,
தொழில்துறை, தமிழ் ஆட்சிமொழி,
தமிழ்ப் பண்பாடு (ம) தொல்லியல் துறை

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

# வாழ்த்துரை

**“உலகுக்குத் தமிழ்மொழியின் உயர்வுதனைக்**
**காட்டுவது சொற்பெருக்காம்!”**

– பாரதிதாசன்

தமிழ்ச்சொற்களின் வளத்தைக் காட்டுவதுடன் நெடுங்காலமாகத் தமிழ்மொழியைக் காத்துநிற்பவை தமிழ் இலக்கியங்கள் எனலாம். அக்காலத் தமிழ் மக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டவல்லவை தமிழ் இலக்கியங்கள். இலக்கியங்களின் வாயிலாகப் பழந்தமிழர் வாழ்வியலில் புதைந்திருக்கும் தொழில்நுட்பங்கள் வரை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. அறிவியல் தொழில்நுட்பங்கள் அளவிறந்து வளர்ந்துவரும் இக்காலத்தில் அவற்றை அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் அவரவர் மொழியிலும் கலைச்சொற்களை உருவாக்கிட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

மாணவப் பருவத்திலேயே இலக்கியம் படிக்கும் மாணவர்களுக்குத்தான் தமிழ்மொழியின் சொல்வளம் அறிவில் விதந்து நிற்கும். அவர்கள் எந்தத் துறையில் வல்லுநர்களாகப் பிற்காலத்தில் உருவானாலும் கலைச்சொற்களை உருவாக்கும் திறன் இலக்கியச் சொல்வளம் பெற்றவர்களுக்கே எளிதே கைவரப்பெறும்.

‘புதிய புதிய துறைகள் தோன்றுந்தொறும், ஏராளமான கலைச்சொற்கள் தோன்றுதற்கும், வழங்கும் சொற்களில் புதிய பல பொருள்கள் இணைந்து விரிவடைவதற்கான சூழ்நிலையில் அகரமுதலி மிகவும் இன்றியமையாத நூலாகிறது’ என்று 1974இல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தை உருவாக்கி **மேனாள் மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

இதுபற்றி **மாண்புமிகு முதலமைச்சர் தளபதி திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஒரு செயலியை உருவாக்கி, அதன்வழி பல்வேறு துறைசார்ந்த வல்லுநர் குழு அமைத்து புதிய கலைச்சொற்களைத் திரட்டி சொற்குவையில் பதிவேற்றம் செய்யலாம் என்று அறிவிறுத்தினார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் உருவாக்கியுள்ள மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலியானது யாரொருவரின் உதவியுமின்றித் தாமே இலக்கியம் கற்போருக்கு அருந்துணையாக விளங்குவது.

அவ்வழியே இலக்கியம் கற்றோர் இலக்கியச் சுவை பெறுவதுடன் தமிழ்மொழியின் சொல்வளமும் பெறுவதற்கு வாய்ப்பிருக்கும். தமிழ்ச் சொல்வளம் கைவரப் பெற்றோர், பிற்காலத்தில் பாவலராகலாம்; எழுத்தாளர் ஆகலாம்; எந்த துறையிலும் நுழைந்தாலும் அதை எடுத்துரைக்கும் வல்லுநராகலாம்.

இவ்வாறு தமிழ்மொழியின் வளர்ச்சியை இலக்காக வைத்து இயங்கிவரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் உருவாக்கிவரும் அகராதிகளில் 'மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி' ஒன்று.

இவ்வியக்ககம் பல்வேறு கோணங்களில் அகராதிகளை உருவாக்குவதோடு, தமிழ்க் கலைச்சொற்களை உருவாக்குவது உருவாக்கின கலைச்சொற்களைச் சொற்குவை வலைத்தளத்தில் 'சேமிப்புச் செய்தல்' எனப் பணிகள் பலவற்றையும் செய்து தமிழுலகத்திற்கு நன்மை பல அளித்து வருகிறது. இந்த அகராதியைச் சிறப்புற வெளிக்கொணர்ந்துள்ள இந்த இயக்ககத்தின் இயக்குநர், அகரமுதலிப் பணியாளர்கள், அனைவருக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துகளுடன்



**(தங்கம் தென்னரசு)**

**மகேசன் காசிராஜன்** இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை

தலைமைச் செயலகம்
சென்னை – **600 009.**

நாள்: **29.09.2021**

## அருந்தமிழுக்கு அணிகலம்

தமிழுணர்ச்சி – தமிழ் மலர்ச்சி – தமிழ் மணம் – தமிழ் ஒளி – தமிழ் முரசு – தமிழ்க் கலை – தமிழ் விருந்து – தமிழ் வெள்ளம் தமிழ்நாட்டின் மாட்சியாகும்.

தன்னேரில்லாத மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் 'எங்கும் தமிழ்', 'எதிலும் தமிழ்', 'எல்லாம் தமிழ்' என்ற நிலை ஓங்கி வளர்கின்ற சூழலில் மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சரின் சீரிய வழிகாட்டுதலில் தமிழ் வளர்ச்சி துறை தகத்தகாயமாக மின்னுகிறது.

ஒரு மொழியின் சொல்வளம் என்பது அம்மொழியில் வழங்கும் சொற்களின் எண்ணிக்கையைச் சார்ந்தது. 1500 ஆண்டுக்கால வரலாறு கொண்ட ஆங்கில மொழியில் 10,22,000 சொற்கள் வழங்குகின்றன. 98 நிமிடத்திற்கு ஒரு சொல் ஆங்கிலத்தில் வழக்கிற்கு வருகிறது. நாளொன்றுக்கு 14 சொற்கள் ஆங்கில வழக்கில் ஏறுகின்றன. ஆண்டொன்றுக்கு 8500 சொற்கள் நிலைபெறுகின்றன. ஆனால், 3200 ஆண்டுக்கால வரலாறு கொண்ட தமிழ் மொழியில் வழங்கும் சொற்களின் எண்ணிக்கை குறித்த கணக்கும், அச்சொற்களின் பட்டியலும், அவற்றின் வழக்காற்று விவரங்களும் நம்மிடையே உறுதியாக இல்லை என்ற குறையைக் களையும் நோக்கில், தமிழக அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் அகரமுதலிகளைத் தொகுத்து வழங்குவதைச் சிறப்பான பணியாகக் கொண்டு செயலாற்றுகிறது.

தொன்மைமிகு தமிழ் இலக்கியங்களை மாணவர்கள் தாங்களாகவே கற்கும்படி சொற்களுக்கு இணையான பொருளைத் தெளிவதற்கு **மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி** உதவும் என நம்புகிறேன்.

நான் பள்ளியில் பயின்றபோது, மாணவர்கள் அனைவரும் ஆங்கிலக் கையகராதி, உலக நாடுகள் வரைபடம், வரைகலைப் பேழை ஆகிய மூன்றையும் எப்போதும் வகுப்பிற்கு எடுத்து வர வேண்டும் என்று வலியுறுத்திய நினைவு எனக்கு வருகிறது.

நல்ல மாணவன் எந்த நிலையிலும் ஒரு சொல்லுக்குப் பொருள் காணும் பயிற்சியை அகராதியின் வழியாகக் கண்டு தெளிகிற பழக்கம் அமைய வேண்டும். அப்படிப்பட்ட நல்லுணர்வுக்கு ஊக்கம் தருகின்ற வகையில் மேற்குறித்த இந்தச் சிற்றகராதி வெளியிடப் பெறுகின்றது.

திராவிட மொழிகளின் பழம்பெருமைக்கும், கலப்பில்லாத தூய மொழி வளம், இலக்கிய வளம், பண்பாட்டு வளம் ஆகியவற்றுக்கு அரணாகத் தமிழ் வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் செழுமையான முறையில் பல அகராதிகளை வெளியிட்டு தமிழ் மொழியின் ஆக்கத்திற்கு அருந்தொண்டாற்ற வேண்டுகிறேன்.

அன்புடன்

29/9/2021

**(மகேசன் காசிராஜன்)**

**முனைவர் கோ.விசயராகவன்**
இயக்குநர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்

நகர் நிருவாக அலுவலக வளாகம்
முதல்தளம், எண்.75
சாந்தோம் நெடுஞ்சாலை,
எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

# பதிப்புரை

**"தனிமைச் சுவையுடைய சொல்லை – எங்கள்**
**தமிழினும் வேறெங்கும்யாம் கண்டதில்லை!"**

– பாரதிதாசன்

உலகெங்கணும் உள்ள ஒவ்வொரு மொழியிலும் சொற்களை அதிகமாகக் கையாள்பவர்கள் அம்மொழிகளில் அகரமுதலி உருவாக்குநர்களே!

அந்த வகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தமிழ்மொழியை அதிகம் கையாளும் பணியைச் செய்கிறது. மேலும் அகரமுதலியை உருவாக்குவது மட்டுமல்லாமல் தமிழ்ச் சொற்களின் தோற்றத்தை ஆராய்வதுடன், காலந்தோறும் சொற்களின் மாற்றங்களையும் பதிவு செய்கிறது.

தமிழக அரசின் ஆணைப்படி, 'தமிழ்க் கலைக்கழகம்' என்ற அமைப்பை நிறுவி மாதந்தோறும் ஆயிரம் சொற்கள் என்ற இலக்கு வைத்து, பல்துறைகளுக்குமான கலைச்சொற்களை (Technical terms) இவ்வியக்ககம் உருவாக்கி வருகிறது.

தமிழ்மொழி தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை அன்றாடம் உருவாக்கப்படும் கலைச்சொற்கள் சொற்குவையில் சேர்க்கப்படுகின்றன. சொற்குவை வலைதளத்தில் இருந்து இச்சொற்களை எடுத்து உலகில் யாரும் பயன்படுத்திக் கொள்ளலாம். அகராதிப் பணிகளைத் தவிர அகராதிச் சார்ந்த நூல்களையும் சிறிய தலைப்பிலான அகராதிகளையும் இவ்வியக்ககம் உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

அவற்றுள் ஒன்றுதான் **"மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி"**. மாணவர்கள் ஆசிரியர்களின் எந்த உதவியுமின்றித் தமிழ் இலக்கியங்களைப் பயில்வதற்காக மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலிச் சொற்களின் பொருள்களைக் கூறுவதுதான் **மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி.**

இந்த அகராதியைப் பயன்படுத்தி இலக்கியம் பயிலும் மாணவர்களுக்கு இலக்கியப் புலமையோடு சொல் வளமும் நன்கு கைவரப்பெறும். சொற்களின் அமைப்புகளும் அவர்களுக்குப் புரியக்கூடியதாக இருக்கும். எனவே அவர்கள் பிற்காலத்தில் எந்தத்துறையில் பணியாற்ற முன்வந்தாலும் அந்தத் துறையில் தேவையான கலைச்சொற்களை உருவாக்கும் திறன் அவர்களுக்கு வந்துவிடும்.

அந்தவகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலியின் முதல் தொகுதியை வெளிக்கொணர்ந்துள்ளது. பழந்தமிழ் இலக்கியத்தில் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களான எட்டுத்தொகை நூல்களில் உள்ள இலக்கியச் சொற்களையும் அவற்றுடன் திருக்குறளில் உள்ள சொற்களையும் மட்டும் தொகுத்து மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலியின் முதல்தொகுதி வெளியிடப்பெறுகிறது.

அகரமுதலி இயக்ககத்தின் செயற்பாடுகள் அனைத்திற்கும் பல வகையிலும் ஊக்கமளித்துவரும் **மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும், மாண்புமிகு தொழில்துறை, தமிழ்ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் **திரு.தங்கம் தென்னரசு** அவர்களுக்கும், இயக்ககப் பணிகளில் எங்களை ஆற்றுப்படுத்தும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசு செயலாளர் **திரு. மகேசன் காசிராசன்** அவர்களுக்கும், இந்த அகராதியைச் சிறப்பாக உருவாக்கிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மேனாள் இயக்குநர் திரு. த.காமராசு அவர்களுக்கும் மற்றும் இயக்ககப் பதிப்பாசிரியர்கள் முனைவர் மா.பூங்குன்றன், திரு.சு.வீரவேலு, முனைவர் தி.பாலசுப்பிரமணியன், திரு.கி.தமிழ்மணி, மேனாள் பதிப்பாசிரியர்கள் முனைவர் மு.கண்ணன், முனைவர் மு. கோமதிவள்ளியம்மை, உதவிப் பதிப்பாசிரியர் திரு. ஏ. காந்தி, தொகுப்பாளர்கள் திரு.வே.பிரபு, திரு.கி.இராமர், திருமதி ஜெ. சாந்தி, முனைவர் வே. கார்த்திக், திருமதி கு. சங்கீதா, கணிப்பொறியாளர்கள் திருமதி க.கஸ்தூரி, திரு.ப.தீபக், மேனாள் கண்காணிப்பாளர் திரு. ஆ.சுந்தரவரதன், ஓவியர் சா.கி.கணேசன், கண்காணிப்பாளர் திருமதி ஆ.மு.பிந்து (ம) நிருவாகப் பணியாளர்கள் பா.சரண்யா, நா.பாலகிருஷ்ணன், வெ.சுதாகர், சீ.ஸ்ரீகாந்த், து.ரஜினிகாந்த், இரா.கற்பகம், ஆ.குணசுந்தரி உள்ளிட்ட அனைத்து பணியாளர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(கோ.விசயராகசன்)**

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

### பதிப்பாசிரியர்கள்

முனைவர் மா. பூங்குன்றன்
(ஒருங்கிணைப்பாளர்)

திரு சு. வீரவேலு

முனைவர் மு. கண்ணன்

முனைவர் தி. பாலசுப்பிரமணியன்

திரு. கி. தமிழ்மணி

முனைவர் மு. கோமதிவள்ளியம்மை

திரு. ஏ. காந்தி,
உதவிப் பதிப்பாசிரியர்

### தொகுப்பாளர்கள்

முனைவர் வே. கார்த்திக்

திரு. கி. இராமர்

திருமதி ஜெ. சாந்தி

திரு. வே. பிரபு

திருமதி கு. சங்கீதா

திருமதி க. கஸ்தூரி
கணிப்பொறியாளர்

திரு. ப. தீபக்
கணிப்பொறியாளர்

**அஃகாமை** (பெ.) – குறையாமை (குறள்.178).

**அஃகி** (வி.) – நுண்ணியதாகி (குறள்.175).

**அஃகியோன்** (வி.) – குறைவுற்றன் (குறு.346:8).

**அஃகு** (வி.) – நுண்ணியதாகி (குறள். 175).

**அஃதான்று** (வி.) – அஃது அல்லாமல் (அக.98:25-7).

**அஃது** (பெ.) – சுட்டுப்பெயர் (அக.6:15).

**அஃதே இனச்சொல்** – அதனையே (நற்.128:10).

**அக்குளு** (பெ.) – அக்குள் கூச்சம் (கலித்.94:20).

**அகடு** (பெ.) – 1.வயிறு (புற.387:1-4). 2.நடு இடம்(நற்.103:5). 3.உள்ளிடம் (புற.390:21-2). 4.உடலின் உள்வாய் (கலி:94:41).

**அகத்தது** (பெ.) – மனத்திலுள்ளது (குறள்.702).

**அகத்தர்** (பெ.) – 1.உள்ளிருப்பினர் (கலி.23:3-4).2.உள்ளிடத்தவர் (கலி.25:31).

**அகத்தார்** (பெ.) – உள்ளிடத்தார் (குறள்.745).

**அகத்தோர்** (பெ.) – உள்ளே உள்ளோர் (புற.28:11).

**அகநாடு** (பெ.) – உள்நாடு (மதுரைக். 49).

**அகப்பட்டது** (வி.) – பிடிபட்டுவிட்டது (கலி.147:20-1).

**அகப்பட்டி** (பெ.) – சுருங்கி வேண்டியவாறு ஒழுகும் கீழ்மகன் (குறள்.1074).

**அகப்படு** (வி.) – 1.கைப்பற்று (புற.72:8-9). 2.பிடிபடு(கலி.104:49). 3.பிடிபடச்செய் (கலி.142:26).

**அகம்** (பெ.) – 1.மனம் (குறு.137:1). 2.பிடிபடு (குறு.348:54).3.வீடு (குறு.370:5).4.உள்(நற்.203:2-3).5.இடம்(நற்.294:4). 6.மார்பு(நற்.398:8-9). 7.பின்னல் (அக.353:20). 8.உள்ளிடம் (புற.28:11).9.எண்ணம்(குறள்.708). 10.சுருங்குதல் (குறள்.1074).

**அகமடல்** (பெ.) – உள்ளிதழ் (நற்.203:3).

**அகமனை** (பெ.) – ஓடத்தின் உட்கட்டை (ஐங்.17:8).

**அகரு** (பெ.) – அகில் என்னும் ஒருவகை மணமுள்ள மரம் (பரி.12:5).

**அகல்** (பெ.) – 1.தீபம் ஏற்றும் தகழி (அக.19:17). 2.தொன்னை (புற.209:4-5). 3.உண்கலம் (புற.269:4).

**அகவன் மகள்** *(பெ.) – பாணர் மகள் (குறுந். 23:3).*

**அகவிதழ்** *(வி.) – உள்ளிதழ் (கலித். 77:7).*

**அகவு தல்** *(வி.) – பாடுதல் (பதிற்றுப். 43:28).*

**அகற்று தல்** *(வி.) – விரிவுபடுத்துதல் (புறநா. 26:3).*

**அகை தல்** *(வி.) – 1. தளிர்த்தல் (கலித். 74:5). 2.எரிதல் (கலித். 139:26).*

**அகைத்தல்** *(பெ.) – தளிர்த்தல், கிளைத்தல் (புறநா. 159:9).*

**அங்கண்** *(பெ.) – 1.அழகிய கண். 2.கண்ணோட்டம் (கலித். 37:22).*

**அங்கணாளன்** *(பெ.) – கண்ணோட்ட முடையவன் (கலித். 144:70).*

**அசா** *(பெ.) – துன்பம் (குறுந். 338).*

**அசாவிடு தல்** *(வி.) – இளைப்பாறுதல் (கலித். 132:3).*

**அசைதல்** *(பெ.) – இளைப்பாறுதல் (புறநா.141:3) - இராத் தங்குதல் (அகநா.63).*

**அசைவிடு தல்** *(பெ.) – இளைப்பாறுதல் (பரிபா. 6:2).*

**அசோகம்** *(பெ.) – ஒருவகை மரம் (கலித்.57:2).*

**அஞ்சு** *(பெ.) – அச்சம் (புறநா. 41).*

**அட்டரக்கு** *(பெ.) – உருக்கிய அரக்கு (நற்.193:1).*

**அட்டில்** *(பெ.) – சமையலறை (நற்.30:12).*

**அட்டிலோள்** *(பெ.) – சமைப்பவள் (நற்.120:9).*

**அட்டு** *(பெ.) – 1.அழித்து (குறு.173:3-4). 2.கொன்று (குறு.321:5) .3.சமைத்து (அக.316:3-4). 4.வென்று (புற.107:7). 5.சமைக்கப்பட்டு (புற.113:2) . 6.குற்றி (நற்.227:2). 7.வருத்தி (கலி.103:40-1).*

**அடக்கம்** *(பெ.) – 1.மனம்,மொழி மெய்கள் தீயவழியில் செல்லாது அடங்கும் (குறள்.121).2.செயற்படாது இருத்தல் (கலி.32:8). 3.மன அடக்கம் (கலி.47:4).4.வேண்டியவாறு ஒழுகாமை (கலி.82:9-10).*

**அடக்கல்** *(பெ.) – 1.பிணத்தை அடக்கம் செய்தல் (புற.93:11). 2.அடங்கச் செய்தல் (குறள்.126).*

**அடங்கல்** *(பெ.) – 1.பணிதல் (புற.354:1-2). 2.ஐம்புலன்கள் தன் வசமாதல் (குறள்.130).*

***அடங்கலள்*** *(பெ.) – பணிந்திலள் (ஐங்.68).*

***அடங்காது*** *(வி.) – தணியாது (புற.207:9).*

***அடங்காமை*** *(பெ.) – ஐம்பொறிகள் நல்ல வழியில் செல்லாமை (குறள்.121).*

***அடங்கான்*** *(வி.) – தணியான் (அக.126:14-5).*

***அடங்கிய கற்பு*** *(பெ.) – ஆறிய கற்பு (அமைதி நிலையில் வெளிப்படும் கற்பு) (குறு.339:7-8).*

***அடங்கு*** *(வி.)– 1.குறை (நற்.18:8). 2.நீங்கு (நற்.300:8).3.இல்லையாகு (அக.175:15). 4.வேகம் குறை (அக.224:2). 5.நீண்டு (புற.135:5) . 6.தங்கு, ஒடுங்கு (பதி.45:2).*

***அடங்கு தல்*** *(பெ.) – 1.நெருங்குதல் (கலித். 85:6). 2.நின்றுபோதல் (கலித். 13:7). 3.மறைதல் (கலித். 78:15).*

***அடர்*** *(பெ.) – 1.தகடு (அக.9:4). 2.நெருங்குதல் (அக.72:17).*

***அடர்*** *(வி.) – நெருங்கு (அக.181:23).*

***அடர் தல்*** *(பெ.) – தட்டியுறுவாக்குதல் (புறநா. 29:2).*

***அடார்****(பெ.) – புலி முதலிய விலங்குகளை அகப்படுத்தும் பொறி (புறநா. 19:6).*

***அடல்*** *(பெ.) – 1.கொல்லுதல் (அக.45:17). 2.வெல்லுதல் (புற.335:1).3.சமைத்தல் (புற.393:4). 4.வருத்துதல் (குறள்.206). 5.கெடுத்தல் (குறள்.343). 6.செலுத்தல் (குறள்.35:3).*

***அடி*** *(பெ.) – 1.கால் (குறு.7:1-2).2.கீழ்ப் பகுதி (குறு.89:1). 3.பாதம் (குறு.38:3). 4.குளம்பு (குறு.243:1).5.அடிச்சுவடு (குறு.262:5-8).6.விரல்(நற்.241:2). 7.உள்ளங்கால் (அக.55:3). 8.அடி வைப்பு (அக.105:9-10).9.அம்பின் குதை (அக.161:2-3).10.காலைப் பெயர்க்கும் ஒலி (அக.276:3).11.கணுக்கால் (புற.7:2).*

***அடிக்கீழ்*** *(பெ.) – "உன் பாதத்தின் கீழ் வாழ்வேன்" என்னும் பொருள் கொண்ட ஒரு வணக்கச் சொல் (புறநா. 67:12).*

***அடிசில்*** *(பெ.) – 1.உணவு (அக.394:11). 2.சோறு (புற.188:5).*

***அடி சேர்தல்*** *(பெ.) – வீழ்ந்து வணங்குதல் (கலி.89:15).*

***அடிதொடு குன்று*** *(பெ.) – வணங்கப்படும் குன்று (பரி.8:70).*

**அடி தொடு தல்** *(வி.) – பெரியோரின் பாதந் தொட்டு வணங்குதல் (கலித். 94:36).*

**அடிப்படுத்துதல்** *(பெ.) – பணியச் செய்தல் (பதி.81:15).*

**அடி புதை தொடு தோல்** *(பெ.) – செருப்பு (அக.101:9).*

**அடிமை** *(பெ.) – தொழும்பு, பிறர்க்குக் கட்டாயத் தொண்டு செய்யும் நிலைமை (குறள். 608).*

**அடிவரை** *(பெ.) – மலையடிவாரம் (கலித். 86).*__அடியகம்__ *(பெ.) – பாதச் சுவட்டின் இடம் (அக.155:11).*

**அடியுறை** *(பெ.) – 1.அடிமை (புற.67:12). 2.வழிபட்டு உறைதல் (கலி.140:10-1).*

**அடிவர்** *(பெ.) – அடிமையானவர் (கலி.88:4).*

**அடு** *(வி.) – 1.கொல் (குறு.198:5-6). 2.அவி (நற்.154:9). 3. காய்ச்சு (நற்.175:9). 4.சார் (நற்.278:2). 5. அழி (நற்.369:10-1). 6. வெல் (அக.106:10-11). 7. சமை (புற.32:1). 8. கட (புற.376:18). 9. சுடு (பதி.20:20). 10. மறை (பதி.51:7-8). 11. பதப்படுத்து (குறள்.1090).*

**அடுக்கம்** *(பெ.) – 1.பக்கம் (குறு.69:4). 2.மலைப்பக்கம் (குறு.90:2-3). 3. படுக்கை (அக.2:7). 4.அடுக்கு (அக.52:5). 5. அரை மலை (புற.2:20-3). 6. பக்க மலை (ஐங்.220). 7.அரைமலை (புறநா. 151:10 -11). 8.மலைச்சாரல் (புறநா.168:2). 9.பாறை (கலித். 44:2).*

**அடுக்கல்** *(பெ.) – 1.மலை (நற்.22:1). 2.பக்கமலை (அக.248:10). 3. ஒன்று பலவாக அடுக்குதல் (பரி.3:44). 4.ஒன்றோடு ஒன்று சேர்த்தல் (பரி.3:44-5).*

**அடுக்கிய கோடி** *(பெ.) – பல கோடி (குறள்.954).*

**அடுக்கும்** *(வி.) – பொருந்தும் (அக.16:4).*

**அடுங்கால்** *(வி.) – துன்பம் செய்யும் பொழுது (குறள்.1166).*

**அடுத்தது** *(பெ.) – சேர்ந்தது (குறள்.706).*

**அடுத்து** *கு.வி.எ – மேன்மேல் (குறள். 621).*

**அடுதல்** *(வி.) – 1.கொல்லுதல் (புறநா.36:1). 2.குற்றுதல் (புறநா. 227:2).*

**அடுநன்** *(பெ.) – கொல்லுபவன் (புற.56:13).*

***அடுநை*** *(வி.) – கொல்வாய் (புற.36:1).*

***அடை*** *(பெ.)– 1.இலை (குறு.246:2). 2.வயல் (அக.84:14). 3.அடைப்பு (அக.311:11). 4.ஒருவகைப் பணியாரம் (புற.103:1). 5.சேர்த்துதல் (கலி.107:32-33).*

***அடை*** *(பெ.) – 1.சேர்ப்பிக்கை (கலித். 115:18). 2.இலை(புறநா.266:3).*

***அடை*** *(வி.) – 1.சேர் (குறு.71:1-2). 2.முகந்த (அக.275:2).*

***அடை த்தல் வி*** *(பெ.) – 1.கதவு சாத்துதல் (புறநா. 151:10). 2.வழி தடுத்தல்(குறள்.38). 3.பூட்டுதல், தாழிடுதல் (குறள். 71).*

***அடைகரை*** *(பெ.) – கரைபாக்கம் (குறுந்.175).*

***அடைச்சு தல்*** *(வி.) – அடைவித்தல், சேரச் செய்தல் (கலித்.51:2-3).*

***அடைதரும்*** *(வி.) – 1.வரும் (நற்.165:56). 2.சேரும் (அக.279:16-7).*

***அடைதல்*** *(வி.) – முயங்குதல் (அக.58:9).*

***அடைந்திசினோர்*** *(வி.) – சேர்ந்தவர் (குறு.268:6).*

***அடைநீர்*** *(வி.) – சேர்ந்த தண்ணீர் (அக.275:2).*

***அடையல்*** *(பெ.) – செருப்பு வகை (பரிபா.21:7).*

***அடையாது*** *(வி.) –சேராமல் (நற்.343:1-2).*

***அண்*** *(பெ.) – பொருந்துதல் (அக.32:21).*

***அண்டர்*** *(பெ.) – 1.இடையர் (குறு.117:3-4). 2.பகைவர் (பதி.88:9).*

***அண்டர் மகளிர்*** *(பெ.) – இடைக்குல மங்கையர் (அக.59:5-4).*

***அண்ணணித்து*** *(வி.) – மிகவும் அணிமையுள்ளது (கலி.108:35-6).*

***அண்ணல்*** *(பெ.) – 1.தலைமை (குறு.260:5). 2.உயர்ச்சி (நற்.236:8). 3.பெருந்தகைமை (நற்.273:7). 4.தலைவன் (புற.42:1). 5.சிவபெருமான் (புற.55:4). 6.அரசன் (புற.129:5). 7.திருமால் (பரி.1:30).*

***அண்ணலை*** *(வி.) – தலைமையை யுடைய (கலி.52:15).*

***அண்ணாந்து*** *(வி.) – 1.தலைநிமிர்தல் (புறநா.47:8). 2.நிமிர்ந்து நிற்றல் (நற்.10:1). 3.வாய் திறத்தல் (குறள்.255). . 4.தலையெழுத்து (புற.47:8).*

***அணங்கல்*** *(வி.) – வருத்தாதே (நற்.358:5).*

**அணங்கியோள்** *(பெ.) – 1.வருந்தச் செய்தவள் (குறு.119:4). 2.வருந்தினவள் (குறு.259:6).*

**அணங்கியோன்** *(பெ.) – வருந்தியவன் (ஐங்குறு.182).*

**அணங்கினள்** *(வி.) – வருத்தத்தைத் தருபவள் (குறு.70:2).*

**அணங்கு** *(பெ.) – 1.வருத்தம் (குறு.136:1-2). 2.தெய்வம் (குறு.308:2). 3.தெய்வப் பெண் (குறு.337:4-5). 4.வீற்றுத் தெய்வம் (நற்.9:6). 5.வருத்துதல் (நற்.39:10-11). 6.துன்பம் (நற்.744:6). 7.பேய் (நற்.319:4-6). 8.நோய் (அக.98:10). 9.தெய்வத் தன்மை (அக.114:15). 10.அழகு (அக.18:25).11.தெய்வம் ஏறி ஆடுதல் (அக.882:6). 12.அச்சம்(புற.211:1-2). 13.வருத்துதலையுடையதேவி (புற. 247:4). 14.தெய்வமகள் (குறள்.1081).15.ஆர் அரமகளிர் (கலி.52:9-10). 16.முருகன் (கலி.52:9-10).*

**அணங்கு** *(வி.) – வருத்து (அக.16:17-8).*

**அணல்** *(பெ.) – தாடி (புறநா.83:1).*

**அணி** *(பெ.) – 1.திரள் (பரிபா.6:31). 2.அழகு தோன்றும் முகம் (கலித்.121:18).*

**அணி கயிறு** *(பெ). – குதிரையின் கடிவாளம் (பரிபா.9:52).*

**அணிதல்** *(வி.) – 1.பரத்தல் (கலித்.4:17). 2.பொருந்துதல் (பதிற்.81:20 -21).*

**அணியல்** *(பெ.) – அழகு செய்கை (புறநா.1:5).*

**அத்தன்** *(பெ). – தகப்பன் (குறு.93:2-3).*

**அதர்** *(பெ). – 1.வழி (குறள்.594). (புற.138:1).*

**அதரி கொள்ளுதல்** *வி.(v.) – பகையழித்தல் (புற.373:26).*

**அதரிதிரித்தல்** *(பெ). – கதிரைக் கிடா விட்டு உழக்குதல் (புறநா.371:17).*

**அதவம்** *(பெ). – அத்தி (குறுந்.24).*

**அதிர்க்கும்** *(பெ). – நடுங்கச் செய்யும் (பதி.30:42).*

**அதிர்தல்** *(பெ). – 1.உளம் நடுங்குதல் (குறள்.429).2.எதிரொலித்தல் (பரிபா.8:19).*

**அதிர்ந்து** *(பெ). – நடுங்கி (அக.346:14).*

**அதிர்ப்பு** *(பெ). – எதிரொலி (பரி.8:21).*

**அதிர்பு** *(பெ). – 1.முழங்கி (அக.163:12). 2.அதிர்ந்து (அக.294:9). 3.நடுங்கும்படி (பதி.31:29).*

**அதிர்விலர்** *(பெ). – நடுக்கம் கொள்ளார் (பதி.81:8).*

**அதிரல்** *(பெ). – 1.காட்டு மல்லிகை (நற்.52:1-2). 2.புன மல்லிகை (நற்.124:5). 3.புனலிக் கொடி (அக.99:4).4.புனலிக் கொடியின் (குறி.75).*

**அதிரும்** *(பெ). – 1.நடுங்கும் (நற்.100:10-12). 2.முழங்கும் (நற்.261:2). 3.ஒலிக்கும் (பதி.84:1-2).*

**அது** *(பெ). – 1.தொலைவில் உள்ள பொருளைச் சுட்டுவது (குறு.12:3-6). 2.அஃறிணை ஒருமைச் சுட்டுப் பெயர் (குறு.84:2). 3.நெஞ்சு அறிசுட்டுப்பெயர்(குறு.230:22).*

**அந்தணர்** *(பெ).) – 1.அழகிய குளிர்ந்த அருளையுடைய துறவியர் (குறள்.30). 2.நீத்தார் (குறள்.30). 3.காசாயம் போர்த்த குழாங்கள் (கலி.126:4). 4.பிராமணர் (புற.1:6).*

**அந்தணன்** *(பெ). – 1.அறவோர் (குறள்.8). 2.சிவபெருமான் (கலி.38:1). 3.பிரமன் (பரி.5:22). 2.வியாழ பகவான் (பரி.11:7-8).*

**அந்தணாளன்** *(பெ.) – பார்ப்பனர் (புற.362:8).*

**அந்தணிர்** *(பெ.) – பிராமணர்கள் (ஐங்.384:1).*

**அந்தணீர்** *(பெ.) – பிராமணர்கள் (ஐங்.9:4).*

**அந்தரம்** *(பெ.) – 1.ஆகாயம் (அக.68:14-5). 2.வானுலகம் (புற.392:19-21).3.உள்வெளி (பதி.51:16). 4.தெய்வலோகம் (ஐங்.76).*

**அந்தி** பெ.(n.) – *1.மாலைப் பொழுது (நற்.238:4). 2. அந்தி மந்தாரை எனும் பூ (அக.71:6). 4. விடியற்காலம் (புற.34:8). 5. ஊழியின் இறுதி (கலி.101:24). 6. அந்திக் காலத்தில் செய்யும் தொழில்கள் (குறு.225).*

**அந்தில் (இடைச்)** *– 1.அவ்விடம் (குறு.293:7-8). 2. அசை நிலைச் சொல் (குறு.395:6-7).*

**அந்தோ (இ)** *– 1.இரக்கம் (நற்.147:10). 2.ஐயோ (புற.238:11).*

**அம்** *(பெ.) – 1.அழகு (குறு.143:7). 2.அகம் (அக.204:6).*

**அம்பணம்** *(பெ.) – மரக்கால் (பதி.68:8-9).*

**அம்பல்** *(பெ.) – சிலர் அறிந்து கூறும் பழிமொழி (குறு.51:6).*

**அம்பலம்** (பெ.) – அவை (சபை) (பரி.18:29 -9).

**அம்பா** (பெ.) – தாய் (பரி.11:81-2).

**அம்பா ஆடல்** (பெ.) – தைந் நீர் ஆடல் (பரி.11:81-2).

**அம்பி** (பெ.) – 1.கடலில் செல்லும் தோணி (நற்.74:2 -3). 2.தெப்பம் (பரி.6:75). 2.தெய்வ விமானம் (பரி.11:70 -1).

**அம்பினர்** (பெ.) – அம்பையுடையவர் (அக.61:8).

**அம்பினவை** (வி.) – அம்பினை உடையை (பரி.15:60).

**அம்பு** (பெ.) – 1.வில்லில் வைத்து எய்யப்படும் போர்க் கருவி (குறு.1:2-3). 2.அம்பு கொண்டு செய்யும் போர் (பதி.22-29).

**அம் மா** (பெ.) – அழகிய வண்டு (கலி.147:14-5).

**அமர்** (பெ.) – 1.போர் செய்தல் (குறு.131:2). 2.விரும்புதல் (குறு.322:1). 3.போர் (நற்.48:8-9).

**அமர்** (வி.) – 1.விரும்பு (குறு.215:4-5). 2.பொருந்து (குறு.306:4). 3.தங்கு (அக.259:12).

**அமர்க் கண்** (பெ.) – 1.அமர்த்த கண் (அக.145:2). 2.முகத்திற்குப் பொருந்தின கண் (கலி.40:1).

**அமர்த்த** (வி.) – 1.மாறுபட்ட (நற்.16:9). 2.விரும்பிய (பதி.16:12). 3.பொருந்திய (கலி.57:23).

**அமர்த்தன** (வி.) – 1.மாறுபட்டன (நற்.66:6-7). 2.ஒத்தன (குறள்.1084).

**அமர்த்தனள்** (வி.) – மாறுபட்டனள் (அக.390:13).

**அமர்தல்** (வி.) – 1.விரும்பு(தல்) (குறு. 215:4-4). 2.பொருந்து(தல்) (குறு.306:3). 3.தங்கு(தல்) (அக.259:12).

**அமர்ந்த** (வி.) – விரும்பிய (நற்.159:12).

**அமர்ந்தனை** (வி.) – 1.விரும்பினாய் (அக.240:11-2). 2.பொருத்தினாய் (கலி.1:17).

**அமர்ந்து** (வி.) – 1.விரும்பி (நற்.16:9-10). 2.பொருந்தி (நற்.327:5-6). 3.இருந்து (புற.360:19-20). 4.மகிழ்ந்து (குறள்.84). 5.இனியனாகி (குறள்.10:2).6.மேவி (பரி.15:64).

**அமர்ப்பு** (பெ.) – மாறுபடுதல் (நற்.179:4).

**அமரகம்** (பெ.) – போர்க்களம் (புற.180:3-4).

**அமராமை** (பெ.) – பொருந்தாமை (குறள்.53:9).

**அமரியள்** (பெ.) – விரும்பினவள் (புற.339:12).

**அமல்(தல்)** (வி.) – 1.நெருங்குதல் (குறு.260:6). 2.செறிந்த (அக.18:7). 3.நிறைந்த (அக.88:13). 4.படர்ந்த (அக.136:11). 5.மிக்க (அக.178:12).

**அமல்(லு)தல்** வி.(v.) –நெருங்குதல் (கலித்.45:1).

**அமலை** (வி.) – 1.உருண்டை (குறு.277:2). 2.நெருக்கம் (குறு.281:3). 3.ஒலி (குறு.369:1-2). 4.ஒள்வாள் அமலை என்னும் கூத்து (அக.142:14). 5.கட்டி (புற.34:14).

**அமளி** (பெ.) – படுக்கை (குறு.30:3-4).

**அமன்ற** (வி.) – 1.நெருங்கி முளைத்த (குறு.202:2). 2.நிறைந்த (அக.59:1). 3.நெருங்கின (கலி.62:4-5).

**அமிழ்து (அமிர்து)** (பெ.) – 1.எயிற்றில் ஊறும் நீர் (குறு.14:1). 2.இனிய மணம் (நற்.230:3). 3.உப்பு (அக.169:6). 4.இனிய உணவு (அக.170:5). 5.தேவருணவு (புற.10:11). 6.மழைநீர் (பதி.17:11).7.தேவா (மிருதம்) தேவாமிழ்து (குறள்.64).

**அமுதம்(அமிர்தம்)** (பெ.) – 1.பாற் கடலைக் கடந்து எடுக்கப்பட்டதும் மரணத்தை நீக்குவதும் ஆகிய தேவர் உணவு (பரி.2:69). 2.(அமிர்தம்) அமுதம் போன்ற சுவையுடைய பொருள் (பரி.8:120).

**அமுதம்** (பெ.) – 1.தேவருண்டி (நற்று.65:1). 2.உப்பு (நற்.88:4).

**அமுது** (பெ.) – 1.இசை (புற.399:21). 2.செல்வம் (புற.399:21).

**அமை** (பெ.) – 1.மூங்கில் (குறு.115:4). 2.மூங்கிலின் கோல் (குறு.385:4). 3.அமைதி (அக.76:8). 4.பொருந்துதல் (அக.76:8). 5.உடன்படல் (குறள்.803).

**அமைதல்** (பெ). – 1.நிறைந்த (குறள்.761). 2. தங்குதல் (அக.37:1). 3. நட்பாய்ப் பொருந்துதல் (குறள்.474). 4. உடன்படுதல் (குறள்.803). 5. முடிவடைதல் (கலி.82:35).

**அமைதல்** (வி.) – 1.பொருந்து (குறு.216:4). 2.அமைத்து (நற்.282:1). 3.பூசு (புற.63:9). 4.அணி (புற.153:3). 5.நிறை (புற.164:12). 6.தகு (புற.378:16-7). 7.அமைந்து (கலி.105:74).

**அமைக்கும்** *(வி.) – பொருந்துவோம் (அக.6:15).*

**அமைகுவம்** *(வி.) – 1.செய்வோம் (ஐங்.36). 2.ஆற்றியிருப்போம் (கலி.71:23).*

**அமைகுவர்** *(வி.) – பொருந்தியிருப்பவர் (அக.223:1-2).*

**அமைச்சு** *(பெ.) – மந்திரி (குறள்.381).*

**அமைத்தல்** *(பெ.) – பொருந்துதல் (குறு.366:1).*

**அமைதல்** *(பெ.) – 1.தங்குதல் (குறு.218:6-7). 2.உயிர் வாழ்தல் (குறு.309:7-8). 3.பொருந்துதல் (அக.357:11-2).*

**அமைதி** *(பெ.) – 1.சிறப்பு (அக.375:3). 2.தாழ்ச்சி (பரி.4:70-1).*

**அமைந்தார்** *(பெ.) – கணவர் ஆதற்குத் தெய்வத்தால் ஏற்புடையவர் ஆனவர் (குறள்.1154).*

**அமைந்தோர்** *(பெ.) – பொருந்தினவர் (கலி.118:24-5).*

**அமைப்போர்** *(பெ.) – முடிப்போர் (பரி.12:15).*

**அமையம்** *(பெ.) – 1.பொழுது (குறு.154:1-2). 2.பருவம் (நற்.224:1-2).*

**அமையாதவர்** *(பெ.) – விரும்பாதவர் (குறள்.825).*

**அமையார்** *(வி.) – 1.பொருந்தார் (அக.37:1). 2.நிறைவு பெறார் (புற.29:15-7). 3. வேட்கை தணியாது (கலி: 4:10).*

**அமையும்** *(வி.) – 1.பொருந்துவான் (குறு.317:5-7). 2.பொருந்தும் (நற்.94:2). 3.உண்டாகும் (குறள்.298). 4.ஏற்புடையது (குறள்.1193).*

**அமைவது** *(பெ.) – பொருந்துவது (ஐங்.295).*

**அமைவர்** *(வி.) – பொருந்துவர் (குறள்.580).*

**அமைவரல்** *(வி.) – அமைந்து வருதல் (கலி.105:74 -5).*

**அமைவாள்** *(பெ.) – ஆற்றியிருப்பவள் (கலி.5:11).*

**அமைவிலன்** *(பெ.) – பொருத்த மில்லாதவன் (குறள்.87:3).*

**அமைவு** *(பெ.)– 1.பொருந்துதல் (குறு.4:4). 2.மேவுதல் (குறள்.740). 3.நிறைவு (குறள்.740). 4.உயர்வு (குறள்.743).*

**அமைவு** *(பெ). – 1.நட்புப் பொருந்தும் (குறள்.863). 2. ஆறுதல், ஆற்றியிருத்தல் (குறள்.1178). 3. நிறைவு (குறள்.740).*

**அமைவோர்** *(பெ.) – ஒடுங்கி இருப்போர் (அக.231:1-3).*

**அயம்** (பெ.) – 1.நீர் (குறு.293:5). 2.நீர்நிலை (அக.234:1-2). 3.சுனை (அக.262:14). 4.பள்ளம் (கலி.46:9).

**அயர்** (வி.) – 1.நிகழ்த்தும் (குறு.53:3). 2.கொண்டாடும் (நற்.42:12). 3.விளையாடும்(நற்.44:8). 4.செய் (நற்.81:8). 5.ஆடும் (அக.98:18-9). 6.செலுத்து (கலி.30:19).

**அயர்கம்** (வி.) – 1.கொண்டாடுவோம் (குறு.80:2-3). 2.செய்வோம்(குறள்.1208).

**அயர்ச்சி** (பெ.) – சோர்வு (ஐங்.396).

**அயர்த்தாய்** (வி.) – மறைந்தாய் (கலி.14:11).

**அயர்தல்** (பெ.) – 1.செய்தல் (அக.66:7-8). 2.ஓம்புதல் (அக.300:21-2).

**அயர்ந்தோர்** (பெ.) – விரும்பினோர் (ஐங்.293).

**அயர் நிலை** (பெ.) – கொண்டாடும் தன்மை (நற்.42:12).

**அயர்பு** (வி.) – 1.செய்து (குறு.398:6). 2.செய்தலால் (பரி.2:33-4-).

**அயர்மார்** (பெ.) – செய்பவர் (குறு.155:6-7).

**அயர்மார்(தல்)** (வி.) – 1.நுகரும் பொருட்டு (குறு.155:6-7).2.பாதுகாக்கும் பொருட்டு(நற்.258:4).3.செய்தற்கு (அக.205:13).

**அயர்வ** (பெ.) – செய்வன (பரி.16:16).

**அயர்வர்** (வி.) – செய்து கொடுப்பவர் (ஐங்.230).

**அயர்வு** (பெ.) – 1.தளர்ச்சி (குறு:316:1). 2.மனக்கவலை (புற:182:6-7). 3. மறத்தல் (கலி:58:11).

**அயர்வோர்** (பெ.) – விளையாடுபவள் (குறு:396:1-2).

**அயரியோர்** (பெ.) – கூடா ஒழுக்கத்தை உடையோர் (பரி:5:75).

**அயரும்** (வி.) – 1.செய்யும் (குறு:238:3-4). 2.வழிபடும் (நற்:47:10-11). 3.விரும்பி மகிழும் (நற்:121:11). 4.பகுத்துக் கொடுக்கும் (நற்:135:3). 5.கொண்டாடும் (நற்:348:4). 6.நிகழ்த்தும் (அக:61:10). 7.உண்ணும் (அக:119:9-10).8.கொண்டாடுவள் (அக:195:2-5).9.சூடும் (அக:216:10-1). 10.ஆடும் (அக:269:20-1). 11.விரும்பிக் கொடுக்கும் (புற:42:17-18). 12.விரும்பும் (ஐங்:147). 13.விளையாடும் (கலி:82:9). 14.நடத்தும் (கலி:114:13-4).

**அயல்** (பெ.) – 1.பக்கம் (குறு:24:3). 2.பக்கத்து உள்ளோர் (அக:146:12-3).

**அயலது** (பெ.) – 1.பக்கத்திலுள்ளது (குறு:36:1). 2.யாதும் இயைபு இல்லாதது (குறு:214:5).

**அயலிலாட்டி** (பெ.) – பக்கத்து வீட்டுத் தலைவி (குறு:201:1).

**அயலோர்** (பெ.) – 1.பக்கத்திலுள்ளோர் (நற்:73:10-11). 2.வேறு ஆகும் தன்மையுடையோர் (நற்:220:9 -10).

**அயறு** (பெ.) – நீர் வழியும் புண்(புற:22:6-1).

**அயா** (பெ.) – 1.பெருமூச்சு (நற்:62:2).2.சோர்வு (நற்:77:3). 3.களைப்பு (அக:103:8-9).4.பெருமூச்சு (புற:261:7-8).5.இளைப்பு (கலி:40:22-3).

**அயா உயிர்த்தல்** (பெ.) – பெருமூச்சு விடுதல் (நற்:62:2).

**அயிர்** (பெ.) – 1.கருமணல் (குறு:272:4). 2.நுண்மை (அக:113:20).

**அயிர்ப்பு** (பெ.) – ஐயம் (நற்:46:5-6).

**அயிரை** (பெ.) – மீனுள் ஒரு வகை (குறு:128:2-3).

**அயில்** (பெ.) – வேல் (அக:167:18-20).

**அயின்றனன்** (வி.) – உண்டான் (புற:77:7-8).

**அயினி** (பெ.) – 1.அரிசி (நற்:254:6-7). 2.உணவு (புற:77:7-8).

**அர்ச்சிரம்** (பெ.) – முன்பனிப் பருவம் (ஐங்:23:3).

**அரக்கம்** (பெ.) – செந்நிறமுள்ள அரக்கு என்னும் பொருள். (அக:14:1).

**அரக்கர்** (பெ.) – இராக்கதர் (கலி:38:3).

**அரக்கன்** (பெ.) – இராக்கதன் (புற:378:18-19).

**அரக்கு** (பெ.) – செந்நிறப் பொருள் (நற்:25:1-2).

**அரங்கம்** (பெ.)– 1.விழாக் களம் (அக:137:9-11). 2.கூத்தாடும் மேடை (பரி:8:107).

**அரங்கு** (பெ.) – 1.விளையாட வகுத்த இடம் (நற்:3:3). 2.நடன சாலை (கலி:79:4).

**அரச யானை** (பெ.) – பட்டத்து யானை (அக:111:3-4).

**அரசர்** (பெ.) – நிலத்தை ஆளும் வகுப்பார் (குறு:392:6-8).

**அரசர்கள்** (பெ.) – நிலத்தை ஆள்வோர் (கலி:25:3).

**அரசு** (பெ.) – 1.அரசன் (நற்:346:3). 2.அரசாட்சி (புற:35:4 -5).

**அரசுவா** (பெ.) – பட்டத்து யானை (பதி:79:13-4).

**அரண்** (பெ.) – 1.பாதுகாப்பு (நற்:39:7-8). 2.காவலையுடைய மதில் (நற்:150:3-4). 3.காவலில் உள்ள மக்கள் (அக:45:18-9). 4.பாதுகாவலான இடம் (புற:9:5). 5.கோட்டை (ஐங்:443).

**அரணம்** (பெ.) – 1.பாதுகாவலான இடம் (அக:158:13-4). 2. பாதுகாப்பாளர் (பதி:31:34-5). 3.கவசம் (பதி:52:6-7). 4. காவல் (பரி:4:73).

**அரம்** (பெ.) – 1.அரம்பம் என்னும் கருவி (நற்:77:9). 2.வாளரம் (அக:6:2). 3.இரும்பை அராவும் கருவி (அக:67:5). 4.அரிவாள் (பதி:60:5).

**அரமகளிர்** (பெ.) – தெய்வ மகளிர் (குறு:53:7).

**அரமியம்** (பெ.) – நிலா முற்றம் (அக:124:14-5).

**அரலை** (பெ.) – 1.அலரிப்பூ (குறு:214:6-7). 2.மரல் விதை (நற்:121:4:5). 3.விதை (அக:307:7-8). 4.குற்றம் (புற:381:14-5).

**அரவணை** (பெ.) – பாம்பு அணை (கலி:105:71-2).

**அரவம்** (பெ.) – 1.ஓசை (குறு:30:5-7). 2.பாம்பு (புற:260:20-2).

**அரவிந்தம்** (பெ.) – தாமரைப் பூ (பரி:12:78).

**அரவு** (பெ.) – 1.பாம்பு (குறு:114:1). 2.அரவு (நற்:235:2).

**அரவுவாள்** (பெ.) – வாளரம் (நற்:235:2).

**அரற்று** (பெ.) – கதறுதல் (பரி:11:13-4).

**அரா** (பெ.) – பாம்பு (குறு:43-5).

**அராஅ** (பெ.) – பாம்பின் நஞ்சு (புற:382:14-5).

**அரி** (பெ.) – 1.மென்மை (குறு:338:2). 2.சிலம்பினுள் இடும் பரல் (குறு:369:2). 3.கோடு (நற்:8:1). 4.தவளை (நற்:21:7-8). 5.அரித்து விடுதல் (நற்:30:6 ). 6.ஐம்மை (நற்:73:6-7). 7.அரிமா(சிங்கம்) (நற்:112:4). 8.வண்டு (நற்:326:8). 9.அழகு (அக:102:10). 10.மஞ்சள் (அக:236:2-3 ). 11.வரி (அக:236:2-3). 12. ஒன்மை (அக:237:1).

13.வெண்மை (அக:335:21). 14.இடைவிடுதல் (புற:144:5). 15.ஒலி நிரம்பாமை (புற:244:47 ). 16.வடிக்கப்பட்ட கள் (புற:304:2). 17.ஓசை (புற:382:18-9). 18.அரித்து எழும் ஓசை (புற:396:4). 19.செவ்வரி (ஐங்:18:4). 20.பகை (கலி:103:24 ). 21.கண் (கலி:104:21). 22.நீர்த்துளி (கலி:145:5 ).

**அரி** (வி.) – 1.அறு (குறு:117:3-4). 2.கடைகின்ற (நற்:21:7-8). 3.வடிகட்டு (அக:36:17). 4.அறல்பட்ட (அக:199:6).

**அரிக்கும்** (வி.) – வடித்துக் கொள்ளும் (புற:348:2-3).

**அரிக்குரல்** (பெ.) – 1.கடைகின்ற குரல் (நற்:21:7-8). 2.ஒலிநிரம்பாத ஓசை (புற:249:4). 3.இடைவிட்டு எழும் ஓசை(புற:369:21). 4.மென்மையையுடைய குரல் (ஐங்:85). 5.இனிய குரல் (ஐங்:85 ).

**அரிகால்** (வி.) – அறுத்த பயிரின் தாள் (நற்:210:1).

**அரிசி** (பெ.) – 1.விதை (குறு:369:1-2). 2.நெல்லின் உள்ளீடு (நற்:60:5).

**அரிஞர்** (பெ.) – அறுவடை செய்பவர் (அக:84:12).

**அரித்தல்** (பெ.) – தின்னுதல் (அக:377:9-10).

**அரிது** (வி.) – 1.இல்லாதது (குறு:57:3). 2.இல்லை (குறு:207:1). 3.அருமையாக (குறு:298:2). 4அருமையுடையது (குறு:329:5). 5.கூடாது (புற:53:9-10). 6.உண்டாகாது (குறள்: 377).

**அரிந்தற்று** (பெ.) – அறுத்தாற் போன்றது (குறள்:1304).

**அரிநர்** (பெ.) – அறுப்பவர் (நற்:275:1).

**அரிப்பணி** (பெ.) – இடையிட்டு முதலையுடைய கண்ணீர் (நற்:30:4-6).

**அரிமணல்** (பெ.) – நுண்மணல் (அக:74:7).

**அரிமயிர்** (பெ.) – மெல்லிய மயிர் (நற்:35:6-7).

**அரிமலர்** (பெ.) – 1.வண்டுகளையுடைய பூ (அக:316:2-3). 2.நிறத்தையுடைய மலர் (பரி:11:25).

**அரிமா** (பெ.) – (சிங்கம்) பிடரி மயிர் அமைந்த விலங்கு (நற்:112:4).

**அரியது** (பெ.) – 1.கொடியது (நற்:79:6). 2.பெறுதற்கு அருமையுடையது (நற்:137:2-4). 3.முடியாதது (குறள்: 489).

**அரியம்** (பெ.) – காண்பதற்கு அருமையுடையோம் (குறு:178:5-6).

***அரியம்*** *(வி.) – கிடைப்பதற்கு அருமையுடையோம் (அக:80:4).*

***அரியர்*** *(வி.) – 1.சிலர் (குறள்:723). 2.இயலாதவர் (குறள்:1138).*

***அரியல்*** *(பெ.) – 1.அரித்துச் செய்யப்படும் கள் (குறு:258:5). 2.தேன் (நற்:190:5-6). 3.வடிக்கப்பட்டது (அக:348:5-6). 4.அரியரியாகத் திரண்டவை (புற:307:6). 5.கத்தரித்தல் (புற:307:6 ). 6.அரித்து விழும் தேன் (பதி:61:1).*

***அரியல் பெண்டிர்*** *(பெ.) – கள் விற்கும் மகளிர் (அக:157:1-2).*

***அரியவை*** *(பெ.) – பொறுத்தற்கு அரிய குற்றங்கள் (குறள்: 693).*

***அரியள்*** *(பெ.) – 1.பெறுதற்கு இயலாதவள் (குறு:120:2-4). 2.அருமையை உடையவள் (புற:337:6-7).*

***அரியள்*** *(வி.) – காண்பதற்கு அரியாள் (அக:342:11-2).*

***அரியும்*** *(வி.) – அறுக்கும் (புற:24:1).*

***அரியை*** *(வி.) – இயலாதவனாக உள்ளாய் (புற:20:5).*

***அரில்*** *(பெ.) – 1.ஒன்றோடு ஒன்று பிணங்குதல் (குறு:91:1). 2.தூறு (குறு:338:1-3). 3.முறுக்குண்ணுதல் (நற்:4:4). 4.சிறு தூறு (கலி:13:20).*

***அரிவனர்*** *(பெ.) – அறுப்பவர் (நற்:8:6).*

***அரிவார்*** *(பெ.) – அறுப்பவர் (குறு:375:3-4).*

***அரிவை*** *(பெ.) – 1.பெண் (குறு:2:4-5). 2.பெண்ணே (குறு:137:1-2).*

***அரிவையர்*** *(பெ.) – மகளிர் (புற:33:4).*

***அரிற் பவர்*** *(பெ.) – பின்னுதலையுடைய கொடி (குறு:91:1).*

***அரு*** *(பெ.) – 1.இயலாமை (குறு:86:2). 2.அருமை (நற்:34:6). 3.பிறவற்றினும் சிறந்தது (அக:71:11). 4.ஏறுதற்கு முடியாமை (அக:288:11). 5.இன்மை (அக:369:14).*

***அருக்கினான்*** *(பெ.) – அருமை செய்தவன் (கலி:104:69-70).*

***அருக்கு*** *(பெ.) – பெருமை பாராட்டு (கலி:104:69-70).*

***அருகல்*** *(பெ.) – குறைதல் (கலி:45:22).*

***அருகாது*** *(வி.) – 1.குறையாது (நற்:287:8). 2.குறைவில்லாமல் (புற:56:17).*

***அருகு*** *(பெ.) – நெருக்கம் (அக:131:1-2).*

**அருகுகை** *(பெ.) – சுருங்குதல் (புற:288:6-7).*

**அருங்குரையள்** *(வி.) – அருமையுடையவள் (நற்:201:1-2).*

**அருச்சிப்போர்** *(பெ.) – பூக்களைத் தூவி வழிபடுவோர் (பரி:8:108).*

**அருஞ்சுரம்** *(பெ.) – 1.கடத்தற்கரிய வழி (குறு:39:3). 2.அரிய பாலை நிலம் (குறு:329:4).*

**அருத்தல்** *(வி.) – உண்பித்தல் (புற:304:6-7).*

**அருத்தும்** *(வி.) – உண்பிக்கும் (புற:33:14).*

**அருந்தியது** *(பெ.) – உண்ட உணவு (குறள்:95:2).*

**அருந்தியோர்** *(பெ.) – நுகர்ந்தோர் (கலி:129:24-5).*

**அருந்தினர்** *(வி.) – உண்டனர் (ஐங்:351).*

**அருந்தும்** *(வி.)– 1.உண்ணும் (குறு:26:6-8). 2.உள் அடக்கும் (அக:191:13-6). 3.கொழுதும் (புற:384:2-3).*

**அருப்பம்** *(பெ.) – 1.அரண் (புற:17:27-8). 2.திண்மை (பரி:10:57).*

**அருப்பு** *(பெ.) – 1.காட்டரண் (அக:342:5). 2.கிளைத்தல் (குறள்:53:2).*

**அரும்பின** *(வி.) – 1.மொட்டுகளை உண்டாக்கின (நற்:122:4). 2.தோற்றுவித்தன (ஐங்:201).*

**அரும்பு** *(பெ.) – மொட்டு (குறு:26:1).*

**அரும்பும்** *(வி.) – அரும்புகளைத் தோற்றுவிக்கும் (குறு:5:2-3).*

**அருமை** *(பெ.) – 1.பெறுதற்கு எளிது அல்லாமை (நற்:165:6). 2.ஆளுமையையுடைய சொல் (நற்:298:9-10). 3.பெறுதற்கு இயலாமை (அக:258:3). 4.இயலாமை (பதி:77:6-7). 5.இன்மை (குறள்:7 ). 6.(சிரமம்) கடுமை (குறள்:611). 7.அறுகுதற்கு முடியாமை (குறள்:743). 8.செய்தற்கு முடியாமை (குறள்:975).*

**அருவி** *(பெ.) – 1.உச்சி தொடங்கி நிலம் நோக்கிப் பாயும் நீர்நிலை (குறு:42:2-3). 2.நீர் (அக:28:3-5). 3.பூ இல்லாமை (பதி:63:19). 4.உரு இல்லாதது (பரி:6:53).*

**அருள்** *(பெ.) – 1.தொடர்பு பற்றாமல் எல்லா உயிர்கள் மேலும் செல்லும் பரிவு (குறு:20:1-2). 2.ஒன்றின் துயர் கண்டால் காரணம் இன்றித் தோன்றும் இரக்கம் (புற:5:5-6). 3. அருளுதல் (புற:92:2-3).*

**அருள்** (வி.) – இரங்கிச் செயல் (கலி:65:16-7).

**அருள் அல்லது** (பெ.) – கொடுமை (குறள்:254).

**அருளல்** (பெ.) – இரங்குதல் செய்தல் (நற்:342:4-5).

**அருளற்றார்** (பெ.) – அருளில்லாதவர் (குறள்:25:8).

**அருளா இடன்** (பெ.) – அருள் செய்யாத காலம் (கலி:120:13).

**அருளாதவர்** (பெ.) – அருள் செய்யாதவர் (கலி:128:1-2).

**அருளாள்** (வி.) – அருள் செய்யமாட்டார் (நற்:140:8).

**அருளியோர்** (பெ.) – அருள் பண்ணி வந்தோர் (கலி:11:1).

**அருளியோன்** (பெ.) – கொடுத்தவன் (புற:398:29-30).

**அருளிலாளர்** (பெ.) – அருள் இல்லாதவர் (அக:305:9).

**அருளிற்று** (வி.) – அருள் செய்தது (ஐங்:394).

**அருளினள்** (பெ.) – அருள் கூறினள் (நற்:53:1-2).

**அருளி** (பெ.) – அருளையுடையாய் (கலி:49:18-9).

**அருளினை** (வி.) – அருள் செய்தனை (நற்:233:4).

**அருளீயல்** (பெ.) – அருள் செய்தல் (கலி:61:16-7).

**அருளுவார்** (வி.) – அருள் செய்வார் (கலி:26:14).

**அரை** (பெ.) – 1. பாதி (குறு:190:5). 2.புல், மரம், முதலியவற்றின் அடிப்பாகம் (குறு:248:3-5). 3.தாழ்வரை (குறு:396:5). 4.அடை (நற்:21:1-2). 5.நடுப்பாகம் (அக:220:7-8 ). 6.பக்கம் (புற:127:3). 7.அம்மியில் இட்டு அரைத்த (புற:341:5).

**அரைக்குநர்** (பெ.) – அம்மியில் அரைப்பவர் (பரி:10:83-4).

**அரைசர்** (பெ.) – நிலத்தை ஆள்வோர் (நற்:291:2-4).

**அரைசன், அரசன்** (பெ.) – நிலத்தை ஆள்வோன் (கலி:130:3-4).

**அரைசு** (பெ.) – அரசர் 'அரைசு பட அமர் உழக்கி' (புற:26:6).

**அரைநாள்** (பெ.) – நடு இரவு "நீர் இரங்கு அரைநாள் மயங்கி" (நற்:341:8).

**அரையம்** (பெ.) – அரச மரம் "வேனில் அரையத்து இலை ஒலி வெரீஇப் போகில் புகா உண்ணாது" (ஐங்:325).

**அரையது** (பெ.) – இடுப்பில் உடுத்தது "அரையது வேற்று இழை நுழைந்த வேர் நனை சிதாஅர் உடுத்த உயவற் பாண" (புற:69:2-4).

**அல்** (பெ.) – இராப் பொழுது "அஞ்ச வரு நெறியிடை இறப்ப எண்ணுவர்" (நற்:33:5-8).

**அல் இடம்** (பெ.) – செல்லுதல் அல்லாத இடம் "செல் இடத்துக் காப்பான் சினம் காப்பான் அல் இடத்துக் காக்கின் என்" (குறள்:301).

**அல்கணி, அல்கு + அணி** (பெ.) – தங்கின அழகு "இருங் கானத்து அல்கு அணி நோக்கி" (நற்:17:3).

**அல்கல்** (பெ.) – 1. இரவு "அல்கல் பொய் வலாளன் மெய் உற மரீஇய" (குறு:30:1-2). 2.நாள் "அல்கலும் அலைக்கும் நல்கா வாடை" (நற்:89:7). 3.சுருங்குதல் "அல்கல் புன்கண் மாலையொடு பொருந்தி" (அக:74:14-5). 4.உணவு "நல்கூர் பெண்டிர் அல்கல் கூட்டும்" (அக:129:10). 5.தங்குதல் "ஆராக் கவவின் ஒருத்தி வந்து அல்கல் தன் சீரார் நெகிழச் சிலம்ப"(கலி:90:10-11 ).

**அல்கலர்** (வி.) – தங்க மாட்டார் "அத்தம் இறந்தனர் ஆயினும் நத்துறந்து அல்கலர்" (நற்:329:8-9).

**அல்கலும்** (வி.) – 1. நாள்தோறும் "அல்கலும் தயங்கு திரை பொருத தாழை வெண் பூ" (குறு:226:4-5). 2.இரவுதோறும் "அல்லல் நெஞ்ச மோடு அல்கலும் துஞ்சாது" (குறு:381:2). 3.இரவிலும் "அதுவே யாம் அல்கலும் சூழ்ந்த வினை" (கலி:115:20-21).

**அல்குதல்** (வி.) – தங்குதல் (குறு:283:5-6).

**அல்குல்** (பெ.) – 1. பெண்குறி (குறு:27:5). 2. இடையின் பின்பக்கம் (நற்:222:5-6).

**அல்குலாய்** (பெ.) – அல்குலை யுடையவளே (கலி:60:4).

**அல்குவதாக** (பெ.) – தங்குக (நற்:159:11-2).

**அல்குறு** (வி.) – 1.ஒளிகுறை (குறு:273:1). 2.தங்கு (அக:40:5). 3.சுருங்கிய (அக:287:11-2).

**அல்குறு காலை** (பெ.) – தங்குகின்ற மாலைப் பொழுது (அக.40:3-5).

**அல்குறு பொழுது** (பெ.) – இரவு (குறு.273:1).

**அல்ல** (பெ.) – அறம் அல்லாதன (கலி.39:4-4).

**அல்ல** *(வி.) – அகமாட்டா (குறள்.10:5).*

**அல்லது** *(பெ.) – 1.தீவினை (புற.195:7). 2.கரிசு (பாவம்) (ஐங்.7:2). 3.நீதி அல்லாதது (கலி.129:5-6).*

**அல்லது** *(வி.) – 1.அல்லாமல் (குறு.113:3-4). 2.தவிர (நற்.80:8-9).*

**அல்லதை** *(வி.) – அல்லாமல் (அக.29:22-3).*

**அல்லம்** *(வி.) – 1.அல்லாதவரானோம் (நற்.159:9). 2.மாட்டோம் (அக.183:15). 3.இல்லாதவராக உள்ளோம் (குறள்.1209).*

**அல்லர்** *(வி.) – 1.அல்லாதவர் (குறு.43:1). 2.ஆகமாட்டார் (நற்.64:10).*

**அல்லல்** *(வி.) – 1.துன்பம் (குறு.43:5). 2.வருத்தம் (கலி.58:15).*

**அல்லவர்** *(பெ.) – அல்லாதவர் (குறள்.751).*

**அல்லவை** *(பெ.) – 1.முறை அல்லாதன (புற.191:4-5). 2.(பாவம்) கரிசு (குறள்.96). 3.கொடுமைகள் (குறள்.246).*

**அல்லள்** *(வி.) – ஆகமாட்டாள் (குறு.43:2).*

**அல்லற் காலை** *(பெ.) – துன்புறுங்காலம் (புற.174:6).*

**அல்லற்படுவது** *(பெ.) – துன்பப்படுவது (குறள்.379).*

**அல்லன்** *(பெ.) – தீயவன் (குறு.284:4).*

**அல்லன்** *(வி.) – ஆகமாட்டான் (குறு.230:1-2).*

**அல்லன** *(பெ.) – மாறானவை (புற.35:28).*

**அல்லனேல்** *(வி.) – அல்லாதவனானால் (குறள்.39:6).*

**அல்லா** *(பெ.) – வகுத்தமுறுதல் (பரி.6:98-100).*

**அல்லாக்கால்** *(பெ.) – 1.நீங்கிய காலம் (கலி.64:26-7). 2.அல்லாத இடம் (கலி.124:8).*

**அல்லாதவர்** *(பெ.) – அல்லாத பிறர் (குறள்.1077).*

**அல்லாந்தார்** *(பெ.) – துன்பமுற்றவர் (கலி.29:2).*

**அல்லாந்தான்** *(பெ.) – மனம் சூழன்றவன் (கலி.111:21).*

**அல்லார்** *(பெ.) – 1.அல்லாத பிறர் (குறள்.266). 2.சூது ஒழிந்த கல்வி வல்லவர் (பரி.9:74-5).*

**அல்லால்** *(வி.) – அல்லாமல் (குறள்.8).*

**அல்லாவார்** (வி.) – மனம் மறுக மாட்டார் (குறள்.593).

**அல்லாதவர்** (பெ.) – அல்லாத பிறர் (குறள்.1077).

**அல்லான்** (பெ.) – அல்லாதவன் (கலி.84:13).

**அல்லி** (பெ.) – 1.தாது (அற.16:1-2). 2.அக இதழ் (அக.255:11-12). 3.அல்லியம் எனுங் கூத்து (புற.33:17). 4.அல்லியரிசி (புற.250:4-5). 5.அல்லிக்காய் (புற.280:13-4). 6.தாமரைப் பொகுட்டைச் சேர்ந்த கேசரம் (கலி.13:11-2). 7.ஆம்பற் பூ (கலி.91:1). 8.தாமரை (பரி.1:38-9). 9.ஒரு வகை நீர்ப் பூ (பரி.12:78).

**அல்லிடம்** (பெ.) – சினம் செல்லாத இடம் (குறள்.30).

**அல்லிப்பாவை** (பெ.) – அல்லியங் கூத்தில் ஆட்டும் பொம்மை (புற.33:17).

**அல்லேம்** (வி.) – ஆகமாட்டேம் (குறு.244:5).

**அல்லேன்** (வி.) – ஆகமாட்டேன் (குறு.52:5).

**அல்லோர்** (பெ.) – ஆகாதவர் (புற.343:11-2).

**அல்லோள்** (பெ.) – ஆகாதவள் (அக.212:22-3).

**அல்வழி** (பெ.) – ஆகாத இடம் (குறள்.1299).

**அலகு** (பெ.) – 1.பனை (அக.157:1-3). 2.பலகறை (அக.335:20-1). 3.பறையலகு (அக.335:20-1). 4.நெற்கதிர் (குறள்.1034).

**அலகை** (பெ.) – 1.அமைதி (புற.282:10-11). 2.பேய் (குறள்.85:10).

**அலங்கல்** (பெ.) – 1.அசைதல் (குறு.76:3-5). 2.அசைதலையுடைய கதிர் (அக.13:19-20). 3. அசையும் கிளை (அக.229:18-9). 4.மாலை (பதி.31:8-9).

**அலங்காந்தள்** (பெ.) – அசைகின்ற காந்தட் பூ (கலி.40:12).

**அலங்கு** (வி.) – 1.அசையும் (குறு.134:3-4). 2.விளங்கிய (புற.35:6).

**அலங்கும்** (பெ.) – விளங்கும் (பதி.64:9-10).

**அலங்கும்** (வி.) – அசையும் (பரி.15:21).

**அலத்தல்** (பெ.) – வறுமை உறுதல் (புற.103:11-2).

**அலத்தற் காலை** (பெ.) – வறுமையை யுடைய காலம் (புற.103:11-2).

**அலது** (வி.) – அல்லாமல் (குறு.115:6).

**அலந்தவர்** (பெ.) – 1.வறுமையுற்றவர் (கலி.133:6). 2.துன்பமுற்றவர் (கலி.148:15).

***அலந்தனர்*** *(வி.) – துன்பமுற்றனர் (பதி.71:8).*

***அனந்தார்*** *(பெ.) – துன்பமுற்றார் (குறள்.1303).*

***அனந்தாள்*** *(பெ.) – வருந்தினாள் (கலி.145:11).*

***அலப்பென்*** *(பெ.) – வருந்துவேன் (குறு.41:5-6).*

***அலம்*** *(பெ.) – கலப்பை (பரி.1:28).*

***அலம் வரும்*** *(வி.) – சுழலும் (குறு.148:3-4).*

***அலமரல்*** *(பெ.) – சுழலுதல் (குறு.28:4).*

***அலமரு*** *(வி.) – மனம் சுழலல் (நற்.83:8-9).*

***அலமரும்*** *(வி.) – 1.சுழலும் (குறு.72:1). 2.அசையும் (நற்.320:3). 3.மனம் கலங்கும் (அக.270:11).*

***அலர்*** *(பெ.) – 1.பலர் அறிந்து கூறும் பழிச் சொல் (குறு.97:4). 2.பூ (குறு.98:5). 3.மலர்தல் (கலி.32:8). 4.பரத்தல் (கலி.102:25).*

***அலர்*** *(வி.) – 1.பரவு (குறு.340:4). 2.பரந்த (அக.69:20). 3.பூவின் இதழ்விரி (புற.96:1).*

***அலர்வது*** *(பெ.) – களவொழுக்கம் வெளிப்படுவது (நற்.72:8-9).*

***அலரி*** *(பெ.) – 1.பூ (நற்.118:8-9). 2.ஒரு வகைப் பூ (நற்.214:4).*

***அலவல்*** *(பெ.) – அலமருதல், மனம் சுழலுதல் (கலி.122:5-6).*

***அலவன்*** *(பெ.) – நண்டு (குறு.303:7).*

***அலை*** *(பெ.) – 1.துன்புறுத்தல் (குறு.86:2). 2.நீரில் உண்டாகும் திரை (நற்.7:4). 3.ஆட்டுதல் (நற்.398:3).*

***அலைஇயர்*** *(வி.) – துன்புறுக (அக.106:13).*

***அலைக்கும்*** *(வி.) – 1.துன்புறுத்தும் (குறு.262:2-3). 2.வருத்தும் (நற்.382:2-3). 3.அலைவீசும் (நற்.382:2-3). 4.அசைக்கும் (அக.186:5-6). 5.அலை மோதும் (புற.55:18).*

***அலைத்தது*** *(பெ.) – அடித்தது (கலி.105:62-3).*

***அலைத்தரும்*** *(வி.) – துன்பம் செய்யும் (கலி.120:20).*

***அலைத்தல்*** *(பெ.) – வருத்துதல் (அக.71:8-12).*

***அலைத்தன்று*** *(வி.) – வருத்தியது (பதி.16:19-20).*

***அலைத்தி*** *(வி.) – துன்புறுத்துகின்றாய் (அக.125:12-3).*

**அலைத்தீவாய்** *(வி.) – துன்புறுத்தக் கடவாய் (கலி.69:15).*

**அலைதரூஉம்** *(பெ.) – வருத்தத்தைத் தரும் (கலி.29:13).*

**அலையல்** *(வி.) – துன்புறுத்தாதே (அக.158:6-7).*

**அலைவாய்** *(பெ.) – செந்தில் பதி (அக.266:20-1).*

**அவ்** *(பெ.) – அப்பொருள்கள் (பரி.4:33).*

**அவ்வது** *(பெ.) – அவ்வழி (குறள்.426).*

**அவ்வயிறு** *(பெ.) – அழகிய வயிறு (நற்.179:3).*

**அவ்வயின்** *(பெ.) – அவ்விடம் (நற்.176:2-3).*

**அவ்வரி** *(பெ.) – 1.அழகிய கோடு (குறு.119:1). 2.அழகிய தேமல் (குறு.180:5-6).*

**அவ்வாய்** *(பெ.) – 1.அழகிய வாய் (நற்.134:5). 2.அழகிய இடம் (நற்.259:4-5). 3.அழகிய உதடு என்னும் உறுப்பு (அக.16:3).*

**அவ்வித்து** *(வி.) – பொறுக்காமல் (குறள்.167).*

**அவ்வியம்** *(பெ.) – பொறாமை (குறள்.169).*

**அவண்** *(பெ.) – அவ்விடம் (குறு.322:4).*

**அவண** *(பெ.) – அவ்விடத்து உள்ளன (நற்.92:3-4).*

**அவணது** *(பெ.) – 1.அவ்விடத்திலுள்ளது (அக.337:4-5). 2.அவ்விடத்து நிகழ்வது (புற.102:3-4).*

**அவம்** *(பெ.) – பயன் இல்லாத முயற்சி (குறள்.262).*

**அவர்** *(பெ.) – பலர்பால் சேய்மைச் சுட்டுப்பெயர் (குறு.12:4).*

**அவரவர்** *(பெ.) – சுட்டுப்பெயர் அடுக்கு (புற.56:15-6).*

**அவரை** *(பெ.) – மொச்சை என்னும் கொடி (குறு.82:4-5).*

**அவல்** *(பெ.) – 1.பள்ளம் (குறு.250:1). 2.நெற்பொறி இடியல் (அக.141:17-8). 3.விளைநிலம் (புற.6:14).*

**அவல நெஞ்சம்** *(பெ.) – துன்ப மனம் (அக.285:3-4).*

**அவல நோய்** *(பெ.) – துன்பம் தரும் நோய் (கலி.28:10).*

**அவலம்** *(பெ.) – 1.துன்பம் (குறு.12:5). 2.ஆற்றாமை (அக.285:2). 3.வருத்தம் (புற.174:22). 4.தீது (கலி.108:8).*

**அவவு** *(பெ.) – 1.ஆசை (நற்.212:10). 2.அவா (ஐங்.36:10).*

***அவவுறும்*** *(வி.) – ஆசை கொள்ளும் (ஐங்.36:10).*

***அவள்*** *(பெ.) – பெண்பாற் சேய்மைச் சுட்டுப் பெயர் (குறு.70:3).*

***அவன்*** *(பெ.) – ஆண்பால் சேய்மைச் சுட்டுப் பெயர் (குறு.36:4-5).*

***அவா*** *(பெ.) – பெற வேண்டியதன் மேல் உள்ள ஆசை (புற.137:2-3).*

***அவி*** *(பெ.) – 1.பணிவு (புற.191:6). 2.வேக வைத்தல் (புற.363:12). 3.வேள்வியில் தேவர்க்குக் கொடுக்கப்படும் உணவு. (புற.377:5).*

***அவி*** *(வி.) – 1.வற்று (நற்.103:5-6). 2.அடக்கு (குறள்.25). 3.சாதல் (குறள்.420). 4.நீக்கு (குறள்.694).*

***அவித்தன்று*** *(வி.) – இல்லையாக்கீற்று (குறு.95:5).*

***அவித்தான்*** *(பெ.) – 1.அறுத்துவன் (குறள்.16). 2.அடக்கினவன் (குறள்.25).*

***அவிந்தது*** *(பெ.) – சுருங்கியது (குறு.).*

***அவிந்தன்று*** *(வி.) – அடங்கிற்று (அக.70:16-7).*

***அவிப்புழுக்கல்*** *(பெ.) – பிணத்திற்கு இடும் சோறு (புற.363:12).*

***அவியா விளக்கம்*** *(பெ.) – நந்தாத விளக்கு (பரி.8:98).*

***அவியுணவு*** *(பெ.) – தேவர்க்கு வேள்வித்தீயில் கொடுக்கும் அவியாகிய உணவு. (குறள்.413).*

***அவிர்*** *(பெ.) – 1.விளக்கம் (அக.277:1). 2.ஒளி (அக.317:15).*

***அவிர்*** *(வி.) – 1.விளக்கு (குறு.154:1-2). 2.விளங்கும் (அக.82:1). 3.வீட்டு விளக்கு (அக.201:1-3).*

***அவிர் உத்தி*** *(பெ.) – விளங்குகின்ற படப்பொறி. (கலி.45:3).*

***அவிர் வரும்*** *(வி.) – விளங்கும் (அக.162:10).*

***அவிழ்*** *(பெ.) – 1.சோறு (குறு.362:3). 2.சோற்றுப் பருக்கை (அக.37:13-4). 3.விரிதல் (புற.399:7-8).*

***அவிழ்*** *(வி.) – 1.முறுக்குவிட்ட (குறு.209:6-7). 2.விரிந்த (குறு.330:4). 3.மலர்ந்த (குறு.349:1). 4.சிந்துகின்ற (அக.212:16). 5.தளர்ந்த (பதி.18:4). 6.தோற்றுவித்த (கலி.126:9-10).*

***அவிழ்த்தல்*** *(பெ.) – பிரித்தல் (குறு.313:4-5).*

**அவிழ்ந்தனர்** *(வி.) – வெளியிட்டனர் (அக.129:14-7).*

**அவிழ்பதம்** *(பெ.) – சோற்று உணவு (புற.159:12).*

**அவிழ்பு** *(வி.) – 1.மலர்ந்தது (பதி.20:8-9). 2.விரிந்து (கலி.119:7).*

**அவிழும்** *(வி.) – மலரும் (குறு.228:2-3).*

**அவுணர்** *(பெ.) – அசுரர் (குறு.1:3).*

**அவை** *(பெ.) – 1.சவை (குறு.146:5). 2.பலவின்பால் சுட்டுப்பெயர் (குறு.306:2-3).*

**அவைக்களம்** *(பெ.) – சபையாகிய இடம் (புற.283:7).*

**அவைப்பு** *(பெ.) – குற்றுதல் (அக.394:3).*

**அவையத்தார்** *(பெ.) – சபையில் உள்ள சான்றோர். (கலி.94:42-3).*

**அழல்** *(பெ.) – 1.அழுதல் (குறு.35:5). 2.நெருப்பு (நற்.9:5). 3.நஞ்சு (விஷம்) (நற்.75:2). 4.வேள்வித்தீ (புற.112:2-3). 5.கார்த்திகை நாள் (புற.229:1). 6.செவ்வாய் (பதி.13:25-6).*

**அழற் குட்டம்** *(பெ.) – கார்த்திகை நாளின் முதல் கால் (புற.229:1).*

**அழற் கொடி** *(பெ.) – 1.தீயின் கொடி (அக.162:4). 2.ஒள்ளிய கொடி (அக.316:13).*

**அழாஅல்** *(பெ.) – 1.அழாதே (குறு.82:2). 2.அழுகை (புற.46:5-6).*

**அழி** *(வி.) – 1.கெடு (குறு.35:4-5). 2.மிகுந்த (குறு.185:8). 3.வற்று (நற்.241:3). 4.தோல்வி (அக.55:11-2). 5.இரக்கம் (புற.158:17). 6.மாறு (புற.207:4).*

**அழிக்கல்** *(பெ.) – சிதைத்தல் (குறள்.421).*

**அழிக்கும்** *(வி.) – 1.கெடுக்கும் (நற்.73:10). 2.நீக்கும் (அக.77:7-8). 3.தோல்வி யடையச் செய்யும் (புற.303:2).*

**அழிகள்** *(பெ.) – வைக்கோல் (புற.399:10).*

**அழித்தது** *(பெ.) – சிதைத்தது (அக.196:9).*

**அழித்தல்** *(பெ.) – பாழ்படுத்தல் (புற.97:2).*

**அழித்தான்** *(பெ.) – கெடுத்தான் (கலி.104:65).*

**அழிதக்கன்று** *(வி.) – வருந்தத்தக்கது, மானக்கேடானது (நற்.72:4-5).*

**அழிதக்காள்** *(பெ.) – பொலிவு இழந்தவள் (கலி.88:19-20).*

**அழிந்ததுவிடும்** *(வி.) – கெடும் (குறள்.498).*

**அழிந்தன்று** *(பெ.) – வருந்தியது (அக.55:5-6).*

**அழிந்தனள்** *(வி.) – வருந்தினள் (அக.362:11-2).*

**அழிந்தோர்** *(பெ.) – 1.அஞ்சினோர் (புற.213:20-21). 2.இறந்தோர் (புற.346:5-6). 3.வருந்தினோர் (கலி.5:7).*

**அழிப்பது** *(பெ.) – கெடுப்பது (குறள்.744).*

**அழிபசி** *(பெ.) – மிக்க பசி (குறள்.226).*

**அழிபடர்** *(பெ.) – மிக்க துன்பம் (நற்.185:1).*

**அழிபவள்** *(பெ.) – வருந்துபவள் (கலி.10:19).*

**அழிபு** *(பெ.) – 1.வருத்தம் (அப.73:8-9). 2.அழிந்து (பரி.2:40-41). 3.கெடுதலால் (பரி.7:3).*

**அழியர்** *(வி.) – கெடுக (அக.212:20-21).*

**அழியல்** *(வி.) – வருந்தாதே (குறு.73:1-2).*

**அழியலள்** *(வி.) – கெட மாட்டாள் (நற்.188:8-9).*

**அழியாதி** *(வி.) – வருந்தாதே (கலி.13:23-4).*

**அழியுநர்** *(பெ.) – வருந்துபவர் (நற்.392:8-9).*

**அழியும்** *(வி.) – 1.அழகு கெடும் (நற்.397:1). 2.இழக்கும் (அக.8:4). 3.சிதையும் (பதி.67:21). 4.மிகும் (பரி.16:4-5).*

**அழிவது** *(பெ.) – 1.இழப்பது (குறு.89:3). 2.நீங்குவது (நற்.382:6-7). 3.குறைவது (பரி.11:36).*

**அழிவதூஉம்** *(பெ.) – செலவு ஆவதும் (குறள்.461).*

**அழிவிலள்** *(பெ.) – இறத்தல் இல்லாதவள் (ஐங்.368).*

**அழிவினவை** *(பெ.) – கேட்டினைத்தரும் தீ (கலி.84:13).*

**அழிவு** *(பெ.) – 1.வருத்தம் (குறு.213:4-5). 2.துன்பம் (நற்.43:11-2). 3.நோய் (அக.333:3). 4.இறத்தல் (ஐங்.368). 5.விடுதல் (குறள்.625). 6.கெடுதல் (குறள்.764). 7.தாழ்வு (குறள்.876).*

**அழீஇ** *(வி.) – 1.அழித்து (நற்.82:9). 2.அழித்துச் சொல்லி (குறள்.182).*

**அழு** *(பெ.) – கண்ணீர் விட்டுப் புலம்பு (புற.7:8).*

**அழுக்கற்று** *(வி.) – பொறாமை செய்து (குறள்.170).*

**இருண்மதி** (பெ.) – காருவா (அமாவாசை) (பரி:11:37).

**இருத்தல்** (வி.) – 1.இருக்கை (நற்:162:4). 2.இருப்பது (புற:44:8-9).

**இருந்தனம்** (பெ.) – இளைப்பாறினோம் (அக:110:6-9).

**இருந்தனர்** (பெ.) – வாழ்கின்றனர் (குறு:146:1-2).

**இருந்தனன்** (பெ.) – அமர்ந்தவன் (கலி:38:1-2).

**இருந்தனெம்** (வி.) – 1.தங்கியிருந்தோம் (நற்:318:13). 2.மகிழ்ந்திருந்தோம் (புற:381:1-4).

**இருந்தாய்** (பெ.) – தங்கிவிட்டாய் (கலி:63:6-9).

**இருந்திர்** (வி.) – வாழ்கின்றீர் (குறு:65:1-5).

**இருந்தோம்** (வி.) – 1.பேசாதிருந்தோம் (குறள்:1322).2.தங்கினோம் (கலி:51:5-6).

**இருந்தோர்** (பெ.) – 1.முயலாதிருந்தவர் (நற்:214:1-2). 2.சோம்பியிருந்தவர் (அக:173:2-3).

**இருப்பவர்** (வி.) – அமைவர் (குறள்:485).

**இருப்பு** (வி.) – 1.இருத்தல் (அக:192:1). 2.இரும்பு (புற:369:1-2).

**இருபிறப்பாளர்** (பெ.) – அந்தணர் (புற:367:12-4).

**இரும்புகர்** (பெ.) – பெரிய புகாரையுடைய காளை (கலி:107:8).

**இரும்புள்** (பெ.) – மகன்றில் பறவை (அக:220:14).

**இருமருந்து** (பெ.) – சோறும், தண்ணீரும் (புற:70:9).

**இருவி** (பெ.) – தாள் (குறு:133:2).

**இருவினை** (பெ.) – பெருவினை (குறள்:5).

**இருவீர்** (பெ.) – நீவிர் இரண்டு பேர் (புற:45-6).

**இருளின்** (பெ.) – இருண்டாலும் (புற:2:17).

**இரை** (பெ.) – பறவை உணவு (குறு:92:2-5).

**இரைக்கும்** (வி.) – ஒலிக்கும் (நற்:109:5-6).

**இரைத்து** (வி.) – ஆரவாரம் செய்து (பரி:1:25-6).

**இரையான்** (பெ.) – உண்டவன் (குறள்:946).

**இல்** (பெ.) – 1.வீடு (குறு:8:3). 2.குடி (புற:279:2).3.மனைவி (குறள்:156).

**இல்லது** (பெ.) – 1.இல்லாத பொருள் (புற:203:7-8). 2.வறுமை (பரி:10:87-8).

**இல்லர்** (பெ.) – வீட்டிலுள்ளவர் (கலி:115:8-9).

**இல்லவள்** (பெ.) – மனைவி (குறள்:63).

**இல்லாகியார்** (பெ.) – இல்லாதவரானவர் (குறள்:935).

**இல்லாகின்று** (வி.) – இல்லையாயிற்று (கலி:120:25).

**இல்லாயின்** (வி.) – இல்லையாயின் (புற:95:6-8).

**இல்லி** (பெ.) – துளை (புற:164:3-4).

**இல்லிர்** (பெ.) – வீட்டிலுள்ளீர் (கலி:51:5-6).

**இல்வாழ்வான்** (பெ.) – இல்லாளோடு கூடி வாழ்பவன் (குறள்:41).

**இலக்கம்** (பெ.) – அம்பு முதலியன எய்து பழகும் குறி (புற:4:5-6).

**இலங்கடை** (பெ.) – இல்லாத வழி (நற்:174:10-11).

**இலங்கி** (வி.) – விளங்கி (நற்:291:3 -4).

**இலங்கிழை** (பெ.) – விளங்குகின்ற அணிகளை அணிந்தவள் (குறள்:1262).

**இலங்கும்** *(வி.) – விளங்கும் (நற்:346:8).*

**இலஞ்சி** *(பெ.) – 1.குளம் (குறு:91:1 -2). 2.மகிழமரம் (ஐங்:94).*

**இலது** *(பெ.) – இல்லாதது (குறள்:77).*

**இலர்** *(வி.) – 1.பெற்றிலர் (குறு:158:6). 2.இல்லாமல் (அக:375:16-8).*

**இலவர்** *(பெ.) – இல்லாதவர் (குறள்:79).*

**இலாட்டியேன்** *(பெ.) – வீட்டுக்கு உரியேன் (அக:386:10-12).*

**இலாத** *(பெ.) – பயவாதவை (குறள்:30:1).*

**இலாதவர்** *(பெ.) – இல்லாதவர் (குறள்:60:8).*

**இலி** *(பெ.) – 1.இல்லாதவன் (புற:240:5). 2.அற்றவன் (பரி:12:51).*

**இலேம்** *(வி.) – இல்லாமல் (நற்:341:10).*

**இவண்** *(பெ.) – 1.இவ்விடம் (குறு:11:2-3). 2.இவ்வுலகம் (குறு:323:6-7).*

**இவணம்** *(பெ.) – இவ்விடத்துள்ளோம் (அகம்:225:3-4).*

**இவணோர்** *(பெ.) – இவ்வுலகத்தோர் (குறு:395:4).*

**இவர்க** *(வி.) – ஏறுக (அக:269:1).*

**இவர்கல்லாது** *(வி.) – ஏறமுடியாமல் (குறு:287:5-6).*

**இவரும்** *(வி.) – 1.படரும் (குறு:36:1-2). 2.உயரப் பறக்கும் (குறு:260:1).3.விரும்பிக் கொள்ளப்படும் (குறு:364:7-8).*

**இவறல்** *(பெ.) – பற்றுள்ளம் (உலோபம்) (குறள்:44:2).*

**இவறியார்** *(பெ.) – கைவிடாதவர் (குறள்:94:5).*

**இவறியான்** *(பெ.) – பற்றுள்ளம் செய்தவன் (குறள்:44:7).*

**இவறு** *(வி.) – உலாவு (ஐங்:177:2-3).*

**இவறும்** *(வி.) – பற்றுள்ளம் கொள்ளும் (குறள்:101:2).*

**இவுளி** *(பெ.) – குதிரை (நற்:63:9 -10).*

**இழக்கும்** *(வி.) – தவறவிடும் (குறள்:23:8).*

**இழத்தும்** *(வி.) – நீங்கப் பெறுவோம் (குறள்:125:10).*

**இழந்த** *(வி.) – 1.சாகக் கொடுத்த (குறு:19:1:1-2). 2.அடங்கிய (நற்:181:10 -1). 3.தோற்ற (அக:199:22 -3).*

**இழந்தவன்** *(பெ.) – நெகிழவிட்டவன் (குறள்:788).*

**இழந்தன்று** *(பெ.) – தவறவிட்டது (அக:189:15).*

**இழந்தன** *(வி.) – 1.நீங்கின (குறு:44:1-2). 2.நீங்கப் பெற்றன (புற:238:9).*

**இழந்தனம்** *(வி.) – நீங்கப் பெற்றோம் (நற்:36:4 -5).*

**இழந்தாள்** *(பெ.) – நீங்கப் பெற்றவள் (கலி:146:18 -9).*

**இழந்தான்** *(பெ.) – தவறவிட்டான் (கலி:136:11-2).*

**இழந்தோர்** *(பெ.) – நீங்கப் பெற்றோர் (புற:51:1-8).*

**இழப்பாள்** *(பெ.) – வருந்துபவள் (கலி:99:15-6).*

**இழாய்** *(பெ.) – இழைகளையணிந்தவளே (கலி:10:21-2).*

**இழி** *(வி.) – 1.வீழ் (குறு:106:1-2).2.வடி (அக:213:22-3). 3.தாழ் (புற:170:4-5).*

**இழிசின** *(பெ.) – தாழ்ந்தன (புற:287:1-2).*

**இழிசினன்** *(பெ.) – புலைமகன் (புற:82:3).*

**இழிதரும்** *(வி.) – 1.விரைந்து வரும் (நற்:7:3-4).2.இறக்கியிடும் (நற்:11:8-9). 3.வடியும் (நற்:124:8-9).*

**இழிந்தது** *(வி.) – தாழ்ந்தது (கலி:72:25-6).*

**இழிந்தன்று** *(வி.) – இகழ்ந்தது (புற:77:9-10).*

**இழிந்தனன்** *(வி.) – இறங்கினன் (அக:66:12-3).*

**இழிபிறப்பாளன்** *(பெ.) – புலையன் (புற:170:5-6).*

**இழிபு** *(வி.) –1.கடந்து (குறு:155:5-7). 2.இறங்கி (ஐங்:101). 3.சாய்ந்து (பரி:1:40).*

**இழிமின்** *(வி.) – இறங்குங்கள் (அக:384:7-8).*

**இழியும்** *(வி.) – வீழும் (பரி:6:5-6).*

**இழிவர்** *(வி.) – நீக்குவர் (பரி:6:32).*

**இழிவு** *(வி.) – குறைதல் (குறள்:946).*

**இழுக்கம்** *(வி.) – 1.தவறுதல் (குறள்:133). 2.சுருங்குதல் (குறள்:136).*

**இழுக்கல்** *(வி.) – வழுக்குதல் (குறள்:415).*

**இழுக்காது** *(வி.) – தவறாமல் (குறள்:384).*

**இழுக்காமை** *(வி.) – மறவாமை (குறள்:536).*

**இழுக்கார்** (வி.) – தவறார் (குறள்:952).

**இழுக்கிய** (வி.) – நழுவிய (குறு:90:4).

**இழுக்கியான்** (பெ.) – 1.தப்பியவன் (புற:71:16). 2.மறந்திருந்தவன் (குறள்:535).

**இழுக்கு** (பெ.) – 1.குற்றம் (குறள்:467). 2.சொல் தளர்தல் (குறள்:716).

**இழுக்குவர்** (வி.) – தவறு எய்துவர் (அக:18:10-2).

**இழுகி** (வி.) – பூசி (புற:281:3).

**இழுகு** (பெ.) – 1.நெய் (குறு:277:2-5). 2.குழம்பு (புற:281:3)

**இழும்** (பெ.) – ஒலிக்குறிப்பு (குறு:345:5-6).

**இழை** (பெ.) – 1.தலையணி (குறு:21:2). 2.அணிகலன் (குறு:45:2). 3.பொற்படை (குறு:345:1). 4.மணிக்கோவை (புற:89:1).

**இழை** (வி.) – அரை (10:91).

**இழைக்க** (வி.) – அமைத்தலால் (பரி:19:53-6).

**இழைக்கும்** (வி.) – செய்யும் (குறு:3:2-3).

**இழைத்த** (வி.) – 1.அமைத்த (குறு:326:2-3). 2.கூட்டிய (நற்:185:8-9). 3.குறித்த (அக:289:9-10).

**இழைத்தனை** (வி.) – செய்தாய் (ஐங்:445).

**இழைத்து** (வி.) – 1.வரைந்து (நற்:3:3). 2.கட்டி (அக:110:7). 3.ஆராய்ந்து (குறள்:417).

**இழைந்து** (வி.) – உள் நெகிழ்ந்து (குறள்:1177).

**இழையவர்** (பெ.) – அணிகளை அணிந்தவர் (கலி:30:13-4).

**இழையார்** (பெ.) – அணிகளை அணிந்தவர் (குறள்:919).

**இளநலம்** (பெ.) – இளமை அழகு (நற்:295:8-5).

**இளநாள்** (பெ.) –இளவேனில் (அக:25:12).

**இளநீர்** (பெ.) – தெங்கின் முற்றாத காய் (புற:29:15-6).

**இளமழை** (பெ.) – சிறுமழை பெய்யும் முகில் (கலி:41:25-7).

**இளி** (பெ.) – 1.ஏழிசையுள் ஒன்று (அக:33:5-7). 2.மாசு (குறள்:917).

**இளிவந்தது** (பெ.) – இழிவானது (குறள்:1066).

**இளிவு** (பெ.) – இகழ்ச்சி (நற்:284:5-6).

**இளை** (பெ.) – காவல் (நற்:384:3-4).

**இளைக்கும்** *(வி.) – மெலியும் (அக:285:5-7).*

**இளைத்தன** *(வி.) – களைத்தன(அக:179:1-2).*

**இளையது** *(பெ.) – சிறியது (புற:58:6-7).*

**இளையார்** *(பெ.) – சிறுவர் (கலி:138:24-5).*

**இற்பிறந்தார்** *(பெ.) – நற்குடிப்பிறந்தார் (குறள்:951).*

**இற்றவை** *(வி.) – முறிந்தவை (கலி:84:1-2).*

**இற்றி** *(பெ.) – கல்லால மரம் (குறு:106:1-2).*

**இற** *(பெ.) – இறால் மீன் (நற்:27:8).*

**இற** *(வி.) – 1.முறிய (கலி: 105). 2.கடந்துசெல் (கலி: 63).*

**இறங்கு** *(வி.) – சாய் (நற்:209).*

**இறத்திர்** *(வி.) – கடந்து செல்வீர் (கலி:25:12).*

**இறந்திசினோர்** *(பெ.) – சென்றவர் (நற்:302:6-10).*

**இறப்பல்** *(வி.) – செல்வேன் (குறு:151:5-6).*

**இறப்பான்** *(பெ.) – நெறி கடந்து செல்லுபவன் (குறள்:145).*

**இறல்** *(பெ.) – சாவு (குறள்:170).*

**இறவா நின்ற** *(வி.) – கழலுகின்ற (குறள்:1177).*

**இறவின் பிள்ளை** *(பெ.) – இளைய இறால் மீன் (புற:342:7-10).*

**இறவு** *(பெ.) – இறால் மீன் (குறு:109:1).*

**இறாஅல்** *(பெ.) – தேனடை (நற்:168:2-3).*

**இறீஇயர்** *(பெ.) – நிறைவேற்றுபவர் (குறு:255:6-8).*

**இறு** *(பெ.) – பக்கம் (கலி:43:12-3).*

**இறுக்கல்** *(வி.) – செலுத்துதல் (புற:97:19-20).*

**இறுக்கும்** *(வி.) – 1.சூழ்ந்திருக்கும் (அக:97:7-8). 2.ஆற்றும் (புற:2:21-4).*

**இறுகு** *(வி.) – உலர் (நற்:265:1).*

**இறுத்த** *(வி.) – நிறுத்தப்பட்டன (கலி:104:29-31).*

**இறுத்தது** *(வி.) – தங்கியது (நற்:156:10).*

**இறுத்தல்** *(வி.) – தங்குதல் (நற்:43:9-11).*

**இறுத்தன்று** *(வி.) – பொழிந்தது (நற்:68:10).*

**இறுத்தன** *(வி.) – தோற்றுவித்தன (அக:132:1).*

**இறுத்தார்** *(பெ.) – தங்கினவர் (கலி:102:30-2).*

**இறுதி** *(பெ.) – 1.ஊழிக்காலம் (புற:397:23). 2.கெடுதி (கலி:10:34). 3.முடிவுக்காலம் (கலி:10:3-4).*

**இறுப்போர்** *(பெ.) – விடை கூறுவோர் (பரி:19:48-9).*

**இறுபு** *(வி.) – 1.விழுந்து (நற்:24:3). 2.ஒடிந்து (அக:333:8-9).*

**இறும்** *(வி.) – முறியும் (குறள்:475).*

**இறும்பு** *(பெ.) – குறுங்காடு (குறு:155:4-5).*

**இறும்பூது** *(பெ.) – வியப்பு (அக:152:17-8).*

**இறுவரை** *(பெ.) – 1.அழிவுக்காலம் (குறள்:488). 2.பக்கமலை (கலி:43:13). 3.அடிவாரம் (கலி:86:32).*

**இறை** *(பெ.) – 1.தங்குதல் (குறு:15:1-2). 2.இறப்பு (குறு:46:2-5). 3.மூட்டுவாய் (குறு:50:3-4). 4.அரசன் (நற்:43:8).*

**இறைகொள்ளும்** *(வி.) – தங்கும் (புற:17:35).*

**இறைச்சி** *(பெ.) – விருப்பம் (கலி:8:9).*

**இறைஞ்சி** *(வி.) – 1.கவிழ்ந்து (நற்:39:1-2). 2.சாய்ந்து (நற்:206:1-2).*

**இறைஞ்சியோள்** *(வி.) – வணங்கினாள் (அக:86:28-9).*

**இறைஞ்சினள்** *(வி.) – 1.கவிழ்ந்தனள் (நற்:147:9-11). 2.கவிழ்ந்து (கலி:77:3-4).*

**இறைஞ்சும்** *(வி.) – வணங்கும் (நற்:300:3-4).*

**இறைஞ்சுவார்** *(வி.) – வணங்குவர் (பரி:20:88-9).*

**இறைத்து** *(வி.) – முகந்து (குறு:99:4-5).*

**இறைப்பவர்** *(பெ.) – நீரை முகந்து பாய்ச்சுபவர் (குறள்:1161).*

**இறைய** *(பெ.) – சிறகுகளை யுடையனவாகிய (குறு:374:5).*

**இறையார்** *(பெ.) – கைச்சந்துடைய மகளிர் (பரி:17:33).*

**இறைவன்** *(பெ.) – 1.அரசன் (புற:18:24-6). 2.தலைவன் (புற:48:4-5).3.கடவுள் (குறள்:5).*

**இன்கண்** *(பெ.) – இன்பம் (குறள்:1152).*

**இன்பம்** (பெ.) – நலம் (குறு:120:1-2).

**இன்புறாமை** (வி.) – இன்பமடையாமல் (அக:13:16-7).

**இன்புறாய்** (வி.) – மகிழமாட்டாய் (நற்:355:8-9).

**இன்மை** (பெ.) – 1.இல்லாமை (குறு:232:1-2). 2.வறுமை (நற்:262:10).

**இன்று** (வி.) – 1.இல்லாமல் (குறு:6:1-3). 2.இல்லை (குறு:46:6-7).

**இன்னம்** (பெ.) – இத்தகையேம் (அக:85:2-3).

**இன்னல்** (பெ.) – துன்பம் (அக:212:11-2).

**இன்னன்** (பெ.) – இத்தன்மையன் (புற:254:5-6).

**இன்னாங்கு** (பெ.) – துன்பம் (கலி:14:8).

**இன்னாதன** (பெ.) – துன்பந்தருவன (குறு:309:5-8).

**இன்னாய்** (பெ.) – 1.கொடியை (புற:94:5). 2.அழகின்றியுள்ளாய் (புற:167:4).

**இன்னார்** (பெ.) – 1.துன்புறுவாரல்லர் (நற்:216:8-1). 2.இனியரல்லர் (புற:167:7).

**இன்னாவுலகம்** (பெ.) – நரகம் (குறள்:243).

**இன்னான்** (பெ.) – இனியனல்லன் (புற:298:3).

**இன்னினி** (பெ.) – இப்பொழுது (ஐங்:232).

**இன்னீர்** (பெ.) – இத்தன்மையீர் (நற்:223:4-5).

**இனத்த** (பெ.) – கூட்டத்தையுடைய (அக:7:10).

**இனத்தன்** (பெ.) – சார்பினன் (குறள்:446).

**இனம்** (பெ.) – 1.கூட்டம் (குறு:9:5). 2.நிறை (புற:15:2).

**இனிய** (பெ.) – 1.நல்லவை (குறு:202:4-5). 2.இனிமையுடையவை (புற:70:3-4). 3.நன்மை (குறள்:1000).

**இனியது** (பெ.) – 1.இனிய செய்தி (குறு:34:3). 2.இன்பம் தருவது (குறள்:1065).

**இனியவர்** (பெ.) – 1.மகளிர் (பரி:6:27). 2.இனிய தலைவி (ஐங்:415).

**இனியர்** (வி.) – 1.இன்பம் தருவார் (குறு:172:2-4). 2.இனிய அழகுடையர் (புற:167:7).

**இனியன்** *(வி.) – 1.இனிமையுடையன் (குறு:84:1). 2.இனிய குணங்களை யுடையன் (புற:216:6).*

**இனியார்** *(பெ.) – 1.பரத்தையர் (பரி:20:86). 2.காதலர் (குறள்:116:8).*

**இனியோள்** *(பெ.) – இனிமையுடையவள் (குறு:206:1-2).*

**இனை** *(வி.) – வருந்து (குறு:19:2-3).*

**இனைகுவாள்** *(வி.) – வருந்துவாள் (ஐங்:306).*

**இனைதல்** *(பெ.) – வருந்துதல் (நற்:286:6).*

**இனைதி** *(வி.) – வருந்துகிறாய் (கலி:129:16).*

**இனைந்து** *(வி.) – வருந்தி (நற்:269:5-6).*

**இனைபவள்** *(பெ.) – வருந்துபவள் (கலி:10:11).*

**இனையம்** *(பெ.) – இத்தன்மையேம் (நற்:349:4-5).*

**இனையர்** *(பெ.) – 1.இத்தன்மையர் (அக:197:17 8). 2.இப்படிப்பட்டவர் (குறள்:79:10).*

**இனையல்** *(வி.) – வருந்தல் (புற:377:3-4).*

**இனையவள்** *(பெ.) – இத்தன்மையள் (கலி:7:18-9).*

**இனையும்** *(வி.) – வருந்தும் (அக:297:3).*

**இனைவது** *(வி.) – 1.வருந்துவது (அக:369:9). 2.இரங்கி ஒலிப்பது (புற:143:15).*

**இனைவித்தல்** *(வி.) – வருத்துவித்தல் (கலி:147:46-7).*

**இனைவோள்** *(பெ.) – வருந்துபவள் (அக:5:27-8).*

**ஈக** *(வி.) – கொடுக்க (புற:289:6-7).*

**ஈகலான்** *(பெ.) – கொடுக்காதவன் (குறள்:863).*

**ஈகுநர்** *(பெ.) – கொடுப்பவர் (புற:235:17).*

**ஈகை** *(வி.) – 1.கொடை (நற்:91:9). 2.பொன் (புற:99:5).*

**ஈகை அரிய இழை** *(பெ.) – கொடுத்தற்கு அரிய மங்கலக் கயிறு (புற:127:5-6).*

**ஈகைப்பயன்** *(பெ.) – இன்பம் (போகம்) (பரி:16:49-51).*

**ஈங்கண்** *(பெ.) – இவ்விடம் (நற்:70:7-8).*

**ஈங்கனம்** *(பெ.) – இங்கு (குறு:336:1-2).*

***ஈங்கை*** *(பெ.)* – ஒருவகை முட்செடி *(குறு:110:5).*

***ஈட்டம்*** *(பெ.)* – தொகுதி *(பரி:2:13-5).*

***ஈட்டல்*** *(வி.)* – தொகுத்தல் *(குறள்:39:5).*

***ஈட்டி*** *(பெ.)* – படைக்கலனுள் ஒன்று *(பரி:5:66).*

***ஈட்டியோன்*** *(பெ.)* – சேர்த்து வைத்தவன் *(அக:276:13).*

***ஈட்டு*** *(வி.)* – தேடுதல் *(அக:239:11).*

***ஈண்டல*** *(வி.)* – சுரந்தது *(நற்:186:1).*

***ஈண்டி*** *(வி.)* – *1.*நெருங்கி *(நற்:229:8-10). 2.*கூடி *(நற்:348:3-4).3.*திரண்டு *(கலி:15:10-11). 4.*தோன்றி *(பரி:2:11-2).*

***ஈண்டு*** *(பெ.)* – *1.*இங்கு *(குறு:90:6). 2.*இப்பிறப்பு *(குறு:3:3).*

***ஈண்டுக*** *(வி.)* – மிகுக *(கலி:136:20-1).*

***ஈண்டு நீர்*** *(பெ.)* – கடல் *(கலி:100:1).*

***ஈண்டும்*** *(வி.)* – பெருகும் *(குறள்:369).*

***ஈண்டுவன*** *(வி.)* – சேர்ந்து *(அக:334:6).*

***ஈண்டையேன்*** *(வி.)* – இவ்விடத்து உள்ளேன் *(குறு:54:1).*

***ஈத்தல்*** *(வி.)* – வழங்கல் *(புற:141:13).*

***ஈத்தவை*** *(வி.)* – கொடுத்தவை *(கலி:84:17-8).*

***ஈத்தனன்*** *(வி.)* – கொடுத்தான் *(புற:150:20-1).*

***ஈத்தார்*** *(வி.)* – கொடுத்தார் *(கலி:109:17-8).*

***ஈத்து*** *(பெ.)* – ஈந்து *(புற:116:7-8).*

***ஈத்தோன்*** *(வி.)* – தந்தான் *(புற:376:14-6).*

***ஈதல்*** *(வி.)* – *1.*கொடுத்தல் *(குறு:63:1). 2.*வாயில் நேர்தல் *(பரி:9:16-8).*

***ஈந்தது*** *(வி.)* – உதவியது *(குறள்:1142).*

***ஈந்து*** *(பெ.)* – ஈச்சமரம் *(நற்:2:2).*

***ஈபவை*** *(பெ.)* – தருவன *(பரி:20:85).*

***ஈமத்தாழி*** *(பெ.)* – முதுமக்கள் தாழி *(புற:256:5-6).*

***ஈமம்*** *(பெ.)* – பிணம் சுடும் விறகு அடுக்கு *(புற:246:11-2).*

***ஈம விளக்கு*** *(பெ.)* – பிணம் சுடும் தீ ஒளி *(புற:356:3-4).*

**ஈமவொள்ளழல்** *(பெ.) – பிணம் சுடும் தீ (புற:231:2-3).*

**ஈய்ந்து** *(வி.) – 1.கொடுத்து (புற:317:6-7). 2.உண்பித்து (புற:364:7-8).*

**ஈயல்** *(பெ.) – ஈசல் (நற்:59:2-3).*

**ஈயன்மூதாய்** *(பெ.) – தம்பலப் பூச்சி (அக:14:2-4).*

**ஈயா** *(வி.) – 1.வழங்கி (புற:56:17). 2.கொடாத (புற:72:17-8).*

**ஈயாமை** *(வி.) – கொடாமை (கலி:2:11).*

**ஈயாமையின்** *(வி.) – கொடாததால் (புற:165:4-5).*

**ஈயும்** *(வி.) – 1.வழங்கும் (குறு:91:5-6). 2.கொடுப்பான் (புற:109:16-8).*

**ஈயேன்** *(வி.) – கொடேன் (புற:204:4).*

**ஈர்** *(பெ.) – 1.நெய்ப்பு (குறு:70:1). 2.தண்மை (குறு:199:5).3.துண்டு (நற்:120:5). 4.பசுமை (நற்:121:2-3).5.பேன்முட்டை (புற:136:4-5).*

**ஈர்க்கும்** *(வி.) – இழுத்துச் செல்லும் (அக:8:6-7).*

**ஈர்ங் கை** *(பெ.) – உண்டு பூசிய கை (குறள்:1076).*

**ஈர்த்தது** *(வி.) – இழுத்தது (கலி:98:27).*

**ஈர்ப்பு** *(வி.) – இழுத்தல் (புற:104:3-4).*

**ஈரணி** *(பெ.) – நீராடும்போது மகளிர் அணிதற்கு உரிய அணி (நற்:40:7-9).*

**ஈரம்** *(பெ.) – 1.நீர்ப்பற்று (குறு:131:4). 2.இரக்கம் (நற்:181:8).*

**ஈரா** *(வி.) – விலகாத (புற:381:25-6).*

**ஈரிய** *(பெ.) – ஈரம் உடையன (நற்:29:9).*

**ஈரும்** *(வி.) – அறுக்கின்ற (குறள்:334).*

**ஈருள்** *(பெ.) – ஈரல் (அக:294:8).*

**ஈரைம்பதின்மர்** *(பெ.) – நூற்றுவர் (புற:2:15-6).*

**ஈவது** *(வி.) – கொடுப்பது (புற:316:8-11).*

**ஈவார்** *(பெ.) – கொடுப்பவர் (குறள்:234).*

**ஈவு** *(வி.) – கொடுத்தல் (புற:127:8).*

**ஈவோர்** *(பெ.) – கொடுப்போர் (புற:136:20).*

**ஈற்றா** *(பெ.) – ஈன்று அணிமையுடைய ஆ (கலி:116:8).*

**ஈற்று** *(வி.) – மகப்பெறுதல் (புற:82:1).*

**ஈன்** *(வி.) – 1.தோற்றுவி (குறு:148:2-3). 2.முட்டையிடு (நற்:3:1).3.குட்டிபோடு (நற்:332:6).*

**ஈன்மர்** *(வி.) – பெற்றெடுப்பர் (புற:74:6-7).*

**ஈன்ற** *(வி.) – 1.பெற்றெடுத்த (குறு:394:3-4). 2.ஆ (குறு:394:3-4). 2.அரும்பிய (அக:144:3).*

**ஈன்றது** *(வி.) – விளைந்தது (புற:35:25-6).*

**ஈன்றல்** *(வி.) – தருதல் (குறள்:99).*

**ஈன்றவள்** *(பெ.) – பெற்றவள் (கலி:29:1-2).*

**ஈன்றன** *(வி.) – 1.மலர்ந்தன (நற்:389:1-3). 2.தோற்றுவித்தன (அக:259:4-5).*

**ஈன்று** *(வி.) – 1.குட்டிபோட்டு (நற்:29:3). 2.முட்டையிட்டு (நற்:384:3-4). 3.பெய்து (அக:139:6). 4.தோற்றுவித்து (அக:345:13).*

**ஈன்றென** *(வி.) – பெற்றதனால் (நற்:370:4).*

**ஈனல்** *(வி.) – 1.கருவுயிர்த்தல் (அக:95:7-9). 2.விளைதல் (புற:159:18-9).*

**ஈனும்** *(வி.) – 1.முட்டையிடும் (நற்:138:4-5). 2.குட்டிபோடும் (அக:329:13). 3.விளைக்கும் (குறள்:37:1).*

**உக்கக்கால்** *(வி.) – இறப்பின் (குறள்.1270).*

**உக்கம்** *(பெ.) – தலை (கலித்.94).*

**உக்கரை** *(பெ.) – 1.அந்தக்கரை, அக்கரை (புறம்.357:9). 2.மேலுலகம் (கலித்.94:17-8).*

**உக த்தல்** *(வி.) – உயரப் பறத்தல் (பதிற்.779).*

**உகவை** *(பெ.) – உவப்பு, மகிழ்ச்சி (புறம்.362:11).*

**உகளு தல்** *(வி.) – தாவுதல் (குறுந்.65).*

**உகிர்** *(பெ.) – நகம் (புறம்.43).*

**உகு தல்** *(வி.) – 1.சிந்துதல் (குறள்.720). 2.கரைந்து தேய்தல் (கலித்.138).*

**உகு த்தல்** *(வி.) – உதிர்த்தல் (புறம்.13).*

**உசாவு தல்** *(வி.) – கேட்டறிதல் (கலித்.7:4).*

**உஞற்று தல்** *(வி.) – முயலுதல் (குறள்.620).*

**உட்கு தல்** *(வி.) – அஞ்சுதல் (குறள்.1088).*

**உட்கை** *(பெ.) – உள்ளங்கை (குறுந்.60).*

**உட்பகை** *(பெ.) – நட்புப் பாராட்டிக் கொடுக்கும் பகைமை (குறள்.889).*

**உட்பொருள்** *(பெ.) – மறைபொருள் (பரி.3).*

**உடம்பாடு** *(பெ.) – ஒற்றுமை (குறள்.890).*

**உடல்(லு) தல்** *(வி.) – 1.சீற்றங் கொள்ளுதல் (புற.77:9). 2.மாறுபடுதல் (ஐங்.66).*

**உடற்று தல்** *(வி.) – 1.வருந்துதல் (குறள்.13). 2.சினமூட்டுதல் (புறம்.4). 3.கெடுத்தல் (குறள்.818).*

**உடன்வயிறு** *(ஆகுபெயர்.) – உடன் பிறந்தோர் (புற.183).*

**உடனிலை** *(பெ.) – 1.உடனிருந்த இருவரைப் பாடும் ஒரு புறத்துறை (புறம்.58). 2.ஒன்றுபடுதல் (அகம்.64).*

**உடனுறை** *(பெ.) – கூடிவாழ்தல், ஒரு சேர வாழ்தல் (நற்.83).*

**உடு த்தல்** *(வி.) – சூழ்தல் (புற.21).*

**உடுக்கை** *(பெ.) – உடை, ஆடை (குறள்.788).*

**உடை தல்** *(வி.) – மனங்குலைதல் (கலித்.10).*

**உடை த்தல்** *(வி.) – அழித்தல் (குறள்.1258).*

**உடைமை** *(பெ.) – 1.உடையனாந்தன்மை (குறள்.74). 2.செல்வம் (கலித்.58).*

**உடையார்** *(பெ.) – செல்வர் (குறள்.395).*

**உண்கடன்** *(பெ.) – உண்பதற்காகப் பெறும் கடன் (கலித்.22).*

**உண்கண்** *(பெ.) – மையெழுதிய கண் (குறள்.1091).*

**உண்டி** *(பெ.) – சோறு (புறம்.18).*

**உண்டிகை** *(பெ.) – கூட்டம் (பரிபா.6:36).*

**உண்மையறிவு** *(பெ.) – பழவினைப் பயனால் (ஊழால்) உள்ள அறிவு (குறள்.373).*

**உணங்கு தல்** *(வி.) – மெலிதல் (குறள்.1310).*

***உணர் தல்*** *(வி.) – 1.அறிதல் (புறம்.3:25). 2.நீங்குதல் (குறள்.1109).*

***உணர்ச்சி*** *(பெ.) – உணர்கை (குறள்.976).*

***உணர்த்து தல்*** *(வி.) – துயிலெழுப்புதல், உறக்கத்திலிருந்து எழுப்புதல் (புறம்.28).*

***உணா*** *(பெ.) – உணவு (புறம்.335).*

***உதவி*** *(பெ.) – துணை (குறள்.101).*

***உப்பக்கம்*** *(பெ.) – முதுகு (குறள்.620).*

***உப்பு*** *(பெ.) – 1.கடல்நீரை ஆவியாக்கி உணக்கிய, படிக வடிவ, வெண்சிறுகல்; (குறள்.1302). 2.இனிமை (குறள்.1328).*

***உய் தல்*** *(வி.) – 1.பிழைத்தல், வாழ்தல் (புறம்.181). 2.நீங்குதல் (பதி.41:17). 3.துன்பத்திலிருந்து தப்புதல் (குறள்.900 ).*

***உய் த்தல்*** *(வி.) – 1.செலுத்துதல் (குறள்.422). 2.நுகர்தல் (அனுபவித்தல்), பட்டறிதல் (குறள்.440).*

***உய்தி*** *(பெ.) – கழுவாய் (பரிகாரம்) (புறம்.34).*

***உய்வு*** *(பெ.) – 1.உயிர் தப்புகை (குறள்.896). 2.கழுவாய் (பரிகாரம்) (குறள்.110).*

***உயங்கு தல்*** *(வி.) – மெலிதல் (அகம்.19).*

***உயர்ந்தோர்*** *(பெ.) – வானவர், தேவர் (பதி.74).*

***உயர்பு*** *(வி.) – உயர்ந்த இடம் (குறுந்.275).*

***உயர்வு*** *(பெ.) – 1.உயரம் (குறள்.743). 2.மேன்மை (குறள்.595).*

***உயல்*** *(பெ.) – உளதாதல் (குறள்.437).*

***உயலும்*** *(வி.) – அசைதல் (பதி.52:17).*

***உயவல்*** *(பெ.) – வருத்தம் (புறம்.69).*

***உயவு*** *(பெ.) – உயிர் பிழைக்கச் செய்யும் வழி (கலி.139).*

***உயவுத்துணை*** *(பெ.) – உற்றதுணை, நெருங்கிய துணை (குறு.207).*

***உயிர் த்தல்*** *(வி.) – முகர்தல் (குறள்.1101).*

***உயிர்*** *(பெ.) – 1.ஆதன் (ஆன்மா) (குறள்.268). 2.உயிரி (குறள்.260).*

***உயிர்நிலை*** *(பெ.) – உடம்பு; (குறள்.80).*

***உயிர்ப்பு*** *(வி.) – இளைப்பாறுகை (கலி.35).*

**உரம்** *(பெ.) – திடம்; (பரி.12:51).*

**உரவன்** *(பெ.) – அறிஞன் (பதி.71:25).*

**உரவு** *(பெ.) – வலிமை; (புறம்.25:3).*

**உரவோர்** *(பெ.) – 1.வலியோர் (புறம்.18:4). 2.ஊக்கமுடையோர்; (குறள்.597).*

**உரவோன்** *(பெ.) – 1.வலியோன் (புறம்.18:4). 2.ஊக்கமுடையோன் (குறள்.597).*

**உரு** *(பெ.) – வடிவம், வடிவு; (குறள்.261).*

**உருப்பு** *(பெ.) – 1.வெப்பம்; (கலி.16:7). 2.சினத்தீ (பதி.50:16).*

**உருபு** *(பெ.) – நிறம் (பதி.52:30).*

**உரன்** *(பெ.) – 1.திண்மை (குறள்.24). 2.பற்றுக்கோடு (கலி.68). 3.வெற்றி (குறள்.1263).*

**உராவு தல்** *(வி.) – பரத்தல் (பரவுதல்); (பரி.6:1).*

**உரிமை செப்பு தல்** *(வி.) – திருமணம் பேசுதல் (குறு.351).*

**உரு த்தல்** *(வி.) – 1.பெருஞ்சினங் கொள்ளுதல்; (கலி.39:23). 2.எரிதல் (புறம்.25:10).*

**உரும்பு** *(பெ.) – கொதிப்பு (பதி.26:13).*

**உருவம்** *(பெ.) – 1.புனைவு (வேடம்) (குறள்.273). 2.கவறு (சூதாடுங் கருவி) (கலி.136).*

**உருளாயம்** *(பெ.) – கவறாட்டத்தால் (சூதாட்டத்தால்) வரும் வரவு (ஆதாயம்); (குறள்.933).*

**உருளி** *(பெ.) – உருளை; (பதி.27:11).*

**உரை த்தல்** *(வி.) – தேய்த்தல்; (கலி.115).*

**உரை** *(வி.) – முழக்கம், (பரி.8:35).*

**உரையல்** *(வி.) – சொல்லுகை; (கலி.95:27).*

**உல்கு** *(பெ.) – ஆயம், உல்கம் (சுங்கவிறை) (குறள்.756).*

**உலக்கை** *(பெ.) – இடிமரம், கூலம் முதலியன குற்றும் உருண்டு நீண்ட கருவி; (பதி.41).*

**உலப்பு** *(வி.) – உதவுகை; (கலி.25).*

**உலம்வருதல்** (வி.) – நெஞ்சு உழலுதல், துன்புறுதல், அமைதியின்மை; (கலி.145:4).

**உலமருதல்** (வி.) – துன்புறுதல்; (கலி.83:2).

**உலவை** (பெ.) – இளந்தளிர் (குறு.79).

**உலறுதல்** (வி.) – வற்றுதல்; (அக.19).

**உலைவு** (பெ.) – 1.வறுமை; (புறம்.150:4). 2.ஊக்கக் குறைவு; (குறள்.620).

**உவகை** (பெ.) – மகிழ்ச்சி (குறள்.304).

**உவர்** (பெ.) – இனிமை (நற்.52).

**உவல்** (பெ.) – 1.தழை (புற.262). 2.சருகு (நற்.282).

**உவலை** (பெ.) – 1.தழை (பதி.28:12). 2.சருகு (அகம்.21).

**உவவு** (பெ.) – முழுநிலா, முழுமதி (புறம்.3:1).

**உவள்** (பெ.) – முன் நிற்பவள் (பரி.11:123).

**உவன்** (பெ.) – முன் நிற்பவன் (பரி.12:55).

**உவா** (பெ.) – யானை (கலி.97).

**உவித்தல்** (வி.) – அவித்தல் (புற.168:11).

**உவியல்** (பெ.) – சமைத்த உணவு; (புற.395).

**உழலை** (பெ.) – குறுக்கு மரம்; (கலி.106).

**உழவு** (பெ.) – 1.உழுதல்; (குறள்.1031). 2.உடலுழைப்பு (பரி.10:103).

**உழுந்து** (பெ.) – பயறுவகை; (ஐங்.211).

**உழுபடை** (பெ.) – கலப்பை; (புற.35:25).

**உழைச்செல்வான்** (பெ.) – நோயாளிக்குப் பக்கத்திலிருந்து மருந்து முதலியன கொடுப்பவன்; (குறள்.950).

**உழையிருந்தான்** (பெ.) – அமைச்சன்; (குறள்.638).

**உள்படுதல்** (வி.) – அறிதல் (பரி.19:47).

**உள்வாய்** (பெ.) – வாயின் உட்புறம்; (குறு.92).

**உள்வீழ்தல்** (வி.) – குறைதல்; (குறள்.955).

**உள்ளகம்** (பெ.) – நெஞ்சு; (அக.19).

**உள்ளம்** (பெ.) – 1.மனம்; (குறள்.282). 2.ஊக்கம் (குறள்.798). 3.மனச்சான்று (குறள்.294).

**உள்ளு தல்** *(வி.) – 1.நினைத்தல்; (புற.212). 2.நன்கு மதித்தல்; (குறள்.665). 3.திரும்ப நினைத்தல் (குறள்.1316).*

**உளம்பு தல்** *(வி.) – 1.அலைத்தல்; (கலி.23). 2.எழுப்புதல்; (அக.94).*

**உளர் தல்** *(வி.) – 1.கோதுதல்; (குறு.82). 2.முடி உலர்த்துதல்; (கலி.105). 3.அசைத்தல் (புற.133:4). 4.தடவுதல் (கலி.7).*

**உளர்வு** *(வி.) – யாழ் வாசிக்கை; (கலி.131:8).*

**உளியம்** *(பெ.) – கரடி; (அக.81).*

**உளை தல்** *(வி.) – சிதறிப் போதல்; (பதி.41:25).*

**உளை** *(பெ.) – 1.தலை; (புற.22:21). 2.குதிரையின் தலையாட்டம் என்னும் அணி; (ஐங்.13).*

**உற்றவன்** *(பெ.) – நோயாளி; (குறள்.950).*

**உறங்கு தல்** *(பெ.) – தூங்குதல்; (குறள்.339).*

**உறந்தை** *(பெ.) – உறையூர்; (புற.39).*

**உறல்** *(பெ.) – 1.அடைகை; (குறள்.378). 2.உறவு, உறவின் முறை; (குறள்.885).*

**உறன்முறை** *(பெ.) – உறவுமுறை; (குறள்.885).*

**உறாதவன்** *(பெ.) – அயலான், முன்பின் அறியாதவன்; நொதுமலன்; (குறள்.1096).*

**உறு தல்** *(வி.) – 1.நன்மையாதல் (குறள்.1061). 2.வருந்துதல் (குறள்.662). 3.தொடுதல்; (குறள்.1101). 4.அன்பு கொள்ளுதல்; (குறள்.1245).*

**உறுத்தரு தல்** *(வி.) – நெருக்குதல்; (பரி.6:37).*

**உறுதி** *(பெ.) – வருவாய்; ஊதியம்; (குறள்.796).*

**உறுப்பில் பிண்டம்** *(பெ.) – கருவில் வடிவுறுமுன் சிதைந்த தசைப் பிண்டம்; (புற.28).*

**உறுப்பு** *(பெ.) – 1.பாகம்; (குறள்.761). 2.உடம்பு (குறள்.993).*

**உறுபொருள்** *(பெ.) – உரிமையாளர் இல்லாமையால் ஒருவருக்குக் கிடைக்கும் பொருள்; (குறள்.756).*

**உறுவன்** *(பெ.) – 1.பெரியோன்; (புற.381). 2.எதிர்த்து நிற்போன்; (புறம்.11).*

**உறை தல்** *(வி.) – ஒழுகுதல் நடத்தல் (ஒட்டி); (குறள்.426).*

**உறை த்தல்** *(வி.) – 1.துளித்தல்; (கலி.15). 2.உதிர்தல்; (கலி.39:32). 3.மிகுதல்; (ஐங்.352). 4.ஒத்தல் (ஐங்.18:5).*

**உறை** *(பெ.) – 1.வாழ்நாள் (குறள்.564). 2.காணிக்கைப் பொருள் (பரி.16:52). 3.மழை (குறள்.559).*

**உறைகோடு தல்** *(வி.) – பருவமழை பொய்த்தல்; (குறள்.559).*

**உறைபதி** *(பெ.) – இருப்பிடம்; (குறள்.1015).*

**உறைபோ தல்** *(வி.) – உறையிட முடியாமல் போதல்; (பதி.66:8).*

**உறையுள்** *(பெ.) – தங்குகை; (புற.96).*

**உறைவி** *(பெ.) – வாழ்பவள்; தங்கி யிருப்பவள் (குறள்.400).*

**ஊக்கம்** *(பெ.) – 1.மனக்கிளர்ச்சி (குறள்.382). 2.வலிமை (குறள்.486). 3.செயல்மேல் கொண்ட எண்ணம்; (புற.8:3).*

**ஊக்கு தல்** *(வி.) – நெகிழ்த்துதல்; (குறள்.1238).*

**ஊங்கணோர்** *(பெ.) – முன்னுள்ளோர்; (புற.39).*

**ஊங்கு தல்** *(வி.) – ஆடுதல்; (நற்.90).*

**ஊசல்** *(பெ.) – ஊஞ்சல்; (கலி.37).*

**ஊசி** *(பெ.) – கூர்மை; (பதி.70:7).*

**ஊசு தல்** *(வி.) – சீவுதல் (கலி.101:8).*

**ஊட்டு தல்** *(வி.) – 1.உண்ணும்படி உணவைப் பிறர் வாயிலிடுதல்; (கலி.11). 2.நுகரச் செய்தல் (அனுபவிக்கச் செய்தல்) (குறள்.378).*

**ஊண்** *(பெ.) – 1.உண்ணுகை (குறள்.227). 2.உணவு (குறள்.939).*

**ஊதியம்** *(பெ.) – மேல்வருவாய் வரவு வரும்படி; (குறள்.449).*

**ஊது தல்** *(வி.) – நுகர்தல் (ஊட்டுதல்) (கலி.66).*

**ஊதை** *(பெ.) – வாடைக்காற்று (பரி.11:84).*

**ஊர் தல்** *(வி.) – 1.பரவுதல் (குறள்.1185). 2.கழலுதல்; (கலி.100). 3.ஏறி நடத்துதல்; (குறள்.37).*

**ஊர்தரு தல்** *(வி.) – வீசுதல் (பரி.11:84).*

**ஊர்முகம்** *(பெ.) – படைகள் போரிடும் இடம் (பதி.40:1).*

**ஊரன்** (பெ.) – மருதநிலத் தலைவன் (ஐங்.88).

**ஊராண்மை** (பெ.) – கொடுக்கும் தன்மை; (குறள்.773).

**ஊரார்** (பெ.) – ஊரிலுள்ளோர்; ஊரவர் (குறள்.1180).

**ஊருணி** (பெ.) – ஊரிலுள்ள குடிநீர்க் குளம்; ஊராருண்ணும் நீர்நிலை; (குறள்.215).

**ஊழ் த்தல்** (வி.) – விரிதல், மலர்தல்; (கலி.26).

**ஊழ்** (பெ.) – 1.பழவினை; முன்வினை; (குறள்.380). 2.முறைமை (புறம்.29). 3.மலர்ச்சி (கலி.44:4).

**ஊழி** (பெ.) – 1.வாழ்நாள் (புறம்.135). 2.முறை; (கலி.130).

**ஊற்றுக்கோல்** (பெ.) – ஊன்றுகோல் (குறள்.415).

**ஊற்றுநீர்** (பெ.) – ஊறு நீர்; (குறள்.1161).

**ஊறு தல்** (வி.) – நீரூறுதல்; (குறள்.396).

**ஊறு** (பெ.) – 1.தொடு உணர்வு; (குறள்.27). 2.புண்; (புற.167:6). 3.சார்தல், பொருந்துதல்; (பதி.51:32).

**ஊறுபாடு** (பெ.) – துன்பம், இடையூறு; (குறள்.945).

**ஊன்** (பெ.) – தவை உடல்; (குறள்.1013).

**ஊன்று தல்** (வி.) – 1.நிலைநிறுத்துதல்; (குறள்.597). 2.தாங்குதல்; (குறள்.615).

**எஃகு** (பெ.) – 1.கூர்மை; (குறள்.773). 2.வேல்; (பரி.10:109).

**எஃகுறு தல்** (வி.) – 1.அறுக்கப்படுதல்; (அக.29). 2.பின்னப்படுதல்; (அக.217).

**எக்கர்** (பெ.) – மணல்குன்று; (புற.117).

**எச்சம்** (பெ.) – 1.மிச்சம் (குறள்.674). 2.பிறங்கடை (சந்ததி); (குறள்.112). 3.பிறப்பிலே வருகிற குறை; (புற.28).

**எஞ்சல்** (வி.) – முற்றுமழிகை; முழுதும் அழிகை; (குறள்.44).

**எஞ்சு தல்** (வி.) – 1.கெடுதல்; (கலி.17:13). 2.ஒழிதல்; (குறள்.382). 3.செய்யாது ஒழிதல்; (குறள்.690). 4.கடத்தல்; (பதி.61:11). 5.தனக்குப்பின் உரிமையாக வைத்தல் (புறம்.213).

**எஞ்ஞான்றும்** (பெ.) – எக்காலமும்; (குறள்.44).

**எடு த்தல்** (வி.) – உண்டாக்குதல்; (கலி.109).

**எடுக்கல்** (பெ.) – தூக்குகை; (கலி.38).

**எடுப்பு தல்** (வி.) – போக்குதல்; (கலி.70).

**எண்** (பெ.) – கணக்கு; (குறள்.393).

**எண்குணத்தான்** (பெ.) – கடவுள்; (குறள்.9).

**எண்ணம்** (பெ.) – நாடிய பொருள்; (குறள்.494).

**எண்ணல்** (பெ.) – கருத்தாய்வு; (புற.138:6).

**எண்ணாட்டிங்கள்** (பெ.) – எட்டாம் நாள் வளர்பிறை நிலவு; (புற.118).

**எண்ணியார்** (பெ.) – நோக்கங் கொண்டவர்; (குறள்.494).

**எண்ணுதல்** (வி.) – ஆராய்தல்; (குறள்.467).

**எதிர் தல்** (வி.) – 1.மாறுபடுதல்; (புற.6:11). 2.தம்மிற் கூடுதல்; சேர்தல்; (பரி.18:1).

**எதிர்** (பெ.) – முரண் (கலி.96).

**எதிர்கழறு தல்** (வி.) – ஒத்திருத்தல்; போலிருத்தல்; (பரி.2:37).

**எதிர்கொள்ளு தல்** (வி.) – வரவேற்றல்; (கலி.36).

**எந்திரம்** (பெ.) – மதிற்பொறி; (புற.177:5).

**எந்தை** (பெ.) – 1.என் அண்ணன்; (கலி.108). 2.என் தலைவன்; (புற.19:13).

**எந்தைபெயரன்** (பெ.) – என் தந்தையின் பெயரைக் கொண்ட என் மகன்; (கலி.81).

**எம்மனோர்** (பெ.) – 1.எம்மைப் போன்றவர்; (புற.210). 2.நாங்கள்; (புற.53).

**எம்மோன்** (பெ.) – எம்முடைய தலைவன்; (புற.157).

**எய்** (பெ.) – முள்ளம்பன்றி; (நற்.98).

**எய் த்தல்** (வி.) – உடல் வருந்துதல்; (குறள்.296).

**எய்து தல்** (வி.) – 1.அணுகுதல்; (புற.10). 2.அடைதல்; (குறுந்.கடவு.வா). 3.பொருந்துதல் (குறள்.516).

**எய்ம்மான்** (பெ.) – முள்ளம்பன்றி (புற.117:13).

**எயிற்றி** (பெ.) – எயினக்குடிப் பெண்; (புற.181).

**எரி** (பெ.) – 1.நெருப்பு; (குறள்.896). 2.மூன்றாம் நாண்மீன், ஆரல் (கார்த்திகை நட்சத்திரம்) (பரி.11:2). 3.வால்வெள்ளி (வால்நட்சத்திரம்) வகை (புற.395).

**எரிக்கொடி** (பெ.) – நெருப்பின் கொழுந்து; (ஐங்.353).

**எரிநகை** (பெ.) – வெட்சி மலர்; (பரி.13:59).

**எரிப்பூ** (பெ.) – நெருப்புப் போன்ற நிறமுள்ள மலர்; (புற.249).

**எரு** (பெ.) – உரம்; (குறள்.1037).

**எருக்கு தல்** (வி.) – 1.வருத்துதல்; (கலி.81). 2.அழித்தல்; (பதி.83:7).

**எருது** (பெ.) – காளைமாடு; (பதி.27:13).

**எருமை** (பெ.) – எமன் (பரி.8:86).

**எருவை** (பெ.) – தலை வெளுத்து உடல் சிவந்திருக்கும் பருந்து; (புற.64:4).

**எல்** (பெ.) – பகல்; (புற.170).

**எல்லு தல்** (வி.) – ஒளிமங்குதல்; (குறு.179).

**எல்லை** (பெ.) – 1.வரம்பு; (குறள்.306). 2.பகல்; (கலி.123).

**எல்வளி** (பெ.) – பெருங்காற்று; (அக.77).

**எலிப்பகை** (பெ.) – எலியின் எதிர்ப்பாற்றல்; (குறள்.763).

**எலுவர்** (பெ.) – தோழர்; (குறு.129).

**எவ்வது** (கு.வி.எ.) – எவ்வகை; (குறள்.426).

**எவ்வம்** (பெ.) – 1.துன்பம்; (புற.393). 2.இழிவு; (குறள்.223).

**எவ்வழி** (சு.பெ.) – எந்த வழி; (புற.187).

**எவ்வி** (பெ.) – வேளிர் குறுநில மன்னர்களுள் ஒருவனான வேள் எவ்வி; (புற.202:14).

**எவ்வை** (பெ.) – எம் தங்கை; (ஐங்.89).

**எவன்** (வி.பெ.) – வியப்பு இரக்கச் சொல்; (குறள்.1165).

**எழால்** (பெ.) – வல்லூறு என்னும் பறவை; (பதி.36:10).

**எழில்** (பெ.) – 1.அழகு; (பரி.18:28). 2.தோற்றப் பொலிவு; (குறள்.407). 3.பருமை; (புற.23). 4.உயர்ச்சி; (புற.13).

**எழிலி** (பெ.) – முகில் (மேகம்); (குறள்.17).

**எழினி** *(பெ.)* – கடையேழு வள்ளல்களுள் ஒருவன்; *(புற.158).*

**எழூ தல்** *(வி.)* – பரவுதல்; *(பரி.15:25).*

**எழூ** *(பெ.)* – ஏழு; *(குறள்.107).*

**எழூத்து** *(பெ.)* – ஓவியம்; *(பரி.19:53).*

**எழூது தல்** *(வி.)* – ஓவியம் வரைதல்; *(குறள்.1285).*

**எழூ பிறப்பு** *(பெ.)* – ஏழூ வகையான பிறவி; *(குறள்.107).*

**எழூமுடி** *(பெ.)* – வெல்லப்பட்ட ஏழரசர்களின் முடியால் செய்த சேரன்மாலை; *(பதி.14:11).*

**எழூமை** *(பெ.)* – ஏழூமுறை பிறக்கும் பிறப்பு; *(குறள்.398).*

**எள்ளு தல்** *(வி.)* – இகழ்தல்; *(குறள்.667).*

**எற்று தல்** *(வி.)* – 1.வெட்டுதல்; *(கலி.85).* 2.நீங்குதல்; *(குறள்.663).*

**எறி தல்** *(வி.)* – 1.வெட்டுதல்; *(புற.19:12).* 2.அறுத்தல்; *(பதி.18:2).* 3.முறித்தல்; *(புற.4:10).* 4.அறைதல்; *(புற.15).* 5.பொழிதல்; *(பரி.20:1).* 6.இரையைப் பாய்ந்தெடுத்தல்; *(அகம்.81).*

**எறி த்தல்** *(வி.)* – 1.தைத்தல்; *(கலி.94).* 2.உறைத்தல்; *(புற.6).*

**எறும்பி** *(பெ.)* – எறும்பு; *(குறு.12).*

**எறுழ்** *(பெ.)* – செந்நிறப் பூவுடைய குறிஞ்சிநிலத்து மர வகை; *(ஐங்.308).*

**என்** *(கு.வி.எ.)* – எது அல்லது எதையெனப் பொருள்படும் இடைச் சொல்; *(குறள்.430).*

**என்ப** *(பெ.)* – என்று சொல்வன; *(குறள்.392).*

**என்பான்** *(பெ.)* – என்று சொல்லப்படுபவன் *(குறள்.41).*

**என்பிலி** *(பெ.)* – புழு; *(குறள்.77).*

**என்பு** *(பெ.)* – உடம்பு *(குறள்.73).*

**என்றூழ்** *(பெ.)* – 1.கதிரவன்; *(குறு.215).* 2.கோடைக் காலம்; *(புற.75).*

**என்னதும்** *(கு.வி.எ.)* – சிறிதும்; *(புற.57).*

**என்னாங்கு** *(கு.வி.எ.)* – என்னிடத்து; *(கலி.23).*

**என்னை** *(பெ.)* – 1.என் தந்தை *(கலி.108).* 2.என் தலைவன்; *(புற.262).* 3.என் தாய்; *(கலி.107)..*

**எனை** *(கு.வி.எ.) – எவ்வளவு; (குறள்.207).*

**எனைத்துணை** *(வி.எ.) – எவ்வளவு; (குறள்.144).*

**எனையதும்** *(கு.வி.எ.) – சிறிதும்; (அக.29).*

**ஏ** *(பெ.) – இறுமாப்பு; (பரி.7:55).*

**ஏக்கறு தல்** *(வி.) – ஆசையால் தாழ்தல்; (குறள்.395).*

**ஏதம்** *(பெ.) – துன்பம்; (குறள்.136).*

**ஏதிலார்** *(பெ.) – 1.பகைவர்; (குறள்.440). 2.விலை மாதர்; பரத்தையர்; (கலி.78).*

**ஏதின்மை** *(பெ.) – பசுமை; (குறள்.816).*

**ஏது** *(பெ.) – தொடர்பு; (கலி.65:25).*

**ஏந்து தல்** *(வி.) – 1.ஓங்குதல்; (புற.2:2). 2.சிறத்தல்; (குறள்.899).*

**ஏம்** *(பெ.) – குழப்பம், மயக்கம் (அக.69).*

**ஏமம்** *(பெ.) – 1.குழப்பம் (உன்மத்தம்) (குறள்.873). 2.காவல்; (புற.1:11).*

**ஏமரு தல்** *(வி.) – காக்கப்படுதல்; (குறள்.448).*

**ஏமா தல்** *(வி.) – 1.ஆசைப்படுதல்; (புற.101). 2.இன்புறுதல்; (புற.198:8).*

**ஏமாப்பு** *(பெ.) – 1.அரண் (பாதுகாப்பு) (குறள்.126). 2.வலிமை; (குறள்.112).*

**ஏமார்த்தல்** *(வி.) – வலுப்படுத்தல்; (குறள்.660).*

**ஏமாற்று தல்** *(வி.) – காவல் செய்தல்; (பரி.4:53).*

**ஏமுறு தல்** *(வி.) – பித்தாதல்; (குறள்.873).*

**ஏய் த்தல்** *(வி.) – ஒத்திருத்தல்; (புற.33:17).*

**ஏர்** *(பெ.) – 1.கலப்பை; (குறள்.14). 2.உழவு; (குறள்.1038). 3.அழகு; (குறள்.1053).*

**ஏல் தல்** *(வி.) – தூக்கத்திலிருந்து எழுதல்; துயிலெழுதல்; (கலி.12).*

**ஏவல்** *(பெ.) – ஓதுகை; (பரி.13:40).*

**ஏழ்புழை** *(பெ.) – புல்லாங்குழல் வகை; (பரி.8:22).*

***ஏழை*** *(பெ.) – அறியாமை; (கலி.55:23).*

***ஏறு*** *(பெ.)– 1.காளை; (புறம்.13). 2.அடிக்கை; (பதி.41:23). 3.பருந்தின் கவர்ச்சி; (புற.43:5). 4.அழிக்கை; (கலி.2).*

***ஏறுமாறு*** *(பெ.) – இகலுகை; (பரி.18:6).*

***ஐ*** *(பெ.) – 1.தலைவன்; (குறள்.771). 2.கணவன்; (குறு.27).*

***ஐது*** *(பெ.) – நுண்ணியது; (கலி.52).*

***ஐந்தடக்கு தல்*** *(வி.) – ஐம்புலன்களையும் (கண், காது, மூக்கு, செவி, மனம்) (குறள்.1)26.*

***ஐந்தவி த்தல்*** *(வி.) – ஐம்புலன்களையும் அடக்குதல்; (குறள்.25).*

***ஐம்புலம்*** *(பெ.) – ஐம்புலன்களுக்குரிய சுவை, ஒளி, தொடுவுணர்வு (ஊறு), ஓசை, மணம் (நாற்றம்) என்னும் ஐந்து உணர்ச்சிகள்; (குறள்.1101).*

***ஐய*** *(கு.பெ.எ.) – வியக்கத்தக்க; (கலி.25).*

***ஐயவி*** *(பெ.) – 1.வெண்சிறு கடுகு; (புற.98:15). 2.கதவிற்குக் காவலாகப் புறவாயிலில் தூக்கப்படும் துலாமரம்; (பதி.16).*

***ஐயள்*** *(பெ.) – வியக்கத்தக்கவள்; (ஐங்.253).*

***ஐயன்மார்*** *(பெ.) – அண்ணன்மார் (கலி.107).*

***ஐயுணர்வு*** *(பெ.) – ஐம்புல அறிவு; (குறள்.354).*

***ஐயுறவு*** *(பெ.) – தெளிவின்மை; (குறள்.510).*

***ஐவளம்*** *(பெ.) – மிளகு, அகில்,கோட்டம், தக்கோலம் (வால்மிளகு), குங்குமம் என்னும் மலை வளம் ஐந்து; அரக்கு, இறலி, செந்தேன், மயிற்பீலி, நாவி என்பாரும் உண்டு. (பரி:18.15 உரை).*

***ஐவனம்*** *(பெ.) – மலைநெல்; (புற.159:17).*

***ஒ த்தல்*** *(வி.) – 1.போல இருத்தல்; (குறள்.993). 2.தகுதியாதல்; (புற.10:4).*

***ஒக்க*** *(கு.வி.எ.) – ஒத்திருத்தல்; (குறள்.490).*

***ஒக்கல்*** *(பெ.) – சுற்றத்தார் (குறள்.43).*

***ஒசியல்*** *(பெ.) – கிளை முறிக்கப்பட்ட மரம்; (குறு.112).*

**ஒட்டார்** *(பெ.) – பகைவர்; (குறள்.826,967).*

**ஒட்டு தல்** *(வி.) – 1.தாக்குதல்; (குறள்.499). 2.நட்பாக்குதல்; (குறள்.679).*

**ஒடி தல்** *(வி.) – 1.கெடுதல்; (கலி.93:25). 2.இடையறுதல்; (புற.29).*

**ஒடியெறி தல்** *(வி.) – மரக்கொம்பைப் பாதியாகக் குறைத்தல்; (கலி.68).*

**ஒடுக்கம்** *(பெ.) – பதுக்கம்; (குறள்.486).*

**ஒடுங்கு தல்** *(வி.) – 1.மறைந்திருத்தல்; (குறள்.828). 2.சோம்பியிருத்தல்; (புற.8:4).*

**ஒண்டொடி** *(பெ.) – பெண்; (குறள்.1101).*

**ஒண்மை** *(பெ.) – நல்லறிவு; (குறள்.844).*

**ஒத்தது** *(பெ.) – தகுதியானது; (குறள்.214).*

**ஒத்தன்** *(பெ.) – ஒருவன்; (கலி.61).*

**ஒத்தாங்கு** *(கு.வி.எ.) – ஏற்றவாறு; (குறள்.561).*

**ஒத்தி** *(பெ.) – ஒரு பெண்; (கலி.143).*

**ஒத்து** *(பெ.) – தாளவொற்று; (பரி.12:42).*

**ஒதுக்கு** *(பெ.) – நடை; (புற.135:3).*

**ஒதுங்கு தல்** *(வி.) – நடத்தல்; (புற.159:3).*

**ஒப்பமிடு தல்** *(வி.) – மணி முதலியன துலக்குதல்; (புற.147:7).*

**ஒப்பாரி** *(பெ.) – ஒப்பு; (குறள்.1071).*

**ஒப்பு** *(பெ.) – ஒத்திருக்கை; (குறள்.993).*

**ஒய் தல்** *(வி.) – 1.இழுத்தல்; (அக.68). 2.செலுத்துதல்; (பதி.87:4). 3.கொடுத்தல்; (நற்.356). 4.தப்புதல்; (பரி.20:39).*

**ஒய்யென** *(கு.வி.எ.) – விரைவாக; (கலி.37).*

**ஒரால்** *(பெ.) – நீங்குகை; (பதி.23:17).*

**ஒருக்க** *(கு.வி.எ.) – எப்பொழுதும்; (பரி.6:72).*

**ஒருகால்** *(வி.எ.) – சிலவேளை; (குறள்.248).*

**ஒருகுழையவன்** *(பெ.) – பலராமன்; (கலி.105:11).*

**ஒருசார்** *(பெ.) – ஒருபக்கம்; (புற.115:1).*

**ஒருஞான்று** *(பெ.) – ஒருநாள்; (கலி.37:14).*

**ஒருதலை** *(பெ.) – ஒரு சார்பு; (குறள்.1196).*

**ஒருதிறம்** *(பெ.) – ஒருகூறு; (கலி.42:14).*

**ஒருதிறன்** *(பெ.) – ஒரு பக்கம்; (அக.91).*

**ஒருநிலைப் பொய்கை** *(பெ.) – வற்றாத பொய்கை; (பரி.8:15).*

**ஒருபொழுது** *(பெ.) – ஒருவேளை; (குறள்.337).*

**ஒருமை** *(பெ.) – ஒரு பிறப்பு; (குறள்.398).*

**ஒருவந்தம்** *(பெ.) – 1.உறுதி; (குறள்.563). 2.நிலைபேறு; (குறள்.593).*

**ஒருவன்** *(பெ.) – 1.ஒருத்தன்; (குறள்.1023). 2.ஒப்பற்றவன்; (கலி.37).*

**ஒருவு தல்** *(வி.) – 1.நீங்குதல்; விடுதல்; (குறள்.800). 2.தப்புதல்; (புறம்.43:5). 3.ஒப்பாதல்; ஒத்திருத்தல்; (பரி.3:32).*

**ஒல்கு தல்** *(வி.) – 1.தளர்தல்; (புற.135:8). 2.சுருங்குதல்; (குறள்.136). 3.அசைதல்; (பதி.51:10). 4.நடத்தல்; (கலி.115:14). 5.வறுமைப்படுதல்; (கலி.25:20). 6.மேலேபடுதல்; (கலி.126:12). 7.கெடுதல்; (கலி.8:4).*

**ஒல்கு** *(பெ.) – வறுமை; (கலி.25:20).*

**ஒல்கும்** *(வி.) – வளையும்; (அக.27:2-3).*

**ஒல்லாங்கு** *(வி.) – பொருந்தும்; (கலி.3:11).*

**ஒல்லாதார்** *(பெ.) – பகைவர்; (கலி.134:2).*

**ஒல்லாது** *(வி.) – 1.பொருந்தாது; (குறு.264:4-5). 2.இயலாது; (குறு.395:1-2). 3.அடங்காது; (அக.256:12-13).*

**ஒல்லார்** *(பெ.) – 1.உடன்படாதவர்; (அக.26:10-11). 2.பகைவர்; (அக.356:13-15).*

**ஒல்லும்** *(வி.) – 1.பொருந்தும்; (குறு.217:1). 2.இயலும்; (குறு.256:4-5). 3.முடியும்; (குறள்.33).*

**ஒல்லை** *(பெ.) – விரைவு; (குறள்.563).*

**ஒல்வாங்கு** *(வி.) – இயன்ற அளவு; (குறு.322:7).*

**ஒல்வை** *(பெ.) – பொறுப்பாய்; (குறு.259:5).*

**ஒலி** *(பெ.) – 1.ஓசை; (குறு.54:2-3). 2.ஆரவாரம்; (நற்.113:9). 3.சொல்; (பரி.4:31).*

**ஒலி த்தல்** *(வி.) – 1.முழங்குதல்; (குறு.88:1). 2.தழைத்தல்; (குறு.225:6-7).*

**ஒலிபு** *(பெ.) – தழைத்து; (புற.120:4-5).*

**ஒலிய** *(பெ.) – ஒலியையுடையவை; (கலி.126:8).*

**ஒலியல்** *(பெ.) – 1.தழைத்தல்; (அக.102:5). 2.மாலை; (பரி.19:97).*

**ஒவ்வா** *(வி.) – 1.ஒப்பாகா; (குறள்.977). 2.பொருந்தா; (கலி.77:8-9) 3.ஒவ்வாத; (பரி.11:72-73).*

**ஒழிக** *(வி.) – 1.விடுக; (நற்.11:4-5). 2.துணிவுப் பொருளது; (நற்.149:10). 3.தவிர்க; (புற.236:7).*

**ஒழித்தது** *(பெ.) – 1.விலக்கியது; (அக.39:1-2). 2.மாற்றியது; (புற.50:9-10).*

**ஒழிதல்** *(பெ.) – 1.பிரிதல்; (நற்.43:10-12). 2.தவிர்தல்; (கலி.8:19-20).*

**ஒழிந்திருத்தல்** *(பெ.) – 1.ஆற்றியிருத்தல்; (அக.157:13-14). 2.பிரிந்திருத்தல்; (கலி.23:4-5).*

**ஒழிந்தோர்** *(பெ.) – 1.மறையோர்; (புற.346:5-6). 2.பிரிந்தோர்; (ஐங்.331).*

**ஒழிபு** *(வி.) – தங்குதல் (நற்.310:7-8).*

**ஒழியும்** *(வி.) – 1.தங்கும்; (அகம்.245:2-3). 2.உரியனவாகும்; (புற.367:3). 3.நீங்கும்; (கலி.75:29).*

**ஒழிவல்** *(வி.) – இறந்துபடுவேன்; (கலி.20:13-14).*

**ஒழிவு** *(வி.) – 1.ஒழிதல்; (அக.353:17-8). 2.தவிர்தல்; (பரி.தி.1:45).*

**ஒழுக்கம்** *(பெ.) – நன்னெறியில் நடத்தல்; (நற்.110:8-9).*

**ஒழுகல்** *(வி.) – நடத்தல்; (நற்.160:2-3).*

**ஒழுகு** *(வி.) – 1.ஓடும்; (குறு.25:4-5). 2.செரிதல்; (குறு.366:5-6). 3.மெலிந்த; (நற்.245:5). 4.நடைபெறுதல்; (அக.167:16).*

**ஒழுகுதல்** *(பெ.) – வாழ்தல்; (குறள்.444).*

**ஒழுகும்** *(வி.) – 1.நடக்கும்; (குறு.203:4-6). 2.ஓடும்; (நற்.144:7). 3.செல்லும்; (நற்.154:11-12).*

**ஒழுகை** (பெ.) – வண்டி; (குறு.388:4).

**ஒழுங்கு** (பெ.) – 1.வரிசை; (நற்.159:4). 2.திரட்சி; (அக.213:15-16).

**ஒள்** (பெ.) – ஒளி (பிரகாசம்); (குறு.258:6).

**ஒள்ளியர்** (பெ.) – அறிஞர்; (குறள்.714).

**ஒளி** (பெ.) – 1.பிறங்கல் (பிரகாசம்); (குறு.240:1-2). 2.பார்வை; (நற்.66:11). 3.விளக்கம்; (நற்.128:2). 4.எதிர் வடிவம்; (நற்.219:6-8). 5.நன்மதிப்பு; (புறம்.309:6-7). 6.கட்புலன்; (குறள்.27). 7.விளக்கு; (குறள்.390). 8.புகழ்; (குறள்.556). 9.அனைவராலும் நன்கு மதிக்கப்படுதல்; (குறள்.653). 10.கடவுட்டன்மை; (குறள்.698). 11.பிறரைவிட மிக்குத் தோன்றும் தோற்றம்; (குறள்.971).

**ஒளிக்கும்** (வி.) – 1.மறைந்து கொள்ளும்; (நற்.233:1-3). 2.மறைக்கும்; (அகம்.115:14-15).

**ஒளித்தது** (வி.) – மறைத்தது; (குறள்.928).

**ஒளிப்பன** (வி.) – ஒடுங்குவன; (அக.374:13-14).

**ஒளிப்பு** (வி.) – ஒளி வீசுதல்; (அக.344:9).

**ஒளிர்தல்** (வி.) – விளங்குதல்; (நற்.105:1-2).

**ஒளிர்வரும்** (வி.) – விளங்கும்; (புற.398:26-27).

**ஒளிறு** (பெ.) – ஒளி; (பரி.10:109).

**ஒளிறுதல்** (வி.) – 1.ஒளி வீசுதல்; (குறு.393:5-6). 2.படஞ் செய்தல்; (புற.57:8).

**ஒற்கம்** (பெ.) – வறுமை; (புற.327:5-6).

**ஒற்றாது** (வி.) – வீழ்த்தாது; (புற.237:16-17).

**ஒற்றி** (வி.) – 1.உதைத்து; (குறு.213:2-3). 2.பொருந்தி; (நற்.28:1). 3.சார்ந்து; (நற்.322:6-7). 4.அறிந்து; (அக.2:14-15). 5.தீர்மானித்து; (அக.5:20). 6.மோதி; (அக.18:4-5). 7.நினைந்து; (அக.54:18-19). 8.தோண்டி; (அக.215:13-14). 9.ஆராய்ந்து; (அக.227:4-5). 10.தொடர்ந்து; (அக.388:25-26). 11.மறைந்து உண்டு; (குறள்.927). 12.உய்த்துணர்ந்து; (குறள்.927). 13.ஒற்றடம் கொடுத்து; (கலி.106:35). 14.ஒத்தி; (பரி.16:22-23).

**ஒற்று** *(பெ.) – 1.வேவு; (அகம்.313:15). 2.ஒற்றர்; (குறள்.581).*

**ஒற்றும்** *(வி.) – 1.தாக்கும்; (நற்.366:10-11). 2.தழுவும்; (கலி.103:51-52).*

**ஒறுக்கிற்பவர்** *(பெ.) – இகழ்பவர்; (குறள்.779).*

**ஒறுத்தல்** *(வி.) – தண்டித்தல்; (குறள்.314).*

**ஒன்றல்** *(வி.) – கூடுதல்; (குறள்.886).*

**ஒன்றாது** *(வி.) – சேராமல்; (புற.5:6-7).*

**ஒன்றாமை** *(பெ.) – பொருந்தாமை; (குறள்.886).*

**ஒன்றார்** *(பெ.) – பகைவர்; (பரி.21:70).*

**ஒன்றி** *(வி.) – 1.கூடி; (நற்.36:6). 2.பொருந்தி; (புற.202:5). 3.இயைந்து; (பரி.10:60-61).*

**ஒன்றினார்** *(பெ.) – சேர்ந்திருப்பவர்; (கலி.18:10-11).*

**ஒன்று** *(பெ.) – ஒத்தல்; (பரி.4:41).*

**ஒன்றுதல்** *(பெ.) – பொருந்துதல்; (அக.213:23-24).*

**ஒன்று மொழி** *(பெ.) – வஞ்சினம்; (குறு.73:2-4).*

**ஒன்னலர்** *(பெ.) – பகைவர்; (புற.274:4-5).*

**ஒன்னாதார்** *(பெ.) – பகைவர்; (கலி.27:15).*

**ஒன்னார்** *(பெ.) – பகைவர்; (அக.127:6-7).*

**ஓ** *(பெ.) – 1.ஒழிதல்; (அக.11:12-22). 2.ஓவியம்; (அக.142:21-22).*

**ஓஓதல்** *(வி.) – நீக்குதல்; (குறள்.653).*

**ஓக்கி** *(வி.) – படைத்து; (அக.348:7-9).*

**ஓக்கிய** *(வி.) – 1.உயர்த்திய; (அக.9:11-12). 2.எடுக்கப்பட்ட; (புற.69:13). 3.கொடுக்கப்பட்ட; (புற.302:6-7). 4.தூக்கிய; (பதி.52:22).*

**ஓங்கல்** *(பெ.) – 1.உயர்தல்; (குறு.211:4). 2.உயர்ச்சி; (குறு.355:5). 3.மலை; (அகம்.228:9-10). 4.மலையுச்சி; (ஐங்.231).*

**ஓச்சம்** *(பெ.) – ஆக்கம்; (பதி.41:19-20).*

**ஓசை** *(பெ.) – 1.பேரொலி; (நற்.4:9-10). 2.செவிப்புலன்; (குறள்.27).*

**ஓட்டி** *(வி.) – 1.புறக்கிடச் செய்து; (அக.127:3-4). 2.அகற்றி; (அகம்.253:4-5).*

**ஓட்டு** *(பெ.) – 1.விரைந்து செல்லுதல்; (அக.182:5-6). 2.தோல்வி; (குறள்.775).*

**ஓடம்** *(பெ.) – தோணி; (அக.101:12-13).*

**ஓடல்** *(வி.) – தோற்றோடுதல்; புற.93:3-4).*

**ஓடாது** *(வி.) – 1.செல்லாமல்; (பதி.13:25-26). 2.கருதாமல்; (கலி.8:16).*

**ஓடி** *(வி.) – 1.விரைந்து சென்று; (குறு.394:3). 2.தோற்றோடி; (நற்.170:7-8). 3.இரங்கி; (நற்.355:9-10). 4.கெட்டு; (கலி.16:1-2). 5.பரந்து; (கலி.45:5-6). 6.குழறி; (கலி.81:16-17). 7.பொருது; (கலி.136:11-12).*

**ஓடும்** *(வி.) – 1.விரைந்து செல்லும்; (நற்.186:3-4). 2.பரந்திருக்கும்; (அக.179:2). 3.விழும்; (ஐங்.20:5). 4.கெடும்; (கலி.17:8).*

**ஓடை** *(பெ.) – 1.யானையின் நெற்றிப் பட்டம் (நற்.296:2-3). 2.நீரோடை; (பரி.3:12-14).*

**ஓதம்** *(பெ.) – 1.வெள்ளம்; (குறு.9:4-6). 2.கடல்; (புறம்.22:22-23).*

**ஓதி** *(பெ.) – 1.கூந்தல்; (குறு.70:1). 2.ஓந்தி; (குறு.140:1). 3.கூந்தலையுடையாள்; (நற்.57:7-10). 4.கற்று; (குறள்.834).*

**ஓது** *(பெ.) – 1.மறையோதுகை; (கலி.69:5). 2.சொல்; (நற்.237:9-10).*

**ஓதுக** *(வி.) – மறை கற்க; (ஐங்.4:2).*

**ஓதை** *(பெ.) – 1.பேரொலி; (அக.37:1-2). 2.ஓசை; (அக.41:6-7). 3.தொழில் செய்யும் ஓசை; (புற.65:3-4).*

**ஓப்பல்** *(வி.) – ஓட்டல்; விரட்டல்; (நற்.49:4).*

**ஓப்புநர்** *(பெ.) – துரத்துபவர்; (புற.29:13).*

**ஓம்பப்படும்** *(வி.) – பாதுகாக்கப்படும்; (குறள்.131).*

**ஓம்பல்** *(வி.) – 1.காத்தல்; (குறு.294:7-8) (அகம்.257:8-9). 2.வழுவாமல் செய்தல்; (குறள்.43). 3.மதிப்பளித்துப் பேணுதல்; (குறள்.89).*

**ஓம்பல்** *(வி.) – 1.தவிர்த்தல்; (குறள்.612) (குறள்.1155). 2.நீக்குதல்; (குறள்.820).*

**ஓம்பி** *(வி.) – 1.பாதுகாத்து; (நற்.11:7-8). 2.நீக்கி; (நற்.102:1-2). 3.போற்றி; (அக.263:11-12). 4.தவிர்த்து; (அக.360:11-12). 5.பேணி, விரும்பி; (குறள்.81). 6.அடக்கி; (குறள்.132).*

**ஓம்பு** *(வி.) – 1.ஒழித்தல்; (குறு.48:2-3). 2.பாதுகாத்தல்; (அக.146:8-13). 3.தவிர்த்தல்; (குறள்.1149).*

**ஓம்புநன்** *(பெ.) – பாதுகாப்பவன்; (புற.215:6-7).*

**ஓமை** *(பெ.) – பாலை நிலத்து மரவகை; (குறு.79:2).*

**ஓய்** *(வி.) – 1.நுணுகுதல்; (நற்.43:3). 2.சோர்தல்; (பதி.60:7).*

**ஓய்வன** *(வி.) – களைத்தன; (குறு.383:4-5).*

**ஓர்** *(இடை.) – அசைநிலை; (புற.5:4).*

**ஓயற்க** *(வி.) – நீங்காதாக; (பரி.10:128).*

**ஓர்க்கும்** *(வி.) – கூர்ந்து கேட்கும்; (குறு.396:6-7).*

**ஓர்த்தது** *(பெ.) – கருதியது; (கலி.92:21).*

**ஓர்த்து** *(வி.) – 1.கூர்ந்து கேட்டு; (நற்.176:8). 2.ஆராய்ந்து; (அக.144:18-19). 3.கேட்டு, புள்குறி (நிமித்தம்) பார்த்து; (அக.207:3-4).*

**ஓர்ந்து** *(வி.) – ஆராய்ந்து; (குறள்.541).*

**ஓர்ப்பது** *(பெ.) – கருதுவது; (கலி.95:6-7).*

**ஓர்மின்** *(வி.) – கூர்ந்து கேளுங்கள்; (பரி.11:127).*

**ஓர்வு** *(வி.) – ஆராய்தல்; (கலி.42:14-15).*

**ஓரற்று** *(பெ.) – ஒரு தன்மையது; (புறம்.346:15).*

**ஓரன்மை** *(பெ.) – ஒரு தன்மை யில்லாமை; (நற்.328:3-4).*

**ஓரன்ன** *(வி.) – 1.ஒத்த; (நற்.25:10). 2.ஒரு தன்மையாகிய; (புற.183:3). 3.போன்ற; (குறு.95:4-5).*

**ஓரன்னர்** *(பெ.) – ஒத்த தன்மையர்; (கலி.23:9).*

**ஓரன்னள்** *(பெ.) – போன்றவள்; (குறு.312:7-8).*

**ஓரனைய** *(பெ.) – ஒருதன்மையன; (பதி.90:52).*

**ஓரனையர்** *(பெ.) – ஒருதன்மையர்; (குறள்.704).*

**ஓரா** *(வி.) – 1.அறியாத; (நற்.310:7-8). 2.உற்றுக் கேட்டு; (அக.388:9). 3.ஆராய்ந்து; (குறள்.548).*

**ஓராங்கு** *(வி.) – 1.ஒருபடியாக; (குறு.38:4-5). 2.ஒன்றாக; (அக.107:7-8). 3.ஒரு பெற்றி; (அக.225:3).*

**ஓராதி** *(வி.) – நினையாதே; (கலி.88:15).*

**ஓராம்** *(வி.) – கவனியோம்; (குறு.218:3).*

**ஓராது** *(வி.) – கருதாமல்; (புற.166:7).*

**ஓரார்** *(வி.) – 1.நினையார்; (ஐங்.225). 2.உற்றுக் கேளார்; (குறள்.695). 3.கருதார்; (கலித்.52:20).*

**ஓரி** *(பெ.) – 1.கடையேழு வள்ளல்களுள் ஒருவன்; (குறு.100:5). 2.ஆண்களின் தலைமுடி; (குறு.229:1-2). 3.மயிலின் தலைக் கொண்டை; (குறு.244:4-5). 4.தேன் முதிர்ந்தால் பரவும் நீலநிறம்; (புற.109:7-8).*

**ஓரேன்** *(வி.) – அறியேன்; (குறு.28:1-2).*

**ஓரை** *(பெ.) – மகளிர் விளையாட்டு; (குறு.48:3).*

**ஓல்** *(பெ.) – தாலாட்டு; (கலி.42:2-3).*

**ஓலை** *(பெ.) – 1.செய்தி எழுதப்பட்ட ஓலை; (அக.337:7-8). 2.ஓலைக் குடை; (புற.290:6-8).*

**ஓவச் செய்தி** *(பெ.) – ஓவியம் போல் நிற்றல்; (அக.5:20).*

**ஓவம்** *(பெ.) – ஓவியம்; (நற்.182:2).*

**ஓவ மாக்கள்** *(பெ.) – ஓவியம் வரைவோர்; (நற்.118:7-8).*

**ஓவலர்** *(வி.) – கைவிடாதவர்; (குறு.34:1).*

**ஓவலை** *(வி.) – ஒழியமாட்டாய்; (அக.342:1).*

**ஓவா** *(வி.) – 1.ஒழியா; (குறு.291:4) (நற்.227:7-8). 2.மாறாத; (கலி.70:11).*

**ஓவாது** *(வி.) – ஒழியாது; (நற்.154:3) (குறு.91:5).*

**ஓவினை** *(பெ.) – சித்திரத் தொழில்; (அக.142:21).*

**ஓவு** *(பெ.) – சித்திரம்; (நற்.268:3-4).*

**கஃசு** *(பெ.) – கால் பலம் (தொடி அளவையில் சிறியது) (குறள்.1037).*

**கங்கு** *(பெ.) – எல்லை; (புற.396:26).*

**கங்குல்** *(பெ.) – இரவு; (குறு.153:3-5).*

**கங்கை** (பெ.) – வடஇந்தியாவிலுள்ள பேராறு; (நற்.189:5).

**கச்சு** (பெ.) – குதிரையின் முதுகிலிட்ட கலணை நழுவாதபடி குதிரையின் வாலுடன் மாட்டிக் கட்டும் வார்; (நற்.220:1).

**கச்சை** (பெ.) – இடையில் கட்டும் துணி; (நற்.21:2).

**கசடு** (பெ.) – 1.குற்றம்; (பதி.44:6). 2.பழுது (குறள்.391). 3.வழு; (குறள்.717).

**கசிந்து** (வி.) – 1.இரங்கி; (நற்.226:5-6). 2.இன்புற்று; (புற.19:15).

**கசிபு** (வி.) – இரங்கி; (புற.260:6).

**கஞல்** (வி.) – நெருங்கு; (ஐங்.1:3).

**கட்களி** (பெ.) – கள்குடித்து மயங்குதல்; (நற்.35:10-12).

**கட்குத்திக் கள்வன்** (பெ.) – விழித்திருக்க மிண்டையைக் கொள்வான்; (கலி.108:49-50).

**கட்கும்** (வி.) – களையெடுக்கும்; (குறு.100:1-3).

**கட்சி** (பெ.) – 1.கூடு; (குறு.160:1-4). 2.காடு; (புறம்.60:5). 3.சேக்கை; (புற.157:9-10). 4.புகலிடம்; (புற.202:1-2).

**கட்ட** (வி.) – களை பறித்த; (குறள்.1038).

**கட்டழித்து** (வி.) – முற்றும் அழித்து; (நற்.313:3).

**கட்டளை** (பெ.) – 1.பொன்னை உரைத்து மாற்றுப் பார்க்கும் கல்; (குறு.192:3-5). 2.தகுதி; (பதி.81:17).

**கட்டளைக்கல்** (பெ.) – உரைகல்; (குறள்.505).

**கட்டி** (பெ.) – வெல்லக்கட்டி; (குறு.196:1-2).

**கட்டி** (வி.) – தொடுத்து; (நற்.34:2-3).

**கட்டிய** (வி.) – அணிந்த; (குறு.21:2).

**கட்டில்** (பெ.) – 1.அரியணை; (குறு.225:3-4). 2.படுக்கை; (குறு.359:3) (நற்.269:3). 3.படைக்கலம் இருக்கும் இருக்கை (ஆதனம்); (புற.41:10). 4.பாடை; (புற.286:4).

**கட்டு** (பெ.) – 1.சிறு முறத்தில் பரப்பிய நெல்லிற் பார்க்கும் ஒரு வகைக் குறி; (நற்.288:6-7). 2.அடைவு; (புறம்.6:5). 3.முறுக்கு; (பரி.18:36).

**கட்டு** (வி.) – 1.கண்களை உடையது (கண்+து); (குறள்.1083). 2.இடத்தது; (குறள்.27).

**கட்டுண்டார்** (பெ.) – சிக்கினார்; (பரி.18:34).

**கட்டுரை** (பெ.) – புனைந்துரை; (கலி.14:7).

**கட்டுவடம்** (பெ.) – காலணி வகை; (பரி.12:24).

**கட்டூர்** (பெ.) – பாசறை; (அக.44:10).

**கட்டேறல்** (பெ.) – (கள்+தேறல்) கள்ளின் தெளிவு; (அக.368:14).

**கடக்க** (வி.) – வெல்வானாக; (கலி.106:50).

**கடக்கும்** (வி.) – 1.வெல்லும்; (குறு.80:45). 2.தாண்டும்; (அக.137:3). 3.எதிர்நின்று கொல்லும்; (புற.21:6).

**கடகம்** (பெ.) – முன் கை அணி; (புற.150:21).

**கடகரி** (பெ.) – ஆண் யானை; (பரி.திர.1:51).

**கடத்தள்** (வி.) – கடமையை உடையவள்; (அக.176:20-21).

**கடத்திர்** (வி.) – போவீர்; (கலி.7:3).

**கடந்த** (வி.) – 1.பிரிந்தமையால் தனித்த; (குறு.151:1). 2.வென்ற; (புற.39:10-11).

**கடப்பாட்டாளன்** (பெ.) – கடமை யறிந்தவன்; (குறு.143:4-7).

**கடப்பாடு** (பெ.) – ஒப்புரவு; (குறள்.211).

**கடம்** (பெ.) – 1.காடு; (குறு.174:1-4). 2.கடமை; (குறு.181:6-7). 3.அருநெறி; (ஐங்.328:4). 4.பாலைநிலம்; (ஐங்.330:1). 5.கடன்கள்; (கலி.46:16). 6.குறை முடித்தல் கடன்; (கலி.63:12).

**கடம்படுவோர்** (பெ.) – பொருள்களை நேர்வோர்; (பரி.8:106).

**கடம்பு** (பெ.) – ஒருவகை மரம்; (அக.127:3-4).

**கடமா** (பெ.) – ஒருவகைக் காட்டு விலங்கு; (குறு.179:1-2).

**கடமான்** (பெ.) – காட்டு மான்; (புற.157:10).

**கடல்கெழு செல்வி** (பெ.) – கடலில் உள்ளதாக நம்பப்படும் பெண் தெய்வம்; (அக.370:12).

**கடல் தாரம்** (பெ.) – கடல் தரு செல்வம்; (புற.343:7).

**கடல் மரம்** (பெ.) – மரக்கலம்; (நற்.30:8).

**கடல் வளாகம்** (பெ.) – கடலால் சூழப்பட்ட உலகம்; (புறம்.189:1).

**கடல் விளை அமிழ்து** (பெ.) – கடலில் விளையும் உப்பு; (அக.169:6).

**கடல** (வி.) – கடலைச் சார்ந்த (குறு.144:1-2).

**கடவது** (வி.) – செலுத்தப்படுவது; (குறு.341:4-5).

**கடவர்** (பெ.) – கடனால் கட்டுண்டவர்; (கலி.108:82-84).

**கடவரை** (பெ.) – தக்க இடம்; (பரி.20:94).

**கடவன்** (பெ.) – கடமையுடையவன்; (குறு.318:7-8).

**கடவன** (பெ.) – செய்யத்தக்கன; (புற.336:2).

**கடவாதோர்** (பெ.) – பிரியாதவர்; (அக.279:5).

**கடவி** (வி.) – விரைந்து செலுத்தி; (கலி.27:25).

**கடவுண்மை** (பெ.) – கடவுள் தன்மை; (கலி.93:9).

**கடவுநர்** (பெ.) – வினாவுகின்றவர்; (குறு.118:2-5).

**கடவுபு** (பெ.) – வினாவி; (குறு.252:4-6).

**கடவுள்** (பெ.) – தெய்வம் (குறு.87:1-2).

**கடவுள் ஒரு மீன்** (பெ.) – அருந்ததி; (பரி.5:44).

**கடவை** (பெ.) – ஏணி போன்று வேலியில் வைப்பது; (குறு.392:4).

**கடற் சேர்ப்பன்** (பெ.) – நெய்தல் நிலத் தலைவன்; (நற்.49:10).

**கடற்று** (பெ.) – காடு; (நற்.164:8).

**கடன்** (பெ.) – 1.கடமை; (குறு.57:4-6). 2.தெய்வத்துக்கு வேண்டுகோள்; (குறு.218:1-2). 3.(கிரியை) வழிபாட்டுச் சடங்கு (புற.2:22). 4.எள்ளுருண்டை நீர்ப் படையல் (பிண்டோதகக் கிரியை) (புற.9:3-4). 5.தகுவது; (குறள்.218). 6.இயல்பு; (குறள்.981). 7.மானம்; (குறள்.1053). 8.காடு; (கலி.2:20). 9.மனுசு (திருப்பித் தரப்படுவது); (கலி.22:1). 10.இன்றியமையாச் செயல்; (பரி.19:22). 11.நயன்மை (நியதி); (பரி.20:62-63).

**கடாஅ** (வி.) – ஐயுறாத; (குறள்.585).

**கடாஅத்த** (பெ.) – மதத்தை உடையது (யானை); (கலி.25:5).

**கடாஅம்** (பெ.) – (யானை) மதம்; (நற்.18:8).

**கடாஅய்** (வி.) – 1.வினாவி; (அகம்.256:18). 2.எழுப்பி; (பதி.30:33).

**கடவா** (வி.) – பாடுதல் இல்லாத; (பதி.70:6).

**கடி** (பெ.) – 1.புதியது; (குறு.105:1-2). 2.ஓட்டுதல்; (அக.118:13). 3.குறுந்தடி; (பதி.84:1).

**கடி** (பெ.) – 1.மணம் (குறு.342:3-4). 2.காவல்; (நற்.23:3-4). 3.அச்சம்; (நற்.65:8). 4.சிறப்பு; (நற்.156:2). 5.ஐயம்; (நற்.295:4). 6.மிகுதி; (அக.114:12). 7.வரைவு; (அக.276:11-12). 8.விளக்கம்; (அக.368:10). 9.விரைவு; (புற.9:5). 10.திருமணம்; (ஐங்.30:2). 11.விழா; (கலி.105:6). 12.பூசனை; (பரி.17:3).

**கடி ஏர்** (பெ.) – பொன் ஏர் (முதல் உழவு); (பதி.43:16).

**கடிகை** (பெ.) – 1.துண்டம்; (குறு.267:2-4). 2.வேலின் காம்பு; (அகம்.35:3-4). 3.கட்டுவடம்; (கலி.96:10).

**கடிதல்** (வி.) – 1.ஒட்டுதல்; (நற்.306:2). 2.அழித்தல்; (புற.400:16). 3.தணித்தல்; (புறம்.400:17). 4.தண்டிப்பால் ஒழித்தல்; (குறள்.549).

**கடிது** (வி.) – 1.விரைந்து; (குறு.391:3). 2.மிகுதியை உடையது; (அகம்.141:19).

**கடி துறை** (பெ.) – காவற் பொய்கை; (புற.16:6).

**கடிந்தீவார்** (பெ.) – வெறுப்பார்; (கலி.73:10).

**கடி நகர்** (பெ.) – மண மனை; (அக.141:14).

**கடிப்பு** (பெ.) – 1.முரசு அடிக்கும் சிறுதடி; (குறு.270:3). 2.காதணி; (பரி.திர.1:33).

**கடிபுலம்** (பெ.) – காவலுட்பட்ட வேற்று நிலம்; (அக.101:10).

**கடிமரம்** (பெ.) – பகைவர் அணுகாதபடி வளர்த்துக் காக்கப்படும் காவல் மரம்; (புற.23:9).

**கடி மிளை** (பெ.) – காவற்காடு; (அக.216:10).

**கடி முகம்** (பெ.) – 1.படைமுகம்; (புறம்.275:5). 2.படை எதிர்; (புற.275:5).

**கடிய கழறல்** (பெ.) – வன்சொற்காளால் இடித்துரைத்தல்; (குறு.296:6).

**கடியர்** (பெ.) – ஐயுறவினார் (சந்தேகிப்பவர்); (கலி.88:5).

**கடியன்** (பெ.) – கொடுமை உடையவன்; (குறள்.564).

**கடியாதோள்** (பெ.) – விலக்காதவள்; (குறு.361:1-6).

**கடியுநர்** (பெ.) – விலக்குபவர்; (ஐங்.29:9).

**கடு** (உரிச்.) – 1.விரைவு; (குறு.39:1). 2.மிகுதி; (குறு.107:2-5). 3.இன்னாமை; (குறு.174:2). 4.கடுப்பு; (குறு.298:5). 5.அச்சம்; (குறு.354:5). 6.கூர்மை; (குறு.373:5). 7.காவல்; (அக.372:10). 8.வன்கண்மை; (புற.14:1). 9.நஞ்சு; (புறம்.17:38). 10.வெம்மை; (புற.68:15). 11.விளக்கம்; (புற.69:17-18). 12.வீரம்; (புறம்.341:7).

**கடுக்கை** (பெ.) – கொன்றை மரம்; (அக.393:15).

**கடுகி** (வி.) – 1.விரைந்து வீசி; (அக.135:7). 2.குறைந்து; (குறள்.564).

**கடுங்கண்** (உரிச்.) – 1.தறுகண்மை; (குறு.100:4). 2.அஞ்சானம்; (நற்.108:2). 3.கொடுமை; (நற்.322:7). 4.விரைந்து பார்க்கும் கண்; (அக.49:5). 5.கடுமையாக அடிக்கும் இடம்; (அக.63:17). 6.அச்சத்தைச் செய்யும் கண்; (அக.168:11).

**கடுங்கணை** (பெ.) – அஞ்சத்தக்க அம்பு; (அக.281:7).

**கடுங்கதிர்** (பெ.) – வெம்மை மிக்க கதிர்; (நற்.338:1).

**கடுங்குரல்** (பெ.) – 1.மிக்க இடியோசை; (குறு.316:6). 2.இனிமையில்லாத ஓசை; (அக.82:5).

**கடுங்குரல் முரசம்** (பெ.) – அறைகூவு போர்ப்பறை; (பதி.69:3-4).

**கடுங்கோல்** (பெ.) – மிக்க தண்டம்; (குறள்.570).

**கடுஞ்சிலை** (பெ.) – இடி முழக்கம்; (பதி.81:4).

**கடுஞ்சுரை** (பெ.) – விரைவான சுரப்பு; (குறு.132:4).

**கடுஞ் சூல்** (பெ.) – நிறைந்த முதல் கருப்பம்; (குறு.287:5-6).

**கடுஞ்சூள்** (பெ.) – வஞ்சினம்; (அக.110:4-5).

**கடுஞ்சொல்** (பெ.) – இன்னாச் சொல்; (அக.122:4).

**கடுத்தது** (பெ.) – மிகக் கருதியது; (அக.215:7).

**கடுத்தபின்** (வி.) – ஐயமுற்றபின்; (குறள்.693).

**கடுத்தல்** (பெ.) – மிகுதல்; (குறு.136:1-3).

**கடுந் தார்** (பெ.) – விரைந்த தூசிப் படை; (புறம்.15:14).

**கடுந்துடி** (பெ.) – அச்சுறுத்தும் ஓசையையுடைய உடுக்கை; (அக.79:14).

**கடுந் தூ** (பெ.) – பெரு வன்மை; (பதி.90:6).

***கடுப்பு*** *(பெ.) – 1.வலி; (அக.348:7). 2.வெகுளி; (பரி.4:49).*

***கடுப்பு*** *(உரிச்.) – விரைவு; (அக.224:5).*

***கடும் பகை*** *(பெ.) – பிறவிப் பகை; (குறு.341:4-5).*

***கடும் பாட்டு*** *(பெ.) – மிக்க ஒலி; (நற்.252:1).*

***கடும் பிசிர்*** *(பெ.) – பெரியநீர்த் திவலை; (பதி.41:25).*

***கடும்பு*** *(பெ.) – சுற்றம்; (நற்.119:7).*

***கடு மா*** *(பெ.)– 1.குதிரை; (குறு.336:4). 2.அச்சுறுத்தும் விலங்கு; (நற்.257:9).*

***கடு மான்*** *(பெ.) – யானை; (நற்.14:10-11).*

***கடு முடை*** *(பெ.) – மிகு நாற்றமுடைய புலால்; (அக.3:5-10).*

***கடுமை*** *(பெ.) – 1.கூர்மை; (குறு.373:5). 2.மிகுதி; (நற்.281:9). 3.நெருக்கம்; (புற.285:5).*

***கடு வளி*** *(பெ.) – விரைந்தடிக்கும் காற்று; சூறாவளி; (குறு.39:1).*

***கடுவன்*** *(பெ.) – ஆண் குரங்கு; (குறு.26:8).*

***கடைக்கண்*** *(பெ.) – கண்ணின் கடைசிப் பாகம்; (நற்.149:1).*

***கடை*** *(பெ.) – 1.இறுதிப் பகுதி; (குறு .222:2). 2.வாசல்; (குறு.277:1-3). 3.நுனி; (குறு.298:6). 4.காயின் காம்பு; (நற்.271:6). 5.ஆய்தங்களின் பிடி; (நற்.388:3). 6.இடம்; (அகம்.31:2). 7.கடைதல்; (அக.224:6). 8.கடைசி எண்; (புற.18:5). 9.இழிவு; (குறள்.331). 10.இறுதிக் காலம்; (கலி.7:19). 11.இறப்பு; (கலி.12:15). 12.முன்; (பரி.11:8-9). 13.எல்லை; (பரி.11:46).*

***கடைசியர்*** *(பெ.) – உழத்தியர்; (புற.61:2).*

***கடைத்தலை*** *(பெ.) – வாசலிடம்; (புற.225:13).*

***கடைமணி*** *(பெ.) – கண்ணின் கடைசிப் பாகம்; (அக.131:8-9).*

***கடை முகம்*** *(பெ.) – புறக்கடை; (புற.331:10-11).*

***கடைமுறை*** *(பெ.) – முடிவில்; (குறள்.792).*

***கடைய*** *(வி.எ.) – வாசிப்ப; (நற்.186:6).*

***கடையர்*** *(பெ.) – இழிந்தவர்; (குறள்.395).*

***கண்*** *(பெ.) – 1.ஐம்பொறிகளுள் பார்க்கும் உறுப்பு; (குறு.5:4-5). 2.மயிற்பீலியின் கண்; (குறு.184:5). 3.இடம்; (குறு.267:1). 4.கணு; (குறு.267:2-3). 5.மீன் வலையிலுள்ள கண் போன்ற பாகம்; (நற்.4:4).*

6.இசைக்கருவிகளில் அடித்து வாசிக்கப்படும் இடம்; (நற்.93:10-17). 7.கண்ணோட்டம்; (நற்.210:9). 8.நுங்கின் கண்; (நற்.392:4). 9.கண்ணொளி; (அக.337:16). 10.உடலிடம்; (புற.95:2). 11.உள்துளை; (புற.152:15). 12.அறிவு; (குறள்.927). 13.முன்பு; (குறள்.1055). 14.எதிர்; (கலி.37:8). 15.உடம்பு; (பரி.3:81).

**கண்கூடு** (வி.) – 1.சேர்ந்து; (புற.294:2). 2.இடம் நிறைந்த; (புற.372:4).

**கண் கேள்வி** (பெ.) – கண்ணால் கேட்டல் (கட்செவி); (புற.382:14).

**கண் சாய்பவர்** (பெ.) – அறிவு தளர்பவர்; (குறள்.927).

**கண்ட** (வி.) – 1.பார்த்த; (குறு.60:2). 2.மனத்தால் ஆராய்ந்து அறுதியிடப்பட்ட; (புற.10:3). 3.கண்டு நின்ற; (புற.120:19-20). 4.உணர்ந்த; (புற.224:4). 5.கண்டெடுத்த; (புற.378:20). 6.துண்டம் செய்த; (புற.398:23-24). 7.துணிந்த (குறள்.668). 8.உள்ளவாறு அறிந்த; (குறள்.1292).

**கண்டது** (பெ.) – 1.அறிந்து; (குறு.2:1-2). 2.பார்த்தது; (குறு.26:5). 3.கண்டு நுகர்ந்த இன்பம்; (குறள்.1215). 4.செய்தது; (அகம்.44:11-12).

**கண்டம்** (பெ.) – துண்டம்; (பரி.19:33-34).

**கண்டல்** (பெ.) – தாழை; (குறு.117:2-3).

**கண்டி** (பெ.) – துண்டிக்கப்பட்டது; (பதி.43:27).

**கண்டிகை** (பெ.) – கழுத்தணி; (கலி.96:14).

**கண்ணஞ்சாமை** (பெ.) – தறுகண்மை; (கலி.101:36).

**கண்ணி** (பெ.) – 1.தலையிற் சூடும் மாலை; (குறு.11:5). 2.கண்ணையுடையவள்; (குறள்.131:2). 3.அரும்பு (நற்.200:1). 4.மாலை; (அக.180:7). 5.பொன்னரி மாலை; (புற.153:8).

**கண்ணியன்** (பெ.) – தலைமாலை சூடியவன்; (குறு.321:2-3).

**கண்ணிலி** (பெ.) – கண்ணோட்டம் இல்லாதவன்; (புறம்.240:5).

**கண்ணோட்டம்** (பெ.) – இரக்கம்; (புற.20:6).

**கண் படல்** (பெ.) – கண்ணுறக்கம்; (கலி.10:13).

**கண் படை** (பெ.) – உறக்கம்; (நற்.60:3).

**கண் பாடு** (பெ.) – உறக்கம்; (குறள்.1049).

**கண் பாயல்** (பெ.) – உறக்கம்; (கலி.87:16).

**கண்பு** (பெ.) – ஒருவகைக் கோரை; (புற.334:1).

**கண் புதைத்து** (வி.எ.) – கண்ணை மூடி; (கலி.39:2).

**கண் புதையா** (வி.எ.) – கண்ணைப் பொத்தி; (அக.9:21).

**கண் பொர** (வி.எ.) – கண் ஒளியொடு மாறுபட; (அக.81:6-7).

**கணஃது** (வி.) – இடத்திலுள்ளது; (அக.38:17).

**கணக்கு** (பெ.) – கால அளவு; (குறு.261:5-8).

**கணத்தர்** (பெ.) – இனத்தர்; (குறள்.720).

**கணந்துள்** (பெ.) – ஆள்காட்டிப் பறவை; (குறு.350:4-5).

**கணம்** (பெ.)– 1.கூட்டம்; (குறு.107:2). 2.கால நுட்பம்; (குறள்.29). 3.திரட்சி; (கலி.71:19).

**கணவன்** (பெ.) – 1.மணவாளன்; (குறு.14:5-6). 2.பறவையின் சேவல்; (குறு.151:1-3). 3.தலைவன்; (புற.3:6).

**கணன்** (பெ.)– 1.பதினெட்டு கணங்கள்; (புற.1:9-10). 2.இனம்; (புற.127:4).

**கணி** (பெ.) – 1.கணியன் (சோதிடன்); (நற்.373:6). 2.வேங்கை; (புற.344:8-9).

**கணிகாரம்** (பெ.) – கோங்கு; (கலி.143:4-5).

**கணிச்சி** (பெ.)– 1.குந்தாலி என்னும் கருவி; (நற்.240:7). 2.படைக்கலத்துள் ஒன்று; (புற.42:22). 3.மழுப்படை; (புற.56:2).

**கணிச்சியோன்** (பெ.) – சிவபெருமான்; (கலி.2:6).

**கணை** (பெ.) – 1.திரட்சி; (குறு.9:4). 2.அம்பு; (குறு.231:5-6).

**கணைக்கால்** (பெ.) – 1.திரண்ட தண்டு; (குறு.9:4). 2.பாதத்தின் மேலும் முழுங்காலின் முடிவிலும் உள்ள காலின் பாகம்; (நற்.27:9).

**கணையம்** (பெ.) – ஒருவகைப் படை; (புற.369:13).

**கதம்** (பெ.) – சினம்; (நற்.150:11).

**கதவம்** (பெ.) – கதவு; (நற்.132:4).

**கதவர்** (பெ.) – சினத்தை உடையவர்; (நற்.127:5).

**கதவு** (பெ.) – 1.வீட்டின் வாசலில் மூடித் திறக்கும் மறைப்பு அமைப்பு; (குறு.244:1-3). 2.மறைவு; (குறு.321:8).

**கதழ்** (வி.) – 1.மிகுதல்; (நற்.205:10). 2.விரைவு; (குறு.134:5). 3.கலங்கிக் கூச்சலிடுகை; (நற்.217:2).

**கதழும்** (வி.எ.) – 1.விரையும்; (குறு.1117:4). 2.ஓடும்; (புற.202:2-4).

**கதன்** (பெ.) – சினம்; (நற்.18:8).

**கதி** (பெ.) – 1.துணைத்தரவு (ஆதரவு); (புற.229:21). 2.நெறி; (கலி.136:11). 3.இயல்பு; (பரி.8:17-18).

**கதிக்கும்** (பெ.எ.) – விளையாடும்; (நற்.352:5).

**கதியிற்று** (பெ.) – இயல்பினையுடையது; (பரி.8:17-18).

**கதிர்** (பெ.) – 1.தவசக் கொத்து; (குறு.238:2). 2.சூரியக் கதிர்; (குறு.376:3). 3.சூரியன்; (குறு.387:1-2). 4.மாழைகளின் (உலோகங்களின்) ஒளி; (நற்.110:2). 5.நிலவின் கதிர்; (நற்.196:1). 6.ஒளி; (நற்.218:1). 7.விளக்கின் ஒளி; (நற்.219:7). 8.சக்கரத்தின் ஆரம்; (அக.224:14). 9.நூல்நூற்கும் கதிர் எனும் கருவி; (அக.246:2). 10.மணி ஒளி; (புற.53:2). 11.வெயில்; (புற.375:1).

**கதிர் முத்து** (பெ.) – ஆணி முத்து; (பரி.6:17).

**கது** (பெ.) – வடு; (புற.353:15).

**கதுப்பினள்** (பெ.) – கூந்தலை உடையவள்; (புற.159:4).

**கதுப்பு** (பெ.) – 1.கூந்தல்; (குறு.21:2-3). 2.கன்னம்; (பரி.19:30).

**கதுவாய்** (பெ.) – 1.சிதைவு; (அக.129:6). 2.வடு; (அக.365:5).

**கந்தம்** (பெ.) – தூண்; (புற.52:12).

**கந்தரம்** (பெ.) – கழுத்து; (பரி.4:21-22).

**கந்தாரம்** (பெ.) – மது; (புற.258:2).

**கந்து** (பெ.) – 1.யானை கட்டும் தறி; (நற்.62:2). 2.பற்றுக்கோடு; (புற.93:9).

**கபிலர்** (பெ.) – உருத்திரர்; (பரி.3:7).

**கம்** (பெ.) – ஒலியடங்கும் குறிப்பு; (நற்.154:1).

**கம்பம்** (பெ.) – 1.தூண்; (புற.169:10-11). 2.நடுக்கம்; (புற.260:22-23).

**கம்பல்** (பெ.) – ஆடை; (கலி.65:6).

**கம்புள்** *(பெ.) – 1.சம்பங்கோழி; (அக.356:3). 2.நீர்வாழ் பறவையுள் ஒருவகை; (புற.297:7).*

**கம** *(பெ.) – முதிர்தல்; (அக.141:19).*

**கமஞ்சூல்** *(பெ.) – முகில் (மேகம்); (பதி.81:2-3).*

**கமலம்** *(பெ.) – ஒரு பேரேண்; (பரி.2:13-14).*

**கமழ்** *(பெ.) – மணம்; (நற்.273:8).*

**கமழ்** *(வி.) – 1.மணம் வீசு; (குறு.10:3-4). 2.வீசு; (குறு.361:3). 3.பரவு; (நற்.52:3). 4.தோன்று; (நற்.123:6).*

**கய** *(உரிச்.) – 1.பெரிய; (குறு.179:5-6). 2.மென்மை; (குறு.394:1).*

**கயந்தலை** *(பெ.) – மெல்லிய தலை; (குறு.394:1).*

**கயம்** *(பெ.) – 1.குளம்; (குறு.9:4-6). 2.மலையிலுள்ள நீர்ச்சுனை; (நற்.232:2). 3.நீர் நிறைந்த பள்ளம்; (புற.137:5). 4.புனர்பூசம் (கயமாகிய குளவடிவம் உடையது); (புற.229:3-4). 5.யானை; (கலி.11:8). 6.ஓடை; (பரி.7:23-24).*

**கயல்** *(பெ.) – மீன்; (குறு.250:5).*

**கயவர்** *(பெ.) – இழிந்தோர்; கீழோர்; (குறள்.1071).*

**கயன்** *(பெ.) – நீர்நிலை (கயம் என்பதன் போலி); (நற்.186:1).*

**கயில்** *(பெ.) – மூட்டுவாய்; (ஐங்.8:2).*

**கயிறு** *(பெ.) – 1.பொருள்களைக் கட்ட உதவுவது; (குறு.7:3-5). 2.பாசம்; (குறள்.481).*

**கரக்கும்** *(வி.) – மறைக்கும்; (குறு.209:1-3).*

**கரத்தல்** *(வி.) – மறைத்தல்; (நற்.382:7).*

**கரந்த** *(வி.எ.) – 1.நீங்கிய; (நற்.76:1). 2.ஒளித்த; (நற்.261:3). 3.மறைந்த; (அக.24:6). 4.மறைத்த; (கலி.78:17). 5.அடக்கிய; (பரி.11:55).*

**கரந்துறை** *(பெ.) – மறைவாயிருப்பது; (நற்.2:143).*

**கரந்தை** *(பெ.) – ஒருவகைப் பூண்டு (கொட்டைக் கரந்தை); (அக.226:6).*

**கரப்பவர்** *(பெ.) – பொருளை வைத்துக்கொண்டே இல்லை என்போர்; (குறள்.1070).*

**கரப்பு** (பெ.) – வஞ்சனை; (புற.34:13).

**கரம்பை** (பெ.) – கரம்புநிலம் (வன்னிலம்); (குறு.400:4-5).

**கரவு** (பெ.) – 1.மறைத்தல்; (புற.129:6-7). 2.வஞ்சனை; (குறள்.288).

**கரி** (வி.) – 1.சான்று (சாட்சி); (குறு.184:1). 2.அடுப்பிடும் எரிபொருள்; (குறு.198:4). 3.யானை; (பரி.தி.1:51).

**கரு** (பெ.) – 1.கருமை; (குறு.317:1). 2.முட்டைக் கரு; (நற்.231:6). 3.பெருமை; (அக.41:2). 4.கருப்பம்; (புற.34:2).

**கருக்காய்** (பெ.) – இளங்காய்; (குறள்.131:6).

**கருக்கு** (பெ.) – பனைமட்டையிலுள்ள முள் போன்ற உறுப்பு; (குறு.281:1-2).

**கருங்கல்** (பெ.) – மலைக்கல்; (புற.5:1).

**கருங்கலன்** (பெ.) – மண்ணாற் செய்யப்பட்ட சமைக்கும் பாண்டம்; (புற.322:5).

**கருதி** (வி.எ.) – 1.எண்ணி; (அகம்.212:22). 2.ஆராய்ந்து; (குறள்.949). 3.நோக்கி; (குறள்.463).

**கருதுப** (வி.) – நினைப்பர்; (குறள்.337).

**கருதும்** (வி.) – 1.எண்ணும்; (அக.313:2-3). 2.எண்ணுகிற; (ஐங்.488).

**கருநரை** (பெ.) – கருமையும் வெண்மையும் விரவிய நிலை; (குறு.317:1).

**கரு நனை** (பெ.) – பேரரும்பு; (அக.41:2).

**கருப்பை** (பெ.) – எலி; (புற.322:3).

**கரும்பாசவர்** (பெ.) – இறைச்சி விற்பவர்; (பதி.67:16).

**கரும்பு** (பெ.) – மருத நிலத்து இனிப்பான பயிர்களுள் ஒன்று; (குறு.35:3).

**கருமம்** (பெ.) – வீரச்செயல்; (புற.104:4-5).

**கரு முகம்** (பெ.) – குரங்கு; (பரி.19:39).

**கருமை** (பெ.) – 1.கரிய நிறம்; (நற்.277:3-4). 2.வலிமை; (புற.3:13).

**கருவி** (பெ.) – 1.தொகுதி; (குறு.42:1-2). 2.திரள்; (பரி.13:10).

**கருவிளை** (பெ.) – 1.ஒருவகை நீலநிறமுடைய நீர்ப்பூ; (குறு.110:4). 2.காக்கணம்; (ஐங்.464).

**கருவினை** *(பெ.) – கொலைத்தொழில்; (நற்.111:3).*

**கருனை** *(பெ.) – பொரிக்கறி; (புற.395:37).*

**கரை** *(பெ.) – 1.நீர்நிலை வரம்பு; (குறு.165:3). 2.எல்லை; (நற்.81:6). 3.வீட்டுலகம் (முததியுலகம்); (புற.357:9).*

**கரைந்த** *(வி.) – தேய்ந்த; (நற்.292:5).*

**கரைந்து** *(வி.எ.) – ஓதி; சொல்லி; (பதி.64:3).*

**கரைபு** *(வி.) – ஒலித்தல்; (பதி.17:11).*

**கரையது** *(பெ.) – கரையிலுள்ளது; (குறு.246:1).*

**கல்** *(பெ.) – 1.பாறாங்கல்; (குறு.12:2). 2.குண்டுக்கல்; (குறு.66:2). 3.மலை; (குறு.235:2-3). 4.கட்டி; (நற்.354:8). 5.பாறையின் சிறு துண்டு; (அக.1:5-6). 6.கல்தரை; (அக.79:3). 7.அடைகல்; (புற.170:17).*

**கல் அதர்** *(பெ.) – மலை வழி; (நற்.333:2).*

**கல் அளை** *(பெ.) – மலைக் குகை; (நற்.98:7).*

**கல் முகை** *(பெ.) – மலைக் குகை; (ஐங்.25:6).*

**கல்லகாரம்** *(பெ.) – நீர்க்குளிரி; (பரி.11:103).*

**கல்லார்** *(பெ.) – கற்றறியாதவர்; (குறள்.140).*

**கல்லாதார்** *(பெ.) – நூல்களைக் கற்றறியாதவர்; (குறள்.409).*

**கல்லாதான்** *(பெ.) – கல்வியறி வில்லாதவன்; (குறள்.402).*

**கல்லுறுத்து** *(வி.எ.) – தோண்டி; (அக.79:3).*

**கலக்கம்** *(பெ.) – இடும்பை (துன்பம்); (குறள்.627).*

**கலங்கல்** *(பெ.) – 1.தெளிவில்லாத நீர்; (அக.121:4). 2.கலங்கிய கள்; (புற.298:1).*

**கலங்கி** *(வி.எ.) – 1.நிலை பெயர்ந்து; (குறு.7:3-4). 2.மனம் கலக்குற்று; (குறு.86:2).*

**கலங்கு** *(வி.) – அழிதல்; (அக.127:2).*

**கலங்கினர்** *(பெ.) – தோற்றார்; (கலி.102:24).*

**கலத்தல்** *(வி.) – 1.தழுவுதல்; (குறள்.1259). 2.கலவி; (குறள்.1276).*

**கலத்தேம்** *(பெ.) – கலங்களையுடையேம்; (புற.316:10).*

**கலந்தார்** *(பெ.) – காதலர்; (குறள்.1212).*

**கலப்பு** *(பெ.) – 1.சேர்க்கை; (குறு.201:2). 2.புணர்ச்சி; (பரி.19:9).*

**கலப் பை** *(பெ.) – கருவிகளை இட்டு வைக்கும் பை; (நற்.142:3).*

**கலம்** *(பெ.) – 1.ஏனம் (பாத்திரம்); (குறு.27:1-2). 2.அணிகலன், நகை (ஆபரணம்); (குறு.67:2-4). 3.கப்பல்; (குறு.240:6-7). 4.யாழ்; (அக.301:22). 5.குப்பி; (புற.56:18).*

**கலம் செய் கோ** *(பெ.) – அடு கலம் வனையும் வேட்கோவன்; (புற.228:1).*

**கலம் தொடா மகளிர்** *(பெ.) – பாண்டங்களைத் தொடுதற்குரிய தூய்மையில்லாத மகளிர்; (புற.299:6-7).*

**கலவம்** *(பெ.) – மயிற்பீலி (தோகை); (அகம்.194:11-12).*

**கலன்** *(பெ.) – 1.அணிகலன்; (அக.76:4). 2.கப்பல்; (புற.338:11-12).*

**கலாவம்** *(பெ.) – மயிற்பீலி (மயில்தோகை); (குறு.225:6-7).*

**கலி** *(வி.) – 1.ஆரவாரம்; (குறு.155:1). 2.செருக்கு; (குறு.173:2). 3.ஓசை; (குறு.264:1). 4.முழக்கம்; (நற்.37:11). 5.ஒலி; (நற்.251:8). 6.மயக்கம்; (நற்.295:7). 7.மிகுதி; (புற.343:4). 8.திரு ஓக்கம்; (பதி.12:25). 9.மகிழ்வு; (பதி.26:12). 10.துளக்கம்; (பரி.2:74).*

**கலிங்கம்** *(பெ.) – ஆடை; (குறு.167:2).*

**கலித்த** *(பெ.எ.) – 1.தழைத்த; (குறு.98:4-5). 2.செருக்கிய; (குறு.318:1). 3.செழித்த; (நற்.138:6). 4.பெருகிய; (நற்.230:5). 5.மிக்க; (அக.375:5).*

**கலி மகிழ்** *(பெ.) – ஓலக்கம்; (பதி.61:8).*

**கலிழ்** *(பெ.) – கலங்கல் நீர்; (பரி.6:44).*

**கலிழ** *(வி.) – 1.ஒழுகுதல்; (குறு.182:6). 2.அழகு ஒழுகும்; (அக.97:20).*

**கலிழ்ம்** *(வி.) – கலங்கும்; (ஐங்.273).*

**கலிழி** *(பெ.) – கலங்கல் நீர்; (ஐங்.203).*

**கலுழ்** *(வி.) – கலங்கல்; (குறு.200:1-3).*

**கலுழ்ந்து** *(வி.எ.) – 1.சொரிந்து; (அக.265:11). 2.அழுது (அக.300:9).*

**கலுழி** *(பெ.) – கலங்கல் நீர்; (குறு.356:4-5).*

**கலை** *(பெ.) – 1.ஆண் மான்; (குறு.13:2-3). 2.ஆண் குரங்கு; (குறு.69:1-2).*

**கவ்விது** *(வி.மு.) – வளர்வதாயிற்று; (குறள்.1144).*

**கவ்வை** *(வி.)– 1.ஆரவாரம்; (குறு.282:2). 2.பழிமொழி; பழிச்சொல்; (நற்.133:6). 3.எள்ளிளங்காய்; (புற.120:10). 4.அலர்தூற்றுதல்; (குறள்.1144).*

**கவசம்** *(பெ.) – மெய்புகு கருவி; உடற்காப்பு; மெய்புதை அரணம்; (புற.13:2).*

**கவடு** *(பெ.) – 1.கிளை; (குறு.154:3-6). 2.பிளவுபட்டது; (குறு.243:1).*

**கவண்** *(பெ.) – தினையை உண்ணவரும் பறவை, விலங்குகளை ஓட்டும் கருவி; (குறு.54:2-3).*

**கவணை** *(பெ.) – கவண் என்னும் கருவி (குறு.338:3-4).*

**கவர்** *(வி.) – 1.அரிதல்; (நற்.194:9). 2.வாசித்தல்; (நற்.200:8). 3.தனக்குள் அடக்குதல்; (அகம்.39:9). 4.கவர்ந்து கொள்ளல் (அபகரித்தல்); (அக.96:17).*

**கவர் தல்** *(வி.) – 1.விரும்புதல்; (குறு.242:1). 2.தின்னுதல்; (நற்.256:3). 3.இழுத்தல்; (நற்.256:10). 4.தனதாக்கிக் கொள்ளல்; (நற்.384:4-5).*

**கவர்முதல்** *(பெ.) – பிளவுபட்ட வழி; (அக.369:16-17).*

**கவர்வு** *(பெ.) – விருப்பம்; (நற்.335:9).*

**கவரி** *(பெ.)– 1.குதிரை நெற்றியில் சூட்டும் ஓர் அலங்காரப் பொருள்; (அக.156:1-2). 2.கவரி மா என்னும் விலங்கு (பனிப்பகுதியில் வாழும் விலங்கு); (புற.132:4). 3.செவிக் கவரி (சாமரை); (பரி.19:85-86).*

**கவரி மா** *(பெ.) – பனிப்பகுதியில் வாழும் அடர்ந்த முடிகளையுடைய விலங்கு; (குறள்.969).*

**கவல்** *(பெ.) – கவலை; (நற்.30:5-6).*

**கவலை** *(பெ.) – 1.மனக்கலக்கம்; (குறு.159:6-7). 2.பிளவுபட்ட வழி; (குறு.224:1). 3.ஒருவகைக் கிழங்கு; (குறு.238:1). 4.ஆற்றிடைக் குறை; (குறு.263:2). 5.துன்பம்; (குறள்.7).*

**கவவு** *(உரிச்.) – தழுவுதல்; அகத்திடுதல்; (குறு.132:1).*

**கவழம்** *(பெ.) – கவளம் (யானைக்கிடும் உணவு); (பரி.19:33-34).*

**கவளம்** *(பெ.) – 1.சோற்றுருண்டை; (குறு.170:3). 2.கவளத்தின் கோது; (புறம்.114:3).*

**கவறு** *(பெ.)– 1.சூதாடு கருவி; (நற்.243:5). 2.சூதாட்டம்; (குறள்.920).*

**கவாஅன்** *(பெ.) – 1.மலைப் பிளப்பு; (குறு.262:6). 2.மலையின் இடைப்பகுதி; (நற்.32:1). 3.மலையின் தொடை போன்ற பகுதி; (அக.3:6).*

**கவி தல்** *(வி.) – 1.உட்பக்கமாக வளைதல்; (நற்.161:7). 2.கீழ் நோக்குதல்; (நற்.325:1). 3.கீழ்நோக்கி மடங்குதல்; (அக.229:4). 4.குப்புறக் கவிதல்; (புற.238:4).*

**கவிகை** *(பெ.) – குடை; (குறள்.389).*

**கவிதை** *(பெ.) – பாடல்; (பரி.6:9).*

**கவிர்** *(பெ.) – முள்முருங்கு; (குறு.103:2).*

**கவின்** *(பெ.) – அழகு; (குறு.27:4-5).*

**கவினை** *(பெ.) – ஒளியுடைமை; (புற.4:15-16).*

**கவுள்** *(பெ.) – 1.கன்னம்; (குறு.343:1-2). 2.கன்னத்தின் உட்புறம்; (நற்.22:5). 3.கதுப்பு; (புற.30:9).*

**கவை** *(பெ.) – 1.பிளவு; (குறு.174:2). 2.கிளைத்தல்; (குறு.213:2). 3.இரட்டை; (குறு.324:6). 4.இரட்டித்தல்; (நற்.121:3). 5.கவைக்கோல்; (அக.34:3).*

**கவை நா** *(பெ.) – பிளவுபட்ட நாக்கு; (புற.382:13).*

**கழகம்** *(பெ.) – சூதாடு களம்; (குறள்.935).*

**கழங்கு** *(பெ.) – 1.கழற்சிக் காய்; (நற்.47:8). 2.கழற்சிக்காய் மூலம் காணும் ஒருவகைக் குறி; (நற்.47:8).*

**கழஞ்சு** *(பெ.) – ஓர் எடுத்தலளவை; (புற.11:12-13).*

**கழல்** *(பெ.) – 1.வீரர்கள் காலில் அணியும் அணிகலன்; (குறு.7:1). 2.கழற்கொடி; (அகம்.134:5). 3.வெற்றிக்கும் வீரத்திற்கும் கட்டின அணி; (புற.100:1). 4.கால் மோதிரம்; (பரி.12:24).*

**கழலுதல்** *(வி.) – 1.நழுவுதல்; (குறு.1:3). 2.பிதுங்குதல்; (பதி.22:36).*

**கழல்குபு** *(வி.எ.) – கழன்று வீழ்ந்த; (கலி.27:5-6).*

**கழலோன்** *(பெ.) – வீரக் கழலணிந்த தலைவன்; (குறு.356:2).*

**கழறல்** *(வி.) – 1.இடித்துக் கூறுதல்; (குறு.296:6). 2.உறுதிச்சொல்; (பரி.9:18). 3.சினத்தல்; (கலி.100:22).*

**கழறு** *(பெ.) – முழக்கம்; (குறு.158:2).*

**கழனி** *(பெ.) – வயல்; (குறு.8:1).*

**கழாஅ** *(வி.எ.) – கழுவாத; (குறள்.840).*

**கழாஅது** *(வி.எ.) – கழுவாமல்; (குறு.167:2).*

**கழாஅல்** *(வி.) – கழுவுதல்; (புறம்.94:1).*

**கழி** *(பெ.) – 1.உப்பங்கழி (குறு.9:5). 2.கடத்தல்; (நற்.242:7). 3.கயிறு; (அக.24:14). 4.கடலையடுத்துள்ள உப்புநீர்ப் பரப்பு; (புற.48:3). 5.காம்பு; (புறம்.98:11). 6.கழிகள்; (புற.345:15). 7.சிறப்பு; (குறள்.571).*

**கழிதல்** *(வி.) – 1.நீங்குதல்; (நற்.241:1). 2.வெளியே எடுத்தல்; (நற்.287:9). 3.இல்லாமல் போதல்; (புற.286:4). 4.உட்செல்லுதல்; (புற.308:8).*

**கழி** *(உரிச்.) – மிகுதி; (குறு.217:7).*

**கழி கல மகடூஉ** *(பெ.) – கைம்பெண் (விதவை); (புற.261:17-18).*

**கழிதல்** *(வி.) – 1.நீங்குதல்; (அக.49:13). 2.போதல்; (புற.263:3).*

**கழிந்தோர்** *(பெ.) – வலிமிக்கோர்; (பதி.90:5).*

**கழிப்பு** *(பெ.) – 1.கழித்தல்; (புற.323:7). 2.நிறைவு செய்தல் (பூர்த்தி செய்தல்) (புற.336:2).*

**கழிபு** *(பெ.) – கழிதல்; (அக.327:18).*

**கழு** *(பெ.) – 1.கூர்மையான இரும்புக் கம்பி; (அகம்.176:5). 2.கறத்தற்கரிய ஆக்களைக் (பசுக்களை) கறத்தற்கு இரண்டு தலையும் சீவி மாலையாகக் கழுத்தில் இடுவதாகிய கழி; (கலி.106:1).*

**கழுத்து** *(பெ.) – கண்டம்; (அக.247:11-12).*

**கழுது** *(பெ.) – 1.பேய்; (குறு.161:1-2). 2.பரண்; (அக.88:5-6).*

**கழுநீர்** *(பெ.) – 1.செங்கழுநீர்ப்பூ; (நற்.260:1). 2.நீலோற்பல மலர்; (பரி.7:24-27).*

**கழுமிய** *(வி.எ.) – கலந்த; (புற.258:10).*

**கழுவாய்** *(பெ.) – தீர்வு (பிராயச்சித்தம்); (புற.34:4).*

**கழூஉ** *(பெ.) – கழுவுதல்; (குறு.279:5-6).*

**கழை** *(பெ.) – 1.மூங்கில்; (குறு.54:3-4). 2.கோல்; (குறு.85:4). 3.மூங்கிலால் செய்த ஓடக் கோல்; (நற்.7:4). 4.தண்டு; (அக.27:1-2). 5.கரும்பாகிய கழை; (புற.28:12).*

**கள்** *(பெ.) – 1.மயக்கம் தரும் பருகம் (மது); (குறு.293:1). 2.தேன்; (குறு.296:4). 3.ஒருவகை வண்டு; (அக.39:14).*

**கள்வர்** *(பெ.) – 1.திருடுவோர்; (குறு.16:1-3). 2.பொய்யுரைப்போர்; (குறு.127:6).*

**கள்வன்** *(பெ.) – 1.வஞ்சமுள்ளவன்; (குறு.25:1-2). 2.நண்டு; (ஐங்.21).*

**கள்வார்** *(பெ.) – களவினைப் பயில்வோர்; (குறள்.290).*

**கள்வி** *(பெ.) – கள்ளமுடையவள்; (குறு.312:1).*

**கள்ளம்** *(பெ.) – அறியா வகை; (குறள்.272).*

**கள்ளாமை** *(பெ.) – வஞ்சியாமை; (குறள்.281).*

**கள்ளி** *(பெ.) – பாலைநில நிலைத்திணைகளுள் (தாவரங்களுள் ) ஒன்று; (குறு.16:5).*

**கள** *(பெ.) – 1.களாச்செடி; (புற.127:1). 2.களவொழுக்கம் (காதலொழுக்கம்); (பரி.11:42).*

**களம்** *(பெ.) – 1.இடம்; (குறு.1:1-3). 2.போர்க்களம்; (அக.55:12). 3.வேள்வி செய்யுமிடம்; (புற.15:20-21). 4.உறைவிடம் (வாழுமிடம்); (கலி.108:29).*

**களமர்** *(பெ.) – 1.உழவர்; (நற்.125:9). 2.அடிமைகள்; (புற.387:25). 3.மருதநில மக்கள்; (பரிபா.திர.1:27).*

**களர்** *(பெ.) – 1.உவர்நிலம் (உப்புநிலம்); (அக.74:7). 2.சேற்றுநிலம்; (குறள்.500).*

**களரி** *(பெ.) – 1.களரான பாலைநிலம்; (நற்.41:2). 2.உவர்நிலம்; (நற்.374:2-3). 3.சுடுகாடு; (புற.245:3).*

**களவர்** *(பெ.) – களப்பிரர்; (அக.61:11).*

**களவன்** *(பெ.) – 1.கரி (சான்று) கூறுவோன்; (குறு.318:7-8). 2.நண்டு; (அக.235:11).*

**களவு** *(பெ.) – 1.காதல் ஒழுக்கம்; (குறு.47:1-2). 2.திருடுதல்; (அக.16:15). 3.களவுப் புணர்ச்சி; (அக.400:3). 4.களாப் பழம்; (புற.328:8).*

**களன்** *(பெ.) – 1.இடம்; (குறு.36:3-4). 2.ஆடுகளம்; (அகம்.98:14). 3.போர்க்களம்; (புற.26:3). 4.ஆ (பசு) தொழுவம்; (புற.171:8). 5.(சபை) அவை; (குறள்.730).*

**களா** *(பெ.) – ஒருவகைச் செடி; (புற.177:9).*

**களி** *(பெ.) – 1.மகிழ்ச்சி; (நற்.56:3). 2.கள்ளுண்ட மயக்கம்; (நற்.59:5). 3.சேறு; (நற்.126:2). 4.ஒரு வகை வண்டு; (நற்.311:10). 5.செருக்கு; (நற்.393:3). 6.உறுதியான குழம்பு (மாவால் செய்யப்படும் களி); (அக.86:1). 7.மதம் (யானை); (புற.66:3).*

**களிபட்டு** *(வி.எ.) – செருக்கு உண்டாகி; (அக.261:14).*

**களிற்று ஒருத்தல்** *(பெ.) – ஆண் யானை; (நற்.92:9).*

**களிறு** *(பெ.) – ஆண் யானை; (குறு.36:1-2).*

**களை** *(பெ.) – 1.பயிர்களுக்கு இடையூறாகத் தோன்றும் புல்; (அக.194:9). 2.கழற்றுதல்; (புற.260:20).*

**களைதல்** *(வி.) – 1.தீர்த்தல்; (புற.266:8-10). 2.கைவிடுதல்; (கலி.62:9).*

**களைஞர்** *(பெ.) – 1.களை பறிப்பவர்; (குறு.392:4-5). 2.நீக்குபவர்; (குறு.397:8). 3.கரை ஏற விடுபவர்; (கலி.98:36-37).*

**களைதல்** *(பெ.) – நீக்குதல்; (குறு.305:4).*

**களைநர்** *(பெ.) – போக்குபவர்; (பதி.40:7).*

**களைவு** *(பெ.) – களைதல்; (பதி.19:9).*

**களைவோர்** *(பெ.) – நீக்குவோர்; (குறு.305:8).*

**கற்சுனை** *(பெ.) – பாறையில் இயற்கையால் அமைந்த நீர்நிலை; (நற்.34:1).*

**கற்பு** *(பெ.) – 1.கல்வி; (குறு.156:4-5). 2.மன உறுதி; (குறு.252:4-6).*

**கற்ற** *(வி.எ.) – 1.பயின்ற; (அக.177:8). 2.தொடங்கிய; (அக.237:5). 3.அறிந்த; (குறள்.398).*

**கற்றல்** *(பெ.) – கற்பிக்கப்பெறுதல்; படித்தல்; (புற.183:2).*

**கற்றூரிக் குடம்பை** *(பெ.) – கன்றினது தோலால் வேய்ந்த குடிசை; (அக.381:7).*

**கற்றை** *(பெ.) – 1.தொகுதி; (நற்.174:1). 2.திரட்சி; (நற்.199:8).*

**கறங்கி** *(வி.எ.) – ஆரவாரித்து; (கலி.27:13).*

**கறவை** *(பெ.) – பால் கறக்கும் ஆ (பசு); (குறு.108:2).*

**கறி** *(பெ.) – 1.மிளகு; (குறு.90:2). 2.ஊன் (இறைச்சி); (புற.14:14).*

**கறுத்தோர்** *(பெ.) – பகைவர்; (அக.81:11-12).*

**கறுழ்** *(பெ.) – குதிரைக் கடிவாளம்; (புற.4:8).*

**கறை** *(பெ.) – 1.களங்கம், கறுப்புநிறம்; (குறு.373:5). 2.உரல்; (அக.83:3). 3.குருதிக்கறை; (அக.387:5). 4.நஞ்சினம் கறுப்பு; (புற.1:5). 5.கடமை; (கலி.65:7). 6.குற்றம்; (பரி.10:130).*

**கறை இல் கார் மழை** *(பெ.) – வெண் முகில்; (பரி.14:19).*

**கன்றி** *(வி.எ.) – சினந்து; (கலி.86:31).*

**கன்றிய** *(வி.எ.) – 1.மிக்க; (குறள்.254). 2.மாறுபட்ட; (கலி.86:13).*

**கன்று** *(பெ.) – விலங்குகளில் இளையது; (குறு.27:1).*

**கன்னம்** *(பெ.) – 1.ஏனம் (கன்னத்தட்டு); (அக.317:8). 2.நோயைத் தணிக்கச் செய்து கொடுக்கும் படிமம்; (ஐங்.25:5).*

**கன்னல்** *(பெ.) – நாழிகை வட்டில்; (அகம்.43:6).*

**கன்னி** *(பெ.) – மிக்க இளமை; (ஐங்.7:8).*

**கன்னிமை** *(பெ.) – கன்னித்தன்மை; (பரி.19:90).*

**கன்னி விடியல்** *(பெ.) – வைகறை; புலர்காலைப் பொழுது; (ஐங்.7:8).*

**கனம்** *(பெ.) – பொன்; (குறு.398:3).*

**கனல்** *(பெ.) – 1.நெருப்பு; (அகம்.73:15). 2.அழலுதல்; (அக.388:22). 3.வேள்வித் தீ; (பரி.2:63).*

**கனல்பு** *(பெ.) – கனலுதல் (கொதிப்பு); (பரிபா.திர.2:54).*

**கனல** *(வி.எ.) – வெதும்ப; (அக.19:12).*

**கனலி** *(பெ.) – கதிரவன்; (அக.55:1).*

**கனலும்** *(வி.எ.) – 1.வெதும்பும்; (அகம்.305:14). 2.காயும்; (புற.200:7).*

**கனவு** *(பெ.) – 1. ஆழ்ந்த உறக்கத்தில் தோன்றும் மன நிகழ்ச்சி; (அக.158:11). 2.கனா நிகழ்ச்சி; (புற.377:19).*

***கனவுவார்*** *(பெ.) – கனவு காண்கின்றவர்; (கலி.24:7).*

***கனற்றல்*** *(பெ.) – கனன்று எரியும் தன்மை; (கலி.148:13).*

***கனா*** *(பெ.) – நனவல்லாதது; (குறு.30:2-4).*

***கனி*** *(பெ.) – 1.பழம்; (குறு.90:4). 2.பரிசில் (பயன்); (புற.207:11).*

***கனி தல்*** *(வி.) – 1.ஊறுதல்; (குறு.389:1-2). 2.முதிர்தல்; (நற்.278:5). 3.மிகுதல்; (அக.64:5-6). 4.நெகிழுதல்; (புற.139:10).*

***கனிய*** *(பெ.எ.) – பழங்களையுடைய; (ஐங்.31:3).*

***கனை*** *(வி.) – 1.கனைத்தல்; (அகம்.54:8). 2.ஒலித்தல்; (அக.79:2). 3.ஊறுதல்; (அக.113:15).*

***கனைத்த*** *(பெ.எ.) – 1.செறிந்த; (நற்.158:4). 2.முழங்கிய; (அக.105:12). 3.திரண்ட; (குறு.35:2-3).*

***காக்கை*** *(பெ.) – கருநிறமுடையது காகா; (குறள்.527).*

***காஞ்சி*** *(பெ.) – நிலையாமை; (பதி.84:19).*

***காட்சி*** *(பெ.) – அறிவு (குறள்.199).*

***காட்டம்*** *(பெ.) – 1.விறகு; 2.காய்ந்த குச்சி; (சில.23:77).*

***காட்டுதல்*** *(வி.) – 1.அறிவித்தல்; (குறள்.849). 2.நிறுவுதல்; (குறள்.28). 3.நிழலுருச் செய்தல்; (குறள்.706).*

***காட்டுநாடு*** *(பெ.) – காட்டினுள்ளதாகிய குடிவாழ் பகுதி (புற.150:19).*

***காட்டுப்படை*** *(பெ.) – காட்டுவாழ் மக்களினின்று திரட்டப்பெற்ற படை; (குறள்.762).*

***காடி*** *(பெ.) – புளித்த பழச்சாறு (குறள்.1050).*

***காடுகிழாள் வெயில்*** *(பெ.) – பொழுது சாயும் போது தோன்றும் மஞ்சள் வெயில்; (சிலப்.4:5).*

***காண்(ணு)கல்*** *(வி.) – 1.கண்டறிதல்; (குறள்.843). 2.புறங்காணுதல்; (கலி.119:4). 3.ஆராய்தல்; (குறள்.141).*

***காண்*** *(இடை.) – முன்னிலையில் வரும் ஓர் உரையசை; (குறள்.1294).*

***காண்கம்*** *(வி.மு.) – காண்போம்; (ஐங்.199).*

***காண்டை*** *(வி.) – காண்என்னும் ஓர் ஏவல் வினை; (கலி.12).*

**காண்டைப்பாய்** *(வி.) – பார்ப்பாய்; (கலி.87).*

**காண்பு** *(வி.) – காட்சி; (புற.119:1).*

**காண்வரி** *(பெ.) – பிறர் காணும்படி அடிக்கடி வந்து நடிக்குங் கூத்து; (கலி.8:83).*

**காண்வாதல்** *(வி.) – காட்சிவருதல்; (கலி.127:14).*

**காணம்** *(பெ.) – காண மொத்த வடிவிலுள்ள பழைய பொற்காசு; (பதி.60).*

**காத்தல்** *(வி.) – 1.காவல் செய்தல்; (குறள்.57). 2.விலக்குதல் (குறள்.429). 3.தடுத்தல்; (குறள்.29).*

**காதல்** *(பெ.) – அன்புடைமை; (அக.55).*

**காதலவர்** *(பெ.) – சுற்றத்தார் (பரி.15:47).*

**காதலோன்** *(பெ.) – அன்பன், கனவன், தலைவன்; (ஐங்.270).*

**காதற்பரத்தை** *(பெ.) – சேரிப் பரத்தையின் மகளாய்த் தலைவனது காதற்குரிமை பூண்டு அவனையே சார்ந்திருப்பவள்; (ஐங்.90).*

**காதறுதல்** *(வி.) – கவணிற் கல்வைக்கும் இடம் அற்றுப் போதல்; (ஐங்.143).*

**காதன்மை** *(பெ.) – 1.விருப்பம்; (குறள்.832). 2.அன்பு; (குறள்.507).*

**காது** *(பெ.) – கவண்கல் வைக்குமிடம்; (ஐங்.143).*

**காப்பாடுதல்** *(வி.) – மறைத்துக் காத்தல்; (குறு.9).*

**காப்பாள்** *(பெ.) – காவல்வீரன்; (ஐங்.206).*

**காப்பு** *(பெ.) – 1.அரசமுத்திரை (கலி.94). 2.ஊர்; (கலி.110).*

**காப்பு மறம்** *(பெ.) – காவல் வீரர்; (பதி.90).*

**காப்பொன்** *(பெ.) – நூறு பலம் நிறையுள்ள பொன்; (பதி.60).*

**காபாலம்** *(பெ.) – நான்முகன் மண்டை ஓட்டைக் கையிலேந்திச் சிவன் ஆடுங் கூத்து; (கலி.1).*

**காம்பு** *(பெ.) – மூங்கில் (குறள்.1272).*

**காமம்** *(பெ.) – 1.விருப்பம்; (குறள்.360). 2.புணர்ச்சியின்பம்; (குறள்.1092).*

**காமர்** *(பெ.) – 1.விருப்பம் (கலி.39). 2.அழகு; (புற.1:1).*

**காமன்** (பெ.) – காதற் கடவுள் (பரி.11:123).

**காமுறுதல்** (வி.) – வேண்டிக் கொள்ளுதல்; (கலி.16).

**காய்வு** (பெ.) – எரிச்சல்; (குறள்.1246).

**காயம்** (பெ.) – 1.குழம்பில் வெந்த கறித் துண்டு; (குறு.389). 2.கறிக்கூட்டுச் சரக்கு; (குறள்.253).

**காயல்** (பெ.) – உப்பளம்; (அக.366:5).

**கார்** (பெ.) – 1.மழை (கலி.38). 2.கருந் தொழுநோய் (கலி.65). 3.இருள் (பரி.12:85). 4.அறிவு மயக்கம்; (குறள்.287).

**கார்நாற்றம்** (பெ.) – 1.தலைப்பெயல் மழையால் மண்ணிற்றோன்றும் மண்ணின் மணம்; (பரி.20:10).

**காரான்** (பெ.) – 1.நாவும் காம்பும் காத்திருக்கும் மாடு; (குறு.181). 2.கண்ணன்; (பரி.3:81).

**காரிகை** (பெ.) – 1.அழகு; (குறள்.571). 2.ஒப்பனை அணி; (குறள்.777).

**காரேனல்** (பெ.) – ஒளிமழுங்குதற் குறிப்பு; (புற.141:6).

**காரோடன்** (பெ.) – 1.சாணைக்கல் செய்வோன்; (அக.1:5). 2.அடிமரம்; (குறு.16:5). 3.மத்துக் கோத்த கழி; (நற்.12:2).

**கால் உணவு** (பெ.) – வாயுபட்சணம்; (புற.43:3).

**கால் கழி கட்டில்** (பெ.) – பாடை; (புற.286:3-4).

**கால் கிளர்ந்தல்** (வி.) – புடைபெயரச் செய்த; (அக.45:16).

**கால்கோள்** (பெ.) – அடிக்கொள்கின்ற நாள்; (கலி.83:14-15).

**கால் முதல்** (பெ.) – அடிமரம் (அக.283:10).

**கால் வழி** (பெ.) – கால் சுவடு; (புற.368:14-15).

**கால் வீழ்த்துதல்** (வி.) – இறங்கி; (நற்.316:8).

**கால்** (பெ.) – 1.வெளிப்படும் அல்லது தோன்றும் முளை; (குறள்.959). 2.கால் போன்ற அடிப்பாகம்; (புற.120).

**கால் கிளர்தல்** (வி.) – படையெடுத்துச் செல்லுதல்; (கலி.149:3).

**கால்யாத்தல்** (வி.) – தேக்குதல்; (குறள்.1038).

**காலந்தார்** (பெ.) – பருவமுற்ற மகளிர்; (பரி.19:90).

**காலந்தால்** (வி.) – உரிய காலத்தில்; (குறள்.686).

**காலம்** (பெ.) – பருவம் (குறு.200:5).

**காலம் அறிதல்** (பெ.) – செய்தற்கு ஆம் காலம் அறிதல்; (குறள்.483).

**கால மாரி** (பெ.) – பருவ மழை (குறு.200:5).

**காலன்** (பெ.) – கூற்றுவன் (புற.41:1).

**காலை** (பெ.) – 1.வாணாள் (புற.234). 2.ஞாயிறு (பதி.21:4). 3.பள்ளியெழுச்சி முரசம் (கலி.70). 4.விடியல் (குறள்.1225).

**காலையந்தி** (பெ.) – விடியலையடுத்து அந்திப்பொழுது (புற.34:8).

**காவல்** (பெ.) – காக்கப்படும் நாடு (புற.5,6).

**காவிரிப்பூம்பட்டினம்** (பெ.) – சோழர்க்குரிய தலைநகரமும் பழைய துறைமுகப்பட்டிடனமுமாகிய புகார் நகரம் (அக.107).

**காவு தல்** (வி.) – தோளாற்காத்தண்டு சுமத்தல் (புற.206).

**காழ் த்தல்** (வி.) – அளவு கடந்து மிகுதல் (குறள்.760).

**காழ்** (பெ.) – 1.ஓடஞ் செலுத்தற்குரிய தண்டு (கலி.92:47). 2.பூமாலை (கலி.54:7). 3.நூற்சரடு (பரி.6:15). 4.மரத்துண்டு (புற.369:12).

**காழகம்** (பெ.) – கையுறை (கலி.7).

**காளை** (பெ.) – மறவன் (புற.334).

**காளையம்** (பெ.) – பேராரவாரம் (கலி.479).

**கான்யாறு** (பெ.) – முல்லை நிலத்துள்ளயாறு (ஐங்.367).

**கானக நாடன்** (பெ.) – 1.காட்டிற் குள்ளாகிய நாட்டினையுடையவன் (புற.5:3). 2.குறிஞ்சி நிலத்தலைவன் (ஐங்.22:7).

**கானகம்** (பெ.) – காடு (குறு.54:1-5).

**கானங்கோழி** (பெ.) – காட்டுக் கோழி (குறு.242:1).

**கானப்பேர்** (பெ.) – காளையார் கோயில்; (புற.21:6).

**கானம்** (பெ.) – 1.காடு (குறு.38:1). 2.பாலைநிலம் (குறு.281:5-6).

**கானமான்** (பெ.) – காட்டு விலங்கு (அக.318:1).

**கானல்** (பெ.) – 1.கடற்கரைச் சோலை (குறு.34:4). 2.மணம் (பரி.16:17).

**கானலஃதுதல்** (வி.) – கடற்கரைச் சோலையிடத்தது (குறு.97:1-2).

***கானவர்*** *(பெ.) – குறவர் (குறு.71:4).*

***கானவன்*** *(பெ.) – 1.காட்டில் வாழும் வேடன் (அக.7:22). 2.முல்லை நிலத்தவன் (அக.34:3).*

***கான வாரணம்*** *(பெ.) – காட்டுக் கோழி (நற்.21:8).*

***கிடக்கும்*** *(வி.) – தரையிலிருக்கும் (குறு.343:3-7).*

***கிடக்கை*** *(பெ.) – 1.கிடத்தல் (நற்.277:5-6). 2.பருத்திருத்தல் (அக.351:14). 3.உலகம் (புற.19:1). 4.கிடை (புற.63:15).*

***கிடத்தி*** *(வி.) – உடுக்கப்படுவாய்; (புற.272:5).*

***கிடந்தது*** *(பெ.) – 1.கூடியது (குறள்.45:6). 2.கிடந்தோர் உரிமை; (குறள்.101:1).*

***கிடந்தமை*** *(பெ.) – இயல்பு (குறள்.96:9).*

***கிடர்*** *(வி.) – எழுதல் (பரி.1:16).*

***கிடாஅய்*** *(பெ.) – வெள்ளாட்டின் ஆண் (அக.156:14).*

***கிடை*** *(பெ.) – நெட்டி (புற.75:8).*

***கிணறு*** *(பெ.) – கேணிவகை (புற.132:3).*

***கிணை*** *(பெ.) – 1.போர்ப்பறை (அக.226:15). 2.உடுக்கை (புற.70:3).*

***கிணை மகள்*** *(பெ.) – கிணையையுடைய விறலி (சிறு பறையை வைத்துக் குறி சொல்லப்படுபவள்) (புற.111:4).*

***கிணைமகன்*** *(பெ.) – கிணைப் பறை வாசிப்பவன் (புற.388:3).*

***கிணையேம்*** *(பெ.) – கிணைப் பொருநர் ஆவேம் (புற.379:7).*

***கிழக்காம்*** *(வி.) – கீழாகும், கெடுவர்; (குறள்.488).*

***கிழக்கு*** *(பெ.) – 1.கீழ் (குறு.337:1-12). 2.கீழிடம் (நற்.297:1).*

***கிழங்கு*** *(பெ.) – ஒருவகைத் தாவரங்களில் பூமிக் கடியில் உணவுப் பொருளாக விளங்கும் வேர்ப் பகுதி (குறு.379:2-3).*

***கிழத்தி*** *(பெ.) – உரிமையுடையாள் (அக.86:19).*

***கிழமை*** *(பெ.) – 1.உரிமை (அக.32:18). 2.நாலு தாக்குடைய தாள வகை (பரி.17:17-18).*

***கிழமையோன்*** *(பெ.) – தமையன் (புற.145:15).*

***கிழவன்*** *(பெ.) – உரிமையுடையவன் (குறு.34:56).*

**கிழி** *(பெ.) – 1.கிழித்து எடுக்கப்பட்ட துணி (நற்.328:8). 2.கிழிந்த (அக.285:9).*

**கிழிக்கும்** *(வி.) – கீறும் (நற்.28:8).*

**கிழிப்பு** *(வி.) – பிளத்தல் (நற்.154:2).*

**கிளவி** *(பெ.) – பேச்சு (ஐங்.490:1).*

**கிளை** *(பெ.) – 1.இனம் (புற.17:19). 2.ஓர் இசை (பரி.11:127).*

**கிளைஞர்** *(பெ.) – நட்பினர் (குறள்.796).*

**கீழ்(மூ)தல்** *(வி.) – சிதைத்தல் (குறள்.801).*

**கீழ்மடை** *(பெ.) – கடைமடை (புற.42).*

**கீழ்மரம்** *(பெ.) – அச்சுமரம் (புற.102:5).*

**கீழது** *(பெ.) – கீழுள்ளது (புற.6).*

**கீழறு த்தல்** *(வி.) – மறைமுகமாகப் பிறரைக் கெடுக்கப் பணி செய்தல் (குறள்.883).*

**கீள்(ளு) தல்** *(வி.) – உடைதல் (புற.118:3).*

**குக்கூவெனல்** *(பெ.) – ஓர் ஒலிக் குறிப்பு (குறு.157).*

**குச்சில்** *(பெ.) – குச்சிப்புல் (புற.257).*

**குஞ்சரம்** *(பெ.) – யானை (பதி.5).*

**குட்டம்** *(பெ.) – 1.ஆழம் (புற.20:1). 2.மாடு (புற.243:9).*

**குட்டேறு** *(பெ.) – எருத்தின் திமில் (கலி.102:24).*

**குடக்கு** *(பெ.) – மேற்கு (புற.6).*

**குடக்கோ** *(பெ.) – சேரன் (பதி.60).*

**குடகம்** *(பெ.) – குடகுமலை (புற.166).*

**குடங்கள்** *(பெ.) – குடிசை (குறள்.890).*

**குடஞ்சுட்டவர்** *(பெ.) – ஆனிரை மேய்க்கும் இடையர் (கலி.108:2).*

**குடநாடு** *(பெ.) – மேல்நாடு (புற.17).*

**குடம்பை** *(பெ.) – முட்டை (குறள்.338).*

**குடாது** *(பெ.) – மேற்கிலுள்ளது (புற.6).*

**குடி** *(பெ.) – ஆட்சிக்குட்பட்ட குடிமக்கள் (குறள்.542).*

**குடி செய்தல்** *(வி.) – பிறந்த குடியை யுயர்த்துதல் (குறள்.1025).*

**குடிதிருத்து தல்** (வி.) – ஆட்சிக் குட்பட்ட குடிகளை நன்னிலையில் நிறுத்துதல் (பதி.37:7).

**குடிமை** (பெ.) – 1.பிறந்த குடியை உயரச் செய்யும் தன்மை (குறள்.608). 2.குடிப்பிறப்பு (குறள்.793).

**குடும்பம்** (பெ.) – கணவனும் மனைவியும் மக்களும் சேர்ந்த கூட்டம், குடும்ப அமைப்பு (குறள்.1029).

**குடுமி** (பெ.) – 1.நுனி (அக.5). 2.முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டியன் (புற.64). 3.முடிபு (புற.32:10).

**குடுமிகளை தல்** (வி.) – தலைமயிர் நீக்குதல் (புற.77:2).

**குடைதல்** (வி.) – கடைதல் (பரி.16:3).

**குடைநிழல்** (பெ.) – மன்னனது ஆட்சி (நற்.146:4).

**குடைப்பூ** (பெ.) – குடையைப் போன்ற பூ (நற்.48:3).

**குணம்** (பெ.) – காப்பியத்தைச் சிறப்பிக்கும் செறிவு (குறள்.420).

**குணாது** (பெ.) – கிழக்கிலுள்ளது (புற.6:3).

**குணில்** (பெ.) – 1.குறுந்தடி (ஐங்.87). 2.பறையடிக்கும் கடிப்பு (புற.143:9).

**குத்துண்(ணு)** (வி.) – செங்குத்தாக நிற்றல் (பரி.7).

**குதி த்தல்** (வி.) – கடந்துவிடுதல் (குறள்.269).

**குதிர்** (பெ.) – ஒரு வகை மரப்பொருள் (அக.75).

**குதுகுது த்தல்** (வி.) – ஆசைப்படுதல் (பரி.20:13).

**குய் தல்** (வி.) – தாளிப்பு (புற.10).

**குரல்** (பெ.) – 1.பூங்கொத்து (பதி.31:8). 2.ஒன்றோடொன்றற்குள்ள சேர்க்கை (கலி.54:7). 3.தினை, வாழை முதலியவற்றின் தோகை (புற.168:6). 4.பெண்டிர் தலைமுடி (கலி.88). 5.மிடறு (குறு.263). 6.கற்றை (கலி.72:20).

**குரீஇ** (பெ.) – குருவி (புற.19).

**குருகு** (பெ.) – குருத்து (பரி.2:43).

**குருசில்** (பெ.) – ஆடவரிற் சிறந்தவன் (அக.184:19).

**குருத்து** (பெ.) – 1.இளைய ஓசை (குறு.372:1). 2.இளைய தளிர் (அக.333:8-9).

**குருதி** *(பெ.) – சிவப்பு நிறம் (குறு.1:3-4).*

**குருதித்து தல்** *(வி.) – குருதித் தன்மைத்து (பரி.12:85).*

**குருந்தம்** *(பெ.) – குருந்த மரம் (ஐங்.44:9).*

**குருந்து** *(பெ.) – ஒரு வகை மரம் (குறு.148:3-4).*

**குரும்பி** *(பெ.) – புற்றாஞ்சோறு (அக.8:12-1-2).*

**குரும்பை** *(பெ.) – 1.தெங்கின் மிக இளைய காய் (நற்.269:1). 2.தெங்கு (அக.253:22).*

**குருவி** *(பெ.) – சிறு பறவை (ஐங்.30:5).*

**குருளை** *(பெ.) – விலங்கின் குட்டி (குறு.38:1-2).*

**குருளைப் பன்றி** *(பெ.) – பன்றிக் குட்டி (ஐங்.40:7).*

**குரூஉ** *(பெ.) – 1.நிறம் (நற்.149:6). 2.கனம் (புற.32:9).*

**குரை** *(வி.) – ஒலித்தல் (நற்.40:2).*

**குரைத்துதல்** *(வி.) – ஒலி செய்து (அக.310:15).*

**குரைப்ப** *(வி.) – ஒலி செய்ய (அக.140:9).*

**குல்லை** *(பெ.) – 1.கஞ்சாங் குல்லை என்னும் செடி; (குறு.11:5). 2.குழாய் (நற்.376:5).*

**குலன்** *(பெ.) – குலன் குடி (குறள்.23:3).*

**குலை** *(பெ.) – 1.கொத்து (குறு.1:3-4). 2.காயினது கொத்து (நற்.174:1).*

**குலைஇ** *(வி.) – வளைந்து (அக.175:16).*

**குலைஇய** *(வி.) – வளைந்த (அக.84:1).*

**குவடு** *(பெ.) – சிகரம் (குறு.179:3-7).*

**குவவு** *(பெ.) – 1.திரட்சி (குறு.132:2). 2.குவியல் (நற்.207:5). 3.செரி (அக.201:17). 4.பரவு (அக.347:11).*

**குவளை** *(பெ.) – 1.நீல நிறமுள்ள ஒரு வகைப் பூ (குறு.13:5). 2.ஒரு பேர் எண் (பரி.2:13).*

**குவளையர்** *(பெ.) – குவளைப் பூவைச் சூடியவர் (பதி.58:2).*

**குவி** *(வி.) – 1.ஒன்று கூடு (குறு.17:1-2). 2.கீழ்நோக்கு (அக.132:11-2). 3.கூர்மை ஆதல் (அக.134:9-10).*

**குவிந்தன** (வி.) – திரட்டி வைத்தது போன்ற (குறு.123:2).

**குவைஇ** (வி.) – 1.குவித்து (நற்.175:2). 2.திரண்டு (நற்.176:7).

**குழமகன்** (பெ.) – வண்டற்பாவை (பரி.182).

**குழல்** (பெ.) – 1.புல்லாங்குழல் என்னும் இசைக் கருவி (குறு.151:1-3). 2.கூந்தல் (அக.73:2). 3.உட்பொய் ஆதல் (அக.336:1). 4.வங்கியம் (பரி.7:78-9).

**குழலன்** (பெ.) – வேய்ங்குழலை உடையவன் (கலி.101:39).

**குழவி** (பெ.) – 1.மக்களின் குழந்தை (குறு.397:4-5). 2.அம்மிக் குழவி (பரி.10:83-4).

**குழவிவேனில்** (பெ.) – இளவேனில் (கலி.36:9).

**குழறின்** (வி.) – ஓசை செய்தல் (குறு.153:1).

**குழாஅம்** (பெ.) – அவை (குறள்.830).

**குழாஅய்** (பெ.) – மூங்கிலின் குழாய் (அக.311:10).

**குழாஅல்** (பெ.) – கூடுதல் (பதி.29:5).

**குழாம்** (பெ.) – திரள் (புற.136:4-5).

**குழாய்** (பெ.) – மகரக் குழையை யுடையாய் (கலி.13:26).

**குழி** (பெ.) – 1.தோண்டப்பட்ட பள்ளம் (குறு.233:1). 2.பயம்பு (புற.17:15-17).

**குழீஇ** (வி.) – கூடி (குறு.308:1-3).

**குழீஇய** (வி.) – 1.கூடிய (குறு.31:1). 2.கூட (குறு.139:1-4).

**குழுமலின்** (வி.) – ஓசை செய்தலால் (அக.221:11-2).

**குழுமும்** (வி.) – (புலி) உறுமும் (குறு.321:5-6).

**குழூஉ** (பெ.) – கூட்டம் (நற்.238:2).

**குழை** (பெ.) – 1.காதணி (குறு.34:6-7). 2.தளிர் (குறு.289:2-3). 3.தழை (நற்.54:9). 4.குழைதல் (புற.395:3).

**குழைக** (வி.) – துவள்க (புற.73:14).

**குழைத்த** (வி.) – 1.துகைத்த (நற்.51:8). 2.தளிர்த்த (அக.337:1). 3.துவண்ட (நற்.20:10-1).

**குழைப்ப** (வி.) – 1.வருந்த (குறு.24:3-6). 2.வாட (குறு.361:4-6). 3.துவள (குறு.393:1-2).

**குழைவு** *(பெ.) – நடக்கம் (கலி.94:30).*

**குளகு** *(பெ.) – தழையுணவு (குறு.136:3-4).*

**குளம்** *(பெ.) – 1.ஒரு வகை நீர் நிலை (குறு.325:4-6). 2.ஏரி (புற.33:5).*

**குளம்பு** *(பெ.) – விலங்கின் பாதத்தின் கீழ்ப் பகுதியான உறுதியான பாகம்; (நற்.124:6).*

**குளவளா** *(பெ.) – குளத்தினது பரப்பு (குறள்.523).*

**குளவி** *(பெ.) – 1.காட்டு மல்லிகைப் பூ (குறு.56:1-2). 2.மலை மல்லிகை (புற.168:12).*

**குளிக்கும்** *(வி.) – மூழ்கும் (புற.2:10).*

**குளித்த** *(வி.) – நீரில் மறைந்த, மூழ்கிய (குறு.127:1-2).*

**குளிப்ப** *(வி.) – மேல் விழுந்து உள்புக (புற.6:12).*

**குளிர்** *(பெ.) – 1.குளிர்ச்சித் தன்மை (குறு.197:3-4). 2.கருவிகளுள் ஒன்று (குறு.291:2).*

**குளிறு** *(பெ.) – நண்டு (குறு.24:3-4).*

**குற்ற** *(வி.) – பறித்த (நற்.123:5-6).*

**குற்றடகு** *(பெ.) – சிறிய இலை (தளிர்) (புற.197:11).*

**குற்றம்** *(பெ.) – மூவகைத் துன்பம் (குறள்.1029).*

**குற்றில** *(வி.) – குறிய கொட்டில் இடத்தன (பணிக்களரி) (புற.95:5).*

**குறத்தி** *(பெ.) – குறிஞ்சி நிலப்பெண் (புற.108:1).*

**குறப்பிணாக் கொடி** *(பெ.) – வள்ளி (குறப்பெண்) (பரி.19:95).*

**குறமகள்** *(பெ.) – குறத்தி (குறு.394:2-3).*

**குறவர்** *(பெ.) – மலைநாட்டு மக்கள் (குறு.208:3).*

**குறவன்** *(பெ.) – குறிஞ்சி நிலத்து ஆடவன்; (குறு.82:4).*

**குறழா** *(வி.) – குனிந்து (கலி.65:9-10).*

**குறள்** *(பெ.) – குறிய வடிவுடையது (புற.28:2).*

**குறாஅது** *(வி.) – பறிக்கப்படாமல் (பதி.23:24).*

**குறி** *(பெ.) – 1.குறித்த இடம் (குறு.114:1-2). 2.குறுமை (குறு.394:3). 3.அடையாளம் (நற்.11:2). 4.கருதுதல் (நற்.93:12). 5.ஊதுதல் (அக.318:15). 6.குறிப்பு (புற.219:4). 7.குறித்த அளவு (குறள்.23:1).*

**குறி எதிர்ப்பை** *(பெ.) – அளவு குறித்து வாங்கி வாங்கியவாறே எதிர் கொடுப்பது; (குறள்.23:1).*

**குறிக் கொண்டு** *(வி.) – இலக்காக (குறள்.1195).*

**குறிஞ்சி** *(பெ.) – 1.குறிஞ்சி நிலத்துக்குரிய மரம் (குறு.3:2-3). 2.மலையும் அதனைச் சார்ந்த பகுதியும் (நற்.116:11). 3.மலைநாட்டிற்குரிய ஒரு பண் (நற்.225:2).*

**குறித்த** *(வி.) – கருதிய (நற்.215:10-1).*

**குறித்து** *(வி.) – கருதி (குறு.188:4).*

**குறிப்பு** *(பெ.) – 1.அடையாளம் (நற்.297:6). 2.கருத்து (நற்.357:1). 3.இங்கிதம் (குறள்.796). 4.பிறர் மனக்கருத்தை அறியும் அறிவு (குறள்.705). 5.குறிப்புடைய ஐம்பொறிகள் (கலி.9:4).*

**குறிப்பின்** *(வி.) – கருதின் (குறு.318:4-5).*

**குறிய** *(பெ.) – குறுமையுடையன (குறு.248:5-6).*

**குறியா** *(வி.) – உட்கொள்ளாத (நற்.44:3).*

**குறியான்** *(பெ.) – கருதான் (குறு.318:4-5).*

**குறின்** *(வி.) – குற்றினால் (குறு.89:3-7).*

**குறு** *(பெ.) – குறுமை (குறு.12:1).*

**குறுக்கை** *(பெ.) – குறுங் கை, சிறிய கை (ஐங்.27:6).*

**குறுகல்** *(பெ.) – 1.நெருங்குதல் (குறு.184:1-2). 2.அணுகல் (புற.128:7).*

**குறுகன்மின்** *(வி.) – முயங்கன்மின் (கலி.68:10).*

**குறுகி** *(வி.) – நெருங்கி (குறு.248:1-3).*

**குறுகு** *(வி.) – நெருங்கு (அக.333:22).*

**குறுங் கண்** *(பெ.) – குறுகிய இடைவெளி (அக.30:1).*

**குறுந்தாள்** *(பெ.) – 1.குறுகிய காம்பு (குறு.60:1). 2.குறுகிய படிக்கட்டு (பதி.71:12).*

**குறுந்தொடி** *(பெ.) – சிறுதொடியினைப் பூண்ட பெண் (குறு.233:7).*

**குறுநணி** *(பெ.) – மிக்க அணிமை (புற.209:15).*

**குறுநர்** *(பெ.) – பறிப்பவர் (குறு.178:3).*

**குறுநரி** *(பெ.) – குள்ளநரி (நற்.164:9).*

**குறுநொடி** *(பெ.) – சிறிய விடுகதை, சில சொற்கள் (நற்.341:5).*

**குறும்படை** *(பெ.) – கோட்டை (அக.35:4).*

**குறும்பர்** *(பெ.) – புறமதிலைச் சூழ்ந்த சிற்றரசர் (புற.293:2).*

**குறும்பறை** *(பெ.) – பறவைப்பேடு (புற.67:9).*

**குறும்பு** *(பெ.) – அரண் (அக.89:16).*

**குறும்பூழ்** *(பெ.) – காடை என்னும் பறவை (குறு.389:1-2).*

**குறும்பொறி** *(பெ.) – குறிய புள்ளி (நற்.314:4).*

**குறும் பொறை** *(பெ.) – 1.குறிய கற்கள் (குறு.134:1). 2.காடு (நற்.321:9-10). 3.சிறுமலை (பதி.74:7).*

**குறுமக்கள்** *(பெ.) – சிறார் (கலி.83:8-10).*

**குறுமகள்** *(பெ.) – இளம்பெண் (ஐங்.26:4).*

**குறுமாக்கள்** *(பெ.) – சிறுவர் (நற்.80:3).*

**குறை** *(பெ.) – 1.செயல் (குறு.58:1-2). 2.குறை ஆதல் (நற்.5:3). 3.இன்றியமையாக் காரியம் (நற்.54:7-8). 4.தசை (நற்.85:8). 5.அறிவு (நற்.366:9). 6.நிரம்பாதது (அக.142:18). 7.குறைபட்டது (அக.196:2-3). 8.குற்றம் (அக.341:2). 9.வேண்டுவது (குறள்.68:10). 10.ஒருதாக்குடைய மிடற்றுப் பாடல் வகை (பரி.17:17-8).*

**குறைத்து** *(வி.) – ஒடித்து (குறு.133:2).*

**குறைந்த** *(வி.) – ஒடிக்கப்பட்ட (குறு.227:2-3).*

**குறைந்து** *(வி.) – சுருங்கி (அக.317:9).*

**குறையல்** *(பெ.) – துண்டம் (புற.231:1).*

**குன்ற** *(வி.) – 1.குன்றிலுள்ள (அக.15:18). 2.தவற (குறள்.134). 3.கெட (குறள்.898). 4.தாழ (குறள்.97:1).*

**குன்றம்** *(பெ.) – 1.சிறுமலை (குறு.1:3-4). 2.குன்று (அக.14:4).*

**குன்றல்** *(பெ.) – குறைதல் (குறள்.78:8).*

**குன்றி** *(பெ.) – குன்றிமணியை உடைய கொடி (அக.133:1).*

**குன்றிய** *(வி.) – குறைந்த (அக.190:13).*

**குன்று** *(பெ.) – 1.சிறுமலை (குறு.87:3). 2.மலையும் மலை சார்ந்த இடமும் (நற்.18:10).*

**குன்றுவ** *(பெ.) – கீழான செயல்கள் (குறள்.97:5).*

**குன்றுவர்** *(வி.) – தாழ்வர் (குறள்.965).*

**கூஉம்** *(வி.) – கூவும் (குறு.154:4-7).*

**கூகை** *(பெ.) – கோட்டானாகிய பறவை (குறு.153:1).*

**கூட்டம்** *(பெ.) – 1.புணர்ச்சி (நற்.41:10). 2.கூடுதல் (நற்.252:4). 3.தொகுதி (அக.240:6). 4.கூடிவாழ்தல் (பதி.88:24-5).*

**கூட்டா** *(வி.) – சேர்க்காத (நற்.90:10-11).*

**கூட்டு** *(வி.) – உதவி (அக.142:11).*

**கூட்டு** *(வி.) – சேர்ந்த (பதி.74:16).*

**கூட்டுண்ணும்** *(வி.) – கொள்ளை கொண்டு உண்ணும் (குறு.331:3-4).*

**கூட்டுபு** *(வி.) – கலந்து (அக.340:17).*

**கூட்டும்** *(வி.) – சேர்க்கும் (குறு.386:3-4).*

**கூட்டுவேம்** *(வி.) – கூட்டி நுகரக் கடவேம் (கலி.109:23).*

**கூடம்** *(பெ.) – சம்மட்டி (புற.170:16-7).*

**கூடல்** *(வி.) – 1.சங்கமம் (புற.273:5). 2.கூட்டம் (பதி.50:7). 3.புணர்ச்சி (குறள்.1284). 4.மதுரை (கலி.31:25).*

**கூடலின்** *(வி.) – கூடுதலால் (புற.38:16).*

**கூடி** *(வி.) – உண்டாய் (கலி.92:60-61).*

**கூடியார்** *(பெ.) – இடைவிடாது எய்தியவர் (குறள்.1109).*

**கூடு** *(பெ.) – 1.பறவைகளின் குடியிருப்பு (குறு.374:6-7). 2.சேர்தல் (அக.98:14). 3.இதழ் (அக.13:8). 4.நெற்கூடு (புற.148:4). 5.ஒன்றுபடு (பதி.31:12).*

**கூடும்** *(வி.) – 1.சேர்கின்ற (நற்.146:7). 2.இயலும் (நற்.360:10).*

**கூடுவேம்** *(வி.) – சேரக் கடவேம் (குறள்.1300).*

**கூத்தர்** *(பெ.) – கூத்து நடிப்போர் (புற.28:13-4).*

**கூத்து** *(பெ.) – நாடகம் (குறள்.332).*

**கூதளம்** *(பெ.) – மலையில் வளரும் ஒரு வகைச் செடி (நற்.119:8-9).*

**கூதளி** *(பெ.) – குறிஞ்சி நிலத்து ஒரு செடி (குறு.60:1).*

**கூதாளம்** *(பெ.) – கூதாளம் என்னும் ஒரு வகைச் செடி (குறு.282:6).*

**கூதிர்** *(பெ.) – அறுவகைப் பெரும் பொழுதுள் ஒன்று (குறு.86:4).*

**கூந்தல்** *(பெ.) – 1.மகளிர் தலை மயிர் (குறு.2:4-5). 2.குதிரையின் பிடரி மயிர் (கலி.103:53). 3.கேசி என்னும் அசுரன் (பரி.3:31-2).*

**கூந்தலள்** *(வி.) – கூந்தலையுடையள் (குறு.132:2-6).*

**கூந்தற்கிழவர்** *(பெ.) – கணவர் (புற.113:9).*

**கூப்பி** *(பெ.) – குவித்து (அக.282:17).*

**கூப்பிடூஉ** *(பெ.) – கூப்பிட்டு (அக.205:21-2).*

**கூம்ப** *(வி.) – குவிய (குறு.55:1-5).*

**கூம்பல்** *(பெ.) – குவிதல் (குறள்.43:5).*

**கூம்பிய** *(வி.) – ஒடுங்கிய (குறு.46:2).*

**கூம்பின** *(வி.) – குவிந்தன (குறு.122:2).*

**கூம்புதல்** *(வி.) – குவி (குறு.25:3).*

**கூம்புபு** *(வி.) – குவிந்து (அக.333:10).*

**கூமை (கூர்மை)** *(பெ.) – மதி நுட்பம் (புற.393:2).*

**கூய்** *(வி.) – கூவி (புற.395:11).*

**கூர்** *(பெ.) – 1.கூர்மை (குறு.304:1). 2.மிகுதி (குறு.51:1). 3.கிளர் (புற.344:5).*

**கூர்கிற்பாள்** *(வி.) – மிகுவாள் (கலி.10:13).*

**கூர்ந்திசின்** *(வி.) – மிக்கேன் (குறு.216:4).*

**கூர்ந்து** *(வி.) – மிக்கு (குறு.234:1-2).*

**கூர்நறா** *(பெ.) – கடுப்புடைய கள் (பரி.7:64).*

**கூர** *(வி.) – மிக (நற்.113:7).*

**கூரம்** *(பெ.) – யாழ் (பரி.19:44).*

**கூரல்** *(பெ.) – குன்னாக்கல் (குளிர்மிகுதல்) (நற்.100:2).*

**கூரை** *(பெ.) – வீட்டின்மேல் வேயப்பட்ட பாகம் (நற்.79:2).*

**கூலம்** *(பெ.) – பதினெட்டு வகையான தானியம் (நற்.93:3).*

**கூலம் பகர்நர்** *(பெ.) – நெல் முதலிய பண்டங்களை விற்கும் வணிகர் (பதி.13:23).*

**கூலி** *(பெ.) – 1.வேலைக்குக் கொடுக்கப்படும் ஊதியம் (அக.301:4). 2.உழைப்புக்கு ஈடாகத் தரும் பொருள் (குறள்.619).*

**கூவல்** *(பெ.) – 1.கிணறு (குறு.224:3-5). 2.கிணற்று நீர் (நற்.41:4). 3.பள்ளம் (பதி.51:4).*

**கூவிளம்** *(பெ.) – வில்வம் (புற.158:9).*

**கூவுவேன்** *(வி.) – உரக்கச் சொல்வேன் (குறு.28:3).*

**கூவை** *(பெ.) – மஞ்சளைப்போல்வ தொரு புதல் (புற.29:19).*

**கூழ்** *(பெ.)– 1.ஒரு வகை உணவுப் பொருள் (குறு.221:3-4). 2.கலங்கல் (அக.193:13). 3.சோறு (புற.70:7). 4.பொருள (புற.122:6-7). 5.செறிவு (புற.185:5). 6.பயிர் (புற.369:14).*

**கூழ்த்துதல்** *(வி.) – பலவகை உணவிற்று (குறள்.745).*

**கூழ** *(பெ.) – நெல்லையுடைய ஆகிய (கலி.109:14).*

**கூழை** *(பெ.) – 1.குறுமை, குட்டை (குறு.111:4). 2.(மகளிர்) தலை மயிர் (குறு.113:4-5). 3.குறிய (நற்.109:8). 4.படையின் பின் அணி (புற.88:1).*

**கூளி** *(பெ.) – பேய் (அக.233:10).*

**கூளியர்** *(பெ.)– 1.மறவர் (புற.23:5). 2.ஆறலைக் கள்வர் (புற.136:13).*

**கூற்றம்** *(பெ.) – 1.இயமன் (குறு.197:4-5). 2.இயமனுடைய ஏவலாளன் (பதி.2:50).*

**கூற்று** *(பெ.) – கூற்றம், இயமன் (புற.4:12).*

**கூறல்** *(வி.) – சொல்லுதல் (குறு.175:6-7).*

**கூறிய** *(வி.) – சொல்லிய (குறு.66:2-3).*

**கூறியிருக்கும்** *(வி.) – சொல்லும் (குறு.219:3-5).*

**கூறிவிடும்** *(வி.) – திண்ணமாகச் சொல்லும் (குறள்.970).*

**கூறின்** *(வி.) – சொல்லின் (குறு.21:4-5).*

**கூறின்றும்** *(வி.) – சொல்லியதும் (நற்.130:10).*

**கூறும்** *(வி.) – சொல்லும் (புற.125:10).*

**கூன்** *(பெ.) – 1.வளைவு (குறு.51:1). 2.கூனுடைய பிறவி (புற.28:2).*

**கூன்** *(வி.) – வளைந்த (குறள்.108:7).*

**கூனி** *(பெ.) – 1.வளைதல் (அக.257:1). 2.கூனிய வடிவினள் (கலி.94:30).*

**கெடு** *(பெ.) – ஏழைமை (குறள்.117).*

**கெடுதல்** *(தொ.பெ.) – பேரழிவு (பெரும்பாண்.432:உரை).*

**கெண்டு தல்** *(வி.) – 1.தோண்டுதல் (குறு.233). 2.அறுத்துத் தின்னுதல் (பெரும்பாண்.143).*

**கெழீஇயிலர்** *(பெ.) – விருப்பமில்லார் (குறள்.1194).*

**கெழுதகைமை** *(பெ.) – உரிமை (குறள்.808).*

**கெழுவு** *(பெ.) – நட்பு (பரி.8:63).*

**கேட்டிகும்** *(வி.எ.) – கேட்டேம் (பதி.52).*

**கேட்டிசின்** *(இடை.) – கேட்டேன் (புற.150).*

**கேட்டொறும்** *(கு.வி.எ.) – கேட்கும் (ஐங்.107).*

**கேடு** *(பெ.) – 1.அழிவு (குறள்.400). 2.வறுமை (குறள்.796).*

**கேவலப்பொருள்** *(பெ.) – முழுமுதற் கடவுள் (குறள்.358, உரை).*

**கேழ்** *(பெ.) – நிறம் (புற.27).*

**கேழல்** *(பெ.) – மண்ணைத் தோண்டும் ஆண் பன்றி (ஐங்.323).*

**கேள் தல் (கேட்டல்)** *(வி.) – ஏற்றுக் கொள்ளுதல் (குறள்.643).*

**கேள்வி** *(பெ.) – 1.நூற்பொருள் முதலிய கேட்கை (குறள்.418). 2.மறை (பரி.2:25).*

**கேளல்கேளிர்** *(பெ.) – நொதுமலர் பகையும் நட்பு மில்லாத அயலார் (அக.93).*

**கேளார்** *(பெ.) – பகைவர் (குறள்.64).*

**கேளிர்** *(பெ.) – 1.நண்பர் (பொருந.74). 2.சுற்றத்தார் (புற.162).*

**கை** *(பெ.) – 1.யானைத் தும்பிக்கை (புற.22). 2.செய்தத்தக்கது (குறள்.925). 3.ஒழுங்கு (முல்லை.49). 4.ஏழனுருபுள் ஒன்று (அக.26:18).*

**கைகடத்தல்** *(வி.) – வயப்படாமல் மீறுதல் (குறள்.127.உரை).*

**கைகாய்த்து தல்** *(பி.வி.) – எரியச் செய்தல் (பதி.82:9).*

**கைத்தல்** *(வி.) – ஒப்பனை செய்தல் (அலங்கரித்தல்) (மதுரைக்.419).*

**கைதூவு தல்** *(வி.) – கையொழிதல் (கலி.50).*

**கைதூவு** *(பெ.) – செயலற்றிருக்கை (நற்.280).*

**கைதை** *(பெ.) – தாழை (அக.100:18).*

**கைதோய்வு** *(பெ.) – கையால் எட்டிப் பிடிக்கக் கூடிய நிலை (மலைபடு.362).*

**கைந்நிறுத்துதல்** *(வி.) – 1.நிலை நிறுத்துதல் (அக.113). 2.அடக்குதல் (அக.198).*

**கைந்நீட்டு** *(பெ.) – கைப்பிடி (புற.98.உரை).*

**கைந்நீவுதல்** *(வி.) – அவமதித்துக் கடத்தல் (பதி.10:49).*

**கைந்நூல்** *(பெ.) – கையிற் கட்டும் காப்பு நாண் (குறு.218).*

**கைப்படுத்தல்** *(வி.) – தெளிதல் (கலி.98).*

**கைபுடை த்தல்** *(வி.) – கைதட்டுதல் (பதி.19).*

**கைம்மா** *(பெ.) – துதிக்கையை உடைய விலங்கு, யானை (பதி.11:52).*

**கைம்மாறுதல்** *(வி.) – மேற்கொள்ளுதல் (பரி.9:50).*

**கைம்மாறு** *(பெ.) – 1.பகரம் (குறள்.1183). 2.செய்த உதவிக்குச் செய்யும் நன்றி (குறள்.211).*

**கைம்முற்று தல்** *(வி.) – முடிவு பெறுதல் (புற.53:8).*

**கைம்மை** *(பெ.) – 1.கணவனை இழந்த பின் மகளிர் வாழும் நிலை (குறு.69:2). 2.கைம்மை நோன்பு (புற.25:12).*

**கைமாறுதல்** *(வி.) – ஒழுக்கத்தைக் கைவிடுதல் (கலி.65).*

**கைமான்** *(பெ.) – யானை (புறம்.96:8).*

**கையள்** *(பெ.) – கையையுடையவள் (குறு.56:3-4).*

**கையறவு** *(பெ.) – 1.செயலற்ற நிலை (நற்.152:8). 2.குறைபாடு (புறம்.38:15). 3.வறுமை (புற.157:2). 4.ஊடல் (பரி.10:33).*

**கையறு** *(பெ.) – செயலறு (அக.64:17).*

**கையாறு** *(பெ.) – 1.செயலற்ற நிலை (குறு.48:2). 2.இடும்பை (குறள்.63:7).*

**கையுறை** *(பெ.) – காணிக்கை (குறு.398:3-5).*

**கைவழி** *(பெ.) – யாழ் (புற.149:3).*

**கைவளம்** *(பெ.) – கொடையின் மிகுதி போன்ற பொருள் (நற்.52:9-10).*

**கைவினை** *(பெ.) – தொழில் (குறு.309:1).*

**கைவேல்** *(பெ.) – ஈட்டி (குறள்.774).*

**கொக்கு** *(பெ.) – 1.மா மரம் (குறு.26:6-8). 2.நெய்தல் நிலத்துப் பறவைகளுள் ஒன்று (குறு.117:1-2).*

**கொங்கு** *(பெ.) – 1.பூந்தாது (குறு.2:1). 2.கொங்கு நாட்டு வீரர் (புற.373:8). 3.தேன் (ஐங்.23:6).*

**கொட்கும்** *(பெ.) – 1.சுழன்று திரியும் (நற்.135:7-8). 2.பரந்து திரியும் (அக.20:15-6). 3.சூடி வரும் (புற.43:3). 4.இழிந்து ஏறும் (கலி.147:36-7).*

**கொட்பு** *(பெ.) – 1.சுழலுதல் (நற்.133:1). 2.விரைந்த செலவு (புறம்.303:2).*

**கொடாஅமை** *(பெ.) – ஈயாமை (புற.27:18).*

**கொடி** *(பெ.) – 1.நீட்சி (குறு.21:1-2). 2.தாவர வகை (குறு.36:1). 3.ஒழுங்கு (நற்.5:3). 4.கொடி போன்ற தலைவி (அக.54:22).*

**கொடிது** *(பெ.) – 1.கொடுமைத் தொழில் (அக.20:12). 2.கொடுமையுடையது (குறு.327:4).*

**கொடியர்** *(பெ.) – கொடுமையுடையவர் (குறு.87:3).*

**கொடியன்** *(பெ.) – கொடுமையுடையவன் (குறு.252:2).*

**கொடியார்** *(பெ.) – கடுங் குற்றவாளிகள் (குறள்.540).*

**கொடுக்குவர்** *(வி.) – தருவர் (புற.182:5).*

**கோ** *(பெ.) – 1.அரசன் (புற.9:8). 2.குயவன் (புற.256:1). 3.தகப்பன் (கலி.116:10-11).*

**கோங்கு** *(பெ.) – பாலை நிலத்து ஒரு வகை மரம் (குறு.254:2-3).*

**கோசர்** *(பெ.) – பழைய வீரக்குடியினருள் ஒரு சாரார் (அக.15:3).*

**கோட்டம்** *(பெ.) – 1.மாறுபாடு (நற்.47:8). 2.கோயில் (புற.299:6-7). 3.கோணல் (குறள்.19). 4.வளைவு (கலி.94:23).*

**கோட்டி** *(பெ.) – அவை (குறள்.401).*

**கோட்டு** *(பெ.) – கோடு என்பதன் விகாரம் (தந்தம்) (குறு.1:2).*

**கோட்டு மா** *(பெ.) – கொம்புள்ள விலங்கு (நற்.76:6).*

**கோட்டு மீன்** *(பெ.) – சுறா (குறு.304:4).*

**கோட்டை** *(பெ.) – 1.மதில் அரண் (புற.174:7). 2.கோணுதல் (பரி.10:57).*

**கோடல்** *(பெ.) – 1.காந்தட் பூ (குறு.62:1-3). 2.கொள்ளுதல் (நற்.44:7). 3.வெண்காந்தள் (அக.23:6). 4.வளைதல் (.151:8). 5.செங்காந்தள் பூ (கலி.101:4).*

**கோடா** *(வி.) – 1.நடுவு நிலை பிறழாத (அக.168:6). 2.கோணாமல் (குறள்.1086).*

**கோடாமை** *(வி.) – நடுவு நிலைமை பிறழாதிருத்தல் (குறள்.15).*

**கோடி** *(பெ.) – வெளுக்காதது ஆகிய ஆடை (அக.86:21).*

**கோ** *(வி.) – முறை தவறி (குறள்.554).*

**கோடியர்** *(பெ.) – கூத்தர் (குறு.78:1-2).*

**கோடு** *(பெ.) – 1.சங்கு (குறு.11:1). 2.மரக் கிளை (குறு.99:4-5). 3.யானைத் தந்தம் (குறு.100:4-5). 4.பக்கம் (நற்.198:6). 5.உச்சி (அக.30:11). 6.ஊது கொம்பு (நற்.276:1). 7.யாழின் ஓருறுப்பு (புற.127:1). 8.மயிர் முடி (கலி.72:20). 9.நீர் வீசும் கருவி (பரி.6:34).*

**கோடை** *(பெ.) – 1.மேற்காற்று (குறு.248:4-5). 2.வெப்பப் பருவம் (குறு.343:5-6). 3.கோடை என்னும் பருவம் (நமற்.312:8). 4.கோடை மலை (புற.205:6).*

**கோண்** *(பெ.) – மாறுபாடு (அக.372:15).*

**கோண்மா** *(பெ.) – 1.புலி (புற.58:30). 2.சிங்கம் (கலி.86:32).*

**கோது** *(பெ.) – 1.சக்கை (புற.114:4). 2.தோல் (புற.297:2).*

**கோதை** *(பெ.) – 1.மாலை (குறு.62:1-3). 2.சேரன் (அக.93:20). 3.கூந்தல் (பதி.49:2). 4.முத்து மாலை (பதி.88:31). 5.பெண் (பதி.81).*

**கோப்பு** *(பெ.) – கோவை (குறு.23:2).*

**கோமான்** *(பெ.) – தலைவன் (குறு.59:1).*

**கோய்** *(பெ.) – கள் முகக்கும் பாத்திரம் (புற.300:5-6).*

**கோயில்** *(பெ.) – 1.அரண்மனை (புற.67:10-11). 2.இந்திரனுக்கு உரிய ஆலயம் (புற.241:3).*

**கோயிலாள்** *(பெ.) – பட்டத்து அரசி (பதி.ப.8:2).*

**கோரம்** *(வி.) – கொடிது (கலி.96:26).*

**கோல்** *(பெ.) – 1.திரட்சி (குறு.1:2). 2.சிறு சுள்ளி (குறு.3:3). 3.அம்பு (குறு.335:5-6). 4.அடித்தண்டு (நற்.57:78). 5.சிறு கொம்பு (நற்.58:4). 6.கம்பி (அக.37:12-4). 7.அடிக்கும் கோல் (அக.127:12-3). 8.துலாக் கோல் (அக.349:4). 9.அணியின் சித்திர வேலை (புற.36:2). 10.ஊன்றுகோல் (புற.159:3). 11.செங்கோல் (குறள்.546). 12.அஞ்சனக் கோல் (குறள்.285).*

**கோல்எரி** *(பெ.) – விளக்குத் தண்டின் மேல் உள்ள தீபம் (பரி.17:6).*

**கோலம்** *(பெ.) – 1.அழகு (கலி.106:26). 2.வடிவம் (பரி.2:16).*

**கோலி** *(வி.) – 1.குழித்து (குறு.60:2-3). 2.விரித்து (பரி.21:31).*

**கோவலர்** *(பெ.) – இடையர் (குறு.358:6).*

**கோவை** *(பெ.) – கோக்கப்பட்ட வடம் (அக.358:12).*

**கோழ்** *(பெ.) – 1.செழுமை (அக.2:1). 2.வழவழப்பு (அக.41:8).*

**கோழி** *(பெ.) – வீட்டில் வளர்க்கப்படும் ஒருவகைப் பறவை (குறு.139:1).*

**கோள்** *(பெ.) – 1.குலை கொத்து (குறு.18:1). 2.கொள்ளுதல் (குறு.209:2). 3.கொள்கை (குறு.267:5-7). 4.காய் (நற்.102:5). 5.கூற்றம் (அக.36:2). 6.துணிவு (குறள்.311). 7.குற்றம் (அக.79:14). 8.ஆராய்ச்சி (அக.48:26).*

**கோளி** *(பெ.) – பூவாது காய்க்கும் மரம் (புறம்.58:2-3).*

**கோறல்** *(பெ.) – கொல்லுதல் (குறள்.254).*

**கோன்** *(பெ.) – அரசன் (புற.34:16).*

**கௌவை** *(பெ.) – பழமொழி (குறு.34:2-3).*

**சகடம்** *(பெ.) – 1.வண்டி (குறு.165:3-4). 2.உரோகிணி நாள் (அக.136:4-5).*

***சங்கம்*** *(பெ.) – இலட்சங் கோடி (பரி.2:13).*

***சந்து*** *(பெ.) – சந்தன மரம் (அக.59:12).*

***சமம்*** *(பெ.) – 1.போர் (அக.25:18-9). 2.அளவு (புற.14:4). 3.பொது நிலம் (கலி.101:11).*

***சலம்*** *(பெ.) – 1.வஞ்சனை (குறள்.986). 2.நீர் (பரி.10:90). 3.சினம் (பரி.15:58).*

***சனம்*** *(பெ.) – மக்கள் (பரி.10:9).*

***சாக்காடு*** *(பெ.) – இறப்பு (குறள்.235).*

***சாகாடு*** *(பெ.) – 1.வண்டி (இக.116:3). 2.உருள் (புறம்.256:2).*

***சாடி*** *(பெ.) – 1.ஒரு வகைப் (பாத்திரம்) ஏனம் (நற்.295:7). 2.சால் (பரி.20:53-4).*

***சாடி*** *(வி.) – 1.கோபித்து (பதி.77:9). 2.குத்திக் கிழித்து (கலி.52:3-4). 3.துகைத்து (கலி.101:21-2).*

***சாத்து*** *(பெ.) – வணிகர் கூட்டம் (குறு.390:3).*

***சாந்தம்*** *(பெ.) – 1.சந்தன மரம் (நற்.64:5). 2.சந்தனக் குழம்புப் பூச்சு (நற்.250:3-4).*

***சாந்தாற்றி*** *(பெ.) – விசிறி (பரி.21:30).*

***சாந்து*** *(பெ.) – 1.சந்தன மரம் (அக.59:12). 2.சந்தனம் (குறு.150:3). 3.மயிர்ச் சாந்து (குறு.312:6). 4.விழுது (புற.246:7).*

***சாபம்*** *(பெ.) – வில் (புற.7:4).*

***சாம்பல்*** *(பெ.) – வாடற்பூ (குறு.46:1-2).*

***சாய்*** *(பெ.) – தண்டாங்கோரை (அக.62:1).*

***சாய்த்தல்*** *(வி.) – 1.வளை (குறு.168:5-6). 2.அழகு அழி (அக.19:19).*

***சாய்யிறை*** *(பெ.) – வளைந்த முன் கை (அக.220:20)*

***சாய்த்த*** *(வி.) – 1.போக்கிய (அக.266:12). 2.அழித்த (புற.125:5-6).*

***சாய்த்தார்*** *(வி.) – இறைஞ்சினார் (கலி.39:25).*

***சாய்தல்*** *(பெ.) – ஒழிதல் (குறள்.858).*

***சாய்ப்பு*** *(பெ.) – கீழ் நோக்கல் (பரி.19:67-8).*

***சாய்பவர்*** *(பெ.) – தளர்பவர் (குறள்.927).*

**சாயல்** *(பெ.) – 1.இளைப்பு (புற.262:6). 2.அருள் (பரி.2:56). 3.அழகு (பரி.11:54-5).*

**சாயலர்** *(பெ.) – இளைப்பை உடையவர் (புற.262:5).*

**சாயலன்** *(பெ.) – மென்மைத் தன்மையன் (அக.332:10).*

**சாயினம்** *(பெ.) – மெல்லிய மகளிர் ஆயம் (பதி.60:12).*

**சாயினள்** *(வி.) – வாடினள் (குறு.9:2:3).*

**சார்** *(பெ.) – பக்கம் (நற்.40:3).*

**சார்ந்து** *(வி.) – புணர்ந்து (கலி.142:66).*

**சார்பு** *(பெ.) – துணை (குறள்.8:6).*

**சார்வு** *(பெ.) – 1.புகலிடம் (புறம்.205:4). 2.துணை (குறள்.15).*

**சாரல்** *(பெ.) – 1.மலைப் பக்கம் (குறு.3:2-4). 2.பக்கம் (குறு.253:5). 3.மலையின் அடிவாரம் (அக.2:3).*

**சாரிகை** *(பெ.) – கதி (பரி.6:36).*

**சால்** *(பெ.) – உழுதலைப் பற்றிய மரபுச் சொல் (நற்.340:7).*

**சால்கை** *(பெ.) – மிகுதல் (அகம்.219:5).*

**சால்வு** *(பெ.) – 1.அமைதி (குறு.90:6-7). 2.வலி அமைதி (புற.311:7). 3.மன அமைதி (குறள்.1064).*

**சாலகம்** *(பெ.) – சாளரம் (கலி.83:13).*

**சாலாமை** *(பெ.) – மிகாமை (அக.356:8).*

**சாலார்** *(பெ.) – அமைதி இல்லார் (புற.218:7).*

**சாவா மருந்து** *(பெ.) – சாவாப் பதம் தருவதாகிய அமரர் உலகத்து அமுதம் (குறள்.82).*

**சாவார்** *(பெ.) – இறக்கவல்லார் (குறள்.723).*

**சாற்றி** *(வி.) – 1.நிறைத்து (நற்.4:8). 2.தெரிவித்து (அக.381:10-11).*

**சாற்றுமின்** *(வி.) – எல்லார்க்கும் அறிவிமின் (பரி.8:79).*

**சாற்றுவார்** *(பெ.) – விளம்பரம் செய்வர் (கலி.102:30-32).*

**சாற்றுவேன்** *(வி.) – விரிவாகச் சொல்வேன் (குறள்.1212).*

**சாறு** *(பெ.) – 1.விழா (குறு.41:1-2). 2.வாசனைப் பண்டங்கள் ஊறின நீர் (பரி.6:41). 3.பூசை (பரி.8:96). 4.திருமணம் (பரி.19:6).*

**சான்றவர்** *(பெ.) – 1.பலகுணங்களானும் நிறைந்தவர் (குறள்.980). 2.அறிவுடையவர் (கலி.61:2).*

**சான்றாண்மை** *(பெ.) – குண நிறைவு (குறள்.981).*

**சான்று** *(பெ.) – நிறைந்து (பதி.24:9).*

**சான்றோர்** *(பெ.) – 1.நற்குணம் மிக்கோர் (குறு.102:4). 2.போரில் அமைதி உடைய வீரர் (புற.63:5-6).*

**சான்றோன்** *(பெ.) – அறிவு ஒழுக்கங்களில் சிறந்தவன் (புறம்.312:2).*

**சிகரம்** *(பெ.) – உச்சி (அக.181:21).*

**சிகழிகை** *(பெ.) – தலைமயிரின் முடிப்பு (கலி.96:9).*

**சிகை** *(பெ.) – குறை (பரி.7:70).*

**சிதடன்** *(பெ.) – குருடன் (புற.73:7).*

**சிதடி** *(பெ.) – சிள்வீடு (பதி.23:2).*

**சிதடு** *(பெ.) – 1.உள்ளீடு அற்ற தன்மை (குறு.216:1-2). 2.குருடு (புற.28:1).*

**சிதர்** *(பெ.) – 1.நீர்த் துளி (குறு.104:2). 2.வண்டு (நற்.66:2). 3.மழைத் துளி (புற.105:3).*

**சிதரல்** *(பெ.) – சிந்துதல் (அக.24:4).*

**சிதலை** *(பெ.) – கறையான் (நற்.325:3).*

**சிதவல்** *(பெ.) – சீலைத்துணி (குறு.146:3).*

**சிதவலர்** *(பெ.) – சீலைத்துணி உடையவர் (குறு.146:3-4).*

**சிதறல்** *(பெ.) – சிதைந்த பொருள் (புற.114:4).*

**சிதறி** *(வி.) – தெறித்து (குறு.270:2).*

**சிதை** *(வி.) – தேய் (கலி.142:64).*

**சிதைத்தல்** *(வி.) – 1.அழித்தல் (புற.37:13-4). 2.கெடுத்தல் (கலி.36:24).*

**சிதைத்தோர்** *(பெ.) – கெடுத்தவர் (குறு.319:6-7).*

**சிதைதல்** *(வி.) – கெடுதல் (புற.25:9).*

**சிதைப்போர்** *(பெ.) – அழிப்பவர் (குறு.283:1).*

**சிதைவு** *(பெ.) – 1.குற்றம் (அக.7:9). 2.கேடு (குறள்.112).*

**சிந்தியேன்** *(வி.) – நினையேன் (புறம்.376:18).*

**சிந்தை** *(பெ.) – மனம் (புற.279:1).*

**சிமயம்** *(பெ.) – சிகரம் (அக.94:1).*

**சிமிழ்த்தல்** *(பெ.) – அகப்படுத்துதல் (குறள்.274).*

**சிமை** *(பெ.) – 1.உச்சி (அக.138:8). 2.மலை (பரி.9:3).*

**சிமையம்** *(பெ.) – உச்சி (அக.3:6).*

**சிரகம்** *(பெ.) – கரம் (கலி.51:7).*

**சிரல்** *(பெ.) – சிச்சிலிப் பறவை (நற்.61:8).*

**சிரற்றாது** *(வி.) – கோபியாமல் (கலி.97:29).*

**சிரற்று** *(பெ.) – பொல்லாமை (அக.191:4).*

**சிரறு** *(வி.) – சிதறு (பதி.22:13).*

**சில்** *(பெ.) – 1.சில (குறு.14:2). 2.சிறிது (குறு.56:2).*

**சில்லை** *(பெ.) – முருட்டுத் தனம் (கலி.107:6).*

**சில** *(பெ.) – 1.சிறிது (குறு.70:4-5). 2.இரண்டொன்று (குறு.98:1-5).*

**சிலசொல்** *(பெ.) – மெத்தென்ற (புற.166:16).*

**சிலம்பன்** *(பெ.) – மலைநாட்டுத் தலைவன் (குறு.362:6-7).*

**சிலம்பி** *(பெ.) – சிலந்திப் பூச்சி (புற.189:9).*

**சிலம்பு** *(பெ.) – 1.மகளிர் காலணி (குறு.7:1-2). 2.மலை (குறு.22:2-3). 3.குகை (பரி.15:44).*

**சிலம்பும்** *(வி.) – ஒலிக்கும் (குறு.360:6-7).*

**சிலர்** *(பெ.) – சில பேர் (குறள்.260).*

**சிலை** *(பெ.) – 1.வில் (குறு.272:5-6). 2.ஒரு வகை மரம் (குறு.385:2). 3.ஓசை (அக.69:15). 4.முழக்கம் (பதி.81:4).*

**சிலைப்பு** *(பெ.) – முழங்குதல் (பதி.52:15).*

**சிவிகை** *(பெ.) – பல்லக்கு (குறள்.37).*

**சிவிறி** *(பெ.) – நீர்வீசும் கருவி (பரி.6:34).*

**சிள்வீடு** *(பெ.) – சிள் என ஒலியிடும் பூச்சி (நற்.252:2).*

**சிற்றாறு** *(பெ.) – கிளை நதி (கலி.108:27).*

**சிற்றில்** *(பெ.) – 1.சிறிய வீடு (நற்.123:8). 2.சிறு வீடு (புற.86:1).*

**சிற்றின்பம்** *(பெ.) – நிலையில்லாத இன்பம் (குறள்.93).*

**சிற்றூர்** *(பெ.) – சிறிய ஊர் (கலி.109:6).*

**சிறக்க** *(வி.) – 1.மிகுக (நற்.93:6). 2.மேன்மை உறுக (நற்.360:5). 3.பெருமை அடைக (அக.19:8).*

**சிறக்கணித்தாள்** *(பெ.) – சுருங்கிய பார்வையால் நோக்கினாள் (குறள்.1095).*

**சிறகர்** *(பெ.) – சிறகு (குறு.46:2).*

**சிறகு** *(பெ.) – சிறை (நற்.399:3).*

**சிறத்தல்** *(பெ.) – 1.விரைந்து ஓடுதல் (அக.160:9). 2.பெருகுதல் (அக.266:8).*

**சிறந்த** *(வி.) – மேன்மை உடைய (குறு.331:8).*

**சிறந்தவர்** *(பெ.) – பிறந்த தமர் (பரி.19:58).*

**சிறந்தான்** *(பெ.) – 1.அன்புடையான் (குறள்.515). 2.சிறந்த கணவன் (கலி.9:22).*

**சிறந்து** *(வி.) – மிக்கு (குறு.86:3-4).*

**சிறந்தோர்** *(பெ.) – 1.பெரியர் (அக.311:5-6). 2.தேவர் (பரி.19:12).*

**சிறப்பு** *(பெ.) – 1.மேன்மை (குறு.101:2). 2.செல்வம் (புற.64:5-6). 3.விழா (குறள்.18). 4.வீடுபேறு (குறள்.31). 5.துறக்கம் (குறள்.75). 6.மதிப்பு (குறள்.20:5). 7.வேறுபாடு (குறள்.1012).*

**சிறாஅர்** *(பெ.) – சிறுவர் (புற.291:1).*

**சிறாஅர்** *(பெ.) – சிறுவர் (குறு.129:1).*

**சிறாஅன்** *(பெ.) – மகன் (புற.276:3).*

**சிறார்** *(பெ.) – மக்கள் (பரி.3:6).*

**சிறிது** *(பெ.) – 1.சிறிய அளவு (குறு.14:5-6). 2.சிறியது (குறு.18:4-5).*

**சிறிய** *(பெ.) – சிறிய வடிவின (குறு.117:6).*

**சிறியர்** *(பெ.) – இளையர் (குறு.368:5).*

**சிறியவர்** *(பெ.) – கீழ் மக்கள் (குறள்.815).*

**சிறியிலை** *(பெ.) – சிறிய இலை (குறு.202:2).*

**சிறு** *(பெ.) – சிறுமை என்பதன் விகாரம் (குறு.18:4).*

**சிறு காலை** *(பெ.) – நாட்காலம் (கலி.97:3).*

**சிறுகு இடையார்** *(பெ.) – வண்டற் சிறுமியர் (பரி.106).*

**சிறுகுடி** *(பெ.) – 1.நெய்தல் நிலத்துச் சிறிய ஊர் (நற்.4:1). 2.பாலை நிலத்துச் சிறிய ஊர் (நற்.33:2).*

**சிறுசொல்** *(பெ.) – 1.இகழ்ந்துரைக்கும் சொல் (நற்.175:7). 2.புல்லிய சொல் (புறம்.72:7).*

**சிறுசோறு** *(பெ.) – சிறுமியர் (அக.110:7).*

**சிறுதடி** *(பெ.) – உப்பளம் (அக.366:5).*

**சிறுதினை** *(பெ.) – தினை வகை (புற.168:6).*

**சிறு துனி** *(பெ.) – சிறிது காலம் நிற்கும் வறுமை (குறள்.1000).*

**சிறுநனி** *(பெ.) – சிறிது பொழுது (புற.247:8-9).*

**சிறுநெறி** *(பெ.) – குறுகிய வழி (குறு.151:4).*

**சிறு நோக்கும்** *(பெ.) – அருகிய நோக்கம் (குறள்.1092).*

**சிறுபட்டி** *(பெ.) – காவலின்றி வேண்டியவாறு ஒழுகுவோன் (கலி.51:4).*

**சிறுபதம்** *(பெ.) – தண்ணீர் (புற.74:4).*

**சிறுபறை** *(பெ.) – ஒருவகை தோற்கருவி (குறு.375:4).*

**சிறுபுறம்** *(பெ.) – 1.முதுகு (குறு.253:6). 2.சிறு கொடை (பதி.7).*

**சிறுபொருள்** *(பெ.) – எளிய பொருள் (குறள்.860).*

**சிறுபொறி** *(பெ.) – சிறிய இயந்திரம் (நற்.119:1-2).*

**சிறுமனை** *(பெ.) – 1.சிற்றில் (குறு.326:2-3). 2.சிறிய வளை (குறு.328:2).*

**சிறுமி** *(பெ.) – சிறியவள் (கலி.65:16).*

**சிறுமுத்தன்** *(பெ.) – (கலி.59:20).*

**சிறுமை** *(பெ.) – 1.நோய் (நற்.1:9). 2.இழிந்த தன்மை (நற்.50:11). 3.துன்பம் (நற்.272:8). 4.குறைபாடு (புற.180:2). 5.வறுமை (புற.387:20). 6.காமம் (குறள்.441). 7.சிறியோர் (குறள்.451). 8.ஆற்றாமை (குறள்.1231).*

**சிறுவர்** *(பெ.) – சிறிய புதல்வர் (நற்.330:9).*

**சிறுவரி** *(பெ.) – புலி (அக.329:10).*

**சிறுவன்** *(பெ.) – சிறுமகன் (குறு.45:4).*

**சிறை** *(பெ.) – 1.சிறகு (குறு.2:1). 2.பக்கம் (குறு.81:2-3). 3.தடை (குறு.86:1). 4.அணை (குறு.149:3-4). 5.வரம்பு (நற்.67:4). 6.தடுத்தல் (நற்.74:3). 7.வேலி (நற்.354:2-3). 8.பூட்டுதல் (அக.190:13). 9.காவல் (புற.17:28). 10.அரண் (புற.51:1). 11.கரை (பரி.11:84).*

**சினம்** *(பெ.) – 1.வெப்ப மிகுதி (குறு.195:1). 2.(கோபம்) சினம் (நற்.126:5-6). 3.கொடுமை (நற்.305:6). 4.நெருப்பு (அக.75:4).*

**சினவிய** *(வி.) – சினம் கொண்ட (நற்.100:6).*

**சினவு** *(பெ.) – சினத்தல் (அக.388:14).*

**சினன்** *(பெ.) – சினம் (புறம்.100:8).*

**சினை** *(பெ.) – 1.மரக்கிளை (குறு.10:3-4). 2.கருப்பம் (குறு.35:2). 3.முட்டை (குறு.274:2). 4.கொடிஞ்சி (அக.104:6-7).*

**சினைப்பது** *(பெ.) – அரும்புவது (குறள்.1203).*

**சீக்கும்** *(வி.) – 1.துடைக்கும் (அக.345:19-20). 2.போக்கும் (கலி.100:1).*

**சீத்து** *(வி.) – பெருக்கித் தூய்மை செய்வது (நற்.159:6).*

**சீத்தை** *(பெ.) – 1.கைவிடப்படுமவன் (கலி.84:18). 2.கெட்ட தன்மை உடையவன் (கலி.94:22).*

**சீப்பு** *(பெ.) – 1.கதவிற்கு வலியாக உள் வாயிலில் இடப்படும் மரம். 2.அடித்து வருதல் (பரி.8:54).*

**சீர்** *(பெ.) – 1.பெருமை, ஈடு (குறு.101:1-3). 2.சிறப்பு (குறு.225:5-6). 3.தாளம் (நற்.138:10). 4.விழுப்பம் (அக.369:22). 5.அளவு (புற.6:8-9). 6.நன்மை (புற.11:13). 7.தலைமை (புற.126:3). 8.வாய்ப்பு (குறள்.831). 9.பாட்டு (கலி.131:34).*

**சீர்அல்லவர்** *(பெ.) – சிறியார் (குறள்.977).*

**சீர்தூக்குதல்** *(பெ.) – நிறை அளவை வரையறுத்தல் (குறள்.118).*

**சீரார்** *(பெ.) – தவமுடையவர் (குறள்.890).*

**சீரை** *(பெ.) – துலாத் தட்டு (புற.43:6-7).*

**சீறடி** *(பெ.) – சிறிய பாதம் (குறு.148:1-2).*

**சீறியாழ்** *(பெ.) – சிறிய யாழ் (புற.127:1).*

**சீறில்** *(பெ.) – சிறு வீடு (புற.319:2-3).*

**சீறின்** *(வி.) – சினத்தல் (குறள்.568).*

**சீறூர்** *(பெ.) – 1.சிறிய ஊர். 2.குறிஞ்சி நிலத்து ஊர் (நற்.95:7). 3.குக்கிராமம் (நற்.95:8).*

**சுகிர்** *(பெ.) – கோது (புற.109:15).*

**சுட்ட** *(வி.) – 1.நெருப்புக்கு இடை யாக்கிய (குறு.198:1). 2.சுடப்பட்ட (புற.136:18). 3.தீயினால் பக்குவப்படுத்திய (புற.319:8). 4.எரித்த (குறள்.119).*

**சுட்டு** *(பெ.) – கேட்டவை (பரி.19:54).*

**சுட்டு** *(வி.) – குறித்துக் காட்டு (நற்.142:2).*

**சுட்டுவிரல்** *(பெ.) – ஆள் காட்டி விரல் (நற்.149:2).*

**சுடர்** *(பெ.) – 1.ஒளி (குறு.189:3). 2.சூரியன் (குறு.195:1). 3.மின்னல் (குறு.314:2). 4.வெயில் (நற்.26:5). 5.சந்திரன் (நற்.108:8). 6.பிறை (கலி.58:3). 7.தாரகை (பரி.19:19).*

**சுடர்** *(வி.) – வீசு (குறு.357:6-7).*

**சுடல்** *(பெ.) – கனலுதல் (குறள்.1159).*

**சுடலை** *(பெ.) – சுடுகாடு (குறு.231:3-4).*

**சுடுபடை** *(பெ.) – சூட்டுக்கோல் (கலி.106:1).*

**சுடுபொன்** *(பெ.) – புடமிட்ட பொன் (கலி.85:1).*

**சுணங்கறை** *(பெ.) – புணர்ச்சி (பரி.9:22).*

**சுணங்கு** *(பெ.) – தேமல் (குறு.71:2).*

**சுதை** *(பெ.) – வெண்சுதை (அக.211:1-2).*

**சும்மை** *(பெ.) – 1.முழக்கம் (ஓசை) (நற்.348:3). 2.ஆரவாரம் (புற.22:18-9).*

**சும்மையர்** *(பெ.) – ஆரவாரம் உடையவர் (அக.86:18).*

**சுரம்** *(பெ.) – 1.பாலைநிலம் (குறு.39:3-4). 2.அரிய வழி (நற்.111:6). 3.கடத்தற்கரிய நிலம் (அக.80:2).*

**சுரி** *(பெ.) – (சுட்டி எருத்தின் நெற்றி வெள்ளைச்)சுழி (கலி.101:21).*

**சுரி** *(வி.) – 1.சுருள் (குறு.22:3). 2.சுழித்தல் (குறு.260:3). 3.முறுக்குண்ணல் (அக.235:9).*

**சுரிதகம்** *(பெ.) – ஒருவகைத் தலை அணி (நற்.86:5-6).*

**சுரிதல்** *(பெ.) – 1.வளைதல் (நற்.280:7). 2.கடை குழன்றல் (அக.83:2).*

**சுரியல்** *(பெ.) – 1.சுருண்ட தலை மயிர் (அக.21:13). 2.சுருள் (புற.307:6).*

**சுருக்கம்** *(பெ.) – வறுமை (குறள்.963).*

**சுருக்கி** *(வி.) – 1.கட்டி (நற்.142:3). 2.சுருட்டி (நற்.318:6).*

**சுருங்கை** *(பெ.) – வேய் (மூங்கிற் குழாய்) (பரி.16:20).*

**சுருணை** *(பெ.) – பூண் (அக.113:15).*

**சுரும்பு** *(பெ.) – வண்டின் சாதிகளுள் ஒன்று (குறு.309:2).*

**சுருள்** *(பெ.) – சுருளுதல் (பதி.21:10).*

**சுரை** *(பெ.) – 1.சுரத்தல் (குறு.132:4). 2.சுரப்பு (குறு.187:1-2). 3.உட்குழிவான இடம் (அக.113:11). 4.உள் துளை (அக.119:13). 5.சுரைக் கொடி (அக.287:5). 6.திரிக் குழாய் (பதி.47:5). 7.மூட்டு வாய் (பொருத்து) (கலி.6:3).*

**சுவர்** *(பெ.) – வீட்டின் சுவர் (குறு.358:2-3).*

**சுவல்** *(பெ.) – 1.மேட்டு நிலம் (குறு.204:3). 2.விலங்குகளின் முதுகு (நற்.6-7). 3.பிடரி மயிர் (அக.4:8). 4.பின் கழுத்து (அக.101:5).*

**சுவை** *(பெ.) – உருசி (நற்.87:4).*

**சுழல்** *(பெ.) – சுற்றுதல் (அக.393:10).*

**சுழல் மரம்** *(பெ.) – தானியம் திரிக்கும் மர இயந்திரம் (அக.393:10).*

**சுழி** *(பெ.) – ஆறுமுதலிய நீர் நிலையுள் பட்ட சுழல் (நற்.65:7).*

**சுளகு** *(பெ.) – முறம் (அக.393:10).*

**சுளை** *(பெ.) – கனியின் உட்பகுதி (குறு.342:1).*

**சுற்றம்** *(பெ.) – 1.இனம் (நற்.57:4). 2.ஆயம் மகளிர் விளையாட்டுக் கூட்டம் (அக.17:6).*

**சுற்றி** *(வி.) – 1.கூடாகச் சுற்றி (அக.37:15). 2.பலபடியாகக் கட்டி (அக.69:15).*

**சுற்று** *(பெ.) – 1.மதில் (தொல்.20:11). 2.காற் சரி (கலி.85:1-2).*

**சுறவம்** *(பெ.) – 1.சுறா மீன் (நற்.27:8-9). 2.சுறா மீனின் வாய் போலச் செய்யப்பட்டு நீர் விழும் பந்தம் (நற்.132:2).*

**சுறவு** *(பெ.) – சுறா மீன் வகை (நற்.19:2).*

**சுறா** *(பெ.) – ஒரு வகை மீன் (குறு.230:5).*

**சூட்டு** *(பெ.) – 1.விளிம்பு (குறு.227:1). 2.சுடப்பட்ட இறைச்சி (நற்.83:6). 3.நெற் கதிரின் சுமை (நற்.400:3). 4.சூடுதல் (அக.86:27). 5.மாலை வகை (பரி.20:30).*

**சூடு** *(பெ.) – 1.சூடுதல் (நற்.290:1). 2.சூட்டிறைச்சி (புற.34:11). 3.அரிக் கட்டு (தாள் கட்டு) (பரி.7:27).*

**சூடுநர்** *(பெ.) – அணிபவர் (நற்.278:3-4).*

**சூதர்** *(பெ.) – சூதாடுவோர் (குறள்.932).*

**சூது** *(பெ.) – 1.உட்புரை (ஐங்:8:1). 2.சூதாடல் (குறள்.931).*

**சூர்** *(பெ.) – 1.தெய்வம் (குறு.52:1-2). 2.சூரபன்மா (புற.23:4). 3.அச்சம் (ஐங்.8:1). 4.கடுப்பு (பது.7:62).*

**சூர்ப்பு** *(பெ.) – 1.வளைவு (அக.142:17). 2.வளைந்த கடகம் (புற.154:3).*

**சூரல்** *(பெ.) – 1.சுழித்து அடித்தல் (அக.1:17). 2.பிரம்பு (அக.228:9).*

**சூல்** *(பெ.) – 1.கருப்பம் (குறு.35:2-3). 2.(பண்டத்தின்) நிறைவு (நற்.12:1). 3.குடைதல் (அக.113:111). 4.மேகம் நீர் (பரி.20:3).*

**சூலி** *(பெ.) – சூலப் படையுடைய துர்க்கை (குறு.218:1-2).*

**சூழ்** *(வி.) – 1.சுற்று (குறு.220:5). 2.படிந்திடு (குறு.279:5-6). 3.வளை (குறு.300:7). 4.திரி (நற்.300:11). 5.சூழன்ற (அக.102:19).*

**சூழ்ச்சி** *(பெ.) – 1.ஆராய்ச்சி (குறு.73:4-5). 2.உசா (ஆலோசனை) (புற.2:7).*

**சூழ்வார்** *(பெ.) – அமைச்சர் (குறள்.445).*

**சூழல்** *(பெ.) – சூர்தல் (பரி.19:19-20).*

**சூழி** *(பெ.) – 1.யானையின் நெற்றிப் பட்டம் (அக.15:10). 2.ஒரு வகை நீர் நிலை (புற.375:1).*

**சூள்** *(பெ.) – (சபத) மொழி சூளுறவு (குறு.53:1-7).*

**செக்கர்** *(பெ.) – 1.சிவப்பு (புற.16:8). 2.செவ்வானம் (கலி.126).*

**செகாஅர்** *(பெ.) – கொல்லார் (அகம்.109:12).*

**செகில்** *(பெ.) – சிவந்த ஏறு (கலி.105:36).*

**செகீஇய** *(வி.) – கொல்லுதற்பொருட்டு (நற்.29:4).*

**செகுக்கும்** *(வி.) – 1.அழித்துக்கொள்ளும் (குறு.245:2). 2.கொல்லும் (அக.307:9).*

**செகுத்து** *(வி.) – கொன்று (குறள்.259).*

**செங்கண்** *(பெ.) – சிவந்து விளங்கும் விழி (பரி.4:10).*

**செங்கணை** *(பெ.) – நேரான அம்பு (நற்.298:2).*

**செங்கதிர்ச் செல்வன்** *(பெ.) – சூரியன் (நற்.164:2).*

**செங்கழுநீர்** *(பெ.) – கொடிவகை (செங்குவளை) (அக.48:8).*

**செங்களம்** *(பெ.) – குருதியால் சிவந்த இடமான போர்க்களம் (குறு.1).*

**செங்காந்தள்** *(பெ.) – செந்நிறமுள்ள கொடிவகை (குறு.185:6).*

**செங்காய்** *(பெ.) – சிவந்தநிறமுடைய காய் (குறு.126:1).*

**செங்காரி** *(பெ.) – சிவந்த கரிய ஏறு (கலி.105:39-40).*

**செங்கிண்கிணி** *(பெ.) – செவ்விய பொன்னால் இயன்ற கிண்கிணி என்னும் காலணி(நற்.389:1).*

**செங்குங்குமம்** *(பெ.) – செவ்வியதும் சிவப்பினதும் ஆகிய குங்குமம் (பரி.10:81).*

**செங்குணக்கு** *(பெ.) – நேர்கிழக்கு (அக.76:11).*

**செங்குரலி** *(பெ.) – ஒருவகைச் செடி (புற.283:1).*

**செங்குருதி** *(பெ.) – செவ்விரத்தம் (அக.3:7-8).*

**செங்குழை** *(பெ.) – செந்தளிர் (அக.9:4).*

**செங்கேழ்** *(பெ.) – செந்நிறம் (நற்.213:9).*

**செங்கோல்** *(பெ.) – 1.நடுநிலையான ஆட்சி (குறு.276:5). 2.நேரான தண்டு (நற்.57:8).*

**செங்கோன்மை** *(பெ.) – அரசனாற் செய்யப்படும் முறையான தன்மை (குறள்.556).*

**செச்சை** *(பெ.) – 1.வெட்சி (அக.48:10). 2.கிடாய் (வெள்ளாட்டுக் கடா) (புற.286:1).*

**செஞ்சால்** *(பெ.) – செம்மையாக உழுதல் (நற்.340:7).*

**செஞ்சுடர்** *(பெ.) – ஒளிவிளக்கு (குறு.353:3).*

**செஞ்ஞாயிறு** *(பெ.) – செய்ய சூரியன் (புற.4:16).*

**செண்** *(பெ.) – மகளிர் கொண்டை (அக.59).*

**செண்ணிகைக்கோதை** *(பெ.) – பூமாலை வகை (பரி.21:56).*

**செத்தார்** *(பெ.) – இறந்தவர் (குறள்.214).*

**செத்து** *(வி.எ.) – கருதி (கலி.45).*

**செத்தோர்** *(பெ.) – இறந்தோர் (புற.240:8).*

**செது** *(வி.) – அழி (அக.63:14).*

**செதுக்கண்** *(பெ.) – ஒளி மழுங்கின கண் (புற.261:9).*

**செதும்பல்** *(பெ.) – நீர் ஊற்றுதல் (அக.155:12).*

**செதுத்தல்** *(வி.) – 1.ஒளி முதலியன மழுங்குதல் (புற.261:9). 2.சோர்தல் (அக.63).*

**செதும்பு** *(பெ.) – குறைவாக ஓடும் நீர் (கலி.48).*

**செந்தண்மை** *(பெ.) – செவ்விய தண்ணளி (குறள்.20).*

**செதுமொழி** *(பெ.) – தீமொழி, பொல்லாச்சொல் (கலி.68).*

**செந்தார்** *(பெ.) – கிளிக்கழுத்தின் செவ்வரை (அக.34).*

**செந்தில்** *(பெ.) – முருகக்கடவுள் தலமாகிய திருச்செந்தூர் (புற.18-19).*

**செந்தினை** *(பெ.) – தினைவகை (குறு.198:2).*

**செந்துகிர்** *(பெ.) – செம்பவளம் (கலி.35:4).*

**செந்தொடை** *(பெ.) – அம்பு முதலியவற்றை எய்யுங்குறி (புற.3:20).*

**செந்நாய்** *(பெ.) – செந்நிறமுள்ள நாய்வகை (குறு.56).*

**செந்நிலம்** *(பெ.) – சிவந்த பாலை நிலம் (அக.54:4).*

**செந்நிலை** *(பெ.) – செங்குத்தான நிலை (அக.33:2).*

**செந்நீர்** *(பெ.) – செம்மையான புதுநீர் (நற்.130:4).*

**செந்நெல்** *(பெ.) – செஞ்சாலி நெல் (பதி.71:4).*

**செந்நெற்றி** *(பெ.) – சிவந்த உச்சிக் கொண்டை (குறு.107:2).*

**செப்பம்** *(பெ.) – 1.செம்மை (குறள்.951). 2.நடுநிலை (குறள்.112).*

**செப்பல்** (பெ.) – 1.சொல்லுதல் (குறு.268:1). 2.வாய்விட்டுக் கூறல் (நற்.94:2).

**செப்பலென்** (வி.) – சொல்லேன் (அக.356:10-11).

**செப்பாது** (வி.) – சொல்லாமல் (குறு.2:2).

**செப்பினம்** (வி.) – சொல்லினோம் (குறு.207:1).

**செப்பினர்** (வி.) – சொன்னார் (குறு.351:4-5).

**செப்பீ** (வி.) – சொல்லுவாய் (கலி.93:10).

**செப்புதல்** (வி.) – சொல்லுதல் (பரி.6:67).

**செப்பு** (பெ.) – 1.மாழையாலான சிறிய பெட்டி, சிமிழ் (குறள்.887). 2.நீர்க்கரகம் (குறு.277).

**செப்புநர்** (பெ.) – சொல்பவர் (குறு.98:1-3).

**செப்புவல்** (வி.) – கூறுவன் (அக.217:15).

**செம்** (பெ.) – செந்நிறம் (குறு.40:4).

**செம்பஞ்சி** (பெ.) – ஒருவகை வண்ணக்குழம்பு (பரி.6:17).

**செம்பாகம்** (பெ.) – ஒத்த பாதி (குறள்.1092).

**செம்பு** (பெ.) – பஞ்ச உலோகத்துள் ஒன்று (நற்.153:3).

**செம்புலம்** (பெ.) – 1.செம்மண்நிலம் (குறு.40:4). 2.செழிப்பான பூமி (குறு.40:4).

**செம்புனல்** (பெ.) – புதுவெள்ளம் (ஐங்.80).

**செம்பூ** (பெ.) – செந்நிறப் பூவுள்ள செடிவகை (பரி.22:21).

**செம்பூழ்** (பெ.) – சிவந்த காடை (அக.63:7).

**செம்பெண்டிர்** (பெ.) – மங்கள மகளிர் (அக.86:9).

**செம்பொருள்** (பெ.) – 1.முதற்பொருளான கடவுள் (குறள்.358). 2.அறம் (குறள்.91).

**செம்மல்** (பெ.) – 1.பழம்பூ (குறு.50:1-2). 2.தலைவன் (குறு.242:6). 3.நிறைவு (குறு.270:5). 4.தலைமை (நற்.130:4). 5.தருக்கு (குறள்.880).

**செம்மலன்** (வி.) – தலைமை உடையவன் (குறு.33:4).

**செம்மற்று** (வி.) – 1.தலைமையை உடைத்து (புற.33:15). 2.தன்மையது (கலி.40:16).

**செம்மாந்தது** *(பெ.) – இறுமாந்தது (கலி.109:4-5).*

**செம்மாந்து** *(வி.) – தலைமை தோன்ற இருந்து (புற.161:19-20).*

**செம்மீன்** *(பெ.) – 1.அருந்ததி (பதி.31:28). 2.செவ்வாய் (புற.60:2).*

**செம்முக வாழை** *(பெ.) – செவ்வாழை (அக.302:1).*

**செம்மூதாய்** *(பெ.) – இந்திர கோபப்பூச்சி (நற்.362:5).*

**செம்மை** *(பெ.) – நேர்மை (கலி.14)*

**செம்மொழி** *(பெ.) – நடுவு நிலையான மொழி (அக.349:4).*

**செய்** *(பெ.) – 1.வயல் (நற்.98:2). 2.செய்கை (புற.199:5).*

**செய்க்கடன்** *(பெ.) – நிலவரி (புற.35).*

**செய்கலாதார்** *(பெ.) – செய்யமாட்டாதார் (குறள்.30).*

**செய்கலான்** *(வி.) – செய்யான் (குறள்.848).*

**செய்கிற்பான்** *(பெ.) – முடிவு செய்யவல்லான் (குறள்.515).*

**செய்கின்று** *(வி.) – செய்யா நின்றது (பரி.7:22).*

**செய்கு** *(வி.) – செய்வேன் (குறு.25:2).*

**செய்குவென்** *(வி.) – செய்வேன் (அக.304:6).*

**செய்கை** *(பெ.) – 1.செய்யப்படுதல் (நற்.308:9). 2.செயற்கையாக அமைத்தல் (அக.134:6). 3.தொழில் (அக.293:4). 4.செய்யும் ஆறு (குறள்.631).*

**செய்தது** *(பெ.) – ஆக்கியது, நிகழ்ந்தியது (குறு.173:5-6).*

**செய்தல்** *(பெ.) – 1.ஆக்குதல் (குறு.21:2). 2.விளைத்தல், புரிதல் (குறு.22:4-5). 3.முடித்தல் (நற்.102:4). 4.அமைத்தல் (அக.19:17). 5.உண்டாக்குதல் (அக.229:1). 6.எழுதுதல் (அக.351:10). 7.தருதல் (குறள்.1201).*

**செய்தன்று** *(வி.) – செய்தது (நற்.309:3).*

**செய்தனள்** *(வி.) – செய்தாள், புரிந்தாள் (குறு.347:4).*

**செய்தனெம்** *(வி.) – செய்தோம் (குறு.304:7-8).*

**செய்தி** *(பெ.) – 1.செயல் (புற.45:7). 2.செய்ந்நன்றி (புற.34:6).*

**செய்தி கொன்றார்** *(பெ.) – செய்ந்நன்றி மறந்தவர் (புற.34:6).*

**செய்தீ** *(வி.) – வெய்வாயாக (புற.145:7).*

**செய்து** *(வி.) – 1.விளைத்து (குறு.61:5-6). 2.கூறி (அக.378:18).*

**செய்துவிட்டது** *(வி.) – உண்டாக்கி விட்டது (கலி.105:65).*

**செய்ந்நன்றி** *(பெ.) – உபகாரம், உதவி (குறள்.100).*

**செய்பொருள்** *(பெ.) – மனிதவாழ்வின் குறிக்கோள் (பரி.4:73).*

**செய்ம்** *(வி.) – செய்வாயாக (புற.48:8).*

**செய்யலர்** *(வி.) – செய்யமாட்டார் (நற்.133:7).*

**செய்யவள்** *(பெ.) – செம்மையான திருமகள் (குறள்.167).*

**செய்யற்க** *(வி.) – செய்யாதொழிக (குறள்.205).*

**செய்யாக்கால்** *(வி.) – செய்யாராயின் (குறள்.987).*

**செய்யாப் பாவை** *(பெ.) – குரவம் பாவை (ஐங்.344).*

**செய்யாம்** *(வி.) – செய்யமாட்டோம் (அக.106:6-7).*

**செய்யாமல்** *(வி.) – செய்யமாட்டாய் (நற்.244:7-8).*

**செய்யாள்** *(பெ.) – திருமகள் (பரி.22:4).*

**செய்யின்** *(வி.) – செய்தால் (குறு.309:7-8).*

**செய்யும்** *(வி.) – 1.செய்வான் (குறு.8:2-6). 2.விளைக்கும் (குறு.206:3-4).*

**செய்யுள்** *(பெ.) – பாட்டு (புற.53:11).*

**செய்யை** *(வி.) – செந்நிறம் உடைய (பரி.19:97).*

**செய்யோள்** *(பெ.) – 1.திருமகள் (அக.316:13). 2.தலைவி (ஐங்.441).*

**செய்வது** *(பெ.) – செய்யத்தக்கது (அக.281).*

**செய்வாம்** *(வி.) – செய்வோம் (குறு.197:1).*

**செயப்பட்டார்** *(பெ.) – செய்வித்துக் கொண்டவர் (குறள்.105).*

**செயல்** *(பெ.) – பொருள்தேடுகை (கலி.2).*

**செயலை** *(பெ.) – அசோகமரம் (குறு.214:4-5).*

**செயற்கு** *(வி.) – செய்ய (குறு.383:6).*

**செயற்கை** *(பெ.) – 1.தொழில் (புற.35:28). 2.செய்யும் திறம் (குறள்.647).*

**செயற்பாலது** *(வி.) – செய்த்தக்கது (குறள்.30).*

**செயாளன்** *(பெ.) – செய்கையை ஆளும் வீரன் (புற.282:2).*

**செயிர்த்தன்று** *(வி.) – வெகுண்டது (புற.226:1).*

**செயிர்த்து** *(வி.) – சினம் கொண்டு (அக.388:14).*

**செயிர்ப்பவர்** *(பெ.) – பகைப்பவர் (குறள்.870).*

**செயின்** *(வி.) – செய்தால் (குறு.397:6).*

**செரு** *(பெ.) – 1.போர் (பரி.1:27). 2.ஊடல் (பரி.7:75).*

**செருக்கம்** *(பெ.) – கள் முதலியன குடிப்பதால் வரும் மயக்கம் (நற்.35).*

**செருக்கு** *(பெ.) – 1.இருமாப்பு (அகந்தை) (குறள்.759). 2.ஆண்மை (குறள்.78). 3.மயக்கம் (குறள்.346). 4.செல்வம் (குறள்.180).*

**செருக்கு தல்** *(வி.) – மயங்குதல் (பதி.49:8).*

**செருந்தி** *(பெ.) – நெய்தல் நிலத்தில் உள்ள ஒரு வகை மரம் (அக.150:9).*

**செருப்பு** *(பெ.) – பூழிநாட்டிலுள்ளதோர் மலை (பதி.21:23).*

**செருவம்** *(பெ.) – மாறு (பரி.8:87).*

**செருவஞ்செய் தல்** *(வி.) – மாறுபடுதல் (பரி.8:87).*

**செருவு தல்** *(வி.) – ஊடுதல் (பரி.7:75).*

**செல்** *(பெ.) – இடி (அக.342:9).*

**செல்இடம்** *(பெ.) – பலிக்கும் இடம் (குறள்.301).*

**செல்க** *(வி.) – போக (குறு.141:1-2).*

**செல்கம்** *(வி.) – போவோம் (குறு.114:2-3).*

**செல்கலாது** *(வி.) – போகமாட்டாது (புற.126:16).*

**செல்லல்** *(பெ.) – துன்பம் (குறு.111:1-2).*

**செல்லல்** *(வி.) – 1.போகற்க (குறு.179:2-3). 2.போகாதோழி (புற.259:4).*

**செல்லலம்** *(வி.) – செல்லேம் (புற.101:1).*

**செல்லற்க** *(வி.) – செல்லாது ஒழிக (கலி.56:33).*

**செல்லா இடம்** *(பெ.) – பலியாத இடம் (குறள்.302).*

**செல்லாச் செல்வம்** *(பெ.) – தொலையாச் செல்வம் (புற.160:27).*

**செல்லாதீம்** *(வி.) – போகாதீர் (குறு.350:2-3).*

**செல்லாது** *(வி.) – செய்யாமல் (குறு.265:1-7).*

**செல்லார்** *(பெ.) – போகார் (குறு.130:2).*

**செல்லாமை** *(பெ.) – பிரிந்து போகாமை (குறள்.1151).*

**செல்லாவிடம்** *(பெ.) – தகுதியில்லாத இடம் (குறள்.302).*

**செல்லிடம்** *(பெ.) – தகுதியான இடம் (குறள்.301).*

**செல்(லு) தல்** *(பெ.) – 1.பரவுதல் (புற.26:7). 2.தணிதல் (புற.6:23).*

**செல்வம்** *(பெ.) – 1.மணிபொன் முதலிய செல்வங்கள் (நற்.210:6). 2.பாக்கியம் (வளம்) (அக.105:8). 3.வீறு (அக.144:18). 4.திரு (அக.174:3).*

**செல்வர்** *(பெ.) – செல்வம் உடையவர் (குறு.233:2-3).*

**செல்வர்** *(வி.) – போவார் (குறு.350:2-3).*

**செல்வல்** *(வி.) – போவேன் (நற்.258:2).*

**செல்வன்** *(பெ.) – மகன் (ஐங்.104).*

**செல்வார்** *(வி.) – போவார் (பிரிவார்) (குறு.43:1).*

**செல்வி** *(பெ.) – செல்வம் உடையவள் (அக.345:4).*

**செல்வு** *(பெ.) – உருட்டுதல் (கலி.85:18).*

**செல்வோர்** *(பெ.) – கடப்போர் (ஐங்.301).*

**செல** *(வி.) – 1.போக (குறு.114:2-3). 2.கழிய (குறு.338:1-4). 3.அகல (நற்.45:8). 4.பரக்க (புற.26:7). 5.மனம் கொள (குறள்.434).*

**செலியர்** *(வி.) – தணிக (புற.6:23).*

**செலின்** *(வி.) – போனால், பிரிந்தால் (குறு.207:1).*

**செலீஇயர்** *(வி.) – 1.செல்லும் பொருட்டு (குறு.117:2-4). 2.செல்லுக (குறு.212:6). 3.செல்லுதல் (அக.326:8).*

**செவ்வரி** *(பெ.) – நாரை வகை (பதி.23:21).*

**செவ்வழி** *(பெ.) – 1.மாலைக் காலத்துப் பண் (அக.14:15). 2.இரங்கற் பண் (பெரும்பண்களுள் ஒன்றாகிய முல்லைப் பண்) (புற.144:2).*

**செவ்வன்** *(பெ.) – நன்றாக (நற்.277:4).*

**செவ்வானம்** *(பெ.) – செந்நிறமுகில் (புற.4:2).*

**செவ்வி** *(பெ.) – தகுந்த சமயம் (குறள்.130).*

**செவ்விதின்** *(பெ.) – நடையின்றி நேரே (புற.6:13).*

**செவ்வியான்** *(பெ.) – நேர்மையானவன் (குறள்.169).*

**செவ்வியோன்** *(பெ.) – நேர்மையானவன் (புற.29:9).*

**செவிச்செல்வம்** *(பெ.) – கேள்வியறி வாகிய பெருஞ்செல்வம் (குறள்.411).*

**செவிசாய் த்தல்** *(வி.) – சொல்வதைக் கேட்கச் செவி தாழ்த்தல் (கலி.95).*

**செவிடுபடு தல்** *(வி.) – ஓசை மிகுதியால் காது கேளாது போதல் (பரி.2:39).*

**செவிமறை** *(பெ.) – செவியில் மறுவையுடைய எருது (கலி.101).*

**செழியன்** *(பெ.) – பாண்டியன் (புற.19:4).*

**செற்றன்று** *(வி.) – மனத்துள்ளே கறுவு கொண்டது (புற.226:1).*

**செற்றார்** *(பெ.) – 1.பகைவர் (குறள்.446). 2.வெறுத்தார் (குறள்.1245).*

**செற்றோர்** *(பெ.) – பகைவர் (பதி.82:12).*

**செற்றும்** *(வி.) – 1.இறுகும் (குறு.260:3). 2.சென்று செறியும் (புற.152:5).*

**செற்றை** *(பெ.) – சிறுதூறு (புற.326:4).*

**செறல்** *(பெ.) – சினம், வெருட்சி (புற.15:8).*

**செறாஅது** *(வி.) – 1.வெகுளாமல் (புற.310:2). 2.முகம் மாறாது (கலி.61:11).*

**செறாஅமை** *(பெ.) – கெடாது (கெடுக்காமல்) இருத்தல் (கலி.138:9).*

**செறாஅர்** *(பெ.) – வெகுளார் (குறள்.1196).*

**செறிக்குநர்** *(பெ.) – அணிபவர் (புற.378:14).*

**செறிக்கும்** *(பெ.) – அகப்படுத்தும் (அக.220:5).*

**செறி தல்** *(வி.) – 1.இறுகலாய் இருத்தல் (ஐங்.199). 2.அடங்குதல் (கலி.84). 3.மிகுதல் (கலி.102).*

**செறி த்தல்** *(வி.) – அடைத்தல் (கலி.48).*

**செறித்தனள்** *(வி.) – அடக்கி வைத்தனள் (நற்.258:2).*

**செறித்து** *(வி.) – நெருக்கி (அக.304:7).*

**செறிந்தன** *(வி.) – 1.இறுகின (குறு.61:6). 2.ஒடுங்கின (நற்.385:3).*

**செறிநடை** *(பெ.) – பயில அடியிடும் நடை (அக.301:16).*

**செறிப்பல்** *(வி.) – அடக்கிவைப்பேன் (நற்.206:9).*

**செறியேன்** *(வி.) – ஒடுக்கி வையேன் (அக.315:6).*

**செறிவு** *(பெ.) – 1.கூட்டம் (குறள்.684). 2.உறவு (கலி.133). 3.தன்னடக்கம் (குறள்.715).*

**செறின்** *(வி.) – வெகுண்டால் (குறள்.778).*

**செறு தல்** *(வி.) – 1.வெறுத்தல் (குறள்.1245). 2.வருத்துதல் (கலி.78).*

**செறு த்தல்** *(வி.) – 1.செறிதல், உள்ளடங்கச் செய்தல் (புற.53:11). 2.தூர்த்தல் (குறள்.1200). 3.வெல்லுதல் (பரி.9:73). 4.கொல்லுதல் (கலி.104).*

**செறு** *(பெ.) – வயல் (கலி.68).*

**செறுக்கும்** *(வி.) – அடைக்கும் (புற.7:12).*

**செறுத்து** *(வி.) – பொருது (கலி.104:51).*

**செறுதக்கான்** *(பெ.) – கோபித்தற்கு உரியவன் (கலி.84:19).*

**செறுநர்** *(பெ.) – பகைவர் (குறள்.759).*

**செறுவர்** *(பெ.) – பகைவர் (புற.100:10).*

**சென்மார்** *(பெ.) – செல்பவர் (அக.285:1).*

**சென்மின்** *(வி.) – செல்லுங்கள் (நற்.229:2).*

**சென்றஞான்றை** *(பெ.) – நேற்றைய நாள் (புற.390:10).*

**சென்மதி** *(வி.) – செல்வாயாக (நற்.276:7).*

**சென்றனர்** *(வி.) – போயினர் (குறு.140:3).*

**சென்றனள்** *(வி.) – போயினள் (குறு.144:5).*

**சென்றனள்** *(வி.) – போயினள் (குறு.205:5).*

**சென்றிசின்** *(வி.) – சென்றான் (நற்.394:6).*

**சென்றீமோ** *(வி.) – செல்வாய் (கலி.64:28).*

**சென்று** *(வி.) – போய் (குறு.78:5-7).*

**சென்றேன** *(வி.) – போனாரென (குறு.207:6-7).*

**சென்றோர்** *(பெ.) – போனவர் (குறு.66:2-3).*

**சென்னி** *(பெ.) – 1.தலை (கலி.81). 2.உச்சி (கலி.43).*

**சென்னிக்கோடு** *(பெ.) – ஈரோடு வட்டத்தில் மலை உள்ள ஓரூர் (நற்.28).*

**சென்னியர்** *(பெ.) – கூத்தர் (நற்.189:2-4).*

**சே** *(பெ.) – 1.சிவப்பு (குறு.15:5). 2.காளை (அக.36:7).*

**சே த்தல்** *(வி.) – 1.எய்துதல் (பரி.8:103-4). 2.சிவப்பாதல் (கலி.57).*

**சேக்கும்** *(வி.) – 1.தங்கும் (குறு.13:2-3). 2.உறங்கும் (புற.24:20).*

**சேக்குவள்** *(வி.) – தங்குவாள் (அக.315:15).*

**சேக்குவை** *(வி.) – தங்குவை (நற்.254:9).*

**சேக்கை** *(பெ.) – கட்டில் முதலிய மக்கள் படுக்கை (புற.50).*

**சேக்கோள்** *(பெ.) – ஆகோள் (அக.63).*

**சேகன்** *(பெ.) – வீரன் (கலி.96).*

**சேகில்** *(பெ.) – சிவந்த ஏறு (கலி.105).*

**சேட்சிமை** *(பெ.) – நெடிய உச்சி (புற.120:18).*

**சேட்பட்டது** *(வி.) – நெடுங்காலத்த வாயிற்று (கலி.143:16).*

**சேட்படு தல்** *(வி.) – நெடுங் காலத்ததாதல் (கலி.143).*

**சேட்புலம்** *(பெ.) – தொலைவான (தூரமான) இடம் (அக.61).*

**சேடு** *(பெ.) – அழகு (கலி.72).*

**சேண்** *(பெ.) – 1.சேய்மை (புற.174:2). 2.நெடுங்காலம் (புற.2:19).*

**சேண** *(கு.வி.எ.) – உயர (பரி.12:48).*

**சேணன்** *(பெ.) – நெடுந் தோலைவில் உள்ளவன் (பதி.44:11).*

**சேதா** *(பெ.) – சிவப்பு ஆன் (நற்.359).*

**சேதான்** *(பெ.) – சிவலைப் பசு (அக.394:6).*

**சேதிகை** *(பெ.) – மூங்கிலுழக்கு, நாழி முதலியவற்றின் அடிப்பகுதியால் குதிரை உடலிற் குத்தும் வண்ணத் தொழில் (கலி.96:27).*

**சேந்தனை** *(வி.) – தங்கினை (நற்.254:12).*

**சேப்பு தல்** *(வி.) – தங்குதல் (பதி.62).*

**சேப்பு** *(பெ.) – 1.சிவப்பு (பரி.7:70). 2.தாமரைக் கிழங்கு (கலி.74).*

**சேம்பு** (பெ.) – சேம்பு என்னும் கிழங்குச் செடி (குறு.76:3).

**சேமஅச்சு** (பெ.) – உற்றுழி உதவும் அச்சு மரம் (புற.102:5).

**சேமச்செப்பு** (பெ.) – 1.பாதுகாப்பை உடைய பாத்திரம் (குறு.277:4-5). 2.கமண்டலம் (குறு.277:4-5).

**சேமம்** (பெ.) – பாதுகாப்பு (குறு.277:4-5).

**சேய்** (பெ.) – செந்நிற முருகன் (பரி.6:69).

**சேய்குன்றம்** (பெ.) – திருப்பரங்குன்றம் (பரி.6:69).

**சேய்த்து** (பெ.) – தொலைவில் உள்ளது (குறு.113:1-2).

**சேய்து** (பெ.) – தொலைவானது, நீளமானது (பரி.16:40).

**சேய்மையன்** (பெ.) – தூரத்தில் உள்ளான் (புற.380:10).

**சேயர்** (பெ.) – தொலைவில் உள்ளார் (குறு.64:5).

**சேயள்** (பெ.) – தொலைவில் உள்ளவள் (குறு.128:4-5).

**சேயன்** (பெ.) – உறவு இல்லாதவன் (கலி.37:7).

**சேயிழை** (பெ.) – அழகிய அணிகலன்களை அணிந்த பெண் (பதி.88:36).

**சேயை** (வி.) – நெடுந்தொலைவில் உள்ளாய் (புற.381:19).

**சேர்க்குந்து** (வி.) – சேர்க்கும் (புற.343:6).

**சேர் தல்** (வி.) – 1.செறிதல் (குறள்.243). 2.உளதாதல் (குறள்.731). 3.செல்லுதல் (குறள்.910). 4.பொருந்துதல் (புற.22:9). 5.சென்றடைதல் (புற.9:5).

**சேர்ந்தனர்** (வி.) – அடைந்தார் (குறு.79:5-6).

**சேர்ந்தார்** (பெ.) – இடைவிடாது நினைந்தவர் (குறள்.03).

**சேர்ந்தாரைக் கொல்லி** (பெ.) – நெருப்பு (குறள்.306).

**சேர்ப்பன்** (பெ.) – நெய்தல் நிலத் தலைவன் (குறு.51:3).

**சேர்மின்** (வி.) – அடையுங்கள் (புற.9:5).

**சேர்வது** (வி.) – ஒருங்கு வாழ்வது (குறள்.731).

**சேர்ப்பு** (பெ.) – கடற்கரை (புற.49:6).

**சேர்வித்தல்** (பெ.) – சேரச் செய்தல் (பரி.12:73-4).

**சேரலன்** (பெ.) – சேரநாட்டரசன் (அக.149).

**சேராதார்** (பெ.) – இடைவிடாது நினையாதவர் (குறள்.10).

**சேரார்** (பெ.) – பகைவர் (பரி.2:48).

**சேரி** (பெ.) – தெரு (கலி.65).

**சேரின்** (வி.) – அடைந்தால் (குறு.370:4-5).

**சேரும்** (வி.) – 1.அடையும் (நற்.321:5). 2.சென்று தங்கும் (குறள்.179).

**சேவல்** (பெ.) – 1.ஆண் அன்னம் (புற.67). 2.கருடன் (பரி.3:18).

**சேறல்** (பெ.) – 1.செல்லுதல் (அக.221:14). 2.ஒழுகல் (கலி.106:42).

**சேறலின்** (வி.) – அடைவதால் (குறு.355:3).

**சேறிர்** (வி.) – செல்வீர் (குறு.268:1).

**சேறு** (பெ.) – 1.நீருடன் கலந்து குழைந்த மண் சகதி (புற.249). 2.குழம்பு (பரி.6:41). 3.பனம்பழம் தேங்காய் முதலியவற்றின் செறிந்த உள்ளீடு (புற.225).

**சேறும்** (வி.) – 1.செல்வோம் (குறு.80:3). 2.போவோம் (கலி.110:23).

**சேனை** (பெ.) – படை (கலி.108:1).

**சொரி** (வி.) – 1.ஊற்றிய (நற்.153:3). 2.போடுதல் (இடுதல்) (நற்.335:5). 3.கக்கிய (புறப்பட விடுதல்) (அக.39:6). 4.மிகுதியாகக் கொடுத்த (பரி.10:127). 5.வார்ந்த (கலி.82:13-4).

**சொரிந்தற்று** (வி.) – பெய்தாற்போலும் (குறள்.718).

**சொரிவு** (வி.) – சொரிந்து (பரி.2:47).

**சொல்இழுக்கு** (பெ.) – சொற்குற்றம் (குறள்.127).

**சொல்லாட்டி** (பெ.) – திறமையாய்ப் பேசுபவள் (கலி.108:18).

**சொல்லாடார்** (வி.) – உரையார் (குறள்.818).

**சொல்லாடு தல்** (வி.) – பேசுதல் (குறள்.405).

**சொல்லாது** (வி.) – தெரிவியாமல் (குறு.79:6-8).

**சொல்லிய** (வி.) – 1.உரைத்த (குறு.283:2). 2.களைய வேண்டிய (புற.39:1). 3.போக்கும் பொருட்டு (புற.90:7).

**சொல்லியாள்** (பெ.) – ஒவ்வாமை சொல்லப்பட்டவள் (கலி.109:7-8).

**சொல்லிற த்தல்** (வி.) – வாக்கினைக் கடந்து நிற்றல் (அக.396).

**சொல்லேருழவர்** *(பெ.) – அமைச்சர் (குறள்.872).*

**சொல்வன்மை** *(பெ.) – சொற்றிறம் (குறள்.65).*

**சொலி** *(பெ.) – மரமுதலியவற்றின் தோல், பட்டை (புற.383).*

**சொற்கா த்தல்** *(வி.) – புகழைப் போற்றுதல் (குறள்.56).*

**சொற்கேள் தல்** *(வி.) – கேட்டல் (குறள்.66).*

**சொற்சுவை** *(பெ.) – சொல்லினிமை (குறள்.420).*

**சொறிந்ததூஉம்** *(வி.) – தைவந்ததும் (பரி.12:52).*

**சொன்றி** *(பெ.) – சோறு (புற.197:12).*

**சோகா த்தல்** *(வி.) – துன்புறுதல் (குறள்.127).*

**சோகாப்பு** *(பெ.) – துன்பம் (குறள்.127).*

**சோபனம்** *(பெ.) – அழகு (பரி.19:55-6).*

**சோர் தல்** *(வி.) – 1.உடல் அல்லது மனம் மேற்கொண்டு செயல்பட ஆற்றலற்றுத் தளர்தல் (கலி.92:50). 2.கண்ணீர் முதலியன வடிதல் (புற.22:7). 3.கழலுதல் (குறள்.1234). 4.வாடுதல் (கலி.78).*

**சோர்ந்த** *(வி.) – 1.இளைப்புற்றன (அக.374:6). 2.வாடின (கலி.88:12). 3.தீர்ந்த, நீங்கிய (பரி.16:35).*

**சோர்ந்தனள்** *(வி.) – தளர்ந்தாள் (கலி.92:50).*

**சோர்ந்து** *(வி.) – 1.களைந்து (நற்.58:8). 2.தளர்ந்து (நற்.64:7).*

**சோர்பதன்** *(பெ.) – தளர்ந்த காலம் (கலி.55).*

**சோர்வு** *(பெ.) – மறதி (குறள்.531).*

**சோர்வுபடும்** *(வி.) – கெடும் (குறள்.405)*

**சோரவிடல்** *(வி.) – கைவிடுக (குறள்.82:8).*

**சோரும்** *(வி.) – 1.வடியும் (புற.22:7). 2.விடுகின்ற (புற.22:10-11). 3.உட்கொள்ளாது போக்கும் (குறள்.847). 4.கழலும் (குறள்.1234).*

**சோலை** *(பெ.) – மனத்திற்கு மகிழ்ச்சி ஏற்படுத்தும் வகையில் மரங்கள் செறிந்து நிழல் செய்யும் இடம் (அக.109).*

**சோழன்** *(பெ.) – மன்னன் (புற.378).*

**சோறு** *(பெ.) – சமைத்த அரிசி (அன்னம்) (புற.172).*

**ஞமலி** *(பெ.) – நாய் (குறு.179:1-2).*

**ஞமன்** *(பெ.) – துலைக்கோலின் சமன்வாய் (புற.6:9).*

**ஞாங்கர்** *(பெ.) – 1.வேற்படை (நற்.171). 2.பக்கம் (குறு.132:3-5). 3.பின் (குறு.342:1-4).*

**ஞாட்பு** *(பெ.) – போர்க்களம் (குறள்.1088).*

**ஞாண்** *(பெ.) – வில்லின் நாண் (புற.14:9).*

**ஞாய்** *(பெ.) – 1.தாய் (கலி.107). 2.உன்தாய் (குறு.40:1).*

**ஞாயர்** *(பெ.) – தாய்மார் (கலி.81:12).*

**ஞாயில்** *(பெ.) – மறைந்திருந்து அம்பு எய்யும் இடமாகிய மதில் உறுப்பு (அக.124:16).*

**ஞாயிறு** *(பெ.) – கதிரவன் (பதி.88:38).*

**ஞால்(லு) தல்** *(வி.) – பொழுதுசாய்தல் (புற.82:2).*

**ஞாலம்** *(பெ.) – உலகம் (கலி.124).*

**ஞாழல்** *(பெ.) – புலிநகக்கொன்றை (பதி.51:5).*

**ஞாளி** *(பெ.) – நாய் (அக.122).*

**ஞான்றஞாயிறு** *(பெ.) – கதிரவன் மறையும் நேரம் (புற.82).*

**ஞான்று** *(பெ.) – நாள் (குறு.25:4-5).*

**ஞான்றை** *(பெ.) – காலத்தில் (புற.378).*

**ஞிமிறு** *(பெ.) – தேன் வண்டு (புற.93:12).*

**ஞிலம்** *(பெ.) – நிலம் (புற.62:10).*

**ஞெகிழ் தல்** *(வி.) – 1.கழலுதல் (கலி.73:8). 2.மலர்தல் (கலி.101). 3.உருகுதல் (ஐங்.32). 4.மெலிதல் (கலி.146:6).*

**ஞெகிழ்த்தான்** *(வி.) – மெலிவித்தான் (கலி.131:30).*

**ஞெகிழ்ந்தது** *(பெ.) – மெலிந்தது (குறு.377:2-5).*

**ஞெகிழ்ந்தன்று** *(வி.) – மெலிந்தது (குறு.87:5).*

**ஞெகிழ்வனர்** *(வி.) – உருகினர் (ஐங்.4).*

**ஞெகிழி** *(பெ.) – கடைக்கொள்ளி (அக.108).*

**ஞெகிழியர்** *(பெ.) – கொள்ளி ஏந்தியவர் (கலி.52:13).*

**ஞெண்டு** *(பெ.) – நண்டு (அக.176).*

**ஞெமர் தல்** *(வி.) – 1.பரத்தல் (பதி.72:9). 2.நிறைதல் (பரி.10:126).*

**ஞெமல்(லு) தல்** *(வி.) – திரிதல் (பரி.8:44).*

**ஞெமல்** *(வி.) – சருகு (அக.39:7).*

**ஞெமிடு தல்** *(வி.) – கசக்குதல் (நற்.22).*

**ஞெமிர் தல்** *(வி.) – நெரிதல் (நற்.20).*

**ஞெமிர்ந்து** *(வி.) – உடைந்து, உடைந்தது (நற்.363:10).*

**ஞெமுக்கு தல்** *(வி.) – நெருக்கி வருத்துதல் (அக.60).*

**ஞெமுக்குவோர்** *(பெ.) – அமுத்துவோர் (புற.337:22).*

**ஞெமுங்கு தல்** *(வி.) – அழுந்துதல் (அக.58).*

**ஞெமை** *(பெ.) – பாலை நிலத்து ஒருவகை மரம் (குறு.285:6-8).*

**ஞெலிகோல்** *(பெ.) – தீக்கடைகோல் (நற்.142:3).*

**ஞெலி தல்** *(வி.) – 1.தீக்கடைதல் (புற.247:2). 2.உரசுதல் (ஐங்.307).*

**ஞெலிபு** *(வி.) – தீயைக் கடைந்து (கலி.101:4).*

**ஞெள்ளல்** *(பெ.) – பள்ளம் விழுந்த சாலை (புற.15).*

**ஞொள்கு தல்** *(வி.) – குறைவுபடுதல் (அக.31).*

**தக்காங்கு** *(கு.வி.எ.) – நடுவுநிலையாக (குறள்.561).*

**தக்கார்** *(பெ.) – 1.மேன்மக்கள் (குறள்.446). 2.நடுவுநிலையுடையார் (குறள்.114).*

**தக்காள்** *(பெ.) – தகுதி உடையவள் (குறள்.51).*

**தக்கான்** *(பெ.) – உரியவன் (கலி.84:19).*

**தகட்டு** *(பெ.) – 1.தகடு (இதழ்) (நற்.52:2). 2.பூவின் புற இதழ் (அக.261:1).*

**தகர்** *(பெ.) – செம்மறிக்கடா (குறள்.486).*

**தகரம்** *(பெ.) – 1.மயிர்ச்சாந்து (அக.117:11). 2.தகரமரம் (ஒரு வகை வாசனை மரம்) (புற.132:6).*

**தகவு** *(பெ.) – நடுவுநிலை (குறள்.114).*

**தகாஅது** *(வி.) – பொருந்தாது (நற்.75:3-4).*

**தகாஅய்** *(வி.) – தகுதிப்பாடு உண்டாகாய் (கலி.125:19).*

**தகாஅர்** *(பெ.) – தகுதி இல்லாதோர் (புற.30:13).*

**தகான்** *(பெ.) – தகுதியில்லாதவன் (குறு.29).*

**தகுதி** (பெ.)– 1.தக்கசெயல் (புற.18:17). 2.தகுதி உடைமை (ஐங்.17:4). 3.நடுவு நிலைமை (குறள்.111). 4.பொறுமை (குறள்.158).

**தகும்** (வி.) – 1.பொருந்தும் (குறு.162:3-6). 2.பெறும் (கலி.38:20).

**தகு தல்** (வி.) – 1.ஏற்றதாதல் (குறள்.391). 2.மேம்படுதல் (குறள்.54). 3.தொடங்குதல் (குறள்.1316).

**தகுவி** (பெ.) – தகுதியுடைய பரத்தை (அக.196:13).

**தகை தல்** (வி.) – தடுத்தல் (கலி.92:9).

**தகை த்தல்** (வி.) – 1.தடுத்தல் (கலி.108:20). 2.கட்டுதல் (புற.70:3). 3.சுற்றுதல் (புற.69). 4.அழகுபெற்றிருத்தல் (ஐங்.461).

**தகை** (பெ.) – 1.மேம்பாடு (புற.6:26). 2.அழகு (புற.59:2). 3.நன்மை (குறள்.56). 4.இயல்பு (கலி.60).

**தகைஇய** (வி.) – விலக்குதற்கு (அக.330:8).

**தகைக்குநர்** (பெ.) – விலக்குபவர் (அக.46:16).

**தகைக்குவென்** (வி.) – தடுப்பேன் (ஐங்.12).

**தகைத்தனென்** (வி.) – போகாமல் விலக்கினேன் (கலி.108:20).

**தகைப்பு** (பெ.) – 1.மாளிகைக் கட்டடம் (பதி.64:7). 2.படைவகுப்பு (பதி.66:10).

**தகைமார்** (வி.) – கட்டும் பொருட்டு (நற்.111:4).

**தகைமை** (பெ.) – 1.மதிப்பு (குறள்.405). 2.அழகு (பரி.21:20).

**தகைமையவர்** (பெ.) – பெருமை உடையவர் (குறள்.447).

**தகையவர்** (பெ.) – அழகினை உடைய மகளிர் (கலி.43:8).

**தகையாது** (வி.) – விலக்காது (கலி.92:9).

**தங்கலர்** (பெ.) – தங்கார் (அக.251-6).

**தங்காது** (வி.) – நீட்டியாது (தாழ்த்தாது) (புற.320:15).

**தங்கார்** (பெ.) – இராப்பொழுதும் எங்கும் இளைப்பாராதவர் (கலி.106:23).

**தங்கி** (கு.வி.எ.) – ஆய்ந்துணர்ந்து (குறள்.472).

**தங்கிற்று** (வி.) – 1.நிலை பெற்றது (குறள்.613). 2.அடங்கிற்று (குறள்.874).

**தங்கினிர்** (வி.) – காலந்தாழ்த்தினீர் (குறு.345:3-7).

**தங்கு தல்** (வி.) – 1.வைகுதல் (குறள்.389). 2.நிலைபெறுதல் (குறள்.613). 3.உளதாதல் (குறள்.19). 4.அடங்குதல் (குறள்.874).

**தங்கும்** (வி.) – 1.நிலைபெறும் (அக.212:14). 2.குடியிருக்கும் (குறள்.389).

**தங்கை** (பெ.) – குடியிற் பிறந்த பெண் (குறு.335)(குறு.392)(ஐங்.363).

**தங்கையர்** (பெ.) – மகளிர் (அக.320:3).

**தச்சன்** (பெ.) – மரவேலை செய்பவன் (குறு.61:1).

**தசும்பு** (பெ.) – குடம் (புற.224:2).

**தசை** (பெ.) – இறைச்சி (புற.33:2).

**தஞ்சம்** (பெ.) – எளியது (அக.382:2).

**தட்கும்** (வி.) – தளையா நிற்கும் (புற.193:4).

**தட்டி** (வி.) – தடுத்து (கலி.97:17).

**தட்டு தல்** (வி.) – 1.தட்டுதல் (கலி.97:17). 2.கட்டுதல் (புற.193:4).

**தட்டை** (பெ.) – 1.மூங்கில் (ஐங்.340). 2.கிளிகடிகருவி (புற.49).

**தட்டோர்** (பெ.) – 1.தேக்கியவர் (புற.18:29). 2.நிலை நிறுத்தியவர் (புற.18:29).

**தட** (கு.பெ.எ.) – 1.பெரிய (புற.14:11). 2.வளைந்த (ஐங்.98).

**தடக்கை** (பெ.) – வளைந்தகை (குறு.198:3).

**தடம்** (பெ.) – வளைவு (நற்.120).

**தடவரல்** (பெ.) – வளைவு (புற.135:3).

**தடவு தல்** (வு.) – அசைதல் (கலி.101).

**தடவு** (பெ.) – 1.தாடா, பருமை (புற.199). 2.வேள்விக்குழி (பரி.5:42).

**தடவுவாய்** (பெ.) – மலைச்சுனை (புற.105).

**தடாகம்** (பெ.) – குளம் (பரி.9:27-28).

**தடாரி** (பெ.) – 1.பம்பையென்னும் பறை (புற.368:14-15). 2.பறையென்னும் பொது (புற.381).

**தடி தல்** (வி.) – குறைத்தல் (குறள்.17).

**தடி** (பெ.) – 1.ஊன் (நற்.60:4). 2.உப்பு விளை பாத்தி (நற்.254:10). 3.பிளப்பு (மரம் முதலியவற்றின் துண்டம் (பரி.4:20).

**தடிதல்** *(பெ.) – வெட்டுதல் (புற.57:10).*

**தடிவு** *(பெ.) – துண்டம் (புற.320:13).*

**தடுமாற்றம்** *(பெ.) – 1.கலக்கம் (கலி.145:16-7). 2.காரண காரியங்களால் மாறுபடுதல் (பரி.17:46).*

**தடுமாற்று** *(பெ.) – மனக்கலக்கம் (கலி.6:5).*

**தடை** *(பெ.) – அணை (பரி.7:19).*

**தடைஇ** *(வி.) – 1.தடுக்கப்பெற்று (நற்.80:6). 2.வளைந்து (நற்.376:1). 3.சரிந்து (அக.26:12-3). 4.பருத்து (அக.218:8).*

**தடைஇய** *(வி.) – 1.பருத்து வளர்ந்த (குறு.134:3). 2.வளைந்த (நற்.344:3). 3.திரண்ட (அக.181:24). 4.பெருத்த (கலி.93:5).*

**தண்கடற்சேர்ப்பன்** *(பெ.) – நெய்தல்நிலத் தலைமகன் (ஐங்.108).*

**தண்கயம்** *(பெ.) – குளிர்ந்தகுளம் (ஐங்.84).*

**தண்கான்** *(பெ.) – இழிந்தகாடு (ஐங்.84).*

**தண்டம்** *(பெ.) – ஒறுப்பு (தண்டனை) (புற.10:6).*

**தண்டலை** *(பெ.) – சோலை (அக.204).*

**தண்டியோர்** *(வி.) – அலைத்துப் பெற்றவர் (குறு.177:5-7).*

**தண்டு தல்** *(வி.) – விருப்பங் கொள்ளுதல் (பரி.10:100).*

**தண்டு** *(பெ.) – கோல் (அக.274).*

**தண்ணடை** *(பெ.) – மருதநிலத்தூர் (புற.285).*

**தண்ணம்** *(பெ.) – குளர்ச்சி (குறு.9:7).*

**தண்ணியள்** *(வி.) – குளிர்ச்சி உடையாள் (குறு.84:5).*

**தண்ணீர்** *(பெ.) – குளிர்ந்த நீர் (குறு.277:4-5).*

**தண்ணுமை** *(பெ.) – முழவு (புற.89:7).*

**தண்ணெனல்** *(பெ.) – குளிர்ச்சிக் குறிப்பு (குறள்.1104).*

**தண்ணென்று** *(வி.) – குளிர்ந்து (குறு.110:6-7).*

**தண்ணென்னும்** *(வி.) – குளிராநிற்கும் (குறள்.11:4).*

**தண்நடை** *(பெ.) – மெல்லிய நடை (நற்.150:6-7).*

**தண்பதம்** *(பெ.) – தாழ்ந்தநிலை (குறள்.548).*

**தண்பனை** *(பெ.) – மருதநிலம் (புற.32).*

**தண்பொருநை** *(பெ.) – குளிர்ச்சி பொருந்திய பொருநை ஆறு (புற.11).*

**தண்மை** *(பெ.) – 1.தாழ்வு (குறள்.548). 2.மென்மை (குறள்.1239).*

**தண த்தல்** *(வி.) – பிரிதல் (குறள்.1233).*

**தணப்பு** *(பெ.) – நீங்குதல் (குறு.177:7).*

**தணி தல்** *(வி.) – ஆறுதல் (கலி.16).*

**தணி த்தல்** *(வி.) – தீர்த்தல் (குறள்.948).*

**தணி** *(பெ.) – 1.குறைத்தல் (அக.119:14). 2.தண்மை (பரி.9:11). 3.குளிர்ச்சி (பரி.6:29).*

**தணிக்கும்** *(வி.) – தீர்க்கும் (குறள்.948).*

**தணிகுவள்** *(வி.) – நோய் குறைவாள் (அக.22:6).*

**தணித்தனன்** *(வி.) – போக்கினன் (நற்.81:10).*

**தணிதல்** *(பெ.) – 1.குறைதல் (குறு.136:1-3). 2.நீங்குதல் (அக.98:5).*

**தணிந்து** *(வி.) – 1.குறைந்து (குறு.195:1). 2.ஆறி (குறு.269:3-4).*

**தணிப்பு** *(வி.) – அடக்கல் (புற.198:13).*

**தணியாது** *(வி.) – குறையாமல் (அக.298:7).*

**தணியும்** *(வி.) – 1.ஆற்றிக்கொள்ளும் (குறு.274:4-5). 2.குறையும் (நற்.41:3-4).*

**தணிவு** *(வி.) – 1.குறைதல் (அக.278:14). 2.மாறுதல் (கலி.20:3).*

**தத்தம்** *(பெ.) – தம்தம் (குறள்.505).*

**தத்து தல்** *(வி.) – 1.தாவிச்செல்லுதல் (பரி.10:14). 2.தாவியேறுதல் (கலி.103:34).*

**ததர்** *(பெ.) – சிதறுகை (கலி.91).*

**ததும்ப** *(வி.) – 1.நிரம்ப (புற.177:6-7). 2.மிக ஒலிப்பு (புற.194:2). 3.தளும்ப (புற.194:2).*

**ததும்பு தல்** *(வி.) – 1.மிகுதல் (பரி.18:44). 2.நிரம்பிவழிதல் (பரி.18:32). 3.மனநிரம்புதல் (புற.177:7).*

**ததும்பும்** *(வி.) – ஒலிக்கும் (குறு.95:1-2).*

**ததை தல்** *(வி.) – 1.நெருங்குதல் (ஐங்.460). 2.சிதைதல் (பதி.70:3).*

**தைைந்தது** *(வி.) – நெருங்கியது (கலி.108:27).*

**தந்தனன்** *(வி.) – கொடுத்தான் (குறு.13:3-4).*

**தந்தனென்** *(வி.) – தந்தேன் (புற.171:3).*

**தந்தனை** *(வி.) – 1.கொடுத்து (குறு.236:2). 2.கொடுத்தாய் (குறு.327:7).*

**தந்தார்** *(வி.) – 1.உண்டாக்கினார் (குறள்.1182). 2.இட்டார் (கலி.84:32). 3.ஈன்றவராகிய இருமுது குரவர் (பரி.15:46).*

**தந்தை** *(பெ.) – 1.தகப்பன் (குறு.26:7-8). 2.விலங்கினுள் ஆண் (அக.288:123).*

**தந்தைபெயரன்** *(பெ.) – மகன் (தன் தந்தையின் பெயரினையுடையான்) (ஐங்.403).*

**தப்பல்** *(பெ.) – குற்றம் (குறு.292).*

**தப்பார்** *(வி.) – தவறார் (புற.74:2).*

**தப்பித்தான்** *(பெ.) – தப்புச் செய்தவன் (கலி.149:5).*

**தப்பு தல்** *(வி.) – 1.பயன்படாது போதல் (குறள்.217). 2.பிழை செய்தல் (புற.34).*

**தபுக்கும்** *(வி.) – கெடுக்கும் (அக.130:10).*

**தபுத்தீர்** *(பெ.) – முடிந்தீர் (புற.294:6).*

**தபுதி** *(பெ.) – அழிவு (புற.43:6-7).*

**தம்பலம்** *(பெ.) – வெற்றிலை பாக்கு (கலி.65).*

**தம்பி** *(பெ.) – பின் பிறந்தோன் (புற.43:10).*

**தம்முன்** *(பெ.) – தமையன் (கலி.94:34).*

**தம்மோன்** *(பெ.) – 1.தம்மைச் சேர்ந்தவன் (நற்.88:6). 2.தலைவன் (நற்.88).*

**தமர்** *(பெ.) – 1.தமக்கு வேண்டியோர் (புற.157). 2.சிறந்தார் (குறள்.444).*

**தமாலம்** *(பெ.) – பச்சிலை என்ற பெயருடைய கொடி (நற்.292:2).*

**தமி த்தல்** *(வி.) – தனியாதல் (புற.184:3).*

**தமியர்** *(பெ.) – தனித்தவர் (குறு.34:2-3).*

**தமியார்** *(பெ.) – தனித்திருப்பவர் (கலி.33:13).*

**தமிழ்** (பெ.) – 1.தமிழ்நாட்டில் வழங்கும் மொழி (அக.31:14). 2.தமிழ் வீரர் (அக.227:14).

**தமிழகம்** (பெ.) – தமிழ்மொழி பேசுவோர் வாழும் மாநிலம் (புற.168:18).

**தயங்கு தல்** (வி.) – அசைதல் (கலி.31:10).

**தயிர்** (பெ.) – பாலில் பிரை ஊற்றி உறைய வைத்த உணவுப் பொருள் (குறு.167:1).

**தரல்** (பெ.) – 1.ஈட்டல் (குறு.254:6). 2.தேடுதல் (அக.29:20). 3.மிகுதல் (அக.350:2). 4.செய்தல் (அக.393:2). 5.கொடை (புற.345:14). 6.தேடிக் கொண்டு வருதல் (கலி.4:7). 7.பெய்வித்தல் (கலி.39:6).

**தரவு** (பெ.) – தருகை (அக.338).

**தரின்** (வி.) – 1.கொடுப்பின் (குறு.196:1). 2.விளைந்தால் (குறள்.113).

**தரீஇ** (வி.) – தந்து (அக.77:10).

**தரீஇயர்** (வி.) – தரும் பொருட்டு (அக.77:1).

**தருக்கு தல்** (வி.) – மேற்கொள்ளுதல் (குறள்.935).

**தருக்கு** (பெ.) – 1.செருக்கு (கலி.104:71-2). 2.மேம்பாடு (பரி.20:76-8).

**தருதல்** (பெ.) – 1.கொடுத்தல் (நற்.126:9-10). 2.தேடுதல் (அக.123:5). 3.திறையிடல் (புற.344:3-4).

**தருநர்** (பெ.) – கொடுப்பவர் (அக.75:15).

**தருமம்** (பெ.) – நற்பண்பும் செயலும் (புற.353:4).

**தருமன்** (பெ.) – எமன் (பரி.3:8).

**தருமார்** (வி.) – கொணரும் பொருட்டு (குறு.216:1-2).

**தருவது** (பெ.) – கொடுப்பது (308.6-7).

**தருவார்** (பெ.) – விற்பவர் (குறள்.256).

**தலை தல்** (வி.) – 1.கூடுதல் (புற.2:4). 2.மழைபெய்தல் (பதி.20:25). 3.மிகக் கொடுத்தல் (புற.361). 4.பரத்தல் (பரி.6:3).

**தலை** (கு.வி.எ.) – 1.மேலே (புற.191). 2.இடம் (புற.15).

**தலைக்குடை** (பெ.) – தலையில் சூடும் குடை என்னும் கருவி (அக.194:7).

**தலைக்கூடி** *(வி.) – ஒன்றுபட்டு (குறள்.394).*

**தலைக்கூடு தல்** *(வி.) – ஒன்றுசேர்தல் (குறள்.394).*

**தலைக்கை** *(பெ.) – கையால் தழுவி அன்பு காட்டுதல் (புற.24:9).*

**தலைக்கைதா தல்** *(வி.) – கையால் தழுவி அன்பு காட்டுதல் (புற.24:9).*

**தலைக்கொள்(ளு) தல்** *(வி.) – 1.தொடங்குதல் (புற.82). 2.கெடுத்தல் (புற.15:14).*

**தலைக்கோதை** *(பெ.) – நெற்றிக் கட்டு மாலை (கலி.66:15).*

**தலைசாய் த்தல்** *(வி.) – உறங்குதல் (கலி.119).*

**தலைசாய்த்து** *(வி.) – நாணம் கொண்டு (கலி.119:6).*

**தலைத்தலை** *(கு.வி.எ.) – 1.ஒவ்வொரு வரும் (ஐங்.33). 2.மேன்மேல் (அக.29). 3.இடந்தோறும் (பரி.16:10).*

**தலைத்தோற்றம்** *(பெ.) – வீரனொருவன் பகைவர் ஆனிரையைக் கைப்பற்றி வந்து மனமகிழ்தலைக் கூறும் ஒரு புறத்துறை (புற.262).*

**தலைதொடு தல்** *(வி.) – தலையைத் தொட்டு ஆணையிடுதல் (பரி.6:95).*

**தலைநாள்** *(பெ.) – முதல்நாள் (புற.101).*

**தலைப்பட்டார்** *(வி.) – எய்தினார் (குறள்.298).*

**தலைப்படுதல்** *(பெ.) – கூடுதல் (அக.5:7).*

**தலைப்படுவர்** *(வி.) – எய்துவர் (குறள்.356).*

**தலைப்படுவார்** *(பெ.) – பெறுவார் (குறள்.1289).*

**தலைப்பாடு** *(பெ.) – தற்செயல் நிகழ்ச்சி (புற.70).*

**தலைப்பிரி தல்** *(வி.) – நீங்குதல் (குறள்.810).*

**தலைப் பிரியாதார்** *(பெ.) – நீங்காதவர் (குறள்.81:10).*

**தலைப்புணர் த்தல்** *(வி.) – பை முதலியவற்றின் வாயைக் கட்டுவதற்காகச் சுருக்குதல் (அக.301).*

**தலைப்பு** *(பெ.) – முதன்மை (கலி.2:6).*

**தலைப்புணை** *(பெ.) – சான்று (அக.166).*

***தலைப்பெய் தல்*** *(வி.)* – கூடுதல் *(ஐங்.86).*

***தலைப்போகு தல்*** *(வி.)* – இறுதிவரை செல்லல் *(புற.223).*

***தலை போகாமை*** *(பெ.)* – கெடாமை *(குறு.170:4-5).*

***தலைமக்கள்*** *(பெ.)* – படைத்தலைவர் *(குறள்.770).*

***தலைமகள்*** *(பெ.)* – பரத்தை *(ஐங்.9).*

***தலைமண த்தல்*** *(வி.)* – நெருங்கிக் கலத்தல் *(அக.105).*

***தலைமயங்கு தல்*** *(வி.)* – *1.*பிரிதல் *(புற.157:9). 2.*கைகலத்தல் *(புற.19:2).*

***தலைமை*** *(பெ.)* – எசமானத்தன்மை *(புற.378:23).*

***தலையளி த்தல்*** *(வி.)* – அருளொடு நோக்குதல் *(புற.67).*

***தலையளி*** *(பெ.)* – முகமலர்ந்து இனிய கூறுகை *(குறள்.390).*

***தலையிட்டு*** *(வி.)* – *1.*தலைக்கீடாகக் கொண்டு *(நற்.127:7-9). 2.*மேலிட்டு *(கலி.92:56-7).*

***தலையின்று*** *(வி.)* – தொடங்கிற்று *(அக.54:3).*

***தலையோர்*** *(பெ.)* – தூசிப்படையோர் *(புற.225:1).*

***தலைவன்*** *(பெ.)* – முதல்வன் *(அக.152:12).*

***தலைவா தல்*** *(வி.)* – எதிர்க்குமாறு முன்வருதல் *(குறள்.767).*

***தலைவிளை*** *(பெ.)* – வயலின் முதல் விளைச்சல் *(ஐங்.270).*

***தவ்வெனல்*** *(பெ.)* – சுருங்குதற் குறிப்பு *(குறள்.1144).*

***தவ்வை*** *(பெ.)* – மூதேவி (சூடா) (இலக்குமியின் மூத்தாள்) *(குறள்.167).*

***தவம்*** *(பெ.)* – பற்றை நீக்கி, உடலை வருத்திக் கொண்டு, கடவுளை வழிபடுகை *(.8:1).*

***தவல்*** *(பெ.)* – *1.*கேடு *(கலி.19). 2.*இறப்பு *(புற.238:18). 3.*வறுமையால் வருந்துகை *(குறள்.856).*

***தவழ் தல்*** *(வி.)* – பரத்தல் *(புற.38:5).*

***தவழும்*** *(வி.)* – ஊர்ந்து செல்லும் *(குறு.144:6-7).*

***தவளை*** *(பெ.)* – நீரிலும் தரையிலும் வாழும் ஓர் உயிரி *(குறு.148:2).*

***தவறிலள்*** *(வி.)* – தவறுடையள் அல்லள் *(கர.84:37).*

**தவறு** (பெ.) – நெறிதவறுகை (குறள்.1321).

**தவிர் தல்** (வி.) – ஒழிதல் (புற.3:5).

**தவிர்க்கும்** (வி.) – 1.தங்குவிக்கும் (அக.244:6). 2.தடுக்கும் (புற.157:8).

**தவிர்த்தனிர்** (வி.) – நிறுத்தினிர் (குறு.345:1-3).

**தவிர்தல்** (பெ.) – இங்கிருத்தல் (கலி.20:18).

**தவிர்ப்பான்** (பெ.) – போக்குவான் (கலி.40:13-4).

**தவிர்வு** (பெ.) – 1.ஒழிதல் (அக.68:16). 2.நீங்குதல் (அக.202:12). 3.தங்குதல் (அக.291:17).

**தவிரலர்** (வி.) – தங்கமாட்டார் (நற்.115:10).

**தவிராது** (வி.) – 1.விலகாமல் (குறு.229:3-4). 2.தங்காது (அக.19:78).

**தழங்கு தல்** (வி.) – முழங்குதல் (அக.24).

**தழல்** (பெ.) – கிளி கடி கருவிகளுள் ஒன்று (குறு.223:4).

**தழீஇயது** (பெ.) – நட்பாக்குவது (குறள்.425).

**தழீஇயவன்** (பெ.) – தழுவினவன் (கலி.103:34-5).

**தழீஇயயினன்** (வி.) – தழுவிக்கொண்டான் (குறு.359:5).

**தழுவு** (பெ.) – தழுவுதல் (பரி.10:31-2).

**தழுவும்** (வி.) – அணையும் (பரி.21:44-5).

**தழும்பன்** (பெ.) – ஒரு சிற்றரசன் (புற.348).

**தழுவணி** (பெ.) – குரவைக் கூத்து (குறு.294).

**தழுவு தல்** (வி.) – 1.அணைத்தாதரித்தல் (குறள்.544). 2.நட்பாக்குதல் (குறள்.425).

**தழை** (பெ.) – 1.தழை என்னும் உடை (குறு.125:3). 2.மரத்தின் இலை (குறு.214:4). 3.தழைத்தல் (அக.319:12-3).

**தழையணி** (பெ.) – தழையாலான மகளிருடை (குறு.125).

**தள் தல்** (வி.) – 1.தடுத்தல் (புற.124). 2.நீர் முதலியவற்றைத் தளைத்தல் (புற.18).

**தள்ளாமை** (பெ.) – தவறாமை (குறள்.596).

**தள்ளு தல்** (வி.) – 1.தவறுதல் (குறள்.290). 2.குன்றுதல் (குறள்.731).

**தளம்பு** (பெ.) – சேறுகுத்தி (புற.61:3).

**தளர்** (வி.) – 1.சோர்கின்ற (அக.128:15). 2.சாய்ந்த (கலி.22:17).

**தளர்ந்து** (வி.) – 1.தவறி (குறள்.716). 2.நிலைகுலைந்து (கலி.39:2).

**தளர்வு** (பெ.) – குலைவு (புற.375:2-3).

**தளராதவர்** (பெ.) – குலையாதவர் (கலி.34:13).

**தளவம்** (பெ.) – செம்முல்லை (ஐங்.422).

**தளவு** (பெ.) – செம்முல்லை (கலி.108).

**தளி த்தல்** (பெ.) – துளித்தல் (ஐங்.328).

**தளி** (பெ.) – 1.நீர்த்துளி (கலி.13). 2.தலைப்பெயன் மழை (பரி.8:91). 3.முகில் (கலி.50:16).

**தளிர்** (பெ.) – இளந்துளிர் (குறு.222:7).

**தளிர்க்குவேம்** (வி.) – மனம் மகிழுவோம் (கலி.143:29-30).

**தளை** (பெ.) – மலர்முறுக்கு (கலி.69).

**தற்கா த்தல்** (வி.) – தன்னைத்தான் காத்தல் (குறள்.56).

**தற்கொண்டான்** (பெ.) – கணவன் (குறள்.56).

**தற்செய் தல்** (வி.) – தன்னை வலிமையாக்குதல் (குறள்.878).

**தற்செய்து** (வி.) – தன்னைப் பெருக்கு (குறள்.878).

**தறி** (பெ.) – முளைக்கோல் (அக.346:5-6).

**தறுகண்** (பெ.) – 1.அஞ்சாமை (அக.248:6). 2.இரக்கம் இன்மை (குறள்.773).

**தறை தல்** (வி.) – தட்டையாதல் (கலி.65).

**தன்** (பெ.) – தான் என்பது வேற்றுமை யுருபேற்குங்கால் கொள்ளும் விகாரம் (குறு.8:2-6).

**தன்மை** (பெ.) – 1.இயல்பு (புற.136:9-10). 2.குணம் (கலி.55:21-2).

**தன்மையது** (வி.) – இயல்பை உடையது (நற்.240:4-5).

**தன்னையர்** (பெ.) – தமையன்மார் (குறு.272:4-6).

**தனம்** (பெ.) – செல்வம் (அக.152:7).

**தனி த்தல்** (வி.) – தனிமையாதல் (கலி.114).

**தனித்து** (வி.) – தனியாகி (குறு.246:3-4).

**தனிநிலை** (பெ.) – ஓரடுக்கு (நற்.194:6).

**தனிப்பார்ப்பு** *(பெ.) – சிறு குஞ்சு (அக.240:2).*

**தனிமகன்** *(பெ.) – ஒன்றியானவன் (நற்.153:10).*

**தனிமை** *(பெ.) – துணை இன்றி இருத்தல் (அக.288:7).*

**தா தல்** *(வி.) – அடைவித்தல் (புற.35).*

**தா** *(பெ.) – 1.வருத்தம் (நற்.261:5). 2.வன்மை (நற்.271:12). 3.கேடு (அக.212:1). 4.குறைவு (புற.373:35-6).*

**தாஅம்** *(பெ.) – 1.தாகம் (அக.241:10). 2.தாம் (குறள்.118:6).*

**தாஅயது** *(பெ.) – கடந்த பரப்பு (குறள்.600).*

**தாஅர்** *(பெ.) – மார்பில் அணியும் மாலை (நற்.198:7).*

**தாஅவர்** *(பெ.) – தாவுதல் (குறு.172:1).*

**தாக்கணங்கு** *(பெ.) – காமநோயை உண்டாக்கி வருத்துந் தெய்வம் (குறள்.102).*

**தாக்கல்** *(பெ.) – அடித்து அழிக்கை, பாய்ந்து மோதுகை (குறள்.486).*

**தாக்கி** *(வி.) – 1.அடித்து (குறு.58:2-3). 2.மோதி (குறு.134:3-5). 3.கொன்று (நற்.151:2-3). 4.எதிரேசென்று (அக.47:4). 5.பாய்ந்து (அக.92:3-4). 6.போர் (அக.396:5). 7.வெட்டி (புற.126:20-21).*

**தாக்கு** *(பெ.) – 1.தீண்டி வருத்துதல் (அக.7:4). 2.எறிந்து எடுத்தல் (பரி.4:48).*

**தாக்கு** *(வி.) – பாயும் (அக.152:7-8).*

**தாக்குவேன்** *(வி.) – கருவியால் தீண்டுவேன் (குறு.28:1).*

**தாக்குறின்** *(வி.) – எதிர்ப்படின் (குறள்.599).*

**தாங்கல்** *(பெ.) – 1.பொறுத்தல் (குறு.159:1). 2.தாமதித்தல் (அக.173:6). 3.ஆற்றுதல் (அக.333:5).*

**தாங்காது** *(வி.) – 1.தாமதியாமல் (அக.66:13). 2.தரியாது (புற.98:15). 3.பேணாமல் (கலி.65:19).*

**தாங்கினன்** *(வி.) – தடுத்தான் (புற.239:11).*

**தாங்கு தல்** *(வி.) – 1.இளைப்பாறுதல் (கலி.20). 2.சுமத்தல் (குறள்.151). 3.காலந்தாழ்த்துதல் (அக.66:13). 4.நிறுத்துதல் (குறு.311). 5.தடுத்தல் (புற.62). 6.குதிரை முதலியவற்றின் வேகத்தை அடக்கிச் செலுத்துதல் (பதி.49). 7.பொறுத்தல் (புற.93:3).*

**தாங்கும்** *(வி.) – 1.பொறுக்கும் (குறு.149:1-6). 2.சுமக்கும் (குறள்.151).*

**தாங்குமதி** *(வி.) – 1.பொறு (குறு.290:1-2). 2.நிறுத்து (அக.66:12-3).*

**தாங்குவென்** *(வி.) – பொறுப்பேன் (நற்.381:5-6).*

**தாடி** *(பெ.) – முகவாயில் வரும் முடி (கலி.15).*

**தாது** *(பெ.) – 1.மகரந்தப் பொடி (குறு.10:2). 2.பொடி (குறு.46:2-4). 3.தேன் (நற்.25:9). 4.சாணம் (அக.165:4).*

**தாதை** *(பெ.) – தந்தை (பரி.1:31).*

**தாம்பு** *(பெ.) – தாமணிக்கயிறு (கலி.111).*

**தாமரை** *(பெ.) – கொடிவகை (குறள்.1103).*

**தாமரை இறை** *(பெ.) – பிரமன் (பரி.9:4).*

**தாமரைமுகை** *(பெ.) – கொடிஞ்சி (கலி.85).*

**தாமரையினாள்** *(பெ.) – திருமகள் (குறள்.62:7).*

**தாமாவிருவர்** *(பெ.) – பரித்தேவர்கள் (பரி.3:8).*

**தார்** *(பெ.) – 1.மாலை (குறு.182:2). 2.(குதிரைக் கழுத்திலிடும்) கிண்கிணிமாலை (குறு.243:2). 3.கிளியின் கழுத்தில் வட்டமாக உள்ள சிவந்த கோடு (நற்.301:4-5). 4.தூசிப்படை (அக.211:12-3). 5.மார்பில் அணியும் மாலை (புற.1:12). 6.உபாயம் (புற.80:3-4).*

**தாரம்** *(பெ.) – அரும்பண்டம் (புற.30).*

**தாலம்** *(பெ.) – உண்கலம் (புற.120).*

**தாலி** *(பெ.) – 1.கழுத்தில் அணியும் அணி (குறு.161:3). 2.ஐம்படை அணி (அக.54:18). 3.பலகறை (ஐங்.17:6)*

**தாவல்** *(பெ.) – வருத்தம் (பதி.41:17).*

**தாவு தல்** *(வி.) – 1.பரத்தல் (கலி.35). 2.தழைத்தல் (பரி.11:21). 3.கடத்தல் (குறள்.610).*

**தாவு** *(பெ.) – பரப்பு (பரி.11:106).*

**தாவும்** *(வி.) – பரவும் (புற.220:8).*

**தாழ்** *(வி.) – 1.தங்கு (குறு.53:2). 2.சாய் (குறு.81:4-7). 3.தொங்கு (குறு.154:3-4). 4.அணிந்த (குறு.345:5). 5.குறைந்த (நற்.36:3).*

**தாழ்ச்சி** *(பெ.) – காலநீட்டிப்பு (குறள்.671).*

**தாழ்ந்துபடு தல்** (வி.) – ஓரிடத்தே சேர்ந்து தங்குதல் (அக.23).

**தாழ்வு** (வி.) – 1.கால் இறங்கி (குறு.314:3). 2.தாழ்ந்து (நற்.96:5).

**தாழ்வு** (பெ.) – வறுமை (குறள்.117).

**தாழ** (வி.) – 1.பணிய (அக.180:7). 2.தங்கும்படி (அக.180:7). 3.வீழ (புற.247:5). 4.பெய்ய (பரி.11:14).

**தாழாது** (வி.) – 1.நீட்டியாமல் (நற்.98:4-5). 2.விரைய (புற.53:10-12). 3.தாழ்வு அற (குறள்.620). 4.விரைந்து (குறள்.1024).

**தாழி** (பெ.) – 1.இறந்தோரைப் புதைத்தற்குரிய மண்ணாற் செய்த பெருஞ் சால் (நற்.271:11-2). 2.செடிகளை வளர்க்கும் சட்டி (அக.129:7).

**தாழை** (பெ.) – 1.செடிவகை (பதி.55). 2.தென்னை (புற.17).

**தாள்** (பெ.) – 1.கால் (குறள்.9). 2.முயற்சி (புற.18). 3.படி (பதி.71:12). 4.வால்மீன் சிறப்பு (விசேடம்) (புற.395). 5.மூட்டுவாயின் ஊடுருவச் செறிக்கும் கடையாணி (அக.35).

**தாளம்** (பெ.) – இசைப்பாட்டுக்கு ஏற்ப ஒற்று அறுத்தல் (நற்.95:6).

**தாளாண்மை** (பெ.) – விடாமுயற்சி (குறள்.613).

**தாளாற்றி** (பெ.) – முயற்சி (குறள்.212).

**தாளி** (பெ.) – கொடிவகை (குறு.104).

**தாறு** (பெ.) – வாழை முதலியவற்றின் குலை (அக.151).

**தான்** (பெ.) – படர்க்கை ஒருமைப் பொதுப்பெயர் (குறு.25:1).

**தானம்** (பெ.) – அற நெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடு கொடுத்தல் (குறள்.19).

**தானை** (பெ.) – படை (புற.110).

**திகழ் தல்** (வி.) – விளங்குதல் (புற.25).

**திகழும்** (வி.) – காணப்படும் (புற.352:12-3).

**திகிரி** (பெ.) – ஞாயிறு (அக.53).

**திகிரியான்** (பெ.) – சக்கரத்தைக் கையிற் கொண்டுள்ள திருமால் (கலி.104:77).

**திங்கட்கண்ணியன்** (பெ.) – திங்களைத் தலையில் அணிந்துள்ள சிவன் (கலி.150:17).

***திங்கட்குழவி*** *(பெ.) – பிறைநிலா (கலி.80:18).*

***திங்கட்சோறு*** *(பெ.) – பிறைநிலா (கலி.80:18).*

***திங்கள்*** *(பெ.) – மதி (புற.13).*

***திசை*** *(பெ.) – திக்கு (புற.30).*

***திட்பம்*** *(பெ.) – 1.உறுதியான முடிவு (அக.195:14-5). 2.திண்மை (குறள்.661).*

***திண்ணிது*** *(வி.) – உறுதி உடையது (கலி.107:31-2).*

***திண்ணியர்*** *(பெ.) – வலியர் (குறள்.666).*

***திண்மை*** *(பெ.) – 1.வலிமை (குறள்.988). 2.கலங்கா நிலைமை (குறள்.54).*

***திணி தல்*** *(வி.) – செறிதல் (புற.2).*

***திணை*** *(பெ.) – 1.வீடு (பரி.16:7). 2.குலம் (குறு.224).*

***தித்தி*** *(பெ.) – தேமல் (பதி.52:17).*

***தித்தியம்*** *(பெ.) – தித்திப்பு (அக.361).*

***திதலை*** *(பெ.) – ஈன்ற பெண்களுக்குள்ள வெளுப்பு நிறம் (கலி.32).*

***திதனி*** *(பெ.) – தேமல் (கலி.14).*

***திமிர் தல்*** *(வி.) – 1.அப்புதல் (ஐங்.347). 2.வாரியிறைத்தல் (நற்.360).*

***திமிர்ந்து*** *(வி.) – பூசி (நற்.106:8).*

***திமிரும்*** *(வி.) – பூசிக் கொள்ளும் (நற்.360:8-9).*

***திமில்*** *(பெ.) – மீன் படகு (புற.24).*

***திரங்கி*** *(வி.) – 1.சுருங்கி (நற்.26:5). 2.உலர்ந்து (புற.177:3-4).*

***திரங்கிய*** *(வி.) – 1.வாடிய (குறு.331:1). 2.உலர்ந்த (அக.333:10). 3.வருத்தமுற்ற (புற.159:22).*

***திரங்கு தல்*** *(வி.) – தளர்தல் (ஐங்.326).*

***திரள்*** *(பெ.) – 1.பருமை (குறு.178:2). 2.திரட்சி (நற்.6:1). 3.உருண்டை (அக.6:13). 4.தொகுதி (அக.142:16). 5.முதிர்ந்து விளைதல் (அக.280:11-12). 6.செறிதல் (அக.386:6).*

***திரி தல்*** *(வி.) – 1.திருகுதல் (கலி.15). 2.வேறுபடுதல் (புற.2). 3.மயங்குதல் (பரி.3:54).*

**திரித்தல்** *(வி.) – 1.முறுக்குதல் (நற்.74:1). 2.சூழ்வரச் செய்தல் (புற.370:17).*

**திரித்திட்டோன்** *(பெ.) – சிதைத்தோன் (பரி.5:34-5).*

**திரிதரூஉம்** *(பெ.) – உழக்கும் (திரியும்) (கலி.35:17).*

**திரிதல்** *(பெ.) – கெடுதல் (குறள்.1000).*

**திரிந்த** *(பெ.) – வேறுபட்ட (கலி.144:22-3).*

**திரிந்தன** *(பெ.) – கெட்டன (புற.97:7).*

**திரிந்தாள்** *(பெ.) – வேறுபட்டாள் (பரி.12:52).*

**திரிந்துதல்** *(வி.) – 1.தன்மை மாறுபட்ட (குறு.373:1). 2.கலங்கி (புற.71:8-9). 3.மறிந்து (பதி.49:5). 4.திருகி (கலி.15:6). 5.மயங்கி (பரி.3:54).*

**திரிநர்** *(பெ.) – உலாவுநர் (பரி.1:15-6).*

**திரிபு** *(பெ.) – 1.மாறுபாடு (அக.113:2). 2.தப்புதல் (கலி.39:46). 3.புரிந்து (புற.25:7-8). 4.திரிந்து (கலி.104:40-42).*

**திரிபுரம்** *(பெ.) – விண்ணில் இயங்கும் முந்நகரம் (கலி.1:2).*

**திரிமரம்** *(பெ.) – மாவைத் திரிக்கும் மரம் (இயந்திரம்) (அக.224:12-3).*

**திரியாதல்** *(வி.) – 1.வேறுபாடு இல்லாதாதல் (புற.2:19). 2.நிலை கலங்காதல் (புற.71:7).*

**திரியினும்** *(பெ.) – 1.பிறழினும் (நற்.66:9). 2.வேறுபடினும் (புற.2:18).*

**திரியும்** *(பெ.) – 1.வேறுபடும் (புற.183:4). 2.சுற்றும் (ஐங்.45:9).*

**திரிவை** *(பெ.) – மாவு திரிக்கும் கருவி (எந்திரம்) (அக.283:5-6).*

**திரு** *(பெ.) – 1.செல்வம் (குறு.181:6-7). 2.அழகு (குறு.205:7). 3.செய்யாள் (இலக்குமி) (அக.13:6). 4.நீல நிறம் (அக.138:17). 5.நன்மை (குறள்.1072).*

**திருக்கோவை** *(பெ.) – மேகலை (பரி.6:15).*

**திருகல்** *(பெ.) – முறுகல் (முதிர்தல்) (அக.135:7).*

**திருகுவான்** *(பெ.) – முறுக்கிப் பறிப்பவன் (கலி.101:31-2).*

**திருத்தால்** *(வி.) – 1.நிமிர்த்தி (திருத்தி) (புற.284:6-7). 2.திருந்தி இராதல் (கலி.109:13).*

**திருத்தி** *(பெ.)* – *1.செப்பம் செய்து (குற்றம் நீக்கி. தீட்டி) (அக.171:10). 2.குலைந்ததை நீக்கி (அக.300:7). 3.செவ்விதாக்கி (புற.17:5). 4.நிலை நிறுத்தி (பதி.31:13).*

**திருத்திய** *(பெ.)* – *1.மேம்படுத்திய (பதி.32:7). 2.செம்மைப் படுத்திய (பதி.38:3-4).*

**திருந்தாத** *(பெ.)* – *நன்மையாகாத செயல் (கலி.148:19).*

**திருந்திழை** *(பெ.)* – *பெண் (பதி.24:11).*

**திரு மருத முன் துறை** *(பெ.)* – *மதுரையில் வைகை நதித் துறை (கலி.26:13).*

**திரு மறு மார்பன்** *(பெ.)* – *திருமால் (கலி.104:10).*

**திரை** *(பெ.)* – *1.அலை (குறு.5:3). 2.சுருங்குதல் (நற்.22:5). 3.குழிவு (புற.195:2). 4.கடல் (கலி.106:18-2). 5.திரைச் சீலை (பரி.10:34).*

**திரைக்கும்** *(பெ.)* – *சுருட்டும் (புற.97:14).*

**திரைப்பு** *(பெ.)* – *திரையால் மறைத்த இடம் (கலி.115:19).*

**திரையது** *(பெ.)* – *அலையில் உள்ளது (குறு.128:1-3).*

**தில்** *(பெ.)* – *1.விழைவுப் பொருளில் வருவது (குறு.56:3-4). 2.காலத்தின் மேலது (நற்.277:1-2). 3.அலைச் சொல் (இக.82:14-5).*

**தில்லை** *(பெ.)* – *உப்பு நீர் அருகே வளர்வதொரு மரம் (குறு.195:2-3).*

**திலகம்** *(பெ.)* – *1.நெற்றியில் இடும் பொட்டு (நற்.62:6). 2.திலகப்பட்டம் (விழாவின்போது நெற்றியில் கட்டும் அணி) (கலி.97:11).*

**திவலை** *(பெ.)* – *நீர்த் துளி (குறு.5:3).*

**திளைக்கும்** *(பெ.)* – *1.இடைவிடாது மோதும் (குறு.299:2). 2.புணரும் (நற்.334:5). 3.விளையாடும் (அக.34:12-3). 4.சென்று வரும் (புற.152:6-7).*

**திளைத்து** *(பெ.)* – *கலந்து (புற.320:4-5).*

**திளையா** *(பெ.)* – *இமையாத (குறு.131:2).*

**திற்றி** *(பெ.)* – *1.உணவு (அக.97:5). 2.தின்னப்படும் இறைச்சி (அக.249:13).*

**திறத்தல்** *(வி.) – மூடுதலை நீக்குதல் (அக.136:22).*

**திறக்கும்** *(பெ.) – 1.அலர்த்தும் (குறு.265:1-2). 2.விரியும் (நற்.275:5). 3.வெளிப்படுத்தும் (அக.183:11-2).*

**திறந்த** *(பெ.) – பிளந்த (நற்.389:1).*

**திறந்தன** *(பெ.) – வெளிப்பட்டன (நற்.155:9).*

**திறப்ப** *(பெ.) – 1.அவிழ (நற்.69:5). 2.அவிழ்க்க (நற்.238:3). 3.நீக்க (அக.86:23).*

**திறப்பாடு** *(பெ.) – கூறுபாடு (குறள்.640).*

**திறம்** *(பெ.) – 1.செய்தி (குறு.289:8). 2.கூறுபாடு (நற்.8:9-10). 3.இடம் (அக.14:17). 4.வகை (அக.33:6). 5.காரணம் (அக.48:3-4). 6.வழி (அக.48:3-4). 7.தன்மை (அக.267:3). 8.பக்கம் (அக.274:7). 9.உடம்பு (கலி.274:7).*

**திறல்** *(பெ.) – 1.வன்மை (குறு.39:1). 2.திறமை (நற்.111:5). 3.சிறந்த ஒளி (பதி.46:3). 4.ஒழுக்கம் உடைமை (பரி.1:2).*

**திறவோர்** *(பெ.) – 1.நல்லோர் (குறு.247:2). 2.நன்மைக் கூறுபாடறிவோர் (புற.192:9-11). 3.சான்றோர் (புற.221:4).*

**திறன்** *(பெ.) – 1.வழி (நற்.101:3). 2.வழிவகை (அக.136:25). 3.முறைமை (அக.188:4). 4.வன்மை (அக.386:7). 5.பக்கம் (அக.386:7). 6.கூறுபாடு (புற.20:12). 7.திறப்பாடு (புற.71:7-8). 8.செய்யத் தக்கவை (குறள்.158). 9.கடுமை (குறள்.186). 10.ஒழுக்கம் (கலி.86:26).*

**திறை** *(பெ.) – கப்பம் பொருள் (அக.13:2).*

**தின்** *(பெ.) – 1.உண்ணுகின்ற (நற்.322:5). 2.தேய்த்த (அக.199:8). 3.கறிக்கின்ற (அக.232:2-3). 4.அரிக்கப்பட்ட (பதி.12:20). 5.கூர்மை இடப்பட்ட (பரி.10:98).*

**தின்மர்** *(பெ.) – தின்பவர் (பதி.24:18).*

**தின்றது** *(பெ.) – உண்டது (குறு.292:1-2).*

**தின்றல்** *(வி.) – உண்ணுதல் (அக.156:4).*

**தினப்படல்** *(வி.) – உண்ணப்படுதல் (கலி.147:30-2).*

**தினல்** *(வி.) – தின்கை (குறள்.254).*

**தினை** *(பெ.) – 1.குறிஞ்சி நிலத்துத் தவச வகைப் பயிர் (குறு.25:3-5). 2.குறிஞ்சி நிலத்துத் தவசம் (குறு.105:1-2). 3.சிறுமை அளவிற்குக் காட்டப்படுவது (புற.208:7-8).*

**தீ** *(பெ.) – 1.நெருப்பு (குறு.95:3-5). 2.கொடுமை (நற்.36:9). 3.தீமை (அக.203:2-3). 4.ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றாகிய தீ (புற.2:4-5). 5.வேள்வித் தீ (புற.2:22-3). 6.சடராக்கினி (புற.74:5). 7.நகரம் (குறள்.165). 8.விளக்கு (குறள்.929).*

**தீ அழல்** *(பெ.) – சுவாலை (பரி.5:3).*

**தீ ஒழுக்கம்** *(பெ.) – கெட்ட நடை முறை (குறள்.139).*

**தீக் காய்வார்** *(பெ.) – குளிர் காய்வார் (குறள்.691).*

**தீங்கு** *(பெ.) – தீமை (அக.112:8).*

**தீச்சொல்** *(பெ.) – தீங்கு பயக்கும் சொல் (குறள்.128).*

**தீஞ்சேறு** *(பெ.) – இனிய பாடு (பதி.75:6).*

**தீண்டல்** *(பெ.) – 1.கொடுதல் (குறு.272:1-8). 2.பற்றுதல் (குறள்.227).*

**தீண்டி** *(வி.) – 1.தொட்டு (குறு.199:3-4). 2.குத்தி (நற்.21:4). 3.உராய்ந்து (நற்.141:2). 4.தாக்கி (நற்.366:8). 5.அளைந்து (அக.178:2-11).*

**தீதிலாட்டி** *(பெ.) – குற்றம் அற்றவள் (அக.354:14).*

**தீதிலான்** *(பெ.) – தீ வினை இல்லாதவன் (கலி.27:1-2).*

**தீது** *(பெ.) – 1.தீமையான சொல் (குறு.26:4). 2.தீய எண்ணம் (குறு.106:3). 3.தீமையுடையது (குறு.368:8). 4.குற்றம் (நற்.201:6). 5.தீமை (அக.101:1-2). 6.கேடு (புற.192:2). 7.வசை (புற.214:13). 8.பாவம் (ஐங்.1:9).*

**தீப்பால** *(பெ.) – தீமைக் கூற்றமாகிய வினைகள் (குறள்.206).*

**தீப்பிணி** *(பெ.) – கொடிய நோய் (குறள்.227).*

**தீபக் கால் கட்டில்** *(பெ.) – ஒரு வகைக் கட்டில் (கலி.7:1).*

**தீம்புழல்** *(பெ.) – இருப்பைப் பூ (அக.171:13-5).*

**தீமை** *(பெ.) – 1.கொடுமை (நற்.116:1). 2.பாவம் (குறள்.143). 3.தீங்கு (குறள்.291). 4.தகாத செயல் (குறள்.511). 5.குற்றம் (குறள்.984). 6.பொல்லாங்கு (கலி.45:21).*

**தீய** *(பெ.) – 1.துன்பம் (குறள்.202). 2.நல்லன அல்ல (அக.106:1-2). 3.கருகிவிட (அக.51:6).*

**தீயுழி** *(பெ.) – நரகம் (குறள்.168).*

**தீயேன்** *(பெ.) – தீமை உடையேன் (ஐங்.21:4).*

**தீர்** *(வி.) – 1.விடுதல் (அக.258:11). 2.நீக்கிய (குறு.207:3). 3.அற்ற (புற.3:6).*

**தீர்குவள்** *(பெ.) – நீங்குவள் (நற்.53:11).*

**தீர்கை** *(வி.) – நீங்குதல் (புற.391:9).*

**தீர்த்த** *(வி.) – கொடுத்த (புற.37:5-6).*

**தீர்த்தல்** *(வி.) – 1.கெடுத்தல் (புற.3:25-6). 2.தணித்தல் (புற.379:10). 3.போக்குதல் (கலி.139:36-7).*

**தீர்தல்** *(வி.) – பிரிதல் (புற.320:7-8).*

**தீர்ந்த** *(வி.) – 1.பிரிந்த (குறு.183:3-4). 2.ஈன்ற (அக.273:4). 3.தவிர்ந்த (குறள்.292). 4.அற்ற (கலி.26:14). 5.இல்லாத (கலி.118:16).*

**தீர்ந்தவர்** *(பெ.) – போயிற்று (கலி.146:54-5).*

**தீர்ந்தார்** *(பெ.) – 1.நீக்கினார் (குறள்.17:10). 2.செய்யாது விட்டவர் (குறள்.612).*

**தீர்ந்தான்** *(பெ.) – நீங்கினவன் (கலி.146:30-1).*

**தீர்ந்து** *(வி.) – 1.பிரிந்து (குறு.322:1-2). 2.நீங்கி (நற்.101:6-8). 3.மாறி (கலி.16:15).*

**தீர்ப்பது** *(வி.) – மாற்றத்தக்கது (கலி.38:21).*

**தீர்ப்பான்** *(பெ.) – ஆற்றுபவன் (நீக்குபவன், மருத்துவன்) (குறள்.940).*

**தீர்வது** *(வி.) – ஆறுவது (கலி.146:44-5).*

**தீரம்** *(பெ.) – கரை (பரி.22:35).*

**தீ வாழ்க்கையவர்** *(பெ.) – இழி தொழில் வாழ்க்கை உடையார் (குறள்.320).*

**தீவிய** *(பெ.) – 1.இனிமை உடையன (அக.54:16). 2.இனிய சொற்கள் (கலி.19:1).*

**தீவினை** *(பெ.) – பாவம் (குறள்.201).*

**தீவு** *(பெ.) – நான்கு புறமும் நீர் சூழ்ந்த நிலம் (புற.397:21-2).*

**துகள்** *(பெ.) – 1.புழுதி (குறு.392:5-6). 2.பூந்தாது (நற்.140:4). 3.பொடி (நற்.163:2). 4.குற்றம் (அக.136:5). 5.அணு (பதி.20:6-7). 6.பழுது (கலி.64:15).*

***துகிர்*** *(பெ.) – பவழம் (புற.218:1).*

***துகில்*** *(பெ.) – 1.வெள்ளிய ஆடை (நற்.15:2). 2.மகளிர் ஆடை (நற்.120:8). 3.பருத்தி ஆடை (அக.111:3-4).*

***துகிலிகை*** *(பெ.) – ஓவியரது எழுதுகோல் (நற்.118:7-8).*

***துச்சில்*** *(பெ.) – 1.பிறர் வீட்டில் குடியிருக்கும் தன்மை (அக.203:15-6). 2.ஒதுக்கிடம் (குறள்.330).*

***துஞ்சல்*** *(பெ.) – 1.உறங்குதல் (குறு.292:61-8). 2.சோம்புதல் (அக.75:3). 3.மடிந்திருத்தல் (புற.182:4).*

***துஞ்சினார்*** *(பெ.) – உறங்கியவர் (குறள்.926).*

***துஞ்சுநர்*** *(பெ.) – உறங்குபவர் (அக.158:10-11).*

***துஞ்சும்*** *(பெ.) – 1.உறங்கும் (குறு.6:3). 2.உறங்குகின்ற (குறு.28:3-5). 3.மறைந்து தங்கும் (அக.18:3).*

***துஞ்சு மரம்*** *(பெ.) – கணைய மரம் (பதி.16:3).*

***துஞ்சுவது*** *(வி.) – உறங்குவது (அக.139:1).*

***துஞ்சுவோன்*** *(பெ.) – உறங்குபவன் (அக.316:3).*

***துடரி*** *(பெ.) – தொடரி (முட் செடி வகை) (புற.177:9).*

***துடவை*** *(பெ.) – தோட்டம் (குறு.105:1).*

***துடி*** *(பெ.) – உடுக்கை (தோற் கருவி) (நற்.79:2).*

***துடியர்*** *(பெ.) – துடிப் பறை கொட்டுபவர் (புற.269:1).*

***துடியன்*** *(பெ.) – துடிப் பறை கொட்டுபவன் (புற.269:6).*

***துடுப்பு*** *(பெ.) – 1.மலர் (அக.78:9). 2.துழாவு கருவி (புற.26:10).*

***துணங்கை*** *(பெ.) – ஒரு வகைக் கூத்து (குறு.31:1-3).*

***துணர்*** *(பெ.) – 1.காயின் கொத்து (குறு.164:2). 2.பூங்கொத்து (நற்.350:1).*

***துணி*** *(பெ.) – 1.துண்டம் (அக.119:6). 2.இறைச்சித் துண்டம் (பதி.44:17).*

***துணிகிற்றல்*** *(பெ.) – துணிதல் (கலி.47:13).*

***துணிதல்*** *(பெ.) – 1.பிரித்தல் (நற்.109:7). 2.நிச்சயித்தல் (அக.181:1).*

***துணிந்தது*** *(வி.) – அறுதியிட்டு வந்த காரியம் (கலி.69:10-11).*

**துணிந்தது** *(வி.) – முடிவு செய்தது (நற்.103:10-11).*

**துணிபு** *(பெ.) – தெளிவு (புற.237:20).*

**துணியல்** *(பெ.) – தடி (துண்டம்) (புற.61:4).*

**துணிவாம்** *(வி.) – தெளியக் கடவாம் (கலி.142:62-3).*

**துணிவிலன்** *(வி.) – உறுதியன் அல்லன் (கலி.69:10).*

**துணிவினோன்** *(பெ.) – சூழ்ச்சித் தெளிவு உடையவன் (புற.23:3-4).*

**துணிவு** *(பெ.) – 1.மனஉறுதி (குறு.347:4-6). 2.தெளிவு (அக.205:5). 3.நிச்சய அறிவு (புற.214:3). 4.ஆண்மை (குறள்.383). 5.கலங்காமை (குறள்.669). 6.அஞ்சாமை (குறள்.688).*

**துணை** *(பெ.) – 1.ஆண் பெண்ணுள் ஒன்று (குறு.16:4). 2.மனைவி (குறு.20:1-2). 3.கணவன் (குறு.158:6). 4.இணை (குறு.174:2-3). 5.உதவி (குறு.207:3-4). 6.பிணைப்பு (குறு.229:6). 7.இனம் (அக.17:2). 8.அளவு (அக.315:3). 9.துணையாந் தன்மை (கலி.27:26). 10.இரண்டு (பரி.11:7-8).*

**துணைந்து** *(வி.) – அளவிற்று (குறள்.87).*

**துணைமை** *(பெ.) – துணையாம் தன்மை (குறள்.688).*

**துணையர்** *(பெ.) – பெருமை உடையர் (குறள்.144).*

**துணையார்** *(பெ.) – துணையாம் தன்மையர் (குறள்.447).*

**துணையிலள்** *(பெ.) – ஒப்பு இல்லாதவள் (நற்.170:3-4).*

**துணைவலி** *(பெ.) – துணையாவார் ஆற்றல் (குறள்.471).*

**துணைவன்** *(பெ.) – கணவன் (அக.385:15).*

**துணைவி** *(பெ.) – ஒத்து ஒழுகுபவள் (ஐங்.41:10).*

**துத்தி** *(பெ.) – பாம்பின் படப்பொறி (குறு.294:5).*

**துதி** *(பெ.) – 1.உறை (அக.8:3). 2.நுனி (புற.353:15). 3.தோல் (ஐங்.11:6).*

**துதிய** *(வி.) – உறையில் உள்ள (அக.8:3).*

**துதைதல்** *(வி.) – 1.நெருங்கு (குறு.174:3). 2.செறிந்த (அக.82:4). 3.ஒன்று கூடு (பதி.76:2).*

**துப்பார்** *(பெ.) – உண்பார் (குறள்.12).*

**துப்பு** *(பெ.) – 1.வலிமை (குறு.312:2). 2.பகைமை (நற்.247:1). 3.வன்மை (நற்.251:7). 4.பவழம் (ஐங்.28:8). 5.உணவு (குறள்.2:2). 6.நன்மை (குறள்.12). 7.பற்றுக்கோடு (குறள்.106).*

**துப்புரவு** *(பெ.) – 1.அனுபவிக்கப்படுவன (குறள்.238). 2.நுகர்ச்சிப் பொருள் (குறள்.1040).*

**தும்பி** *(பெ.) – 1.வண்டின் சாதியுள் சிறந்தது (குறு.2:1). 2.யானை (பரி.19:30).*

**தும்பை** *(பெ.) – 1.பகைவரோடு போர் செய்தலை நினைத்து தும்பைப் பூவைச் சூடுதல் (புற.2:14-5). 2.போர் (பரி.9:67-8).*

**தும்மல்** *(பெ.) – தும்முகை (குறள்.1213).*

**தும்மினேன்** *(வி.) – தும்முதலைச் செய்தேன் (குறள்.1317).*

**தும்மு** *(பெ.) – தும்முகை (குறள்.128).*

**தும்மும்** *(வி.) – தும்முதலாகிய தொழிலைச் செய்யும் (நற்.326:4).*

**துமிக்கும்** *(வி.) – வெட்டும் (குறு.268:3-4).*

**துமித்தல்** *(வி.) – அறுத்த (அக.24:1).*

**துமித்துதல்** *(வி.) – இடையே விலக்கி (கலி.116:5).*

**துமிந்து** *(வி.) – வெட்டுண்டு (புற.19:10).*

**துமிப்ப** *(வி.) – 1.அழிக்க (குறு.189:3-4). 2.மிதியா நிற்ப (நற்.181:11-2). 3.பிளக்க (அக.334:14).*

**துமிய** *(வி.) – 1.துணிய (குறு.190:4-5). 2.கிழிய (குறு.270:1). 3.அறுபட (நற்.338:2).*

**துய்** *(பெ.) – 1.பஞ்சின் நுனி போன்ற பிசிர் (குறு.110:6). 2.பிசிர் (நற்.300:8). 3.பஞ்சு (புற.158:24). 4.உளை (பதி.43:23).*

**துய்க்க** *(வி.) – உண்க (குறள்.944).*

**துய்த்த** *(வி.) – உண்ட (அக.15:3-4).*

**துய்த்தல்** *(பெ.) – 1.அனுபவித்தல் (குறு.63:1). 2.நுகர்ச்சிப் பொருள் (பதி.15:30). 3.நுகர்தல் (குறள்.377).*

**துய்த்து** *(வி.) – நுகர்ந்து (அக.145:16).*

**துய்ப்பார்** *(வி.) – அனுபவிப்பார் (பரி.7:83).*

**துய்ப்பேம்** *(வி.) – நுகர்வேம் (புற.189:8).*

**துயர்** *(பெ.) – 1.துன்பம் (குறு.103:4). 2.காமநோய் (நற்.140:10). 3.வருத்தம் (கலி.16:5).*

**துயரம்** *(பெ.) – 1.துன்பம் (குறு.145:3-4). 2.வருத்தம் (நற்.273:2).*

**துயல்வரும்** *(வி.) – அசையா நிற்கும் (நற்.225:5).*

**துயல்வு** *(வி.) – அசைதல் (குறு.294:6).*

**துயில்** *(பெ.) – உறக்கம் (குறு.107:2-7).*

**துயில்** *(வி.) – உறங்கு (குறு.145:1-5).*

**துயிலலள்** *(வி.) – துயில் கொள்ளுதல் இலள் (கலி.45:18).*

**துயிலா** *(வி.) – மார்ச்சனை (புற.247:8).*

**துயிலீயாது** *(வி.) – துயிலாது (பதி.12:7).*

**துரக்கும்** *(வி.) – செலுத்தும் (அக.3:13).*

**துரக்குவன்** *(வி.) – 1.போக்குவன் (புற.274:3-4). 2.போக்கிப் பொருவன் (புற.274:3-4).*

**துரத்தலின்** *(வி.) – செலுத்துதலால் (அக.81:11).*

**துரு** *(பெ.) – ஆடு (நற்.169:6).*

**துருத்தி** *(பெ.) – 1.உலையூது கருவி (அக.224:2-3). 2.தீவு (பதி.20:1-3). 3.ஆற்றிடைக் குறை (கலி.30:15-6).*

**துரும்பு** *(பெ.) – செத்தை (அக.366:4).*

**துரூஉ** *(பெ.) – 1.செம்மறியாடு (அக.35:9). 2.செம்மறிக் குட்டி (அக.35:9).*

**துலங்கு** *(வி.) – தூங்கு, தொங்கு (கலி.13:16).*

**துலாஅம்** *(பெ.) – நிறைகோல் (புற.39:3).*

**துலை** *(பெ.) – ஒப்பு (குறள்.986).*

**துவ்வா** *(வி.) – 1.பருக முடியாத (அக.121:4). 2.துய்க்கப்பட்டிருக்கின்ற (கலி.94:27).*

**துவ்வாதவர்** *(பெ.) – நல்கூர்ந்தார் (குறள்.42).*

**துவ்வாமை** *(பெ.) – 1.நல்குரவு (குறள்.94). 2.நுகராமை (கலி.22:21-12).*

**துவ்வாய்** *(வி.) – நுகரக் கருதாய் (குறள்.1294).*

***துவ்வாள்*** *(பெ.) – உள்ளாள் (புற.159:14).*

***துவ்வான்*** *(வி.) – வலிஇலன் (குறள்.862).*

***துவண்ட*** *(வி.) – வாடின (பரி.6:68-9).*

***துவர்*** *(பெ.) – 1.சிவப்பு (குறு.26:6). 2.செந்நிறம் (நற்.190:9). 3.பவழம் (நற்.269:2). 4.முழுமை (பதி.32:2). 5.புலர்கை (கலி.32:2). 6.துவர்ச்சாயம் (கலி.102:37). 7.பாக்கு (பரி.12:22).*

***துவர் ஆடை*** *(பெ.) – காவி ஊட்டிய ஆடை (கலி.102:37).*

***துவரினர்*** *(வி.) – பிழிந்து துவட்டினர் (நற்.96:5-6).*

***துவரை*** *(பெ.) – துவாரகை (புற.201:10).*

***துவலை*** *(பெ.) – 1.நீர்த்துளி (குறு.55:1-3). 2.மழைத்துளி (நற்.142:5). 3.கூட்டம் (ஐங்.17:3).*

***துவள்*** *(பெ.) – குழைதல் (பரி.6:64).*

***துவற்றும்*** *(வி.) – தூற்றும் (கலி.31:16).*

***துவன்றி*** *(வி.) – 1.சேர்ந்து (குறு.295:2-3). 2.திரண்டு (புற.351:2-3). 3.(செறித்து) செறித்து (பதி.16:3).*

***துவை*** *(பெ.) – தொகையல் (புற.14:13-4).*

***துவைக்கும்*** *(வி.) – ஒலிக்கும் (புற.280:2).*

***துவைத்த*** *(வி.) – புகழ்ந்து சொல்லப்பட்ட (பதி.88:23).*

***துவைத்து*** *(வி.) – 1.ஒலித்து (அக.317:12). 2.தைத்து (புற.4:5).*

***துவைப்ப*** *(வி.) – முழங்க (புற.158:1).*

***துவையர்*** *(வி.) – துவையலை அளிப்பவர் (புற.360:5).*

***துழந்த*** *(வி.) – துழாவிய (அக.60:5).*

***துழந்து*** *(வி.) – துழாவி அளைந்து (குறு.167:4).*

***துழவும்*** *(வி.) – 1.குடையும் (குறு.246:1-3). 2.தேடும் (அக.68:19-20). 3.சூழ்வரும் (புற.174:21-2).*

***துழவுவோள்*** *(பெ.) – கையால் தடவுபவள் (புற.278:6-7).*

***துழனி*** *(பெ.) – பறவைப் பேரொலி (நற்.216:7).*

***துழாஅய்*** *(பெ.) – துளவம் (பதி.31:8).*

***துழாய்*** *(பெ.) – துளசி (பரி.8:1-2).*

**துழாயோன்** *(பெ.) – துழாய் மாலையை உடைய திருமால் (பரி.15:15).*

**துழாவும்** *(வி.) – உழலும் (கலி.145:43).*

**துழைஇ** *(வி.) – 1.துழாவி (நற்.31:3). 2.தடவி (நற்.193:3). 3.தேடி (நற்.352:7). 4.அளைந்து (அக.243:7).*

**துழைஇய** *(வி.) – 1.துழாவிய (குறு.215:4). 2.சென்று தேடிய (பதி.17:8).*

**துள்ளல்** *(பெ.) – துள்ளுகை (கலி.94:38).*

**துள்ளிய** *(வி.) – குதித்த (அக.167:17).*

**துள்ளு** *(பெ.) – நடுங்குதல் (அக.294:2).*

**துள்ளுதல்** *(வி.) – குதித்தல் (குறு.85:2).*

**துள்ளுநர்** *(பெ.) – பதைப்பவர் (கலி.4:5).*

**துள்ளுபு** *(வி.) – துள்ளி (பதி.27:12).*

**துளக்கி** *(வி.) – நடுங்கச் செய்து (பதி.18:8).*

**துளக்கு** *(வி.) – 1.நிலைபெறாமை (குறள்.699). 2.நடுக்கம் (பரி.13:34-5).*

**துளக்கும்** *(வி.) – அசைக்கும் (குறு.158:3-5).*

**துளங்காது** *(வி.) – அசைதலின்றி (குறள்.668).*

**துளங்காமை** *(வி.) – அசையாமல் (பரி.9:1).*

**துளங்கி** *(வி.) – 1.கலங்கி (புற.63:12). 2.சலித்து (புற.260:24).*

**துளங்கிய** *(வி.)– 1.நிலை கலங்கிய (புற.23:9). 2.சாய்ந்த (புற.260:23).*

**துளங்கின** *(வி.) – 1.தளர்ந்தன (புற.62:8). 2.பறிந்தன (புற.347:12).*

**துளங்கு** *(வி.) – குலை (நற்.20:3-4).*

**துளர்** *(பெ.) – களைக்கொட்டு (குறு.392:4-5).*

**துளர்ந்து** *(வி.) – உழுது (குறு.214:1-2).*

**துளவம்** *(பெ.) – துளசி (பரி.13:29).*

**துளவு** *(பெ.) – துளசி (பரி.15:54).*

**துளி** *(பெ.) – 1.நீர்த்திவலை (குறு.35:4-5). 2.மழை (நற்.247:3).*

**துளிப்ப** *(வி.) – பெய்ய (அக.235:6).*

**துளு** (பெ.) – ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று (அக.15:4).

**துளை** (பெ.) – துவாரம் (அக.82:1).

**துளைய** (பெ.) – துவாரத்தை உடையன (அக.9:6).

**துற்ற** (வி.) – 1.வேயப்பட்ட (நற்.29:19). 2.செறிந்து தோன்ற (புற.41:6).

**துற்றி** (வி.) – உண்டு (அக.36:2).

**துற்றும்** (வி.) – நுகரும் (பரி.20:51).

**துற்றுவ** (பெ.) – நுகர் பொருள்கள் (பரி.20:51).

**துறக்க** (வி.) – பற்றறுக்க (குறள்.342).

**துறக்கத்தவள்** (பெ.) – சுவர்க்கத்தினள் ஆகிய தெய்வ யானை (பரி.19:6).

**துறக்கம்** (பெ.) – சுவர்க்கம் (அக.233:7).

**துறக்குநர்** (வி.) – பிரிந்து செல்வார் (கலி.13:26-7).

**துறக்கும்** (வி.) – நீங்கும் (அக.71:18).

**துறக்குவர்** (வி.) – நீப்பார் (குறு.287:1-2).

**துறக்குவன்** (வி.) – கைவிடுவான் (கலி.41:35).

**துறத்தல்** (பெ.) – 1.நீத்தல் (குறு.266:3-5). 2.பிரிதல் (அக.398:15).

**துறத்தி** (வி.) – பிரிவாய் (குறு.384:2-4).

**துறந்த** (வி.) – 1.நீங்கிய (குறு.174:1). 2.போகட்ட (நற்.329:2). 3.கைவிட்ட (அக.107:5). 4.பிரிந்த (அக.113:9).

**துறந்தமை** (பெ.) – பிரியலுற்றமை (குறள்.1157).

**துறந்தவர்** (பெ.) – பிரிந்து சென்றவர் (அக.298:20-1).

**துறந்தவள்** (பெ.) – துறக்கப்பட்டவள் (கலி.8:1).

**துறந்தன** (வி.) – நீங்கின (குறு.186:4).

**துறந்தார்** (பெ.) – 1.பற்றினை விட்டவர் (குறள்.12). 2.துறவிகள் (குறள்.263). 3.ஒழிந்தார் (குறள்.300). 4.பிரிந்து போனவர் (குறள்.529). 5.நீங்கினார் (கலி.24:15).

**துறந்து** (வி.) – 1.பிரிந்து (குறு.20:1-2). 2.கழற்றி (அக.217:12).

**துறந்தென** (வி.) – 1.நீங்கியதாக (அக.233:4-5). 2.துறக்க (ஐங்.163:3-4).

**துறந்தோர்** (பெ.) – பிரிந்தவர் (குறு.172:3-4).

**துறப்ப** (வி.) – பிரிய (அக.360:5).

**துறப்பது** (வி.) – நீங்குதல் (ஐங்.3:4).

**துறப்பர்** (வி.) – நீப்பர் (குறள்.1017).

**துறப்பாய்** (வி.) – கைவிடுகின்றனை (கலி.135:7).

**துறப்பாயேல்** (வி.) – துறப்பையாயின் (கலி.3:10).

**துறப்பார்** (வி.) – துறக்கும் கருத்துடையர் ஆவர் (குறள்.378).

**துறப்பான்** (பெ.) – துறந்திடுவான் (கலி.43:27).

**துறப்பின்** (வி.) – பிரியின் (குறு.326:4-5).

**துறப்பு** (பெ.) – நீக்கம் (கலி.10:15).

**துறப்போர்** (பெ.) – பிரிபவர் (நற்.243:6-7).

**துறவாமை** (பெ.) – துறவு கொள்ளாதிருத்தல் (குறள்.1040).

**துறவார்** (பெ.) – பற்றுஅறார் (குறள்.276)

**துறவார்** (வி.) – 1.பற்று அறார் (குறள்.276). 2.விடார் (குறள்.806). 3.நீக்கார் (குறள்.1017).

**துறு** (பெ.) – உருண்டை (அக.272:10).

**துறு** (வி.) – 1.நெருங்கு (குறு.13:2). 2.பெரிய (நற்.104:3). 3.மிக்க (நற்.386:2).

**துறுகல்** (பெ.) – 1.குண்டுக்கல் (குறு.36:1). 2.பொற்றை ஆகிய சிறுமலை (புற.202:19-20). 3.பாறை (ஐங்.24:9).

**துறை** (பெ.)– 1.நீர்த்துறை (குறு.50:3). 2.பிரிவு (அக.331:10). 3.கூறுபாடு (புற.21:10-11). 4.ஏற்றிழிவுடைய வழி (புற.84:6). 5.இழிகின்ற வழி (பதி.33:4-5). 6.வண்ணான் ஒலிக்கும் இடம் (கலி.72:13-4).

**துறைபோதல்** (பெ.) – முடிவு போதல் (கலி.67:19-20).

**துறைவன்** (பெ.) – நெய்தல் நிலத் தலைவன் (குறு.9:7-8).

**துன்** (வி.) – 1.நெருங்கு (குறு.88:2-3). 2.செல்ல (அக.138:16).

**துன்பம்** (பெ.) – துயரம் (குறள்.267).

**துன்பு** (பெ.) – துன்பம் (புற.382:10-11).

**துன்புறு** (வி.) – துன்பம் அடை (குறு.316:5-7).

**துன்புறுவி** (பெ.) – வறுமை உறுவோள் (புற.161:14).

**துன்ன** *(வி.) – 1.நெருங்க (குறு.98:1-3). 2.சேருதற்கு (கலி.70:5).*

**துன்னம்** *(பெ.) – தையல் (புற.136:2-3).*

**துன்னல்** *(பெ.) – நெருங்குதல் (குறு.113:3-4).*

**துன்னலம்** *(வி.) – அணுகமாட்டோம் (அக.258:3-4).*

**துன்னற்க** *(வி.) – செய்யாது ஒழிக (குறள்.209).*

**துன்னாதல்** *(வி.) – 1.கூடாமல் (குறள்.1240). 2.பொருந்தாக் குறை (கலி.122:4).*

**துன்னாது** *(வி.) – நெருங்காது (புற.269:9).*

**துன்னாமை** *(பெ.) – மேவாமை (குறள்.316).*

**துன்னார்** *(வி.) – நெருங்கமாட்டார் (நற்.216:1).*

**துன்னி** *(வி.) – 1.பயின்று (புற.171:3-4). 2.தொடர்ந்து (ஐங்.24:4). 3.பொருந்தி நின்று (குறள்.494). 4.அணைந்து (கலி.110:3-4).*

**துன்னித் துன்னி** *(வி.) – அடுத்தடுத்து (பரி.14:29-30).*

**துன்னிய** *(வி.) – நெருங்கிய (அக.355:6).*

**துன்னியார்** *(பெ.) – நண்பர் (குறள்.188).*

**துன்னியோர்** *(பெ.) – சுற்றத்தார் (புற.238:13).*

**துன்னுகம்** *(வி.) – அணுகுவோம் (அக.154:15).*

**துன்னுதல்** *(பெ.) – அணுகுதல் (அக.77:2).*

**துன்னுநர்** *(பெ.) – சென்றவர் (பரி.19:54).*

**துனி** *(பெ.) – 1.வெறுப்பு (குறு.84:1-2). 2.ஊடல் (குறு.181:1-2). 3.துன்பம் (குறு.290:3-6). 4.ஊடலின் வகை (அக.144:10). 5.வறுமை (குறள்.1000). 6.புலவி நீட்டம் (குறள்.1306). 7.பிரிவு (கலி.10:15).*

**துனிக்கும்** *(வி.) – புலக்கும் (பரி.9:24).*

**துனித்தனை** *(வி.) – வெறுத்தனை (கலி.122:3-4).*

**துனித்து** *(வி.) – ஊடி (குறள்.1280).*

**துனிப்பவள்** *(பெ.) – மாறுபடுபவள் (பரி.21:22).*

**துனிப்பென்** *(வி.) – புலந்து இருப்பேன் (கலி.67:16).*

**துனியல்** *(வி.) – 1.சினவற்க (குறு.252:4-6). 2.வெறாதே (பரி.8:53).*

**துனை** *(வி.) – 1.விரைதல் (கலி.149:16). 2.விரைகின்ற (குறு.269:1-2).*

**துனையுநர்** *(பெ.) – விரைந்தவர் (கலி.145:1).*

**தூ** *(பெ.) – 1.தூய்மை (குறு.51:3). 2.அழுக்கின்மை (அக.136:15). 3.தசை (பதி.51). 4.பற்றுக்கோடு (குறள்.455).*

**தூஉ** *(பெ.) – தூய்மை (குறு.157:1-2).*

**தூஉய்மை** *(பெ.) – வீடு (குறள்.364).*

**தூக்கணங்குரீஇ** *(பெ.) – தொங்குமாறு கூடுகட்டும் ஒரு வகைக் குருவி (குறு.374:5-7).*

**தூக்கணை** *(பெ.) – புலால் அளைந்த உடம்பு (பதி.51:33).*

**தூக்கம்** *(பெ.) – நீட்டித்தல் (குறள்.668).*

**தூக்கல்** *(பெ.) – 1.அசைதல் (நற்.107:4-5). 2.முகத்தல் (அக.219:14-6).*

**தூக்கார்** *(வி.) – ஆராய்தல் இலராய் (குறள்.103).*

**தூக்கி** *(வி.) – 1.அசைத்து (நற்.349:3). 2.கட்டி (அக.141:9). 3.தொங்கவிட்டு (புற.103:1-2). 4.அளந்தறிந்து (குறள்.912). 5.ஆராய்ந்தறிந்து (குறள்.912).*

**தூக்கின்** *(வி.) – 1.ஆராய்ந்தால் (குறு.101:1-3). 2.சீர்தூக்கின் (புற.358:3).*

**தூக்கு** *(பெ.) – 1.தாளத்தில் இடை நிகழும் காலத்தை உடையது (அக.382:4). 2.ஆராய்ச்சி (கலி.63:1-2).*

**தூக்கு இலி** *(பெ.) – ஆராய்ச்சி இல்லாதவன் (கலி.63:1-2).*

**தூக்கும்** *(வி.) – 1.மேலே உயர்த்தும் (குறு.8:4-5). 2.அசைக்கும் (குறு.76:4-5). 3.மிகுவிக்கும் (அக.378:13). 4.வீசும் (பதி.61:1-2). 5.வரையறுக்கும் (குறள்.118).*

**தூங்கல்** *(பெ.) – 1.தொங்குதல் (நற்.135:1). 2.அசைதல் (நற்.258:8-9). 3.கூத்தாடுதல் (அக.98:20).*

**தூங்காது** *(வி.) – நீட்டியது (குறள்.672).*

**தூங்காமை** *(பெ.) – விரைவுடைமை (குறள்.383).*

**தூங்கி** *(வி.) – 1.அசைந்து (நற்.281:2). 2.நீட்டியது (நற்.284:7-8). 3.தொங்கி (நற்.328:1). 4.ஆடி (நற்.334:3). 5.கூத்தாடி (அக.159:9). 6.மெல்ல நடந்து (அக.379:26). 7.எய்தி (பரி.21:44).*

**தூங்கு** *(வி.) – 1.தொங்கு (குறு.235:1-2). 2.செறிந்த (நற்.123:3). 3.மெலிந்த (அக.168:10). 4.அசைந்த (புற.22:1). 5.இயங்கிய (புற.39:6).*

**தூங்கு எயில்** *(பெ.) – சோழன் ஒருவனால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆகாயக் கோட்டை (புற.39:6).*

**தூங்குதல்** *(பெ.) – கூத்தாடுதல் (அக.382:6-7).*

**தூங்குவன** *(வி.) – கீழ் வீழ்வன (பரி.20:101).*

**தூண்** *(பெ.) – 1.கம்பம் (அக.220:8). 2.பற்றுக்கோடு (குறள்.615).*

**தூண்டில்** *(பெ.) – மீன் பிடிக்கும் கருவி (குறு.54:4).*

**தூண்டில் வேட்டுவன்** *(பெ.) – மீன் பிடிப்பவன் (அக.36:6).*

**தூண்டு** *(வி.) – 1.குத்து (அக.9:12). 2.செலுத்து (புற.82:4).*

**தூணம்** *(பெ.) – கம்பம் (புற.400:19).*

**தூணி** *(பெ.) – 1.அளக்கும் கருவி (நற்.16:7-8). 2.அம்புக் கூடு (அக.9:2).*

**தூது** *(பெ.) – 1.செய்தி சொல்ல அனுப்பப்படுவோர் (குறு.106:5-6). 2.செய்தி (குறு.182:5-7). 3.தூது (குறள்.681). 4.தூது செல்வோன் (குறள்.686). 5.கல் (கலி.56:16).*

**தூது ஆடி** *(வி.) – தூதாய்த் திரிந்து (கலி.72:13).*

**தூதை** *(பெ.) – சிறு பானை (கலி.59:5).*

**தூம்பு** *(பெ.) – 1.துளை (குறு.178:2-3). 2.துளைக் கருவி (அக.111:9). 3.மூங்கில் குழாய் (பதி.81:21).*

**தூம்பு அற்றது** *(வி.) – ஓட்டை ஆயிற்று (பரி.7:30).*

**தூமம்** *(பெ.) – கரந்துறை கோள் நான்கனுள் ஒன்றான வால் வெள்ளி (புற.117:1).*

**தூய்மை** *(பெ.) – மாசு இன்மை, மன மாசு இன்மை (குறள்.159).*

**தூய்மையவர்** *(பெ.) – தூய்மையினை உடையார் (குறள்.711).*

**தூயர்** *(வி.) – நல்லார் (ஐங்.7:10).*

**தூயவன்** *(பெ.) – பிழை இல்லாதவன் (பரி.12:61).*

**தூர்** *(பெ.) – பனையின் வேர்ப் பற்றுள்ள அடிப்பகுதி (பரி.2:42-3).*

**தூர்க்கும்** *(வி.) – குழி நிரப்பும் (அக.21:26-7).*

**தூர்ந்து** *(வி.) – படர்ந்து மூடி (பதி.23:11-2).*

**தூர்ப்போள்** *(வி.) – அடைப்போள் (ஐங்.13:4).*

**தூர்ப்பு** *(வி.) – 1.ஒளி மறைந்து (நற்.228:3). 2.நெருங்கி (கலி.105:27-8). 3.நிறைந்து (கலி.120:2-3).*

**தூவல்** *(பெ.) – 1.சிதறல் (நற்.354:7). 2.துவலை (அக.133:11).*

**தூவவும்** *(வி.) – வாரி வழங்கவும் (புற.331:13).*

**தூவாத** *(பெ.) – வெய்ய சொற்கள் (குறள்.685).*

**தூவார்** *(பெ.) – தூவுவார் (பரி.10:101).*

**தூவாள்** *(வி.) – ஒழியாள் (புற.334:5-7).*

**துவான்** *(வி.) – ஒழியான் (புற.334:10-11).*

**தூவி** *(பெ.) – 1.இறகு (குறு.103:2-3). 2.மெல்லிய சிறிய இறகு (நற்.70:3). 3.அன்னச் சிறகு (கலி.56:15).*

**தூவிலாட்டி** *(பெ.) – வன்மை இல்லாதவள் (நற்.154:6-7).*

**தூவுங்கால்** *(வி.) – வழங்கும் போது (புற.331:13).*

**தூவேன்** *(வி.) – ஒழியேன் (குறள்.1021).*

**தூற்றல்** *(வி.) – பழித்தல் (குறு.32:4-5).*

**தூற்றலின்** *(வி.) – தூற்றுகையால் (கலி.53:10).*

**தூற்றார்** *(வி.) – இகழ்ந்து சொல்லார் (குறள்.1180).*

**தூற்றுபுற** *(வி.) – சிதறி (கலி.31:15).*

**தூற்றும்** *(வி.) – 1.தூவும் (குறு.86:4). 2.பரப்பும் (குறு.320:7-8). 3.துளிக்கும் (குறு.398:1-2).*

**தூறு** *(பெ.) – 1.புதர் (அக.274:11). 2.போர் (குறள்.44:5).*

**தெங்கு** *(பெ.) – தென்னை, (புற.29).*

**தெடாரி** *(பெ.) – தடாரிப்பறை (புற.368).*

**தெண்** *(பெ.) – 1.தெளிந்த ஓசை (குறு.155:4). 2.தெளிவு (குறு.212:2). 3.வீங்கிய (கலி.102:35).*

**தெண்ணீர்** *(பெ.) – தெளிந்தநீர் (குறு.196:3).*

**தெண்மணி** *(பெ.) – தெளிந்த ஓசையை உடைய மணி (குறு.155:4).*

**தெம்முனை** *(பெ.) – போர்க்களம் (அக.187:5-6).*

**தெய்யோ** *(பெ.) – ஓர் அசைநிலை (ஐங்.239).*

**தெய்வஞ்செப்புதல்** *(பெ.) – துணை வேண்டிக் கடவுளை வழிபடுதல் (பதி.82:1).*

**தெய்வப்பிரமம்** *(பெ.) – தெய்வத் தன்மையுடைய பிரம வீணை (பரி.19:40).*

**தெய்வம்** *(பெ.) – 1.கடவுள் (குறு.89:5-6). 2.தேவர் (குறள்.500).*

**தெய்வமால்** *(பெ.) – தெய்வமாகிய திருமால் (கலி.107:31-2).*

**தெரிகல்லா** *(வி.) – தெரியாத (கலி.57:4-5).*

**தெரிகோல்** *(பெ.) – பொருள்களை அளந்தறியும் துலைக்கோல் (அக.349:3-4).*

**தெரி தல்** *(வி.) – அறிதல் (பரி.12:38).*

**தெரிந்த** *(வி.) – 1.ஆராய்ந்து சமைத்த (நற்.83:5). 2.தெரியப்பட்ட (புற.183:8). 3.ஆராய்ந்து அறிந்த (குறள்.712).*

**தெரிந்து** *(வி.) – ஆராய்ந்து (நற்.25:9-10).*

**தெரிபொருள்** *(பெ.) – உயிர் (பரி.2:26).*

**தெரியவுணர் தல்** *(வி.) – தெளியவறிதல் (பரி.6:92).*

**தெரு** *(பெ.) – வீதி, வழி (புற.345).*

**தெரு மருதல்** *(வி.) – மனஞ்சுழலுதல் (கலி.51).*

**தெருள்(ளு) தல்** *(வி.) – விளங்குதல் (கலி.43).*

**தெவிட்டல்** *(பெ.) – உமிழப்பட்டது (அக.224).*

**தெழி** *(பெ.) – ஒலி (கலி.108:35).*

**தெளி தல்** *(வி.) – அறிதல் (குறு.273).*

**தெளி த்தல்** *(வி.) – சூளுறுதல் (கலி.81:33).*

**தெளியாநோக்கம்** *(பெ.) – வெருவின பார்வை (அக.33).*

**தெளிர் தல்** *(வி.) – ஒளிபெறுதல் (பரி.10:55).*

**தெளிர் த்தல்** *(வி.) – 1.ஒலித்தல் (ஐங்.197). 2.செழித்தல் (ஐங்.452). 3.மகிழ்ச்சியுறுதல் (அக.51).*

**தெற்றி** *(பெ.) – மரவகை (அக.259).*

**தெற்று** *(வி.) – 1.தெளிவு (அக.328:7-8). 2.அடுக்கு (புற.285:5).*

**தெறல்** *(வி.) – 1.அழிக்கை (புற.2). 2.வெம்மை (பரி.3:63).*

**தெறி த்தல்** *(வி.) – 1.பொறி அல்லது துளியாய்ச் சிதறுதல் (அக.289). 2.முற்றுதல் (புற.258).*

**தெறித்துநடை** *(பெ.) – துள்ளுநடை (குறு.213).*

**தெறு த்தல்** *(வி.) – குவித்தல் (அக.54).*

**தெறுதல்** *(வி.) – 1.தண்டம் செய்தல் (புற.29:9). 2.அழித்தல் (கலி.11:2).*

**தெறு** *(பெ.) – 1.அச்சம் (அக.73). 2.துன்பம் (குறு.336).*

**தெறுபொருள்** *(பெ.) – திறைப்பொருள் (குறள்.756).*

**தெறுவர்** *(பெ.) – பகைவர் (புற.307).*

**தெறுழ்** *(பெ.) – காட்டுக் கொடி வகை (புற.119).*

**தென்புலத்தார்** *(பெ.) – தென்றிசையில் வாழ்ந்து மறைந்த முன்னனோர் (குறள்.43).*

**தென்னம்பொருப்பு** *(பெ.) – பொதிய மலை (புற.33).*

**தேக்கு** *(பெ.) – ஏப்பம் (குறள்.942).*

**தேயம்** *(பெ.) – 1.இடம் (அக.384:4). 2.நாடு (புற.217:10-11).*

**தேயாமண்டிலம்** *(பெ.) – தேய்ந்து குறையாத கதிரவன் மண்டிலம் (பரி.17:32).*

**தேர் தல்** *(வி.) – 1.ஆராய்தல் (குறள்.541). 2.ஐங்குறுதல் (குறள்.144). 3.தேடுதல் (ஐங்.162).*

**தேர்** *(பெ.) – 1.உருளி, தேர் (குறள்.496). 2.சிறுதேர் (அக.16). 3.கானல் (கலி.24). 4.ஊர்தி வகைகளுள் ஒன்று (குறு.12:3-4). 5.சிறுவர் உருட்டும் வண்டி (நற்.250:3).*

**தேர்க்கால்** *(பெ.) – குயவன் சக்கரம் (புற.32).*

**தேர்வண்மை** *(பெ.) – புலவர் முதலியோர்க்கு அரசர் அளிக்குந் தேர்க் கொடை (புற.118).*

**தேரறேர்** *(பெ.) – கானல்நீர், பேய்த்தேர் (கலி.13:4).*

**தேரை** *(பெ.) – தவளை (கலி.147).*

**தேரோன்** *(வி.) – தேரையுடைய தலைவன் (குறு.227:2-4).*

**தேற்றம்** *(பெ.) – 1.கலங்காமை (குறள்.513). 2.தெளியப்படுதல் (குறள்.766).*

**தேறல்** *(பெ.) – 1.கள்ளின் தெளிவு (நற்.388:8). 2.தெளிவு (அக.231:1). 3.தெளிதல் (குறள்.825).*

**தேற்றா** *(பெ.) –* தேற்றாமரம், தேத்தான் கொட்டை மரம் *(கலி.142).*

**தேற்று தல்** *(வி.) – 1.தெளிவித்தல் (கலி.144). 2.சூளுறுதல் (கலி.71). 3.தெளிந்தறிதல் (குறள்.1054).*

**தேற்றுதல்** *(பெ.) – தெளிவித்தல் (குறள்.613).*

**தேறப்படும்** *(வி.) – தெளியப்படும் (குறள்.501).*

**தேறு தல்** *(வி.) – தெளிதல் (குறள்.589).*

**தேறு** *(பெ.) – கொட்டுகை (பதி.71:6).*

**தேறுவது** *(பெ.) – தெளியும் தன்மை (கலி.113:20-1).*

**தேன்** *(பெ.) –* தேனிறால் *(ஐங்.272).*

**தேனிறால்** *(பெ.) –* தேனைச் சேர்த்து வைக்க மெழுகால் தேனீக்கள் செய்யும் கூடு *(ஐங்.214).*

**தை த்தல்** *(வி.) – 1.ஒப்பனை செய்தல் (கலி.27:19). 2.பதித்தல் (கலி.4).*

**தைப்பு** *(வி.) – 1.தைத்தல் (பரி.21:3). 2.அழுத்துதல் (பரி.21:3).*

**தையல்** *(பெ.) – 1.பெண் (அக.205:3). 2.கட்டழகி (புற.345:10-11). 3.அழகு (கலி.147:70).*

**தைவரல்** *(வி.) – தடவுதல் (குறு.55:3).*

**தொகல்** *(வி.) – ஒடுங்குதல் (கலி.129:1).*

**தொகு தல்** *(வி.) – வீணாதல் (கலி.286).*

**தொகுத்த** *(வி.) –* சேர்த்த *(குறு.372:2).*

**தொகுத்து** *(வி.) – திரட்டி (அக.329:7).*

**தொகை** *(பெ.) – 1.கூட்டம் (நற்.111:2). 2.எண் (அக.301:22). 3.குழு (குறள்.711). 4.தொகுத்துச் சொல்லுதல் (கலி.39:47).*

**தொடல்** *(பெ.) – 1.தீண்டுதல் (கலி.55:19). 2.தோய்தல் (ஐங்.33:7). 3.தீண்டுதல் (கலி.55:19).*

**தொடலை** *(பெ.) – 1.மாலை (குறள்.1135). 2.மணிக்கோவைகளால் தொடுக்கப்பட்ட மேகலை (புற.339). 3.தழையுடை (புற.271:3-4).*

**தொடர்** *(பெ.) – 1.நட்பு (குறள்.440). 2.சார்பு (கலி.97:18).*

**தொடர்தல்** *(வி.) – வழிச்செலவு (பரி.19:30).*

**தொடர்பு** *(பெ.) – 1.நட்பு (குறு.42:1-4). 2.இடையறாது வருதல் (நற்.116:8-9). 3.தொடர்ச்சி உறவு (குறள்.73).*

**தொடி** *(பெ.) – 1.கைவளை (புற.77). 2.பூண் (புற.243). 3.எடையளவு (குறள்.103). 4.வீரவளை (குறு.1:3). 5.தோள்வளை (குறு.367:2).*

**தொடிமகள்** *(பெ.) – விறலி (கலி.36:4).*

**தொடு தல்** *(வி.) – 1.தீண்டுதல் (குறள்.1149). 2.அணிதல் (கலி.84:23).*

**தொடு த்தல்** *(வி.) – 1.எய்தல் (கலி.120). 2.சேர்த்துவைத்தல் (கலி.40). 3.வளைத்தல் (புற.164). 4.வளைத்துக் கை கொள்ளுதல் (புற.135).*

**தொடுகடல்** *(பெ.) – கீழ்க்கடல் (புற.6).*

**தொடுத்தல்** *(வி.) – வளைத்தல் (புற.275:2).*

**தொடுத்தாள்** *(பெ.) – கட்டினாள் (பரி.11:103).*

**தொடுதல்** *(வி.) – முகந்து கொள்ளல் (புற.258:8-9).*

**தொடுதோல்** *(பெ.) – செருப்பு (அக.34:3).*

**தொடை** *(பெ.) – 1.கட்டுகை (கலி.37). 2.சந்து (புற.78). 3.தொடுத்தல் (குறு.62:3). 4.கட்டு (நற்.17:10-11). 5.தாம்பு (அக.49:4).*

**தொண்டியோர்** *(பெ.) – சேரர் (பதி.88).*

**தொய் தல்** *(வி.) – வினை செய்தல் (புற.214).*

**தொய்யகம்** *(பெ.) – தலைக்கோலத்தின் ஓர் உறுப்பு (கலி.28).*

**தொய்யாவுலகம்** *(பெ.) – துறக்கம் (புற.214:9).*

**தொய்யில்** *(பெ.) – மகளிர் மார்பகங்களிலும் தோளிலும் எழுதுங் கோலம் (கலி.111:14).*

**தொல்லை** *(பெ.) – பழமை (குறள்.806).*

**தொலைதல்** *(பெ.) – 1.அழிதல் (அக.229:14). 2.தோற்றல் (புற.76:1).*

**தொழுநர்** *(பெ.) – வணங்குநர் (பரி.8:102).*

**தொழுவம்** *(பெ.) – மாட்டுக் கொட்டில் (குறு.190:5-7).*

**தொழுவர்** (பெ.) – 1.தொழில் செய்வோர் (நற்.195:6). 2.உழவர் (புற.24:1).

**தொன்று** (பெ.) – 1.பழைமை (குறு.64:3). 2.பழங்காலம் (நற்.109:1).

**தோகை** (பெ.) – 1.மயில் (குறு.26:1-3). 2.நெல்லின் தோடு (அக.13:18-9). 3.வால் (அக.122:8).

**தோய்தல்** (பெ.) – செறிதல் (கலி.103:66-7).

**தோய்வு** (வி.) – 1.படிதல் (குறு.102:2-3). 2.பொருந்துவது (புற.21:3). 3.தீண்டுதல் (குறள்.308). 4.கிட்டுதல் (பரி.7:13).

**தோயல்** (வி.) – தோய்ந்து விடுதல் (கலி.110:19).

**தோல்** (பெ.) – 1.மரப்பட்டை (குறு.79:1-2). 2.உறை (புற.98:10).

**தோளினர்** (பெ.) – தோளை உடையவர் (குறு.326:1-2).

**தோற்றம்** (வி.) – 1.தோன்றுதல் (குறு.263:3). 2.வடிவம் (அக.399:13-4). 3.உயர்ச்சி (குறள்.133). 4.வெளிப்படல் (பரி.4:20).

**தோன்றல்** (பெ.) – 1.ஆடவருட் சிறந்தோன் (நற்.267:12). 2.தலைவன் (அக.300:18).

**தோன்றி** (பெ.) – ஒரு வகைப் பூ (குறு.107:1-2).

**தோன்றியோன்** (பெ.) – காட்சிப்பட்டேன் ஆயினேன் (புற.397:11).

**தோன்றினும்** (வி.) – 1.காணப்பட்டாலும் (குறு.373:2). 2.உண்டாயினும் (நற்.201:9).

**தோன்று** (வி.) – 1.உதிக்கும் (நற்.230:4). 2.விளங்கும் (அக.39:13). 3.பிறக்க (குறள்.236).

**தோன்றுவன்** (வி.) – காணப்படுவன் (புற.86:6).

**நக்கல்** (வி.) – 1.சிரித்தல் (குற.169:2-3). 2.நாவினால் தடவல் (அக.287:10). 3.மலர்தல் (ஐங்.151).

**நக்கு தல்** (வி.) – 1.சிரித்தல் (குறு.401). 2.மகிழ்தல் (புற.212:10). 3.விளங்குதல் (பரி.1:21).

**நகர்** (பெ.) – 1.வீடு (குறு.234:4). 2.மாளிகை (அக.15:11). 3.கோயில் (புற.6:18). 4.பேரூர் (புற.68:17). 5.அரசர் கோயில், அரண்மனை (புற.127:10). 6.மனைவி (கலி.8:22).

**நகல்** (பெ.) – 1.நட்பு (குறள்.860). 2.மகிழ்தல் (குறள்.999). 3.ஒளி (143:2-3).

***நகில்*** *(பெ.) – முலை (பரி.6:18).*

***நகுதல்*** *(வி.) – 1.மகிழ்தல் (அக.151:3). 2.சிரித்தல் (குறள்.784).*

***நகும்*** *(வி.) – 1.சிரிக்கும் (குறு126:3-5). 2.மகிழும் (குறள்.774). 3.புன்முறுவல் கொள்கிறாள் (குறள்.1098).*

***நகுவன*** *(வி.) – சிரிப்பன (கலி.33:16).*

***நகுவை*** *(வி.) – சிரிப்பாய் (குறு.162:3-6).*

***நகை*** *(பெ.) – 1.விளையாட்டு மொழி (குறு.96:1-4). 2.மகிழ்ச்சி (குறு.111:5-7). 3.சிரிப்பு (குறு.292:6-8). 4.எள்ளல் (நற்.129:1). 5.இகழப்படுதல் (நற்.150:1). 6.விளக்கம் (நற்.267:3). 7.இன்பம் (அக.121:1). 8.புன்னகை (அக.162:13). 9.ஒளி (அக.244:14). 10.எள்ளத்தக்க செயல் (அக.248:1). 11.முகமலர்ச்சி (குறள்:953). 12.முத்துமாலை (கலி.92:33). 13.பல் (கலி.72:12). 14.மலர்ச்சி (பரி.8:74). 15.மலர் (பரி.13:15). 16.சுடர் (பரி.21:55).*

***நச்சு*** *(பெ.) – நஞ்சு (விடம்) (குறள்.1008).*

***நசை*** *(பெ.) – 1.விருப்பம் (குறு.37:1). 2.ஆர்வம் (அக.163:5). 3.வேட்கை (அக.362:8). 4.காதல் (அக.362:8). 5.ஆசை (புற.377:20).*

***நஞ்சு*** *(பெ.) – விடம் (விஷம்) (குறு.324:6-7).*

***நட்டல்*** *(பெ.) – நட்புச்செய்தல் (குறள்.784).*

***நட்பு*** *(பெ.) – 1.தொடர்பு (குறு.385:5-6). 2.கூட்டம் (குறு.209-7). 3.உறவு (நற்.64:3). 4.கேண்மை (நற்.354:11). 5.அன்பு (புறம்.380:11). 6.புணர்தல் (பரி.20:108).*

***நடத்தல்*** *(வி.) – நடத்தலைச் செய்தல் (புற.157:4).*

***நடலை*** *(பெ.) – வஞ்சனை (கலி.95:33).*

***நடன்*** *(பெ.) – கூத்தன் (பரி.22:42).*

***நடு*** *(பெ.) – 1.இடைப்பகுதி (குறு.69:5-6). 2.நடுதல் தொழில் (குறு.262:7). 3.நடுமுற்றம் (நற்.115:6). 4.நடுநிலை (அக.25:7). 5.நடுநிலையாக நிற்றல் (பரி.21:25).*

***நடுக்கம்*** *(பெ.) – துன்பம் (நற்.318:4).*

***நடுக்கு*** *(பெ.) – 1.அச்சம் (புற.2:20). 2.தடுமாற்றம் (புற.58:5). 3.நடுக்கமான மொழிகள் (கலி.146:2).*

***நடுக்குற்று*** *(வி.) – தளர்ந்து (புற.243:12).*

**நடுகல்** *(பெ.) – 1.போரில் இறந்துபட்டோரின் பெயரும், பீடும் பொறித்து நட்ட கல் (அக.53:10-1). 2.நடப்பட்ட கல் (புற.223:3).*

**நடுகால்** *(பெ.) – நட்டகால் (நற்.285:7).*

**நடுங்க** *(வி.) – 1.அசைய (குறு.317:1-3). 2.நடுங்குமாறு (நற்.39:4). 3.செயலை ஏற்றுத்தலையசைத்து (புற.145:6).*

**நடுங்கல்** *(பெ.) – 1.அஞ்சுதல் (குறு.52:2-3). 2.மனங்கலங்குதல் (குறு.52:2-5).*

**நடுங்குதல்** *(வி.) – 1.மனங்கலங்குதல் (குறு.76:2-6). 2.ஆடுகின்ற, அசைகின்ற (குறு.132:4). 3.அடைகின்ற (புற.319:10).*

**நடுதல்** *(வி.) – 1.பயிர் செய்தல் (குறு.361:4-6). 2.காட்சி கால்கோள் நீர்ப்படை (தொல்.20:5).*

**நடுநர்** *(பெ.) – நடுவோர் (நாற்றுநடுவோர்) (நற்.60:8).*

**நடுநாள்** *(பெ.) – 1.பாதி இரவு (குறு.69:5-6). 2.நண்பகல் (புற.280:2).*

**நடுவு** *(பெ.) – 1.இடையே (புற.35:18). 2.செம்மை (பதி.89:7-8).*

**நடை** *(வி.) – 1.நடத்தல் (குறு.85:2). 2.நிலை (குறு.115:5). 3.செலவு (புற.105:4).*

**நண்ணார்** *(பெ.) – 1.பகைவர் (நற்.39:7-9). 2.மாறுபட்டவர் (புற.47:8).*

**நண்ணு தல்** *(வி.) – 1.நெருங்குதல் (குறு.203:3-5). 2.அடைதல் (குறு.346:2). 3.பொருந்துதல் (அக.146:4).*

**நண்பு** *(பெ.) – நட்பு (புறம்.29:21).*

**நணி** *(பெ.) – 1.அண்மை (பக்கம்) (நற்.101:5). 2.அணிமை இடம் (புற.154). 3.குறுகி (அக.380:2).*

**நத்தம்** *(பெ.) – ஆக்கம் (குறள்.235).*

**நந்து** *(பெ.) – நத்தை (நற்.280:7).*

**நந்தும்** *(வி.) – 1.கெடும் (புற.119-4). 2.தழைக்கும் (புற.184:6).*

**நம்புதல்** *(பெ.) – விரும்புதல் (நற்.327:1).*

**நமர்** *(பெ.) – 1.நம்மைச் சேர்ந்த தலைவர் (குறு.183:4). 2.பெற்றோர் (குறு.351:4-5). 3.நம் சுற்றத்தினர் (நற்.393-10). 4.நம் காதலர் (அக.241:5).*

**நயத்தல்** *(வி.) – 1.விரும்புதல் (குறு.346:1). 2.ஒழுகுதல் (கடைப்பிடித்தல்) (நற்.375-4).*

**நயப்பு** *(பெ.) – 1.விருப்பம் (குறு.219:1-2). 2.அன்பு (அக.344:14).*

**நயம்** *(பெ.) – 1.அன்பு (நற்.68:7). 2.இன்பம் (புற.145:6).*

**நயவன்** *(பெ.) – சுவைஞன் (இரசிகன்) (அக.212:6-7).*

**நயவார்** *(பெ.) – விரும்பார் (குறு.60:4-6).*

**நயன்** *(பெ.) – 1.அன்பு (குறு.143:4-5). 2.நன்மை (நற்.75:1-2). 3.விருப்பம் (நற்.90:11). 4.கலந்த உறவு (நற்.160:1). 5.நியாயம் (புற.227:1). 6.பயன் (பதி.2:8). 7.நீதி (குறள்.97). 8.ஒப்புரவு (குறள்.216). 9.ஒழுகலாறு (குறள்.912). 10.பிறரால் விரும்பப்படுதல் (குறள்.994).*

**நரத்தம்** *(பெ.) – 1.நரத்தப்பூ (குறு.52:3). 2.நாரத்தை (அகம்.14:26). 3.மணம் மிகுந்த புல் (அக.266:4).*

**நரம்பு** *(பெ.) – 1.யாழ் நரம்பு (நற்.139:4). 2.தசைநார் (புற.278:1).*

**நரல்** *(வி.) – ஒலித்தல் (நற்.62:1).*

**நரை** *(பெ.) – 1.பெருமை (குறு.190:5). 2.வெண்மை (குறு.249:2). 3.வெளுத்த மயிர் (அக.254:1).*

**நல்கு தல்** *(வி.) – 1.தருதல் (புற.389:15). 2.தலையளி செய்தல் (குறு.369:3-4).*

**நல்குமதி** *(வி.) – நல்குவாயாக (புற.369:27).*

**நல்கூர் தல்** *(வி.) – 1.வறுமையுறுதல் (குறு.86:6). 2.மெலிதல் (நற்.93:8). 3.செயலறுதல் (செயற்படாதிருத்தல்) (நற்.178:3).*

**நல்லார்** *(பெ.) – 1.கற்றவர் (குறள்.408). 2.பெரியார் (குறள்.440).*

**நல்லை** *(பெ.) – 1.நல்வியல்பினள் (குறு.47:3-4). 2.நன்மை உடையவள் (அக.248:16).*

**நல்வலம்** *(பெ.) – 1.நற்றிறம் (அக.34:10). 2.சிறந்த வெற்றிகள் (அக.36:20). 3.வலப் பக்கம் (புற.190:9).*

**நல்வினை** *(பெ.) – 1.அறவினை (புற.214:1). 2.அறம் (குறள்.335).*

**நலக்கு** *(பெ.) – நன்மைக்கு (குறள்.149).*

**நலம்** *(பெ.) – 1.அழகு (குறு.74:4-5). 2.நன்மை (குறு.256:3-4). 3.இன்பம் (அக.67:18). 4.சிறப்பு (அக.358:4-5).*

***நலி தல்*** *(வி.) – வருத்துதல், பிறர்க்கு இன்னா செய்து நெருங்குதல் (தொல்.24-12).*

***நலிய*** *(பெ.) – துன்புறுத்த (நற்.61:2-3).*

***நவ்வி*** *(பெ.) – மான் (குறு.282:1-3).*

***நவி*** *(பெ.) – கோடரி (புற.270:12).*

***நவிரல்*** *(பெ.) – குலைதல் (அக.1:16).*

***நவில்*** *(வி.) – 1.கற்றல் (குறள்.783). 2.முழங்கு (குறு.86:3-6). 3.ஒலிக்கின்ற (நற்.42:4). 4.பயின்ற (நற்.48:7).*

***நவின்ற*** *(வி.) – 1.பழகிய (அக.160:11). 2.கலந்த (புற.382:8).*

***நவை*** *(பெ.) – 1.துன்பம் (குறு.107:2-5). 2.கொலை (புற.23:4).*

***நள்*** *(பெ.) – 1.செறிவு (குறு.107:3-4). 2.நடு (நற்.122:5).*

***நள்ளா*** *(வி.) – பொருந்தாதது (குறள்.912).*

***நளி*** *(பெ.) – 1.பெருமை (புற.109:2). 2.மிக்க (அக.65:11). 3.பெரிய (அக.132:9). 4.குளிர்ந்த (புற.136:12). 5.செறிவு (குறு.274:1-2).*

***நளிர்*** *(பெ.) – 1.குளிர்ச்சி (நற்.257:2). 2.செறிவு (அக.228:3).*

***நறவு*** *(பெ.) – கள், தேன் (குறு.394:2).*

***நறா*** *(பெ.) – கள் (குறள்.1081).*

***நறு*** *(பெ.) – நல்லமணம் (குறு.59:3-4).*

***நறும்*** *(பெ.) – 1.மணமுள்ள (குறு.192:5) (குறு.339:1). 2.நல்ல (குறு.339:1).*

***நறை*** *(பெ.) – 1.நறுமணம் (குறு.339:1). 2.ஒரு வகைக் கொடி (நற்.5:3). 3.தேன் (நற்.302:5).*

***நன்கு*** *(பெ.) – 1.நன்மை (புற.156:1). 2.பயன் (குறள்.535). 3.நன்றாக, (குறு.213:1). 4.நல்ல (நற்.341). 5.மிக (புற.152:9). 6.நிலைபெற (குறள்.513). 7.தெரிய (குறள்.1046).*

***நன்மை*** *(பெ.) – 1.புலமை (புற.308:3). 2.நல்வினை (தொல்.19:39). 3.பயன் (குறள்.103). 4.நற்குணம் (குறள்.194). 5.அறம் (குறள்.292).*

***நன்றி*** *(பெ.) – 1.உதவி (குறு.225:5-7). 2.நன்மை (நற்.188:6). 3.அறம் (நற்.330:10).*

**நன்று** (பெ.) – 1.நன்மை (குறு.78:5). 2.உதவி (குறு.115:1). 3.நல்லதோர் (நற்.164:4). 4.ஆக்கம் (அக.113:1). 5.நல்லன (அக.259:8). 6.அறம் (அக.398:9). 7.நல்வினை (புற.213:32). 8.அன்பு (புற.361:6). 9.அருள் (குறள்.253). 10.இன்பம் (குறள்.932). 11.உறுதி (குறள்.1012).

**நன்னர்** (வி.) – 1.நல்ல (குறு.265:6). 2.நன்றாக (நற்.365:8). 3.நன்கு (அக.49-8). 4.நன்றாகிய (அக.115:6).

**நனந்தலை** (பெ.) – அகன்றஇடம் (குறு.6:3).

**நனம்** (பெ.) – அகற்சி (அக.65:13).

**நனவு** (பெ.) – களம் (அக.82:10).

**நனி** (உரி.) – 1.மிக (குறு.51:3-4). 2.மிகுதி (தொல்.17:3).

**நனை** (பெ.) – 1.அரும்பு (குறு.53:2). 2.கள் (அக.331:12).

**நனை** (வி.) – 1.ஈரமான (அக.313:1-2). 2.நனைந்த (அக.227:2).

**நா** (பெ.) – 1.நாக்கு என்னும் உறுப்பு (குறு.14:1). 2.மணியின் ஒலிக்கும் உறுப்பு (குறு.336:3).

**நாகம்** (பெ.) – 1.நாகமரம் (நற்.82:6). 2.யானை (அக.73:12). 3.பாம்பு (அக.138:17). 4.நாகவுலகம் (புற.367:1).

**நாகரிகம்** (பெ.) – கண்ணோட்டம் (குறள்.579).

**நாகரிகர்** (பெ.) – கண்ணோட்டம் உடையவர் (நற்.355:7).

**நாஞ்சில்** (பெ.) – 1.கலப்பை (அக.42:5). 2.மலையின் பெயர் (புற.137:12).

**நாட்கொடி** (பெ.) – நாள்தொறும் பெறும் வெற்றிக்குக் குறியாக எடுக்கப்படும் கொடி (புற.341:5).

**நாட்செருக்கு** (பெ.) – காலையில் உண்ட கள் மயக்கம் (புற.316:3).

**நாட்சோறு** (பெ.) – காலையுணவு (புற.379:9).

**நாட்டம்** (பெ.) – 1.ஆராய்ச்சி (புற.35:14). 2.கண்கள் (புற.62:16). 3.நிலைபெறுதல் (தொல்.19:44). 4.நோக்கம் (தொல்.21:5). 5.நாட்டுதல் (தொல்.21:19). 6.ஆராய்தல் (தொல்.21:33).

**நாட்டார்** (பெ.) – நாட்டிலுள்ளோர் (குறு.278:4:6).

**நாட்டி** (வி.) – 1.அமர்த்துதல் (புற.71:8). 2.பணி அமர்த்தி (புற.71:அ).

**நாட்டிய** (வி.) – 1.ஏற்றிய, ஒளிச்சுடர் ஏற்றிய (அக.114:10). 2.நாட்டப்பட்ட, நிறுவப்பட்ட (அக.211:10).

***நாட்டு தல்*** *(வி.) – 1.நாள்களையுடையது (குறு.55:3-5). 2.ஊன்றுதல், வேலியமைத்தல் (குறு.245:3-4).*

***நாடல்*** *(வி.) – ஆராய்தல் (நற்.327:1).*

***நாடு*** *(பெ.) – 1.உலகம் (குறு.101:1). 2.தேடுதல் (குறு.170:2-3). 3.தேசம் (நற்.282:9).*

***நாடு தல்*** *(வி.) – 1.ஆராய்கின்ற (குறு.170:3). 2.நாடிச் சென்று விளையாடும் (அக.6:9).*

***நாண்*** *(பெ.) – 1.வெட்கம் (குறு.35:1-5). 2.தூண்டிற் போல் கயிறு (அக.216:1). 3.கயிறு (குறு.67:1-4). 4.விற்கயிறு (புற.369:8). 5.இழி தொழில்களில் மனம் செல்லாமை (குறள்.502). 6.பழிபாவங்களில் மடங்குதல் (குறள்.951).*

***நாணல், நாணுதல்*** *(வி.) – 1.புல் வகைகளுள் ஒன்று (அக.217:4-5). 2.உள்ளம் அழிந்து நாணுதல் (தொல்.24:16).*

***நாப்பண்*** *(பெ.) – நடு, இடை (நற்.16:5).*

***நாம்*** *(பெ.) – அச்சம் (நற்.133:7).*

***நாம*** *(பெ.) – அச்சத்தைத்தரும் (நற்.132:7).*

***நாமம்*** *(பெ.) – அச்சம் (அக.235:14).*

***நாய்*** *(பெ.) – மாந்தனை அண்டிச் சில வீடுகளில் வாழும் விலங்கு (குறு.14:5-6).*

***நார்*** *(பெ.) – 1.பட்டை (குறு.112:3-5). 2.அன்பு (குறு.118:1-2). 3.பன்னாடை (அக.36:17). 4.கயிறு (அக.83:6). 5.கோது (புற.170:12). 6.பனைமடல் நார் (புற.370:2). 7.ஈரம், இரக்கம் (குறள்.833). 8.நீர்மை, ஒழுக்கம் (குறள்.958).*

***நாரை*** *(பெ.) – நீர்ப்பறவைகளுள் ஒரு வகை (குறு.103:3-4).*

***நால்*** *(பெ.) – நான்கு (குறு.15:3).*

***நால்*** *(வி.) – தொங்குகின்ற (அக.156:14).*

***நால்கு*** *(பெ.) – நான்கு (பெயர்த் திரிசொல்) (அக.104:6).*

***நாவல்*** *(பெ.) – ஒரு பழவகை (நற்.35:2).*

***நாவாய்*** *(பெ.) – கப்பல் (நற்.295:6).*

***நாழி*** *(பெ.) – முகத்தல் அளவு அளவை (புற.189:5).*

**நாள்** *(பெ.) – 1.ஒரு நாள் பொழுது (குறு.11:1-3). 2.இரவு (குறு.69:5-6). 3.விடியல் (குறு.104:2-3). 4.காலம் (குறு.104:2-3). 5.நாள்கள் (குறு.104:4-5). 6.ஞான்று (குறு.115-6). 7.யாமம் (குறு.141:7). 8.அலர்ந்த செவ்வி (குறு.270:8). 9.இருள் (நற்.153:5). 10.வேனில் (அக.25:12). 11.ரோகினி என்னும் விண்மீன் (அக.86:7). 12.பகற்பொழுது (அக.257:2). 13.பருவம் (அக.335:17). 14.காலை (அக.93:10). 15.விண்மீன் (புற.24:24). 16.நாள்தோறும் (புற.102:7). 17.நாள் (புற.123:2). 18.வாழ்நாள் (புற.294:6).*

**நாவினன்** *(பெ.) – நாள்களை உடையவன் (குறு.230:4-5).*

**நாளேம்** *(பெ.) – நாள் உடையம் ஆயினம் (குறள்.1278).*

**நாற்றம்** *(பெ.) – 1.மணம் (குறு.182:1-3). 2.துர்க்கந்தம் (நற்.326:3).*

**நாற்று** *(பெ.) – இளம் பயிர் (குறு.282:3).*

**நாற** *(வி.) – மணம் வீச (குறு.312:1-4).*

**நாறிய** *(வி.) – 1.முளை தோற்றிய (நற்.278:1). 2.முளைத்த (புற.116:6).*

**நாறு** *(பெ.) – 1.நாற்றுமுடி (நற்.60:7). 2.மணம் வீசும் (குறு.59:3). 3.தோன்றும் (அக.7:10).*

**நிகர்த்தல்** *(வி.) – மாறுபடுதல் (ஐங்.62).*

**நிகர்** *(பெ.) – ஒளி (அக.11).*

**நிகர்மலர்** *(பெ.) – 1.புதுப்பூ (அக.371). 2.ஒளியையுடைய பூ (குறு.311).*

**நிகரிடு தல்** *(வி.) – ஒப்பிடுதல் (ஐங்.67).*

**நிகழும்** *(வி.) – செல்லுகின்ற (பரி.6:43).*

**நிச்சிதம்** *(பெ.) – உறுதி (புற.194).*

**நிணஞ்சுடுபுகை** *(பெ.) – 1.கொழுப்பைத் தீயிவிடுவதால் ஏற்படும் புகை (நற்.43:32).*

**நிணந்தவை** *(பெ.) – தெற்றினமாலை (பரி.19:80).*

**நிணமூரி** *(பெ.) – நிணத்தின் துண்டம் (புற.394).*

**நித்திலமதாணி** *(பெ.) – ஒருவகை அணிகலன் முத்துமாலை (பரி.2:30).*

**நிமிர்தல்** *(வி.) – இடையிடுதல் (பரி.19:82).*

***நிமிரல்*** *(பெ.) – சோறு (நற்.258).*

***நிரந்தவர்*** *(பெ.) – கூடியொழுகுவார் (குறள்.821).*

***நிரந்து*** *(பெ.) – 1.நிரல்படக்கோத்து (குறள்.648). 2.வரிசையுற்று (குறு.52).*

***நிரப்படுபுணை*** *(பெ.) – வறுமையைக் கடத்தற்குரிய தெப்பம் (புற.376).*

***நிரப்பு*** *(பெ.) – வறுமை (குறள்.1048).*

***நிரம்பாநோக்கு*** *(பெ.) – இடுக்கிப் பார்க்கும் பார்வை (அக.67).*

***நிரம்பாமேனி*** *(பெ.) – முற்ற வளராத உடல் (குறு.33).*

***நிரம்பு தல்*** *(வி.) – முடிவுறுதல் (கலி.12).*

***நிரல்*** *(பெ.) – ஒப்பு (புற.345).*

***நிலங்கொள்பாம்பு*** *(பெ.) – நிலத்திலிருக்கும் பாம்பு (குறு.134).*

***நிலத்தோர்*** *(பெ.) – மாந்தர் (பரி.19:4).*

***நிலத்திரைத்தானை*** *(பெ.) – நில அகலத்தைத் தன்னுள்ளே அடக்கிய தானை (புற.96).*

***நிலம்*** *(பெ.) – 1.நீரும் நிலமும் சேர்ந்த உலகம் (பதி.63:6). 2.நிலமகள் (குறள்.1040).*

***நிலை*** *(பெ.) – 1.நிற்கை (புற.23). 2.இடம் (பரி.2:27). 3.ஒழுக்கநெறி (குறள்.124).*

***நிலைமக்கள்*** *(பெ.) – போரின்கண் பின்வாங்காது நிலைத்து நிற்கும் மறவர் (குறள்.770).*

***நிலைமை*** *(பெ.) – இயல்பு (குறள்.273).*

***நிலையாப்பொருட்பிணி*** *(பெ.) – நிலையுதலில்லாத பொருட்பற்று (குறு.350).*

***நிலையாமை*** *(பெ.) – உறுதியாயிராமை (குறள்.34).*

***நிழத்து தல்*** *(வி.) – முன்னுள்ள நிலையினின்றும் நுணுகுதல் (பரி.10:3).*

***நிறம்*** *(பெ.) – 1.தோல் (புற.13:2). 2.மார்பு (கலி.57).*

***நிறு த்தல்*** *(வி.) – தீர்மானித்தல் (கலி.31:23).*

***நிறுத்தல்*** *(வி.) – தடுத்தல் (அக.342).*

***நிறுத்து தல்*** *(வி.) – நிமிர நிற்கச் செய்தல் (அக.37).*

***நிறை*** *(பெ.) – மனத்தைக் கற்புவழியில் நிறுத்துகை (குறள்.57).*

***நிறைந்தன்று*** *(பெ.) – நிறைந்தது (பரி.12:93).*

***நிறைமதி*** *(பெ.) – முழுநிலவு, முழுத்திங்கள் (பரி.3:52).*

***நிறையருந்தானை*** *(பெ.) – நிறுத்தற்கரிய படை (புற.156).*

***நிறையுடைமை*** *(பெ.) – சால்புடைமை (குறள்.154).*

***நின்று*** *(வி.) – எப்பொழுதும் (பரி.15:7).*

***நினைத்தல்*** *(வி.) – கருதுதல் (குறள்.1209).*

***நீத்தல்*** *(வி.) – 1.பிரிதல் (ஐங்.22). 2.துறத்தல் (குறள்.21). 3.விடுதல் (குறள்.969).*

***நீங்குதல்*** *(வி.) – பிரிதல் (குறள்.1104).*

***நீட்டியளத்தல்*** *(வி.) – எஞ்சாது அளத்தல், குறைவற அளத்தல் (குறள்.706).*

***நீடுதல்*** *(பெ.) – காலம் நீட்டித்தல் (பரி.14:9).*

***நீடு*** *(பெ.) – 1.கெடும்பொழுது (அக.358). 2.நிலைத்திருக்கை (குறள்.566).*

***நீண்மொழி*** *(பெ.) – வீரனொருவன் செய்த வஞ்சினங் கூறும் புறத்துறை (புற.287).*

***நீணகர்*** *(பெ.) – நீண்ட பெருமனை (பதி.68:16).*

***நீணிரை*** *(பெ.) – நெடும்பிணக்குவை (பதி.36:11).*

***நீத்தம்*** *(பெ.) – நீந்துவதற்குரிய அழகிய இடம் (பரி.11:53).*

***நீத்துநீர்*** *(பெ.) – நீந்துவதற்குரிய ஆழ்ந்த நீர் (குறு.313).*

***நீத்தோர்*** *(பெ.) – பிரிந்தோர் (குறு.211).*

***நீந்துதல்*** *(வி.) – 1.கடத்தல் (குறள்.10). 2.கழித்தல் (அக.50).*

***நீர்*** *(பெ.) – 1.ஐம்பூதங்களிலொன்றான நீர் (புற.2). 2.குணம் (குறள்.527). 3.தன்மை (புற.9).*

***நீர்க்கால்*** *(பெ.) – வாய்க்கால் (கலி.56).*

***நீர்ச்சண்டை*** *(பெ.) – புனற்பூசல், நீர் விளையாட்டாலுண்டாகும் சண்டை (புற.42).*

***நீர்ச்சுரம்*** *(பெ.) – கப்பல் செல்லும் பாதை கடல்வழி, கடல்நெறி (குறு.304).*

**நீர்ச்சுழி** *(பெ.) – தண்ணீரிலுண்டாகும் சுழி (கலி.140).*

**நீர்ச்சோறு** *(பெ.) – நீர்கலந்த பழைய சோறு (புற.246).*

**நீர்த்துளி** *(பெ.) – சொட்டு (புற.160).*

**நீர்தருபூசல்** *(வி.) – நீர் விளையட்டிலெழும் ஆரவாரம் (பதி.22:29).*

**நீர்நாய்** *(பெ.) – நீரில் வாழும் ஒரு நாய்வகை (குறு.364).*

**நீர்மலிகண்** *(பெ.) – துன்பத்தாலே நீர் பெருகும் கண் (குறு.105).*

**நீர்மை** *(பெ.) – 1.நீரின் தன்மை (குறள்.17). 2.சிறந்த குணம் (குறள்.196).*

**நீர்மை** *(பெ.) – பண்பு (பரி.8:73).*

**நீர்வாய்ப்பத்தல்** *(பெ.) – நீருள்ள கிணறு (பதி.22:13).*

**நீர்வார்கூந்தல்** *(பெ.) – ஈரத்தலை முடி (குறு.).*

**நீரகம்** *(பெ.) – நீர்நிலை (புற.366:18).*

**நீரணை** *(பெ.) – நீரை எதிர்நின்று தடுக்கும் கல் (புற.263).*

**நீரத்தம்** *(பெ.) – நீரையுடைய வழி (குறு.230).*

**நீரவர்** *(பெ.) – அறிவுடையவர் (குறள்.782).*

**நீரழிபாக்கம்** *(பெ.) – தம் நீர்மையழிந்த பேரூர் (பதி.13:12).*

**நீரில்வறுங்கயம்** *(பெ.) – நீரில்லாத வறிய குளம் (குறு.215).*

**நீரில்வைப்பு** *(பெ.) – நீரற்ற பாலைநிலம் (குறு.211).*

**நீரிலாறு** *(பெ.) – நீரற்ற வழி (குறு.283).*

**நீருறைமகன்றில்** *(பெ.) – நீரில் வாழும் மகன்றிற் பறவை (குறு.57).*

**நீரெக்கி** *(பெ.) – நீரேற்றி (பரி.10:12).*

**நீரொடுசொரிந்தமிச்சில்** *(பெ.) – நீரொடு தானம் செய்தெஞ்சிய பொருள் (குறு.233).*

**நீல்** *(பெ.) – 1.நீலம் (பரி.11:124). 2.கருங்குவளை (கலி.33:28).*

**நுகம்** *(பெ.) – 1.நடுநிலை (குறு.80:4-5). 2.வலிமை (பதி.63:14-5). 3.பாரம் (சிறு.113).*

**நுகர்ச்சி** *(பெ.) – 1.பட்டறிவு (புற.38:16-7). 2.உண்ணுகை (கலி.35:1-2). 3.பேரின்பம் (பரி.19:3-4).*

**நுகரும்** *(வி.) – துய்க்கின்ற (அக.37:17-8).*

**நுகும்பு** *(பெ.) – குருத்து (குறு.308:1).*

**நுங்கு** *(பெ.) – பனங்காயின் உள்ளீடு (குறு.393:1-4).*

**நுசுப்பு** *(பெ.) – இடை (இடுப்பு) (குறு.71:3-4).*

**நுட்பம்** *(பெ.) – நுண்மை (குறள்.636).*

**நுடக்கம்** *(வி.) – 1.அசைவு (நற்.15:2). 2.கூத்து (கலி.32:10).*

**நுடக்கு** *(வி.) – அசைவு (பரி.2:51).*

**நுடங்கல்** *(வி.) – அசைதல் (புற.372:6).*

**நுடங்கு** *(வி.) – அசை (நற்.68:9-10).*

**நுண்** *(பெ.) – 1.நுட்பம் (குறு.147:3). 2.கண்ணுக்குப் புலப்படாத நுட்பம் (குறு.300:3-4).*

**நுண் பொடி** *(பெ.) – நுண்ணிய பொடிமணல் (ஐங்.124).*

**நுணக்கம்** *(பெ.) – நுரை (அக.224:7).*

**நுணங்குதல்** *(வி.) – 1.நுண்மை (நற்.15:2). 2.அசைகின்ற (கலி.28:15). 3.கூர்மையை உடைய (கலி.60:3).*

**நுணல்** *(பெ.) – 1.தவளை (நற்.59-1). 2.தேரை (அக.364:3). 3.மண்ணுக்குள் முழுகி மறைந்து கிடக்கும் ஒரு வகை உயிரி (ஐங்.468).*

**நுணவு** *(பெ.) – நுணா மரம் (ஐங்.342).*

**நுணுகி** *(வி.) – 1.குறைந்து (அக.71:14). 2.மெலிந்து (புற.96:4).*

**நுதல்** *(பெ.) – 1.நெற்றி (குறு.34:7). 2.மத்தகம் (புற.3:7-8).*

**நுதி** *(பெ.) – 1.நுனி (குறு.16:1-4). 2.அலகு (அக.215:12). 3.தலை (கலி.101:29).*

**நுந்தை** *(பெ.) – உன் தந்தை (குறு.40:1-2).*

**நுமர்** *(பெ.) – 1.நும் சுற்றத்தார் (நற்.362:10). 2.நும்முடைய தாய்மார் (கலி.83:26).*

**நுரை** *(பெ.) – 1.தண்ணீரில் பஞ்சு போல் தோன்றுவது (குறு.290:4-6). 2.வெண்ணெய் (அக.101:8).*

**நுவ்வை** *(பெ.) – உன் தங்கை (நற்.172:4).*

**நுவணை** *(பெ.) – இடித்த மா (பதி.30:24-5).*

**நுவலுநர்** *(பெ.) – சொல்லுபவர் (புற.160:15).*

**நுவலும்** (வி.) – 1.சொல்லும் (குறு.173:5-6). 2.விலை கூறும் (நற்.118:10-1). 3.அழையா நிற்கும் (நற்.293:2-3).

**நுழை** (பெ.) – சிறுவழி (மலை.379).

**நுழை** (வி.) – 1.கூரிய (அக.35:4). 2.புகுகின்ற (புற.235:7). 3.நுணுகிச் சென்ற (குறள்.407).

**நுழைபு** (வி.) – செலுத்துதல் (பெரும்.374).

**நுளம்பு** (பெ.) – ஈ போன்ற பூச்சி வகை (குறு.86:3-6).

**நுனை** (பெ.) – முனை (அக.4:1).

**நூக்கு** (வி.) – தள்ளு (பரி.16:45).

**நூக்குமது** (பெ.) – செலுத்தும் (கலி.3:20).

**நூபுரம்** (பெ.) – சிலம்பு (கலி.83:16).

**நூல்** (பெ.) – 1.பஞ்சு நூல் (குறு.51:1-3). 2.காப்பு நூல் (குறு.218:1-3). 3.சிலந்தியின் வாயில் உண்டாகும் இழை (நற்.189:8-9). 4.(ஆலோசனை) சிந்தனை (குறள்.430). 5.(வேதம்) மறை (குறள்.543).

**நூலார்** (பெ.) – நூல் உணர்ந்தவர் (குறள்.683).

**நூழில்** (பெ.) – மிடைந்த போர் (பரி.9:49).

**நூழை** (பெ.) – (துவாரம்) தொளை (நற்.98:4).

**நூறு** (பெ.) – நூறு எனும் எண் (புற.27:2).

**நெகிழ்** (பெ.) – 1.தளர்தல் (குறு.253:2-4). 2.நழுவல், கழல்தல் (நற்.70:9). 3.மெலிதல் (நற்.277:10-11). 4.கட்டுத் தளர்தல் (அக.26:17). 5.உருகுதல் (அக.260:14). 6.அவிழ்தல் (கலி.59:1).

**நெகிழ்த்த** (வி.) – 1.நழுவச் செய்த (குறு.31:4-6). 2.தளர்த்திய (நற்.214:10).

**நெகிழ்பு** (வி.) – நெகிழ்ந்து (கழன்று) (ஐங்.20).

**நெகிழா** (வி.) – கட்டுத் தளர்ந்து (அக.289:7).

**நெகிழாது** (வி.) – தளராமல் (கலி.33:7).

**நெஞ்சம்** (பெ.) – 1.மனம் (குறு.40:4-5). 2.நெஞ்சு (குறு.43:5). 3.உள்ளம் (நற்.15:6). 4.அகம் (குறள்.1240).

**நெடி** (வி.) – நீண்ட (அக.254:16-7).

**நெடிது** *(பெ.) – நெடும் பொழுது (புற.136:3).*

**நெடிய** *(வி.) – 1.நீண்ட (குறு.252:1). 2.நீண்ட பொழுதாக (நற்.181:7).*

**நெடுங்கடை** *(பெ.) – நீண்டவாயில் (அக.208:1).*

**நெடுந்தகை** *(பெ.) – பெருங்குணங்களை உடையவன் (நற்.361:6-7).*

**நெடுநிலை** *(பெ.) – உயர்ந்த மேல் நிலைகள் (அக.47:11-2).*

**நெடுநீர்** *(பெ.) – 1.கடல் (அக.400:21). 2.நீட்டித்துச் செய்யும் இயல்பு (குறள்.605).*

**நெடுமடல்** *(பெ.) – நீண்ட பனை ஏடு (குறு.372:1).*

**நெடுமை** *(பெ.) – 1.உயரம் (குறு.23:5). 2.தொலைவு (குறு.64:1). 3.ஆழம் (குறு.171:2-3). 4.பெருமை (குறு.234:4). 5.பரப்பு (குறள்.17).*

**நெடுமொழி** *(பெ.) – 1.புகழ்ச்சிமொழி (நற்.247:8-9). 2.வஞ்சினம் (புற.54:9).*

**நெடுவேள்** *(பெ.) – முருகக் கடவுள் (குறு.111:2).*

**நெதி** *(பெ.) – செல்வம் (நற்.16:8).*

**நெய்** *(பெ.) – 1.வெண்ணெயை உருக்கி ஆக்கப்படும் உணவுப் பொருள் (குறு.106:5). 2.வெண்ணெய் (நற்.106:5). 3.வெண்ணெய் (நற்.12:3). 4.கொழுப்பு (நற்.41:7). 5.புழுகு நெய் (கலி.22:12).*

**நெய்தல்** *(பெ.) – 1.நெய்தல் நிலத்துப் பூ (குறு.9:4-6). 2.சாப்பறை (புற.194:1). 3.வெள்ளாம்பல் (ஐங்.2).*

**நெய்யாட்டு** *(வி.) – எண்ணெய் தேய்த்து நீராடுதல் (நற்.40:7-8).*

**நெரி** *(வி.) – 1.நிமிண்டுதல் (அக.267:12). 2.வளை (குறு.208:2).*

**நெருங்கு** *(வி.) – இடைவெளி இன்றி (நற்.258:10-11).*

**நெருஞ்சிப்பழம்** *(பெ.) – முட்செடியின் பழம் (குறள்.1120).*

**நெருநல்** *(பெ.) – நேற்று (நற்.25:5).*

**நெருநை** *(பெ.) – நேற்று (நற்.360:3).*

**நெருப்பு** *(பெ.) – 1.தீ (குறு.160:1). 2.நெருப்பின் வெம்மை (நெடு.66).*

**நெல்** *(பெ.) – 1.நன்செயில் விளையும் உணவுப் பயிர் (குறு.53:4). 2.மலையில் விளையும் நெற்பயிர் (நற்.7:7). 3.நெற்கதிர் (நற்.195:6).*

**நெல்லி** *(பெ.) – ஒரு வகை மரம் (குறு.201:3-4).*

**நெற்றம்** *(பெ.) – நெற்று (நற்.107:4).*

**நெற்றி** *(பெ.) – 1.உச்சிக் கொண்டை (குறு.107:1-2). 2.முகத்தின் மேற்பகுதி (நற்.41:8-10). 3.உச்சி (அக.181:20). 4.தலை (அக.194:11-2).*

**நெற்று** *(பெ.) – முதிர்ந்த காய் (குறு.7:4-5).*

**நெறி** *(பெ.) – 1.வழி (குறு.64:1). 2.பூ (குறு.80:1). 3.ஒழுங்கு (நற்.177:4-6). 4.முறைமை (அக.314:8). 5.ஒழுக்கம் (புற.2:18). 6.நூல் முறை (குறள்.06). 7.விதி (புற.2:18). 8.முடக்கம் (புற.160:6-7).*

**நெறிய** *(வி.) – 1.குழிய (அக.251:17). 2.அசைய (புற.25:17). 3.வருந்த (புற.168:19-20). 4.சுளிய (புற.345:6).*

**நெறித்தல்** *(வி.) – பிடித்து விடுதல் (கலி.32:3).*

**நேமி** *(பெ.) – 1.தேர்ச் சக்கரம் (குறு.189:3-4). 2.சக்கராயுதம் (அக.175:14). 3.கடல் (அக.400:20-21). 4.ஆணைச் சக்கரம் (புற.3:3-4). 5.சக்கரவாள மலை (பரி.15:3-4).*

**நேர்** *(பெ.) – 1.நுண்மை (குறு.53:6). 2.ஒப்பு (குறு.173:1). 3.செம்மை (நற்.161:5). 4.அழகு (நற்.191:2). 5.நேர்மை (நற்.161:5). 6.பொருந்துதல் (ஐங்.136).*

**நேர்கோல்** *(பெ.) – துலாக்கோல் (கலி.42:14).*

**நேர்தல்** *(வி.) – 1.முற்றுதவித்தல் (அக.125:2). 2.ஒத்தல் (ஐங்.135).*

**நேர்ந்த** *(வி.) – 1.கொடுக்கப்பட்ட, உடன்பட்ட (நற்.130:7). 2.வந்த (கலி.93:17-8).*

**நேர்பட** *(வி.) – எதிர்ப்பட்ட (குறு.272:3-4).*

**நேர்பவள்** *(பெ.) – பொருந்துபவள் (குறு.49:4-5).*

**நேர்பு** *(வி.) – 1.உடன்பட்டு (குறு.35:1-5). 2.பொருந்தி (அக.243:5-6). 3.ஒத்து (பரி.16:5).*

**நேர்வது** *(வி.) – கொடுப்பது (குறள்.733).*

**நேர்வர்** *(வி.) – உடன்படுவர் (நற்.393:11).*

**நேரா** *(வி.) – 1.பகைத்த (அக.209:5). 2.ஒப்பில்லாத (அக.253:18). 3.கூடாமல் இருந்து (குறள்.821).*

**நேராகி** *(வி.) – ஒப்பாகி (கலி.68:6-7).*

**நேராதார்** *(பெ.) – பகைவர் (கலி.67-4).*

**நேரி** *(பெ.) – சோழநாட்டு மலைகளுள் ஒன்று (பதி.67:22).*

**நேரிழை** *(பெ.) – நேர்மையான அணிகலன்களை உடையபெண் (நற்.370:1-2).*

**நைந்து** *(வி.) – 1.மெலிந்து (புற.376:11). 2.வருந்தி (கலி.32:16).*

**நைவர** *(வி.) – இரங்க (புற.146:6).*

**நைவளம்** *(பெ.) – நட்டபாடை எனும் பாலைப் பண் (சிறு.36-7).*

**நைவாரா** *(வி.) – வருந்தி (கலி.62:13).*

**நொ** *(பெ.) – மென்மை (குறு.172:1).*

**நொச்சி** *(பெ.) – 1.மூன்று பிரிவாகிய இலைகளையுடைய செடி (குறு.138:3). 2.மதில் (அக.122:21).*

**நொசி** *(வி.) – நுண்மை (அக.229:11).*

**நொடி** *(பெ.) – 1.ஓசை (குறு.174:2-3). 2.நொடித்தல் (நற்.314:9). 3.புனைந்துரைக்கும் கட்டுக் கதை (நற்.341:5). 4.ஒலி (அக.47:7). 5.கால நுட்பம் (மலை.11).*

**நொடுத்து** *(வி.) – விற்று (குறு.100:3-5).*

**நொடை** *(பெ.) – விலை (நற்.142:4).*

**நொதுமல்** *(பெ.) – 1.அயலாம் தன்மை (குறு.251:4-7). 2.உண்மைக்குப் புறம்பான மொழி (அக.39:4).*

**நொதுமலர்** *(பெ.) – அயலார் (குறு.171:3-4).*

**நொதுமலாட்டி** *(பெ.) – அயலாள் (நற்.118:11).*

**நொதுமலாளர்** *(பெ.) – 1.ஏதிலாளர் (அக.398:16). 2.குறளை கூறுபவர் (புற.35:31).*

**நொந்தது** *(வி.) – வருந்தியது (குறள்.877).*

**நொந்தார்** *(பெ.) – வருந்தினார் (குறள்.1308).*

**நொந்து** *(வி.) – 1.துன்பமுற்று (குறு.65:3-5). 2.வருந்தி (நற்.177:8). 3.வெறுத்து (புற.68:3). 4.இரங்கி (குறள்.157).*

**நொய்து** (பெ.) – எளிது (இலேசு) *(புற.75:10).*

**நொய்யார்** *(பெ.)* – வசை கூறும் மகளிர் *(கலி.24:16).*

**நொவ்வல்** *(பெ.)* – துன்பம் *(அக.98:22).*

**நொவ்வு** *(பெ.)* – விரை *(அக.281:6).*

**நொள்ளை** *(பெ.)* – நத்தை *(அக.53:8).*

**நோ** *(வி.) – 1.துன்பம் (கலி.26:8). 2.வருந்து (நற்.190:1).*

**நோக்க** *(வி.) – 1.காண (அக.82:8). 2.நினைக்க (பரி.18:12).*

**நோக்கப்படும்** *(வி.)* – பார்க்கப்படுவான் *(குறள்.1047).*

**நோக்கம்** *(பெ.)* – பார்வை *(குறு.298:3-4).*

**நோக்கல்** *(பெ.)* – கண்டல் *(நற்.82:5).*

**நோக்கா** *(வி.)* – 1.நோக்க ஒண்ணாத *(குறள்.184).* 2.நோக்கி *(கலி.143:7).*

**நோக்காத** *(வி.)* – கருதாத *(குறள்.148).*

**நோக்காது** *(வி.)* – 1.ஆராயாமல் *(புற.161:24-5).* 2.கருதாமல் *(குறள்.1009).*

**நோக்காய்** *(வி.)* – பாராது *(கலி.86:24).*

**நோக்காள்** *(வி.)* – நோக்கினாள் அல்லள் *(அக.190:5).*

**நோக்கான்** *(வி.)* – 1.பாரான் *(புற.387:20).* 2.நோக்காது *(குறள்.528).* 3.ஓதான் *(குறள்.865).*

**நோக்கி** *(வி.)* – 1.பார்த்து *(குறு.44:1-2).* 2.கருதி *(குறு.287:7-8).* 3.உணர்ந்து *(அக.119:3).* 4.அறிந்து *(குறள்.708).* 5.குறிப்பு அறிந்து *(பரி.94).*

**நோக்கியோர்** *(பெ.)* – பார்க்கப் பெற்றவர் *(அக.326:13).*

**நோக்கியோள்** *(வி.)* – பார்த்தவள்

*(நற்.55:8-9).*

**நோக்கின்று** *(வி.)* – 1.நோக்கிற்று *(புற.141:14).* 2.கருதிற்று *(புற.141:15).*

**நோக்கினர்** *(பெ.)* – பார்த்தவர் *(புற.302:8).*

**நோக்கினள்** *(வி.)* – 1.பார்வை உடையள் *(குறு.132:4-6).* 2.பார்த்தனள் *(நற்.191:8).*

**நோக்கினாள்** *(பெ.) – பார்க்கப்பட்டவள் (குறள்.1093).*

**நோதல்** *(பெ.) – 1.வருந்துதல் (நற்.372:9). 2.துன்புறுதல் (புற.192:3).*

**நோம்** *(வி.) – வருந்தும் (குறு.4:1).*

**நோய்** *(பெ.) – 1.காமநோய் (குறு.13:2-3). 2.துன்பம் (குறு.28:3-5). 3.வருத்தம் (குறு.128:5). 4.குறை (அக.13:15). 5.பிணி (புற.93:5). 6.பிரிவுநோய் (ஐங்.478). 7.அச்சம் (மலை.289). 8.இன்னாதவை (குறள்.315). 9.நோவு (கலி.77:18). 10.குற்றம் (குறள்.851).*

**நோலா** *(வி.) – பொறாத (அக.220:14).*

**நோலாதவர்** *(பெ.) – தவம் செய்யாதவர் (குறள்.270).*

**நோவர்** *(பெ.) – நொந்து கொள்வர் (குறள்.1219).*

**நோவற்க** *(வி.) – நோவு சொல்லாது ஒழிக (குறள்.877).*

**நோவாதோன்** *(பெ.) – இரக்கம் கொள்ளாதவன் (புற.207:10).*

**நோவார்** *(வி.) – நொந்துகொள்ளார் (குறள்.237).*

**நோற்பார்** *(பெ.) – 1.தவம் செய்பவர் (குறள்.48). 2.நோயைப் பொறுப்பவர் (குறள்.160). 3.நோன்பு இயற்றுபவர் (குறள்.270).*

**நோற்றல்** *(வி.) – தவம் புரிதல் (குறள்.269).*

**நோற்றனர்** *(வி.) – நல்வினை செய்தனர் (கலி.39:31-32).*

**நோற்றனை** *(வி.) – நல்வினையைச் செய்தாய் (கலி.94:1).*

**நோற்றான்** *(வி.) – நோன்பு இயற்றினான் (குறள்.70).*

**நோற்றிசின்** *(வி.) – பொறுப்பாயாக (புற.202:16).*

**நோன்** *(பெ.) – 1.வன்மை (குறு.191:2). 2.பொறுத்தல் (புற.78:1).*

**நோன்பியர்** *(பெ.) – தவம் செய்பவர் (நற்.22:6).*

**நோன்பு** *(வி.) – தவம் செய்தல் (குறள்.344).*

**நோன்மார்** *(பெ.) – பொறுப்பவர் (நற்.208:6).*

**நோன்மை** *(பெ.) – 1.வலிமை (புற.14:18). 2.தவம் (குறள்.984). 3.ஆற்றல் (பரி.2:70).*

**நோன்றல்** *(வி.) – பொறுத்தல் (புற.157:1).*

**நோனா** *(வி.) – பொறாத (குறு.58:6).*

**பக்கம்** *(பெ.) – 1.காலம் (குறு.129:3-4). 2.அருகு (குறு.275:5-6). 3.உரிய இடம் (அக.48:10). 4.இடம் (குறள்.620). 5.இறகு (பரி.21:31).*

**பக்கு** *(பெ.) – 1.பண்டவணிகரது பை (ஐங்.271). 2.அடைப் பை (கலி.65:13-4). 3.பிளவு (குறள்.1068).*

**பக** *(வி.) – 1.பிளந்திட (நற்.24:1). 2.விட்டுநீங்க (குறள்.187).*

**பகட்டு** *(பெ.) – பெருமை (குறு.71:2).*

**பகட்டு யானை** *(பெ.) – 1.ஆண் யானை (குறு.91:6). 2.வன்மையையுடைய யானை (நற்.381:7).*

**பகடு** *(பெ.) – 1.எருது (நற்.290:2-3). 2.கடா (அக.17:12-3). 3.பரப்பு (புற.13:3). 4.ஏர் (புற.35:32). 5.வலிமை (புற.88:4).*

**பகர்** *(வி.) – 1.விலை கூறி (மலை.413). 2.சுருதியதை உணர்த்துகின்ற (பரி.15:42).*

**பகர்ந்து** *(வி.) – 1.அருளிச் செய்து (கலி.1:1). 2.சொல்லிப்பாடி (கலி.131:14). 3.கொடுத்து (கலி.149:4).*

**பகர்ந்தேம்** *(வி.) – வாழ்த்தினேம் (பரி.19:104).*

**பகர்நர்** *(பெ.) – விற்பவர் (அக.25:10-1).*

**பகர்பு** *(வி.) – விளைந்து (கலி.20:1).*

**பகர்வர்** *(பெ.) – பண்ட வணிகர் (ஐங்:271).*

**பகர்வு** *(பெ.) – கொடுத்தல் (புற.381:9).*

**பகர** *(வி.) – 1.விற்க (நற்.38:4). 2.வெளிப்படுத்த (அக.272:9). 3.செலுத்த (பதி.17:3). 4.அளிக்க (ஐங்.497). 5.பெற (பரி.11:33-4).*

**பகரும்** *(வி.) – 1.ஒலிக்கும் (குறு.271:1-2). 2.விற்கும் (நற்.138:1-2). 3.விளைந்து கொடுக்கும் (புற.116:13).*

**பகல்** *(வி.) – 1.நண்பகற்பொழுது (குறு.32:1). 2.கதிரவன் (அக.71:9). 3.பகுத்தல் (அக.329:4-7). 4.நடுநிலைமை (புற.17:6-7). 5.நாள் (புற.358:1-2). 6.ஒளி (ஐங்.56). 7.கூடாமை (குறள்.851). 8.முழுத்தம் (முகூர்த்தம்) (கலி.39:22-3). 9.இளவெயில் (பரி.11:96).*

**பகலோன்** *(பெ.) – கதிரவன் (அக.201:8).*

**பகவன்** *(பெ.) – கடவுள் (குறள்.1).*

**பகவு** *(பெ.) – பிளவு (குறள்.889).*

**பகழி** *(பெ.) – அம்பு (குறு.12:3-4).*

**பகழிப் போக்கு** (பெ.) – அம்பின் செலவு (நற்.165:2).

**பகன்றை** (பெ.) – 1.ஒருவகை நீர்க் கொடி (குறு.330:3-4). 2.சிவதைக் கொடி (நற்.86:3). 3.கிலுகிலுப்பைச் செடி (பதி.76:12).

**பகா** (வி.) – பகுத்துக் கொடாத (கலி.142:37).

**பகாஅர்** (பெ.) – விற்பார் (அக.181:22-3).

**பகு** (பெ.) – 1.பிளவு (குறு.155:4). 2.பெரிய (அக.269:17). 3.அகன்ற (அக.364:8).

**பகுக்கும்** (வி.) – 1.பங்கிட்டுக் கொடுக்கும் (நற்.85:9-10). 2.பகுத்துண்ணும் (புற.168:13).

**பகுத்து** (வி.) – 1.பங்கு கொண்டு (அக.97:4). 2.பகுத்துக் கொடுத்து (புற.46:4). 3.பிளந்து (கலி.103:54).

**பகை** (பெ.) – 1.பகை (விரோதம்) (குறு.141:3-5). 2.பகைவர் (குறு.292:7-8). 3.மாறுபாடு (குறு.293:5). 4.தீமை (அபகாரம்) (குறள்.1225).

**பகைஞன்** (பெ.) – பகைவன் (புற.180:7).

**பகைத்தழை** (பெ.) – ஒன்றற்கு ஒன்று மாறாகிய தழை (ஐங்.187).

**பகைபட்டு** (வி.) – மாறுபட்டு (கலி.68:11).

**பகைமை** (பெ.) – எதிர்ப்பு (குறள்.709).

**பகைவர்** (பெ.) – மாறுபட்டவர் (அக.44:1).

**பகைவன்** (பெ.) – போரில் எதிர்ப்படையில் உள்ளவன் (நாலடி.241).

**பங்கம்** (பெ.) – குழம்பு (பரி.10:81-2).

**பங்கு** (பெ.) – காரி (சனி) (பரி.11:7-8).

**பங்குனி** (பெ.) – பன்னிரண்டாம் மாதம் (அக.137:9).

**பச்சூன்** (பெ.) – 1.வேகவைக்காத இறைச்சி (நற்.75:7). 2.செவ்வித் தசை (புற.258:4-5).

**பச்சை** (பெ.) – 1.தோல் (அக.217:7). 2.போர்வை (சிறு.226).

**பசக்கும்** (வி.) – 1.பசலை நிறம் பெற்ற (குறு.183:1-2). 2.பசந்து காட்டும் (கலி.25:21-2).

**பசத்தல்** (பெ.) – பசலை ஊர்தல் (நற்.1:8).

**பசந்த** (பெ.) – நிறம் வேறுபட்ட (நற்.35:12).

**பசப்ப** *(வி.) – பசலை நிறம் அடைய (குறு.331:7).*

**பசப்பது** *(பெ.) – பொன்நிறம் கொள்வது (ஐங்.21).*

**பசப்பு** *(பெ.) – 1.மகளிர்க்குப் பிரிவாற்றாமையால் உண்டாகும் நிறவேறுபாடு (குறள்.1182). 2.பசலை நிறம் (குறு.143:7).*

**பசலை** *(பெ.) – 1.மகளிர்க்குப் பிரிவின்கண் வரும் நிற வேறுபாடு (குறு.13:5). 2.அழகுத் தேமல் (அக.229:13). 3.பொன் நிறம் (புற.155:4). 4.இளமை (புற.392:3). 5.வருத்தம் (முல்.12).*

**பசி** *(பெ.) – உணவு வேட்கை (குறு.37:2-3).*

**பசிப்பகை** *(பெ.) – பசியை நீக்கும் உணவு (புற.212:7).*

**பசிப்பர்** *(பெ.) – பசியா நிற்பர் (குறள்.837).*

**பசிப்பிணி** *(பெ.) – பசி நோய் (புற.173:11).*

**பசிப்பிணிமருத்துவன்** *(பெ.) – பசியைத் தீர்க்கும் வள்ளல் (புற.173:11).*

**பசீஇ** *(வி.) – பசந்து (புற.321:8).*

**பசு** *(பெ.) – 1.பசிய நிறம் (குறு.25:3-5). 2.இளமை (குறு.54:3-4). 3.அழகு (குறு.62:1). 4.பச்சை (குறு.287:4-5). 5.குளிர்ச்சி (நற்.196:2). 6.பசுமாடு (ஐங்.271).*

**பசுங்கலம்** *(பெ.) – பசிய மண்ணால் செய்யப்பட்ட ஏனம் (குறு.29:2).*

**பசுங்காய்** *(பெ.) – பாக்குவகை (அக:335:23).*

**பசுங்குடை** *(பெ.) – 1.இளமையான குடை என்னும் கலம் (குறு.168:2). 2.தொன்னை (பனையோலை) (அக.30:10).*

**பசுங்கூட்டு** *(பெ.) – நறுமணக் கலவை (நெடுநல்.50).*

**பசுநெய்** *(பெ.) – குளிர்ந்த நறுநெய் (நற்.40:8).*

**பசும்பாம்பு** *(பெ.) – பச்சைப்பாம்பு*

*(குறு.35-2).*

**பசும்பாவை** *(பெ.) – சிறியபசிய விளையாட்டுப் பாவை (குறு.278:3).*

**பசும்பிடி** *(பெ.) – பச்சிலை மரம் (பதி.81:25).*

**பசும்புல்** *(பெ.) – பசிய தருப்பைப் புல் (புற.93:8).*

**பசும்பொன்** (பெ.) – மாற்று உயர்ந்த பொன் (புற.9:9).

**பசை** (பெ.) – கஞ்சி (குறு.330:1).

**பணயம்** (பெ.) – ஈடாக வைக்கும் பொருள் (பெரிய.3661).

**பணவை** (பெ.) – பரண் (மலை.297-8).

**பணி** (பெ.) – 1.தொழில் (குறு.333:5). 2.வணக்கம் (நற்.167:6-7). 3.ஏவல் (புற.22:30-1). 4.பணிந்து (அக.220:2). 5.மெல்லிய (குறள்.1121).

**பணித்த** (வி.) – கட்டளையிட்ட (அக.325:8).

**பணித்து** (வி.) – 1.தாழ்த்து (புற.198:12-3). 2.குறையச் செய்து (பதி.44:15).

**பணிதல்** (வி.) – 1.பெருமிதம் இன்றி அடங்குதல் (குறள்.125). 2.தாழ்தல் (குறள்.963). 3.தாழ்ந்து கூட்டிக் கொள்ளுதல் (குறள்.99:5).

**பணிதல் செய்வோம்** (வி.) – வணங்குவோம் (கலி.1:13).

**பணிந்தமை** (பெ.) – வணங்கினமை (கலி.13:30).

**பணிந்தாய்** (பெ.) – தாழ்ந்தாய் (கலி.69:11).

**பணிந்து** (வி.) – 1.வணங்கு (நற்.386:8-9). 2.குனிந்து (புற.285:13-4). 3.தொங்கவிட்டு (புற.285:13-4).

**பணிவு** (பெ.) – பணிதல் (பதி.63:1).

**பணிய** (வி.) – வணங்கும்படி (பதி.88:13).

**பணியாமை** (பெ.) – கீழ்ப்படியாமை (அக.251:10-1).

**பணியியர்** (வி.) – தாழ்க (புற.6:17).

**பணிலம்** (பெ.) – சங்கு (குறு.15:1).

**பணிவு** (வி.) – 1.தாழ்ச்சி (மலை.423). 2.இருக்கை எழலும் எதிர் செலவும் முதலாயின (குறள்.960).

**பணை** (பெ.) – 1.மூங்கில் (குறு.100:7). 2.பெருத்தல் (குறு.131:1). 3.கிளை (குறு.201:5). 4.முரசம் (அக.84:2). 5.மருதநிலம் (அக.91:14). 6.குழல் (அக.124:14). 7.பட்டடை (அக.238:5). 8.பந்தி (அக.254:12). 9.கூடம் (புற.23:1). 10.ஒரு வகைப் பறை (புற.371:19). 11.மருப்பு (தந்தம்) (கலி.11:103).

***பணையம்*** *(பெ.) – ஈடு (புற.316:6-7).*

***பத்தடுத்த கோடி*** *(பெ.) – பத்துக் கோடிமடங்கு (குறள்.817).*

***பத்தர்*** *(பெ.) – 1.தொட்டி (நற்.92:6). 2.யாழின் ஓர் உறுப்பு (புற.136:1).*

***பத்தல்*** *(பெ.) – 1.சிறுகுழி (நற்.240:8). 2.நீரிறைக்கும் கருவி (அக.155:9).*

***பத்தினி*** *(பெ.) – கற்புடையாட்டி (பதி.5:4).*

***பத்து*** *(பெ.) – ஒன்பதனை அடுத்த ஓரெண் (புற.18:5).*

***பத்து அடுத்த கோடி*** *(பெ.) – பத்துக்கோடி (குறள்.817).*

***பதக்கம்*** *(பெ.) – சரடு முதலியவற்றில் கோக்கப்படும் கல்லிழைத்த தொங்கற் கழுத்தணி (கலி.11:23).*

***பதடி*** *(பெ.) – 1.பயனற்றது (குறு.323:1). 2.பதர் (கருக்காய்) (குறள்.196).*

***பதணம்*** *(பெ.) – மதிலுள் மேடை (பதி.22:25).*

***பதத்தான்*** *(பெ.) – காலமுடையான் (புற.4:7).*

***பதப்பர்*** *(பெ.) – மணற் கோட்டை (பதி.30:18).*

***பதம்*** *(பெ.) – 1.உணவு (குறு.83:1). 2.சமயம் காலம் (குறு.241:3-5). 3.பக்குவம் (குறு.372:6-7). 4.(தரம்) தகுதி (புற.151:5). 5.சோறு (பதி.66:7-9). 6.உலகம் (கலி.8:5). 7.முயற்சி (கலி.11:104). 8.அறுகம்புல் (கலி.13:8).*

***பதலை*** *(பெ.) – ஒரு கண் மாக்கிணை என்னும் இன்னியம் (வாத்தியம்) (குறு.59:1).*

***பதவப்புல்*** *(பெ.) – அறுகாகிய புல் (கலி.109:2).*

***பதவின் பாவை*** *(பெ.) – அறுகங்கிழங்கு (அக.23:7).*

***பதவு*** *(பெ.) – அறுகம் புல் (குறு.363:2-3).*

***பதன்*** *(பெ.) – 1.பக்குவம் (குறு.261:1-2). 2.துணையுணவு (அக.37:8-9). 3.சோறு (அக.79:1). 4.காலம் (புற.391:20).*

***பதி*** *(பெ.) – 1.ஊர் (குறு.145:1). 2.இருப்பிடம் (நற்.253:1). 3.நிலைக்களம் (குறள்.1015). 4.நிலை (குறள்.1116).*

***பதித்த*** *(வி.) – தீட்டிய (அக.253:24-5).*

***பதிவதம்*** *(பெ.) – பதிவிரதம் (கற்புடைமை) (பரி.10:23).*

**பதுக்கு** (பெ.) – பதுக்கை (கற்குவியல்) (அக.289:2).

**பதுக்கை** (பெ.) – 1.குவியல் (குறு.77:3-4). 2.கற்குவியல் (நற்.352:8). 3.இலைக்குவை (கலி.12:2-3).

**பதுக்கைக் கடவுள்** (பெ.) – பதுக்கையிடத்துக் கல்லில் உறையும் தெய்வம் (அக.35:6-7).

**பதுமம்** (பெ.) – தாமரை (தாமரை மலர்) (பரி.8:115).

**பதைபதைப்பு** (வி.) – துடித்து வருந்துதல் (பரி.10:59).

**பந்தர்** (பெ.) – 1.பந்தல் (கால் நட்டுக் கீற்றால் வேயப்பட்ட இடம்) (நற்.40:2). 2.பண்ட சாலைகள் (பதி.55:4).

**பந்து** (பெ.) – 1.விளையாட்டுப் பொருள் (குறு.396:1). 2.மகளிர் விளையாட்டுப் பொருள்களுள் ஒன்று (நற்.179:2). 3.பந்து போலும் திரட்சி (புற.33:12-3).

**பம்பை** (பெ.) – ஒரு வகை வாத்தியம் (நற்.212:5).

**பயக்கும்** (பெ.) – 1.விளையும் (சம்பவிக்கும்) (ஐங்.268). 2.பயன் கொடுக்கும் (குறள்.659).

**பயத்தல்** (வி.) – பயன் தருதல் (பரி.9:84-5).

**பயந்த** (வி.)– 1.கொடுத்த (குறு.210:2). 2.பெற்ற (நற்.202:9). 3.அளித்த (ஐங்.343). 4.கண்ட (சிறு.240-241).

**பயந்தனம்** (வி.) – ஈன்றனம் (ஐங்.710).

**பய நிரை** (பெ.) – பாற்பசுக்கள் (அக.54:9).

**பயப்பு** (பெ.) – பசலை நிறம் (குறு.219:1).

**பயம்** (பெ.) – 1.பயன் (குறு.43:2). 2.பால் (குறு.225:1-2). 3.பழம் (நற்.77:5). 4.வளம் (அக.5:15). 5.தண்ணீர் (அக.164:2). 6.பெருமை (அக.297:8). 7.காயும் பழமும் முதலாயின (புற.116:13). 8.இன்பம் (பரி.11:69).

**பயம்பகர் தல்** (வி.) – பயன்படுதல் உலகு பயம்பகர (பரி.11:34).

**பயம்பு** (பெ.) – 1.பள்ளம் (அக.136:11). 2.யானைப் படுகுழி (அக.165:1). 3.குழி (மலை.199).

**பயலை** (பெ.) – 1.பிரிவால் மகளிர்க்கு வரும் நிற வேறுபாடு (நற்.236:11). 2.இளமை (புற.305:2).

**பயறு** (பெ.) – ஒரு வகைத் தானியம் (குறு.10:2).

**பயன்** (பெ.) – 1.விளைவு (குறு.381:3-7). 2.பயன் (பிரயோசனம்) (நற்.75:1).

**பயிர்** (பெ.) – 1.தவசம் (தானியம்) விளையும் செடிகள் (குறு.181:3-5). 2.விலங்கு பறவை முதலிய ஒன்றனை ஒன்று குறியிட்டழைத்தல் (நற்.91:7). 3.தழைத்தல் (மலை.7).

**பயிர்ந்து** (வி.) – அழைத்த (நற்.367:2).

**பயிர்ப்பு** (பெ.) – பிசின் (அக.348:4).

**பயிர்வன** (வி.) – அழைப்பன (அக.66:22-3).

**பயிரும்** (வி.) – 1.அழைக்கும் (குறு.16:4-5). 2.பிளிறும் (அக.333:12).

**பயில்** (வி.) – 1.மிக்க நெருங்கிய (குறு.7:6). 2.பழகு (குறு.254:5). 3.செறிந்த (புற.21:5). 4.பயின்ற (புற.116:10). 5.நிலைபெற்ற (பதி.78:9).

**பயிலாது** (வி.) – மலராமல் (புற.269:2).

**பயிலும்** (வி.) – இயலும் (அக.344:6).

**பயிற்றல்** (பெ.) – கூவுதல் (நற்.246:4).

**பயிற்றி** (வி.) – 1.இடைவிடாமற் சொல்லி (குறு.176:2). 2.வெளியிட்டு (நற்.289:5). 3.எழுப்பி (அக.28:10). 4.பழக்கி (அக.54:8).

**பயிற்றும்** (வி.) – 1.செய்யும் (நற்.224:5). 2.பழகிக் கொள்ளும் (நற்.250:3). 3.அழைக்கும் (அக.12:7).

**பயின்** (பெ.) – 1.அரக்கு (அக.1:5-6). 2.சிதைந்த கப்பலைத் திருத்தம் செய்யும் கருவி (பரி.10:54-5).

**பயின்று** (வி.) – 1.நெருங்கி (நற்.294:3-4). 2.அடுத்தடுத்து (அக.50:6).

**பரக்கும்** (வி.) – 1.பரவும் (குறு.51:3). 2.பரந்து செல்லும் (அக.15:16).

**பரத்தை** (பெ.) – பலரின் வயமாக இருப்பவள் (நற்.360:5).

**பர த்தல்** (வி.) – 1.பரவுதல் (புற.5). 2.அலமருதல் (குறள்.1062).

**பரத்தன்** (பெ.) – வேசையருடன் கூடி யொழுகுபவன் (குறள்.1311).

**பரத மக்கள்** (பெ.) – நுளையர் (அக.30:3).

**பரதவர்** (பெ.) – 1.நெய்தல் நில மக்கள் (குறு.184:6). 2.தென் திசைக்கட் குறுநில மன்னர் (புற.378:1).

**பரந்த** *(வி.) – 1.பரவிய (குறு.178:1). 2.அகன்ற (அக.306:2). 3.படர்ந்த (பதி.15:10).*

**பரந்தன்று** *(வி.) – மிகுந்தது (குறு.58:6).*

**பரப்ப** *(வி.) – 1.பரந்து செல்ல (அக.41:1). 2.காற்றில் தவழ (மிதப்ப) (அக.41:7).*

**பரப்பு** *(பெ.) – 1.பரந்த இடம் (குறு.100:1). 2.நிலம் (குறு.114:1). 3.பரவுதல் (நற்.382:7). 4.விரிவு (புற.204:5).*

**பரவை** *(பெ.) – பரவல் (குறு.220).*

**பராக்கு** *(பெ.) – மறதி (குறள்.366 உரை).*

**பரி தல்** *(வி.) – 1.அஞ்சுதல் (குறள்.502). 2.பகுத்தறிதல் (குறள்.1172). 3.அழித்தல் (குறள்.862).*

**பரி த்தல்** *(வி.) – சூழ்தல் (அக.31).*

**பரி** *(பெ.) – செலவு (குறு.44).*

**பரிசில்** *(பெ.) – கொடை (புற.206:45).*

**பரிசில் கடா நிலை** *(பெ.) – பரிசில் நீட்டித்த தலைவனுக்குப் பரிசில் வேட்டோன் தன்னிடும்பை கூறிக் கேட்கும் புறத்துறை (புற.101).*

**பரிசிலர்** *(பெ.) – பரிசில் வேண்டி இரப்போர் (புற.14).*

**பரிதி** *(பெ.) – வட்ட வடிவு (புற.174).*

**பரிது** *(பெ.) – பரியது (பெரியது) (குறள்.599).*

**பரியல்** *(வி.) – விரைந்து செல்லுகை (அக.28).*

**பரிவேட்பு** *(பெ.) – பறவை வட்ட மிடுகை (பதி.21:27).*

**பருகுதல்** *(வி.) – நுகர்தல் (குறள்.1266).*

**பருகு** *(வி.) – குடிக்கை (புற.207).*

**பருத்திப்பெண்டு** *(பெ.) – பருத்திநூற்கும் பெண் (புற.125).*

**பருத்திவீடு** *(பெ.) – பருத்தியினின்று பிரிக்கப்பட்ட பஞ்சு (புற.393).*

**பருந்து** *(பெ.) – வளையம் (கலி.147).*

**பருமம்** *(பெ.) – யானைக் கழுத்து மெத்தை (கலி.97).*

**பருவம்** *(பெ.) – காலம் (அக.26).*

***பருவா தல்*** *(வி.) – வருந்துதல் (குறள்.1126).*

***பல்லார்*** *(பெ.) – பலர் (குறள்.194).*

***பல்லி*** *(பெ.) – பரம்புக் கட்டை (புற.120).*

***பல்லிதழ்*** *(பெ.) – பல இதழ் கொண்ட மலர் (ஐங்.170).*

***பல்லியம்*** *(பெ.) – பல்வகை வாச்சியங்கள் (புற.281).*

***பல்லியாடு தல்*** *(வி.) – விதைத்தபின் பலுகடித்தல் (புற.120).*

***பல்லூழ்*** *(பெ.) – பல தடவை (அக.51).*

***பவர்*** *(பெ.) – அடர்ந்த கொடி (நற்.5).*

***பவழம்*** *(பெ.) – ஒன்பான் மணிகளிலொன்று (கலி.80).*

***பழஞ்செய்கடன்*** *(பெ.) – நிலவரி நிலுவை (புற.35.உரை).*

***பழமெடு த்தல்*** *(வி.) – பழத்தைப் பறித்தல் (அக.18.உரை).*

***பழனம்*** *(பெ.) – 1.வயல் (புற.13). 2.மருதநிலம் (கலி.78). 3.பொய்கை (புற.61).*

***பழனவெதிர்*** *(பெ.) – கரும்பு (ஐங்.91).*

***பழிச்சு தல்*** *(வி.) – வாழ்த்துதல் (புற.113).*

***பழி த்தல்*** *(வி.) – இகழ்தல் (குறள்.290).*

***பழுத்தல்*** *(வி.) – பழமாதல் (குறள்.216).*

***பழுமரம்*** *(பெ.) – பழுத்த மரம் (புற.173).*

***பழையான்*** *(பெ.) – நீண்ட கால நட்புடையன் (குறள்.810).*

***பள்ளி*** *(பெ.) – 1.தூக்கம் (கலி.121). 2.சாலை (புற.33).*

***பளிங்கு*** *(பெ.) – படிகம் (குறள்.706).*

***பற்று*** *(பெ.) – 1.அகப்பற்று, புறப்பற்றுகளாகிய நேயங்கள் (குறள்.350). 2.பற்றுக்கோடு (குறள்.88). 3.செல்வம் (குறள்.521).*

***பற்றுள்ளம்*** *(பெ.) – இவறற்றன்மை (குறள்.438).*

***பறந்தலை*** *(பெ.) – 1.பாழிடம் (புற.23). 2.சுடுகாடு (பதி.44:19). 3.போர்க்களம் (புற.66). 4.படைவீடு (புற.64).*

***பறம்பு*** *(பெ.) – பாரியின் மலைநாடு (புற.110).*

***பறாஅக்குருகு*** *(பெ.) – கொல்லன் உலை மூக்கு (கலி.54).*

***பறி த்தல்*** *(வி.) – 1.பிடுங்குதல் (குறள்.774). 2.பாரம் இறக்குதல் (புற.30,11.உரை).*

***பறிமுறை*** *(பெ.) – பல்விழுந்து முளைக்கை (கலி.22).*

***பறையறை தல்*** *(வி.) – செய்தி தெரிவிக்குமாறு பறையடித்தல் (கலி.56).*

***பன்மை*** *(பெ.) – தொகுதி (புற.19).*

***பனங்குடை*** *(பெ.) – பதநீர் முதலியவற்றை வைப்பதற்குப் பனையோலையாற் செய்த உண்கலம் (புற.177).*

***பனஞ்செறும்பு*** *(பெ.) – பனைமரத்திற் செறிந்துள்ள நரம்பு (அக.277).*

***பனம்புடையல்*** *(பெ.) – பனம்பூமாலை (பதி.421).*

***பனி த்தல்*** *(வி.) – 1.குளிரால் நடுங்குதல் (புற.145). 2.நடுங்குதல் (பதி.13:19).*

***பனி*** *(பெ.) – 1.பனிக்கட்டி (புற.6). 2.கண்ணீர் (ஐங்.208). 3.நடுக்கம் (குறள்.1223).*

***பனிற்று தல்*** *(பெ.) – தூவுதல் (பதி.57:3).*

***பனுவல்*** *(பெ.) – 1.நல்லதாக ஆக்கப்பட்ட பஞ்சு (புற.125). 2.பாட்டு (புற.135). 3.நூல் (குறள்.21).*

***பனை*** *(பெ.) – மரவகை (புற.45).*

***பனைக்கொடியோன்*** *(பெ.) – பனையைக் கொடியாகவுடையவன் (பலராமன்) (புற.56).*

***பனைப்போழ்*** *(பெ.) – பனந்தோடு (புற.22).*

***பா*** *(பெ.) – பரப்பு (புற.233).*

***பாக்கம்*** *(பெ.) – அரசனிருப்பு (பதி.13).*

***பாக்கியம்*** *(பெ.) – நல்வினை (குறள்.1141).*

***பாகல்*** *(பெ.) – பாலமரம் (நற்.180).*

***பாகன்*** *(பெ.) – யானைப் பாகன் (அக.213).*

***பாகுடி*** *(பெ.) – தொலைதூரம் (பதி.16).*

***பாங்கர்*** *(பெ.) – பாங்கர்க் கொடி (கலி.11).(கலி.103-3).*

***பாசகன்*** *(பெ.) – சமையற்காரன் (பதி.67).*

***பாசடகு*** *(பெ.) – பசிய கீரை வகை (புற.62-14).*

**பாசடும்பு** (பெ.) – பசிய அடம்பு என்னும் படர்கொடி (ஐங்.101-2).(அக.330-14).

**பாசடை** (பெ.) – பசிய இலை (குறு.9).(நற்.47-3).(ஐங்.225-2).

**பாசவர்** (பெ.) – ஆட்டிறைச்சி விற்கும் வணிகர் (பதி.21:9).

**பாசவல்** (பெ.) – 1.செவ்வியல் (குறு.238-1).(அக.141-18). 2. பசிய விளைநிலம் (புற.6).

**பாசறை** (பெ.) – 1.பகைமேற் சென்ற படை தங்குமிடம் (பதி.83:9). 2.பாடிவீடு (புற.289-8).

**பாசி** (பெ.) – கிழக்கு (புற.226).

**பாசிலை** (பெ.) – பச்சையிலை (குறு.108-3).

**பாசிழை** (பெ.) – ஒப்பனை செய்யப்பட்ட பெண் (புறம்.367,6).

**பாசினம்** (பெ.) – கிளிக்கூட்டம் (நற்.134).

**பாட்டங்கால்** (பெ.) – தோட்டமாகிய இடம் (கலி.111:40).

**பாட்டம்** (பெ.) – முகில் (நற்.38).

**பாட்டி** (பெ.) – கிழவி (பரி.10:37).

**பாட்டி** (பெ.) – பன்றி, நாய், நரியாகிய விலங்குகளின் பெண்பாற் பெயர் (அக.196,4).

**பாடஞ்செய் தல்** (வி.) – ஒளி விடுதல் (புற.57.உரை).

**பாடல்** (பெ.) – புகழ் (நற்.2561).

**பாடறிந்தொழுகு தல்** (வி.) – இயல்பறிந்து நடத்தல் (கலி.133,8).

**பாடிமிழ்கடல்** (பெ.) – அலைபாடுங்கடல் (அக.334-4).

**பாடிமிழ் தல்** (வி.) – ஒலித்தல் (புற.49).

**பாடிமிர் பனி நீர்** (பெ.) – ஒலிக்கும் கடலலைகளால் உண்டாகும் குளிர்ந்த நீர்த் திவலை (நற்.378-11).

**பாடினி** (பெ.) – 1.பாடுவாள் (புற.242). 2.பாண் குலமகள் (புற.11).

**பாடு தல்** (வி.) – பண்ணிசைத்தல் (புற.11).

**பாடு** (வி.) – செவ்வி (புற.120).

**பாடுதுறை** (பெ.) – புலவர்கள் பாடுதற்குரிய போர்த்துறை (புற.21).

**பாடுபெயல்** (பெ.) – விடாமழை (கலி.90).

***பாடுவான்*** *(பெ.) – பாடகன் (பரி.7,31).*

***பாண்சேரி*** *(பெ.) – பாணர் இனத்தார் வாழும் சேரி (புற.348-4).*

***பாண்டியன்*** *(பெ.) – பாண்டிய நாட்டு வேந்தன் (குறு.393-4).*

***பாண்டில்*** *(பெ.) – வட்டம் (ஐங்.310).*

***பாண்டில் விளக்கு*** *(பெ.) – கால்விளக்கு (பதி.47,6).*

***பாண்மகள்*** *(பெ.) – பாணற்குடியில் பிறந்த பெண் (அக.216).*

***பாண்மகன்*** *(பெ.) – பாணன் (ஐங்.49-3).*

***பாண்யாழ்*** *(பெ.) – பாணர் கையில் உள்ள யாழ் (நற்.186).*

***பாணி த்தல்*** *(வி.) – தாமதித்தல் (பரி.8,56).*

***பாணிச்சீர்*** *(பெ.) – கைத்தாளம் (பரி.8:109).*

***பாத்தி*** *(பெ.) – சிறுசெய் (குறு.262-7).*

***பாதிரி*** *(பெ.) – பொன்னிறமுள்ள பூவுடைய மரவகை (நற்.52-1).*

***பாப்புப் பகை*** *(பெ.) – கரடன் (பரி.13,39).*

***பாய் தல்*** *(வி.) – 1.தாவுதல் (புற.24). 2.மூட்டுதல் (அக.24-11).*

***பாய்*** *(பெ.) – கப்பற்பாய் (புற.30).*

***பாயல்*** *(பெ.) – உறக்கம் (பதி.19:12).*

***பாயிரும் பனிக்கடல்*** *(பெ.) – பரந்த விரிந்த குளிர் கடல் (பரி.5-1).*

***பார்த்தல்*** *(வி.) – 1.கண்ணால் நோக்குதல் (கலி.65). 2.ஆராய்தல் (குறள்.676).*

***பார்ப்பனமகன்*** *(பெ.) – பார்ப்பனன் (குறு.156-1).*

***பார்முதிர் பறந்தலை*** *(பெ.) – பிணங்களைப் புதைக்கப் பயன்படும் இடம் (புறம்.265-1).*

***பார்வல்*** *(வி.) – 1.பார்க்கை (குறள்.1152). 2.காவல் (பதி.84,5).*

***பார்வற்பாசறை*** *(பெ.) – காவற் பாசறை (பதி.84-5).*

***பாரம்*** *(பெ.) – பெருங்குடும்பம் (புற.145).*

***பாராட்டு தல்*** *(வி.) – புகழ்தல் (குறள்.994).*

***பாரி த்தல்*** *(வி.) – 1.வளர்தல் (குறள்.851). 2.காத்தல் (கலி.224).*

***பாரிபறம்பு*** *(பெ.) – பாரியின் மலைநாடு (குறு.196-3).*

***பாரை*** *(பெ.) – செடிவகை (கலி.63).*

**பால்** (பெ.) – 1.குழவி, குட்டிகளுக்குத் தாய் முலையினின்று சுரக்கும் வெண்மையான நீர்மப் பொருள் (குறு.27). 2.குலம் (புற.183).

**பாவடி** (பெ.) – அகன்ற பாதம் (நற்.51-8).

**பாவை** (பெ.) – பதுமை (குறள்.1020).

**பாழ்** (பெ.) – விளையா நிலம் (புற.381).

**பாழ்படு தல்** (வி.) – கேடுறுதல் (குறள்.83).

**பாழ்படுநனந்தலை** (பெ.) – பிணத்தை அடக்கம் செய்யும் திடல் (அக.319-5).

**பாழூர்** (பெ.) – குடிநீங்கிய ஊர் (புற.132).

**பாழூர்க்குரம்பை** (பெ.) – இடுகாடு (அக.129-6).

**பாழூர்நெருஞ்சி** (பெ.) – பாழூரில் முளைத்துக்கிடக்கும் நெருஞ்சிமுள் (புற.155-4).

**பாறு தல்** (வி.) – சிதறுதல் (அக.9).

**பாறை** (பெ.) – கருங்கற்றிரள் (நற்.61-7).

**பானாட்கங்குல்** (பெ.) – நள்ளிரவு (குறு.301-4).

**பானை** (பெ.) – மண்மிடா (நற்.153-3).

**பிசிர் தல்** (வி.) – 1.சிதறுதல் (பதிற்றுப்:50:6). 2.நீர்த்துளி (ஐங்:461). 3.ஊற்றுநீர் (பரி:6:83).

**பிசிர்** (பெ.) – சிம்பு (புற:225).

**பிசை தல்** (வி.) – 1.தேய்த்தல் (பரி:10:91). 2.உரசுதல் (அக:39).

**பிடகை** (பெ.) – பூந்தட்டு (மதுரைக்:397).

**பிடர்** (பெ.) – பின்கழுத்து (புற:3).

**பிடா** (பெ.) – நார்ப்பெட்டி (பதிற்றுப்:66:13).

**பிடி த்தல்** (வி.) – மூடிய கையளவு கொள்ளுதல் (குறள்:1037).

**பிண்டம்** (பெ.) – 1.உருவற்ற கரு (புற:28). 2.பல பொருள்களின் தொகுதி (புற:184).

**பிணம்** (பெ.) – உயிரற்ற மாந்த உடல் (குறள்:913).

**பிணர்** (பெ.) – சருக்கரை (குறுந்:13).

**பிணி த்தல்** (வி.) – 1.வசப்படுத்துதல் (குறள்:643). 2.சேர்த்துக் கட்டுதல் (மலைபடு:326).

**பிணி** *(வி.) – 1.கட்டுகை (புற:25). 2.பற்று (அக:27). 3.அரும்பு (கலித்:59). 4.சிறுதுயில் (பதிற்:50).*

**பிணிமுகம்** *(பெ.) – முருகக் கடவுள், யானை (பரி:52).*

**பிணியகம்** *(பெ.) – காவலிடம் (பட்டினப்:222).*

**பிணை** *(வி.) – 1.பொருத்து (பரி:10-54). 2.பெண்மான் (குறள்:1089).*

**பிணையல்** *(வி.) – ஒன்று சேர்க்கை (பரி:2-53).*

**பிதிர்** *(பெ.) – பொறி (நற்:13).*

**பிரிவாற்றாமை** *(பெ.) – தலைவன் பிரிவைத் தலைவி பொறுக்க முடியாமை (குறள்:116,அதி).*

**பிலிற்று தல்** *(வி.) – வெளிவிடுதல் (அக:14).*

**பிழா** *(பெ.) – தட்டுப்பிழா (பெரும்பாண்:276).*

**பிழை த்தல்** *(வி.) – இலக்குத் தவறுதல் (குறள்:772).*

**பிழையாநன்மொழி** *(பெ.) – நிறைவேற்றத் தவறாகாத நல்ல சொல் (நற்:10.9).*

**பிள்ளைப் பெயர்ச்சி** *(பெ.) – பிள்ளைத் தன்மையுள்ள போர் வீரனொருவன் தீ நிமித்தங்களுக்கு அஞ்சாது போருக்குச் செல்வதையும் அதற்காக அரசன் அவனைப் புகழ்வதையும் கூறும் புறத்துறை (புற:259).*

**பிற்பகல்** *(பெ.) – பகலின் பின்பகுதி (குறள்:319).*

**பிறக்கடி** *(பெ.) – பின் வாங்கின அடி (பதற்றுப்:80-8).*

**பிறக்கிடு தல்** *(வி.) – கொண்டையிலே முடித்தல் (மதுரைக்:562).*

**பிறக்கு தல்** *(வி.) – அடுக்குதல் (பொருந:243).*

**பிறங்கடை** *(பெ.) – வழித்தோன்றல் (பெரும்பாண்:30).*

**பிறங்கு தல்** *(வி.) – 1.உயர்தல் (புற:6). 2.சிறத்தல் (குறள்:23). 3.மிகுதல் (புற:49).*

**பிற த்தல்** *(வி.) – தோன்றுதல், பிறத்தல் (குறள்:681).*

**பிறந்தை** *(பெ.) – பிறந்தகம் (பரி:11-43,உரை).*

**பிறழ் தல்** *(வி.) – துள்ளுதல் (பதிற்:13-1).*

**பிறன்** *(பெ.) – 1.மற்றையான் (குறள்:142). 2.மனம் வேறுபட்டவன் (கலித்:84). 3.பகைஞன் (புற:7).*

***பிறன் பொருளான்*** *(பெ.) – பிறன் மனைவி (குறள்:141).*

***பின்செல்(லு) தல்*** *(வி.) – பின் தொடர்தல் (குறள்:1033).*

***பின்னு தல்*** *(வி.) – தழுவுதல் (கலித்:32-15).*

***பின்றை*** *(வி.எ.) – பின்பு (புற:29).*

***பின்னோக்கு தல்*** *(பெ.) – வருவதையெதிர் பார்த்தல் (குறள்:184).*

***பீடர்*** *(பெ.) – பெருமையுடையவர் (பதிற்:45-14).*

***பீடு*** *(பெ.) – 1.பெருமை (பதிற்:50-26). 2.வலிமை (குறள்:1088).*

***பீழி த்தல்*** *(வி.) – வருத்துதல் (குறள்:843).*

***பீழை*** *(பெ.) – துன்பம் (குறள்:839).*

***புக்கில்*** *(பெ.) – 1.புகழிடம் (புற:221). 2.வீடு (குறள்:340).*

***புகர்*** *(பெ.) – 1.கபில நிறமுள்ள மாடு (கலித்:105). 2.நிறம் (பட்டினப்:74).*

***புகர்க்கலை*** *(பெ.) – புள்ளிமான் கலை (புற:152).*

***புகர்வு*** *(பெ.) – உணவுக்குரிய பண்டம் (நற்:60-5).*

***புகல்*** *(பெ.) – 1.புகுகை (பதிற்:84-17). 2.பற்றுக்கோடு (நற்:179).*

***புகல்வு*** *(பெ.) – விருப்பம்(பதிற்:84-17).*

***புகவு*** *(பெ.) – மேலேருகை (பரி:10-14).*

***புகழ்மாலை*** *(பெ.) – தலைவர் புகழைத் தெரிவிக்கும் சொன்மாலை (புற:176-உரை).*

***புகழ்மை*** *(பெ.) – புகழுடைமை (குறள்:533).*

***புகுதல்*** *(வி.) – ஏறுதல் (பரி:10-14).*

***புகை*** *(பெ.) – ஆவி (பெரும்பாண்:19).*

***புகை த்தல்*** *(வி.) – புகையச் செய்தல் (புற:281).*

***புகைக்கொடி*** *(பெ.) – வால்வெள்ளி ( வால் நட்சத்திரம்) (சிலப்:20-102,அரும்).*

***புங்கவம்*** *(பெ.) – சிவன் ஊர்தி (பரி:8-2).*

***புட்டகம்*** *(பெ.) – புடைவை (பரி:12-17).*

***புட்பகை*** *(பெ.) – சோழன் நலங்கிள்ளியின் புனைபெயர் (புற:68).*

***புடைப்படு தல்*** *(வி.) – முதிர்ச்சியாற் புடைதல் (குறள்:1274 உரை).*

***புடையல்*** *(பெ.) – மாலை (புற:99).*

**புண்** (பெ.) – உடற்றோலில் உண்டாகும் ஊறு (குறள்:129).

**புண்ணியதானம்** (பெ.) – புண்ணியந் தருங் கொடை (சிலப்:15-30).

**புண்ணியதிசை** (பெ.) – வடதிசை (சிலப்:5-94).

**புண்ணியநதி** (பெ.) – புண்ணியம் பயக்கும் ஆறு (சிலப்:3-122, உரை).

**புண்ணிய நல்லுரை** (பெ.) – நல்லுரை மொழி (மணிமே:1-59).

**புண்ணிய முதல்வி** (பெ.) – மலைமகள் (சிலப்:13-2).

**புண்வழலை** (பெ.) – புண்ணிலிருந்து வடியும் சீழ் (புற:22,உரை).

**புணர்குறி** (பெ.) – தலைவன் தலைவி சந்திக்கும் குறியிடம் (அக:118).

**புணரி** (பெ.) – அலை, கற்றிவலை (பதிற்:11).

**புணை** (பெ.) – ஒப்பு (கலித்:124).

**புதல்** (பெ.) – அரும்பு (பதிற்:66,16).

**புதல்வர்ப்பேறு** (பெ.) – ஆண்மக்களைப் பெறுகை (குறள்:61,உரை).

**புதவம்** (பெ.) – அறுகு, (பட்டினப்:243) (மலைபடு:449).

**புதவு** (பெ.) – 1.கதவு (பதிற்:16.5).2.வாயில் (பெரும்பாண்:52).

**புதுத் திங்கள்** (பெ.) – பிறை நிலா (கலித்:150).

**புதை** (பெ.) – அம்புக்கட்டு (குறள்:597).

**புய் த்தல்** (வி.) – பறித்தல் (புற:28).

**புயல் வண்ணன்** (பெ.) – திருமால் (கலிங்:1).

**புயலேறு** (பெ.) – இடி (பதிற்:51-28).

**புர த்தல்** (வி.) – காத்தல், பேணி வளர்த்தல் (பதிற்:50-4).

**புரட்டு தல்** (வி.) – உருட்டுதல் (பட்டினப்:230).

**புரந்தார்** (பெ.) – அரசர் (குறள்:780).

**புரவு** (பெ.) – 1.காப்பு (பதிற்:26-6). 2.தொடை (பதிற்:80-10).

**புரி தல்** (வி.) – அசைதல் (பதிற்:66-13).

**புரி** (பெ.) – கயிறு (பெரும்பாண்:181).

**புரிசை** (பெ.) – மதில் (புற:17).

**புருவை** (பெ.) – 1.ஆடு (நற்:321). 2.பெண்ணாடு (ஐங்:238).

**புரை தல்** (வி.) – 1.ஒத்தல் (பதிற்:65-8). 2.நேர்தல் (பரி:6-55).

**புரை** (பெ.) – 1.உயர்ச்சி (பரி:11-11). 2.பெருமை (பரி:20-73). 3.குற்றம் (குறள்:292).4.வீடு (ஐங்:319). 5.கோயில் (பதிற்:15-37).

**புரைபடு தல்** (வி.) – வருந்துதல் (பரி:2-34).

**புரையோர்** (பெ.) – 1.காதல் மகளிர் (பதிற்:16-8). 2.பெரியோர் (பதிற்:15-31).

**புல்** (பெ.) – 1.நிலத்தில் பரவி வளரும் பூடு வகை (குறள்:16). 2.புன்செய் தவசம் (புற:248).

**புல்லணல்** (பெ.) – இளந்தாடி (புற:258).

**புல்லரிசி** (பெ.) – வற்கடக் காலத்தில் ஏழைகள் உண்ணும் அரிசி போன்ற தவசம் (புற:248, உரை).

**புல்லவை** (பெ.) – சிறியோர் (கல்வியறிவு குறைந்தோர்) அவை (குறள்:719).

**புல்லறிவாண்மை** (பெ.) – அறிவின்மை (குறள்:841).

**புல்லறிவாளர்** (பெ.) – மேம்போக்கான அறிவுடையவர் (குறள்:841).

**புல்லார் தல்** (வி.) – (புல்லைத் தின்னுதல்) தோல்வியுறுதல் (ஐங்:4).

**புல்லாள்** (பெ.) – ஆறலை கள்வன் (பதிற்:15 -12).

**புல்லியார்** (பெ.) – இழிந்தவன் (ஐங்: 164,உரை).

**புல்லிலை வைப்பு** (பெ.) – இலைகளால் வேயப்பட்ட குடிசை களையுடைய ஊர் (பதிற்:15-13).

**புல்லினத் தாயன்** (பெ.) – ஆட்டிடையன் (கலித்:113).

**புல்லினம்** (பெ.) – ஆட்டினம் (கலித்:107).

**புல்லு தல்** (வி.) – புணர்தல் (குறள்:1303).

**புல்லூறு** (பெ.) – பறவை வகை (பதிற்:165.அரும்).

**புலம்** (பெ.) – 1.வயல் (குறள்:85).2.இடம் (புற:16).3.திக்கு (புற:9). 4.புல்லுணர்வு (குறள்:343).5.அறிவு (குறள்:407).

**புலம்பன்** (பெ.) – நெய்தனிலத் தலைவன் (ஐங்:133).

**புலம்பு தல்** (வி.) – வாடுதல் (ஐங்).

**புலம்புமுத்து** (பெ.) – அழுகைக் கண்ணீர் (சிலப்:4-71).

**புலர்** (பெ.) – உலர்க்கை (கலித்:6).

**புலவு தல்** *(வி.) – 1.புலால் நாற்றமடித்தல் (பெரும்பாண்:22). 2.வெறுத்தல் (புற:219).*

**புலன்** *(பெ.) 1.சுவை,ஒளி,ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன் உணர்வுகள் (குறள்:1101).2.வயல் (பரி7:9).*

**புலிப்பற்றாலி** *(பெ.) புலியின் பற்களாலாகிய தாலி (புற:374).*

**புலிப்போத்து** *(பெ.) – புலிக்குட்டி (பெரும்பாண்:138).*

**புலைத்தி** *(பெ.) – 1.இழிகுலத்துப்பெண் (புற:259).2.வண்ணாத்தி (புற:311).*

**புலையன்** *(பெ.) – பாணன் (கலித்:35).*

**புலைவிளையர்** *(பெ.) – இழிதொழிலாளர் (குறள்:329).*

**புவ்வத் தாமரை** *(பெ.) – திருமாலின் உந்தி (நாபியினின்று எழுந்த தாமரை (பரி:15-49).*

**புழற்காய்** *(பெ.) – நடுவில் துளை கொண்ட காய் (புடலங்காய்) (நற்:296-4).*

**புழுக்கல்** *(பெ.) – 1.சோறு (பெருந:1141). 2.முதிரைப் பண்டம் (சிலப்:5-68).*

**புழுக்கு** *(பெ.) – 1.புழுங்க வெந்த உணவு (பதிற்:90-25). 2.மருப்புச் சோறு (பெரும்பாண்:195,உரை).*

**புழுகு** *(பெ.) – அம்புத்தலை (அக:9).*

**புழுதி** *(பெ.) – காய்ந்த நிலம் (பரி:13-33).*

**புழை** *(பெ.) – 1.சிறுவாயில் (பட்டினப்:287). 2.காட்டு வழி (புற:98).3.ஒடுக்க வழி (மலைபடு:194).4.சாளரம் (மதுரைக்:358).*

**புழைவாயில்** *(பெ.) – பெரிய கதவுகள் சாத்தப்படும் போது உட்செல்வதற்கு அமைக்கப்படும் சிறிய நுழைவாயில் (பட்டினப்பா).*

**புள்** *(பெ.) – 1.பறவை (குறள்:274). 2.பறவை நிமித்தம் (அக:207). 3.கைவளை (மலைபடு:253).4.மது (பரி:16-39).*

**புள்ளிமான்** *(பெ.) – புள்ளிகளுடைய மான் வகை (புற:152).*

**புள்ளியன்மா** *(பெ.) – பறவையின் வேகமுடைய குதிரை (பரி:10-14).*

**புள்ளிவரிக்கலை** *(பெ.)* – புள்ளியையும் வரியையுமுடைய கலைமான் *(நற்:265-2).*

**புளி** *(பெ.)* – *1.*புளிங்கறி *(அக:60). 2.*தித்திப்பு *(சிறுபாண்:175,உரை).*

**புளிங்கூழ்** *(பெ.)* – புளியிட்டாக்கிய கூழ் வகை *(மலைபடு:436).*

**புற்றம்** *(பெ.)* – புற்று *(ஐங்:497).*

**புறக்கு** *(பெ.)* – வெளிப்புறம் *(அக:139).*

**புறக்கொடுத்தல்** *(பெ.)* – தோற்றோடுதல் *(புற:8).*

**புறக்கொடை** *(பெ.)* – பிரிந்த நிலை *(கலித்:25).*

**புறங்கடை** *(பெ.)* – பின் பிறந்தோன் *(பெரும்பாண்:30).*

**புறங்கால்** *(பெ.)* – பாதத்தின் மேற்புறம் *(கலித்:144).*

**புறஞ்சிறை** *(பெ.)* – *1.*மாளிகை முதலியவற்றிற்கு அருகிலுள்ள இடம் *(பதிற்:614-8). 2.*அருகிலுள்ள இடம் *(புற:84).*

**புறஞ்சொல்(லு) தல்** *(வி.)* – கோட் சொல்லுதல் *(குறள்:185).*

**புறத்திடு தல்** *(வி.)* – வெளிவிடுதல் *(குறள்:590,உரை).*

**புறத்துறுப்பு** *(பெ.)* – இடம்,பொருள், ஏவல் முதலிய பக்கத் துணை *(குறள்:79).*

**புறந்தருதல்** *(வி.)* – போற்றுதல் *(புற:35).*

**புறந்துர த்தல்** *(வி.)* – எருதுகளை முதுகிலேயடித்து ஓட்டுதல் *(பெரும்பாண்:58).*

**புறப்பகை** *(பெ.)* – பகைவன் *(குறள்:148, உரை).*

**புறப்பற்று** *(பெ.)* – எனது என்னும் பற்று, நான் என்னும் அகப்பற்றுக்கு எதிரானது *(குறள்:344,உரை).*

**புறப்புண்** *(பெ.)* – முதுகில்பட்ட புண் *(புற:65).*

**புறம்பு** *(பெ.)* – முதுகு *(கலித்:51).*

**பெட்டார்** *(பெ.)* – விரும்பியவர் *(குறள்:1178).*

**பெடை** *(பெ.)* – புட்களின் பெண் பால் *(குறுந்:160).*

**பெண்டு** *(பெ.)* – மனைவி *(ஐங்:57).*

**பெண்ணை** *(பெ.)* – வடபெண்ணை தென்பெண்ணையாறுகள் *(புற:126).*

**பெயர்த்தும்** *(வி.எ.) – பின்னும் (புற:2).*

**பெயரிய** *(பெ.எ.) – பெயரால் அழைத்த (புற:152).*

**பெயல்** *(பெ.) – 1.பொழிகை (குறள்:559). 2.முகில் (கலித்:56).*

**பெரியார்** *(பெ.) – அறிவர் (குறள்:381).*

**பெருக்கம்** *(பெ.) – செல்வம் (குறள்:431).*

**பெருக்குதல்** *(பெ.) – விரியச் செய்தல் (குறள்:512).*

**பெருக்கு தல்** *(வி.) – மேம்படுத்துதல் (குறள்:811).*

**பெருங்காடு** *(பெ.) – சுடுகாடு (புற:246).*

**பெருங்கை** *(பெ.) – யானை (பதிற்:76-6).*

**பெருஞ்செய்** *(பெ.) – மேம்பாடுள்ள செயல் (புற:199).*

**பெருஞ் செயாளன்** *(பெ.) – பெரிய வீரச் செயலுள்ளவன் (புற:282).*

**பெருந்தேன்** *(பெ.) – தேனீக்கள் கட்டும் தேன் (குறுந்:2).*

**பெருநகை** *(பெ.) – பேரிகழ்ச்சி (கலித்:45).*

**பெரும்பயறு** *(பெ.) – காராமணி (ஐங்:47). 2.இறப்பு (நற்:381).*

**பெரும்புலர் விடியல்** *(பெ.) – விடியற் காலம் (குறு:234:5).*

**பெரும் பெயருலகம்** *(பெ.) – விண்ணுலகம் (குறுந்:83).*

**பெரும்பேது** *(பெ.) – சாக்காடு (புற:238-10).*

**பெரும் பொன்படு தல்** *(வி.) –தோற்றப் பொலிவுண்டாதல் (கலித்:64).*

**பெருமகன்** *(பெ.) – தலைவன் (பெரும்பாண்:101).*

**பெருமணம்** *(பெ.) – திருமணம் (கலித்:96-36).*

**பெருமிதம்** *(பெ.) – தருக்கு (குறள்:979).*

**பெருவங்கியம்** *(பெ.) – யானைத் துதிக்கை போலும் வடிவுள்ள இசைக் குழல் (புற:152,உரை).*

**பெருவலி** *(பெ.) – மிகு வலிமையுடையது (குறள்:380).*

**பெருவாய் மலர்** *(பெ.) – இருவாட்சி (பதிற்:81-25).*

**பெருவிறல்** *(பெ.) – முருகக் கடவுள் (கலித்:81-9).*

**பெள் தல்** *(வி.) – காதலித்தல் (குறள்:141).*

**பெற்றான்** *(பெ.) – கணவன் (குறள்:58).*

**பெற்றி** (பெ.) – *தன்மை (குறள்:442).*

**பெறுவது கொள்வார்** (பெ.) – *விலை மகளிர் (குறள்:813).*

**பேடு** (பெ.) – *ஒருசார் விலங்குகளின் பெண் (கலித்:114,உரை).*

**பேணாமை** (பெ.) – *பகைமை (குறள்:866).*

**பேணியார்** (பெ.) – *விரும்பப் பட்டோர் (குறள்:1257).*

**பேணு தல்** (வி.) – *1.போற்றிக்காத்தல் (புற:9).2.அறிதல் (பரி:7-67).*

**பேதை** (பெ.) – *அறிவிலி (குறள்:603).*

**பேரறிவு** (பெ.) – *மூதறிவு (கலித்:142,உரை).*

**பேராண்மை** (பெ.) – *1.மிக்க வீரம் (குறள்:773). 2.மானம் (குறள்:962).*

**பேராந்தை** (பெ.) – *ஆந்தை வகை (புற:170).*

**பொங்கடி** (பெ.) – *யானை (அக:44).*

**பொம்மல்** (பெ.) – *சோறு (மலைபடு:169).*

**பொய்படுதல்** (பெ.) – *பயன் விளையாது அழிந்திடுதல் (குறள்:836).*

**பொரித்தல்** (பெ.) – *பொரியச் செய்தல் (புற:397).*

**பொரு தல்** (வி.) – *1.போர் செய்தல் (புற:2).2.மாறுபடுதல் (புற:35). 3.வீசுதல் (பதிற்றுப்:15-6).*

**பொருட்செல்வம்** (பெ.) – *பொருளாகிய செல்வம் (குறள்:241)*

**பொருட்பெண்டிர்** (பெ.) – *விலைமகள் (குறள்:913)*

**பொருநன்** (பெ.) – *1.அரசன் (புற:58) 2.பகைவன் (புற:58)*

**பொருளாள்** (பெ.) – *இல்லாள் (மனைவி) (குறள்:141)*

**பொலங்கலம்** (பெ.) – *பொன் அணிகலன் (ஐங்:316).*

**பொலம்** (பெ.) – *1.பொன் (பதிற்:64). 2.அழகு (பதிற்:84-6).*

**பொழி தல்** (வி.) – *பெய்தல் (புற:203).*

**பொழில்** (பெ.) – *நாட்டின் கூறு (பெரும்பாண்:465).*

**பொழிற்பாயல்** (பெ.) – *சோலையிடத்துப் படுக்கை (பரி:8-40).*

**பொழுதுகண்டிரங்கல்** (பெ.) – *பிரிவாற்றாத தலைவி மாலைப் பொழுது கண்டு வருந்துகை (குறள்:அதி.123).*

**பொறாமை** *(பெ.)* – *அழுக்காறு (குறள்:17).*

**பொறி** *(பெ.)* – *முத்திரை (இலச்சினை) (புற:58).*

**பொறு த்தல்** *(வி.)* – *1.சுமத்தல் (குறள்:239). 2.தாங்குதல் (புற:59).*

**பொறை** *(பெ.)* – *1.சிறுகுன்று (புற:118). 2.மலை (ஐங்:430).*

**பொறை** *(பெ.)* – *1.சுவைமிக்க (அக:89). 2. சேரன் (புற:53).*

**பொறையுடைமை** *(பெ.)* – *நெஞ்சுரம் (மனத்திண்மை) (குறள்:154).*

**பொன்** *(பெ.)* – *1.செம்பொன் (சாதரூபம்), கிளிச்சிறை, ஆடகம், நாவலகம் என நான்கு வகைப்பட்ட தங்கம் (புற,218) 2.இரும்பு (குறள்:931).*

**பொன்கண்** *(பெ.)* – *சிவந்த உடம்பு (பரி:3:82).*

**பொன்செய்கொல்லன்** *(பெ.)* – *தட்டான் (நற்:394).*

**பொன்படுதல்** *(பெ.)* – *தோற்றப் பொலிவுறுதல் (கலித்:64).*

**பொன்வீ** *(பெ.)* – *பொன்னிறமான மலர் (அக:70).*

**போகாறு** *(பெ.)* – *பொருளைச் செலவிடும் வழி (குறள்:478).*

**போகில்** *(பெ.)* – *பறவை (ஐங்:303).*

**போகூழ்** *(பெ.)* – *தீவினைப்பயன் (குறள்:371).*

**போத்து** *(பெ.)* – *விலங்கின் ஆண் (குறுந்:140-1). 2.எருமைக்கடா (குறுந்:91-1).*

**போதுதல்** *(பெ.)* – *ஒழுகுதல் (கலித்:139,2. உரை).*

**போது** *(பெ.)* – *அரும்பு (குறுந்:110-3).*

**போந்தை** *(பெ.)* – *பனைமரம் (குறுந்:281:2).*

**போர்ப்பு** *(பெ.)* – *போர்வை (பதிற்:84-2).*

**போர்ப்பு** *(பெ.)* – *தவசப்போர் (புற:353).*

**போரா** *(வி.)* – *போர்த்துக் கொள்ளாத (புற:141-10).*

**போரெதிர்தல்** *(வி.)* – *போர் செய்தலை மேற்கொள்ளுதல் (கலித்:89).*

**போல்வது** *(பெ.)* – *ஒத்தது (கலி:47-2).*

**போல்வர்** *(வி.)* – *ஒத்திருப்பர் (குறு:127:4-6).*

**போல்வார்** *(பெ.) – ஒப்பார் (கலித்:94-7).*

**போலாது** *(வி.) – 1.ஒவ்வாது (புற:127-10).*

**போலாவேல்** *(வி.) – ஒத்திராவிடின் (கலித்:3-17).*

**போலாள்** *(வி.) – ஒத்திலள் (அக:49:3-4).*

**போழ்** *(பெ.) – பிளவு (குறு:39-7).*

**போழ்க** *(வி.) – பிளக்கப்படுக (புற:132-2).*

**போழ்து** *(பெ.) – நேரம் (நற்:37-11).*

**போழ்ந்திட்ட** *(வி.) – அரிந்திட்ட (புற:246-4).*

**போழ்ந்து** *(வி.) – சென்று (குறு:357-1-2).*

**போழ்பு** *(வி.) – ஊடறுத்து (மலை:114-5).*

**போழ்வாய்** *(பெ.) – பிளந்தவாய் (அக:147-6).*

**போழப்படா** *(பெ.) – இடையறுக்கப்படாத குறள்:11-8) (நற்:111-8).*

**போழும்** *(வி.) – பிளக்கின்ற (குறு:301-5).*

**போற்ற** *(வி.) – பாராட்ட (குறு:275-56).*

**போற்றாக்கடை** *(வி.) – காவா விடின் (குறள்:32-5).*

**போற்றாதார்** *(பெ.) – பாதுகாவாதவர் (குறள்:26-2).*

**போற்றாது** *(வி.) – பாதுகாவாமல் (புற:17-14).*

**போற்றார்** *(வி.) – பகைவர் (புற:2-7).*

**போற்றி** *(வி.) – செவியுற்று (நற்:308-1).*

**போற்று** *(வி.) – பாதுகாக்க (நற்:50:5-6).*

**போற்றுதி** *(வி.) – பேணுவாயாக (கலி:65:8-9).*

**போற்றுபவர்** *(பெ.) – அடைபவர் (குறள்:75:1).*

**போற்றுபு** *(வி.) – பேணி (பொரு:150-151).*

**போற்றுமின்** *(வி.) – பாதுகாமின் (புற:104-1).*

**போற்றுவார்** *(பெ.) – வழிபடுபவர் (பரி:4:52).*

**போற்றேன்** *(வி.) – வணங்கேன் (நற்:50-10).*

**போறி** *(வி.) – போல்கின்றாய் (அக:163:9-10).*

**போன்ம்** *(வி.) – போல்வான் (அக:66:16-18).*

**போன்றவ்வே** *(வி.) – ஒத்திருந்தன (குறு:291:5-8).*

**போன்றனம்** *(வி.) – ஒத்துள்ளோம் (அக:339:10).*

**போன்றனை** *(வி.) – ஒத்தாய் (நற்:297:3-4).*

***மக்கட் பண்பு*** *(பெ.) – மக்களுக்குரிய பண்பு (குறள்.107).*

***மக்கட் பதடி*** *(பெ.) – மக்களுள் பதர் போன்றவன் (குறள்.206).*

***மக்கட்பேறு*** *(பெ.) – பிள்ளை பெறுதல் (குறள்.61).*

***மக்கண்முரி*** *(பெ.) – வடிவின் சிறியவ-ன்-ள் (கலி.94).*

***மக்கமல்லார் தல்*** *(வி.) – மல்லாந்து கிடத்தல் (புற.103).*

***மக்கள்*** *(பெ.) – பிள்ளைகள் (குறள்.63,410).*

***மக்கள் முரி*** *(பெ.) – உருவிற் சிறிய மக்கள் (கலி.94:22).*

***மக*** *(பெ.) – 1.மகன் அல்லது மகள் (மலைபடு.185). 2.குட்டி (குரங்குகள்) (குறு.29:6). 3.குழந்தை (குறு.324:6-7).*

***மகட்கொடை*** *(பெ.) – தன் மகளை மணஞ்செய்து கொடுக்கை (நற்.310-5).*

***மகடூஉ*** *(பெ.) – 1. பெண் (தொல்.சொல்.2) 2.மனைவி (புற.331-9).*

***மகமுறை*** *(பெ.) – விருந்து (பெரு.478).*

***மகரம்*** *(பெ.) – மகர ராசி (பரி.11:9).*

***மகர வலயம்*** *(பெ.) – அங்காந்த வாயுடன் கூடிய மகர மீனின் வடிவமையச் செய்த தலைக்கோல வகை (பரி.10:27).*

***மகரவாய்*** *(பெ.) – அங்காந்த வாயுடன் கூடிய மகர மீனின் வடிவமையச் செய்த தலைக்கோல வகை (கலி.54:6).*

***மகவு*** *(பெ.) – மகன் (குறு.29-6).*

***மகள்*** *(பெ.) – பெண்மகவு (கலி.56-12).*

***மகளிர்*** *(பெ.) – பெண்கள் (புற.10).*

***மகன்*** *(பெ.) – ஆண் பிள்ளை (குறள்.110).*

***மகன்றில்*** *(பெ.) – ஆண் பெண்களுள் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாத நீர்வாழ் பறவை வகையில் ஆண் பறவை (ஐங்.381-4).*

***மகார்*** *(பெ.) – குழந்தைகள் (பதி.71-7).*

**மகிழ் தல்** *(வி.) – 1.அகங்களித்தல் (குறள்.1057). 2.உணர்வழிய உவகையெய்துதல் (குறள்.1281). 3.உண்ணுதல் (புற.129). 4.இன்பம் (புற.20-32). 5.குடிவெறி (ஐங்.42-1).*

**மகிழ்** *(பெ.) – 1.கள்ளுணவு (நற்.190:1-2). 2.சிறப்பு (அக.16:10). 3.மகிழ்ச்சி (அக.74:1). 4.(கள்) தேறல் (அக.245:10). 5.செருக்கு (அக.74:1). 6.மது மயக்கம் (ஐங்.45). 7.இன்பம் (பரி.8:43-5).*

**மகிழ்ந்தது** *(பெ.) – கள் குடித்தல் (குறு.165:1-2).*

**மகிழ்நன்** *(பெ.) – 1.கணவன் (கலி.75). 2.மருதநிலத் தவைவன் (ஐங்.24).*

**மகிழம்** *(பெ.) – மணமுள்ள மரவகை மலர் (பரி.22-7).*

**மகுளி** *(பெ.) – 1.ஓசை (அக.19). 2.எட்பயிர் முதலியவற்றிற்கு வரும் அரக்குநோய் (மலைபடு.103).*

**மங்கலம்** *(பெ.) – நன்மை (குறள்.60).*

**மங்கலமகளிர்** *(பெ.) – வாழ்வரசிகள் (புற.332).*

**மங்குல்** *(பெ.) – 1.இருட்சி (புற.4-103). 2.வான வெளிப் பக்கமாகிய திசை (கலி.105,25).*

**மங்கை** *(பெ.) – பெண் (புற.11).*

**மஞ்சு** *(பெ.) – 1.வெண் மேகம் (நற்.154:4). 2.புகை (புற.356:4).*

**மஞ்ஞை** *(பெ.) – மயில் (புற.13).*

**மட்கலம்** *(பெ.) – மண்ணாலான பாண்டம் (குறள்.660).*

**மட்டம்** *(பெ.) – (கள்) தேறல் (குறு.193).*

**மட்டு** *(பெ.) – 1.(கள்) தேறல் (புற.24). 2.மது வைக்குஞ்சாடி (புற.113).*

**மட்டை** *(பெ.) – மொட்டை (புற.261).*

**மடக்கண்** *(பெ.) – மெல்லிய கண் (குறு.64:3).*

**மடக்கி** *(வி.) – தடுத்து (அக.248:3).*

**மடங்க** *(வி.) – 1.தீய்ந்தொழிய (அக.31:2). 2.மழுங்கிப் போக (பதி.19:22). 3.படும்படி (கலி.104:57).*

**மடங்கல்** (வி.) – 1.ஒடுக்கம் (பரி.1-47). 2.வடவைத்தீ (பதி.72:15). 3.ஊழிக்காலம் (கலி.120). 4.கூற்றுவன் (கலி.2). 5.கூற்றுவனின் ஏவலார் (பரி.3-8). 6.சிங்கம் (நற்.57:1-2). 7.இறப்பு (புற.363:6-9).

**மடங்கா** (பெ.) – 1.அடங்காத (அக.233:13). 2.மீளாத (புற.71:1-2). 3.மடக்கப்படாத (புற.200:16).

**மடங்கி** (வி.எ.) – 1.இருந்து (புற.223:2). 2.வளைந்து (கலி.94:9). 3.மீட்டுக்கொண்டு (கலி.129:3).

**மடங்கு தல்** (வி.) – 1.வளைதல் (கலி.94-2). 2.தாழ்தல் (புற.40). 3.செயலறுதல் (குறள்.1034).

**மடந்தை** (பெ.) – மகளிர் பருவம் ஏழனுள் பதினான்கு முதல் பத்தொன்பது அகவை வரையுள்ள பருவத்து பெண் (குறள்.1122).

**மடப்பிடி** (பெ.) – இளம் பெண் யானை (குறு.198:1-2).

**மடம்** (பெ.) – 1.பெண்டிர் குணம் நான்கனுள் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையாகிய பேதைமை (புற.11). 2.மென்மை (புற.23). 3.மடப்பம் (குறு.64:2-3). 4.நாண் (அக.310:9). 5.தான் தன் அறிகருவிகளால் ஆராய்ந்து கொண்டதனை எத்துணை இடையூறு இடையீடு எய்தினும் விடாமை (பதி.70:14).

**மடமை** (பெ.) – பேதைமை (குறள்.89).

**மடர்** (பெ.) – தேறலையுண்ணும் வள்ளம் (புற.383:8).

**மடல்** (பெ.) – 1.பனங்கருக்கு (புற.29:13-4). 2.நிலப் பூவின் இதழ் (நற்.14:7). 3.வாழையிலையின் பரப்பு (நற்.177:3). 4.பனையின் ஓலை (குறு.177:3). 5.பனையோலையின் கருக்குள்ள காம்பு (குறு.82:1). 6.தாழம் பூவின் மேலுள்ள ஓலை (குறு.245:3).

**மடல்மா** (பெ.) – பனை மடலால் செய்த குதிரை (நற்.377:12).

**மடலூர் தல்** (வி.) – தான் காதலித்த தலைவியை அடைதல் வேண்டிப் பனை மடலாலான தேரில் தலைவன் ஏறி ஊர்தல் (குறள்.1136).

**மடவ** (பெ.) – அறிவில்லாதன (குறு.66:1).

**மடவது** (பெ.) – அறியாமையை உடையது (நற்.316:1).

**மடவந்தனள்** (பெ.) – மடப்பம் வரப் பெற்றாள் (குறு.100:5-6).

**மடவர்** (பெ.) – அறிவில்லாதவர் (குறு.246:5-7).

**மடவரல்** (பெ.) – 1.மடப்பத்தை யுடையவள் (நற்.323:1-2). 2.மடப்பம் (புற.89:12). 3.இளமையுடைய பெண் (பதி.18:5).

**மடவள்** (பெ.) – அறிவிலாள் (அக.259:15).

**மடவன்** (பெ.) – அறிவிலான் (புற.140:2).

**மடவா தல்** (வி.) – மடப்பம் வருதல் (குறு.100).

**மடவார்** (பெ.)– 1.பேதையர் (குறள்.9:9). 2.அறிவிலார் (குறள்.16:3). 3.பெண்கள் (பரி.16:33).

**மடவை** (பெ.) – அறியாமையை உடைய (குறு.252:5).

**மடவோள்** (பெ.) – மங்கை (புற.198:4-5).

**மடவோன்** (பெ.) – அறிவற்றவன் (குறு.273:5-6).

**மடன்** (பெ.) – அறியாமை (குறு.324:3-5).

**மடா** (பெ.) – மண் பாண்ட வகை (பதி.24:20).

**மடி தல்** (வி.) – 1.வீழ்தல் (குறள்.604). 2.தூங்குதல் (கலி.65). 3.சுருங்குதல் (அக.54). 4.அழிதல் (குறள்.604). 5.சோம்பல் (குறள்.602).

**மடி** (பெ.) – 1.அறுவை (அக.13:16). 2.சோர்வு (அக.73:13). 3.சுருள் (அக.333:7). 4.ஆடை (புற.390:15). 5.சோம்புதல் (குறள்.371). 6.வீழ்ந்த (குறு.180:3). 7.நீங்கும் (நற்.109:11). 8.குவித்து (நற்.142:6). 9.வளைந்த (அக.50:11).

**மடித்து** (வி.) – கடித்து (புற.298:5).

**மடிதற்று** (வி.) – ஆடையை வரிந்து கட்டி (குறள்.1023).

**மடிந்த** (வி.) – 1.தங்கிய (நற்.29:3-4). 2.இல்லாத (நற்.257:7-8). 3.துயின்ற (அக.58:12). 4.ஒழிந்த (அக.122:16-7).

**மடிபதம்** (பெ.) – சோரும் செவ்வி (அக.73:13).

**மடிய** (வி.) – 1.சோம்பியிருக்க (குறு.391:1). 2.மெலிய (அக.1:14). 3.கரைய (அக.54:7).

**மடியா** (பெ.) – நீங்காத (புற.212:5).

**மடியாது** (பெ.) – அயராது (அக.163:12).

**மடியின்** (பெ.) – 1.அடங்கின் (அக.122:3). 2.உறங்கின் (அக.122:9). 3.தங்கின் (அக.122:12).

**மடியும்** *(பெ.) – 1.தங்கும் (நற்.271:2). 2.ஒழியும் (புற.212:5). 3.அழியும் (குறள்.603).*

**மடியேன்** *(பெ.) – மடிந்திரேன் (புற.196:11).*

**மடிவு** *(பெ.) – சோம்பல் (புற.29).*

**மடிவை** *(பெ.) – தழை (அக.226).*

**மடிவையர்** *(பெ.) – தழை ஆடையினர் (பதி.27:3).*

**மடுக்கும்** *(பெ.) – 1.செல்கின்ற (புற.60:7). 2.உண்பிக்கும் (ஐங்.92).*

**மடு த்தல்** *(வி.) – 1.ஊட்டுதல் (புற.56). 2.குத்துதல் (கலி.52-3). 3.செலுத்துதல் (கலி.144-21). 4.இடையூறு எதிர்ப்படுதல் (குறள்.624).*

**மடுத்த** *(வி.) – 1.பொருந்திய (குறு.304:2). 2.செருகிய (நற்.55:10-1). 3.தடையான (அக.17:12-3). 4.செலுத்திய (அக.100:6). 5.மேற்கொண்ட (அக.340:19). 6.விலக்கிய (குறள்.624).*

**மடுத்தலின்** *(வி.) – உண்பித்தலின் (புற.246:1).*

**மடுத்தால்** *(வி.) – புகுந்தால் (பரி.20:42).*

**மடுத்து** *(வி.) – 1.பொருந்தி (நற்.4:9-10). 2.பாய்ந்து (நற்.65:4). 3.உண்டு (நற்.341:3). 4.நாட்டி (புற.287:5-6). 5.விடுத்து (புற.288:1-2). 6.சேர்த்து (புற.323:1-2). 7.செலுத்தி (கலி.1:2). 8.குத்தி (கலி.52:2-3). 9.சமைத்து (கலி.59:20).*

**மடுப்ப** *(வி.) – 1.ஊட்ட (நற்.179:5). 2.உண்பிக்க (அக.348:9).*

**மடுப்பார்** *(பெ.) – உண்பார் (பரி.19:34).*

**மடுப்பேன்** *(பெ.) – செலுத்துவேன் (கலி.144:22).*

**மடை** *(பெ.) – 1.அணிகலக் கடைப்பூட்டு (புற.150). 2.அழுத்தின ஆணி (புற.97). 3.தெய்வப் படையல் (கலி.109). 4.படையல் உணவு (கலி.109). 5.மூட்டு வாய் (குறு.9:2). 6.உணவு (குறு.362:3). 7.பருகுதல் (நற்.59:5). 8.நீர் வடிகின்ற வழி (நற்.340:3). 9.தடுத்தல் (அக.248:8). 10.ஆணி (புற.97:7). 11.தெய்வ பலி (புற.366:17). 12.படைச்சல் (பதி.79:17). 13.நீர்த் தடுப்பு (பரி.6:82). 14.அவி (பரி.11:87).*

**மடையினள்** *(பெ.) – மடுத்தவள் (அக.275:2).*

**மண்** (பெ.) – 1.அணு (புற.2). 2.சுண்ணச் சாந்து (குறள்.576). 3.மத்தளத்தின் மார்ச்சனை மண் (நற்.100:11).4.கழுவுகை (அக.121:3). 5.பூவுலகம் (புற.384:16).

**மண்அளை** (பெ.) – மண் வளை (அக.176:12).

**மண்ட** (வி.) – 1.அழுந்த (பதி.27:11). 2.ஓடாநிற்ப (பரி.6:18).

**மண்டபம்** (பெ.) – வரலாற்றினை ஓவியங்களில் எழுதியுள்ள கட்டடம் (பரி.19:53).

**மண்டாத** (வி.) – சொல்லத் தகாத (கலி.108:21).

**மண்டி** (பெ.) – 1.காலை முடக்கி முழந்தாளால் நிற்கை (புற.80). 2.தவசம் (பரி.6-48). 3.நிலவு (கலி.7). 3.விரைந்து (அக.67:7). 4.பரவி (அக.167:18). 5.மிகுதியாக (புற.6:12). 6.குத்தி (புற.31:7). 7.நெருங்கி (புற.373:20). 8.புகுந்து (பரி.10:9).

**மண்டிய** (பெ.) – 1.மிக்குச் சென்ற (நற்.113:9). 2.நெருங்கிய (அக.44:17). 3.வேண்டி (அக.79:4). 4.கூடிய (அக.136:5). 5.அடர்ந்த (புற.62:7). 6.மிக்குள்ள (பதி.73:12).

**மண்டிலம்** (பெ.) – 1.வட்ட வடிவ (புற.30). 2.நிலம் (குறு.300).

**மண்டு தல்** (வி.) – 1.விரைந்து செல்லுதல் (புற.6). 2.செலுத்துதல் (புற.31). 3.நெருக்கித் தாக்குதல் (புற.62).

**மண்டு** (பெ.)– 1.நெருங்கிய (அக.37:11). 2.பாய்தற்குரிய (அக.48:11). 3.மிக்க (அக.111:13). 4.சேரும் (அக.123:11). 5.கூடிய (அக.374:13). 6.அடுத்து (புற.75:6). 7.மடுத்து (புற.213:1). 8.பிளந்து (புற.299:3).

**மண்டும்** (பெ.) – 1.மிகுதியாகப் பருகும் (அக.129:113). 2.கலக்கும் (பதி.48:13). 3.மிக்குச் செல்லும் (கலி.116:3).

**மண்டை** (பெ.) – இரப்போர் கலம், திருவோடு (புற.103).

**மண்ணகம்** (பெ.) – நில உலகம் (புற.3:2).

**மண்ணா** (வி.) – 1.எண்ணெய் பூசப்படாத (நற்.42:8). 2.கழுவப்படாத (நற்.94:5). 3.ஒப்பனை செய்யாத (அக.73:1). 4.நீராட்டப் பெறாத (அக.343:6).

**மண்ணி** (பெ.) – 1.கழுவி (அக.121:5). 2.நீராட்டி (அக.269:8). 3.பூசி (அக.385:6). 4.மூழ்கி (புற.79:1). 5.தூய்மை செய்து (புற.399:22).

**மண்ணிய** (வி.) – 1.நீராட (குறு.292:1-2). 2.பூசப்பெற்ற (அக.393:23).

**மண்ணு தல்** (வி.) – 1.மூழ்குதல் (புற.79). 2.கழுவுதல் (கலி.107). 3.செப்பமிடுதல் (புற.147).

**மண்ணை** (பெ.) – கூர்மழுக்கம் (அக.24).

**மண்வுரை** (பெ.) – மண் பொதிந்த வீடு (ஐங்.319).

**மண த்தல்** (வி.) – 1.கலத்தல் (புற.118). 2.நேர்தல் (கலி.46). 3.கூடியிருத்தல் (கலி.25). 4.புணர்தல் (கலி.24).

**மணந்த** (வி.) – 1.கூடிய (குறு.25:5). 2.அணைந்த (குறு.36:4). 3.அளவளாவிய (குறு.50:5). 4.ஒன்று சேர்ந்த (குறு.281:5). 5.பொருந்திய (நற்.374:1). 6.நெருங்கிய (நற்.394:1). 7.கலந்த (அக.99:9). 8.உள்ள (அக.233:11).

**மணந்தவன்** (பெ.) – கூடியவன் (கலி.131:2).

**மணந்தன்று** (பெ.) – கூடியுள்ளது (நற்.59:10).

**மணந்து** (வி.) – 1.தழுவி (குறு.189:7). 2.கூடி (அக.102:14). 3.சார்ந்த (அக.180:12).

**மணம்** (பெ.) – 1.வாசனை (குறு.330:5). 2.முயக்கம் (குறு.347:5). 3.புணர்ச்சி (புற.266:5).

**மணமனை** (பெ.) – கலியாண வீடு (அக.107:21).

**மணல்** (பெ.) – பாறையின் சிறு பொடி (குறு.51:3).

**மணற்கோடு** (பெ.) – மணற்குன்று (நற்.163:5).

**மணி** (பெ.) – 1.பளிங்கு (குறள்.1273). 2.கண்மணி (குறள்.1123).

**மணிநிறம்** (பெ.) – கருநீல நிறம் (ஐங்.224).

**மணிநீர்** (பெ.) – 1.மணிபோலும் நிறத்தினையுடைய நீர் (குறள்.642). 2.மணியிலுள்ள நீர் (பரி.12,93-4).

**மத்தகம்** (பெ.) – தலைக்கோலம் (பரி.165).

**மத்தம்** (பெ.) – மத்து (கலி.110).

**மத்தரி** (பெ.) – பறைவகை (பரி.12:93-4).

**மதம்** (பெ.) – 1.வலிமை (பரி.4:18). 2.செருக்கு (பரி.18:1). 3.மான் மணத்தி (பரி.10:92).

**மதர்** (பெ.) – செருக்கு (கலி.77).

**மதரணி** (பெ.) – ஒளிமிக்க அணிகலன் (புற.378,20).

**மதலை** (பெ.) – 1.பற்றுக்கோடு (குறள்.449). 2.பற்று (கலி.28).

**மதவலி** (பெ.) – மிகுவலி (புற.80).

**மதவு** (பெ.) – வலிமை (அக.14).

**மதன்** (பெ.) – வலிமை (புற.50).

**மதி த்தல்** (வி.) – துணிதல் (கலி.126-7).

**மதி** (பெ.) – 1.இயற்கையறிவு (குறள்.636). 2.நிலவு (குறள்.782). 3.அறிவு (குறு.226:3). 4.மதித்தல் (நற்.122:8). 5.பிறை நிலா (நற்.316:5). 6.கருத்து (பரி.10:48). 7.துணிதல் (கலி.126:7).

**மதிநுட்பம்** (பெ.) – இயற்கை நுண்ணறிவு (குறள்.636).

**மதில்** (பெ.) – கோட்டைச் சுவர் (கலி.67).

**மதில் மரம்** (பெ.) – கோட்டை மதிலின் கதவிலிடும் கணைய மரம் (பதி.15:3).

**மதிவல்லோர்** (பெ.) – அறிவாளர் (அக.48).

**மதுகை** (பெ.) – வலிமை (குறு.290).

**மதுபானம்** (பெ.) – (கள்) தேறல் (பரி.16:39-40).

**மதுரை** (பெ.) – பாண்டியர் தலைநகரம் (புற.32).

**மந்திரி** (பெ.) – அமைச்சன் (குறள்.639).

**மயக்கம்** (பெ.) – 1.அவிச்சை (குறள்.350). 2.பிழைபட உணர்கை (கலி.147:2).

**மயக்கு தல்** (வி.) – 1.கலத்தல் (புற.34). 2.சிதைத்தல் (ஐங்.99). 3.நிலைநெகிழ்த்துதல் (அக.6). 4.ஊடலுணர்த்துதல் (கலி.73).

**மயங்கியோர்** (பெ.) – அறிவு திரிந்தோர் (கலி.119).

**மயங்கு தல்** (வி.) – 1.மாறுபடுதல் (கலி.82:30). 2.வருந்துதல் (அக.26). 3.தாக்கப்படுதல் (பரி.8:31). 4.போலுதல் (பரி.15:50). 5.நெருங்குதல் (பரி.15:39). 6.கைகலத்தல் (புற.19).

**மயர்** (பெ.) – மயக்கம் (பரி.15:37).

**மயிர்** (பெ.) – 1.முடி (குறள்.964). 2.உடம்பின் உறுப்பினுள் ஒன்றான மயிர் (குறு.90:3). 3.துய் (நற்.89:5). 4.பிடரி மயிர் (நற்.81:4). 5.கூந்தல் (நற்.95:8).

**மயில்** (பெ.) – பறவை வகை (புற.116).

**மரக் கா** (பெ.) – பூஞ்சோலை (குறள்.385).

**மரப்பாவை** (பெ.) – மரப்பொம்மை (குறள்.1020).

**மரவு** (பெ.) – 1.முறைமை (புற.25). 2.இயல்பு (குறள்.188). 3.மேம்பாடு (புற.217).

**மரம்** (பெ.) – 1.உயர வளர்ந்து நீண்ட காலம் உயிர் வாழும் பயிரி (குறள்.78). 2.மரக்கலம் (பதி.76:4).

**மரவம்** (பெ.) – வெண்கடம்பு (ஐங்.357).

**மராஅம்** (பெ.) – செங்கடம்பு (கலி.26).

**மராம்** (பெ.) – செங்கடம்பு (பரி.15:20).

**மரீஇ** (வி.) – 1.பொருந்திய (குறு.266:4). 2.கலந்து (குறு.322:4). 3.பழகி (நற்.326:10). 4.பொருந்தியுண்டு (நற்.373:1). 5.இருந்தலைப் பொருந்தி (பதி.50:23). 6.மருவி (ஐங்.3:9).

**மருகண்** (பெ.) – வழித்தோன்றல் (பதி.63:16).

**மருங்கு** (பெ.) – 1.பொருந்தும் பக்கம் (புற.23). 2.விலாப்பக்கம் (புற.3). 3.எல்லை (கலி.48). 4.சுற்றம் (குறள்.526). 5.இடம், கண்ணோட்டம் (குறு.325:2). 6.காரணம் (நற்.61:5). 7.இடை (நற்.93:7). 8.பக்கம் (நற்.155:7). 9.மிகுதி (நற்.244:6). 10.விலாப்பக்கம் (புற.68:1). 11.கூறு (புற.214:7). 12.நிலம் (புற.359:6). 13.வயிறு (புற.370:5). 14.அரை (புற.400:10). 15.சுற்றம் (பதி.15:5). 16.குடி (பதி.15:5). 17.எல்லை (கலி.48:24).

**மருங்குல்** (பெ.) – வயிறு (புற.260:6).

**மருங்கை** (பெ.) – மருங்குகூர் என்பதன் மரூஉ (நற்.358:10).

**மருட்கை** (பெ.) – வியப்பு (நற்.57:7).

**மருட்டு தல்** (வி.) – மாறுபடச் செய்தல் (ஐங்.139).

**மருடல்** (பெ.) – மயங்குதல் (பரி.13:5).

**மருத்து** (பெ.) – ஊதைநோய் (பரி.4:32,3-4).

**மருத்துவர்** *(பெ.) – வைத்தியர் (கலி.137:25).*

**மருதம்** *(பெ.) – 1.மருத மரம் (நற்.330:5). 2.மருத நிலத்திற்குரிய காலைப் பண் வகை (புற.149).*

**மருதி** *(பெ.) – புகழுடைய ஒரு பெண் (அக.22:12).*

**மருது** *(பெ.) – மருத மரம் (அக.36:10).*

**மருந்து** *(பெ.) – 1.நோய் தீர்க்கும் பொருள் (நற்.58:8). 2.மாற்று (கலி.89). 3.சோறு (புற.70). 4.குடிநீர் (புற.70). 5.இனிமை (கலி.81). 5.பரிகாரம் (குறு.68:4). 6.அமிழ்தம் (குறு.71:1). 7.பால் (புற.180:5).*

**மருப்பு** *(பெ.) – 1.விலங்கின் கொம்பு (புற.4). 2.யாழினுறுப்பு வகை (புற.242). 3.யானை மருப்பு (தந்தம்) (குறு.215:4). 4.சுறாவின் முள் உடைய கொம்பு (நற்.131:5). 5.யாழின் உறுப்பு வகை (புற.242:2).*

**மருமகன்** *(பெ.) – வழித் தோன்றல் (பதி.63:16).*

**மருள்(ளு) தல்** *(வி.) – 1.மயங்குதல் (குறள்.1229). 2.வெருவுதல் (புற.46). 3.வியத்தல் (பரி.5:35). 4.ஒப்பாதல் (கலி.14).*

**மருள்** *(பெ.) – 1.மயக்கம் (குறள்.352). 2.திரிபுணர்ச்சி (குறள்.199). 3.எச்சம் (புற.28).*

**மருளி** *(பெ.) – மயக்கம் (கலி.14:11).*

**மரூஉ** *(பெ.) – பயின்றிருத்தல் (அக.280:7).*

**மரை** *(பெ.) – 1.மான் வகையைச் சார்ந்தது (குறு.235:4). 2.தாமரை (புற.27:6).*

**மரையான்** *(பெ.) – மரையின் பெண் (குறு.317:1).*

**மல்** *(பெ.) – மற்போர் (அக.386:4).*

**மல்கி** *(பெ.) – 1.நிறைந்து (அக.169:11). 2.பெருகிய (கலி.35:13).*

**மல்லல்** *(பெ.) – செல்வம் (பரி.11:121).*

**மல்கு** *(பெ.) – 1.மிகுதல் (குறு.347:1). 2.பெருகுதல் (நற்.33:12). 3.நிறைவு (அக.233:1). 4.பொங்குதல் (அக.250:2). 5.பரப்பு (அக.298:3).*

**மல்லன்** *(பெ.) – 1.வலிமையானவன் (பரி.3). 2.மற்போர் செய்வோன் (புற.80:2).*

***மல்லிகா*** *(பெ.) – மல்லிகை மலர் (பரி.11:105).*

***மல்லிகை*** *(பெ.) – பூங்கொடி வகை (பரி.12:77).*

***மலங்கு*** *(பெ.) – விலாங்கு மீன் (புற.61).*

***மலர் தல்*** *(வி.) – வாய்ப்புறம் மேலாக நிமிரச் செய்தல் (புற.103).*

***மலர்*** *(வி.) – 1.பூ (குறு.51:1). 2.இதழ் விரிதல் (குறு.241:4). 3.பரத்தல் (நற்.80:1). 4.தாமரை (குறள்.3). 5.பரந்த (புற.17:22). 6.விரிந்த (பதி.64:16).*

***மலர்தல்*** *(வி.) – விரிதல் (குறள்.425).*

***மலர்தலை உலகம்*** *(பெ.) – இட மகன்ற நிலவுலகம் (புற.24:34-5).*

***மலர்ந்த*** *(வி.) – 1.பூத்தல் (குறு.26:1). 2.இதழ் விரிதல் (குறு.175:4). 3.பரவுதல் (குறு.309:2). 4.அகலுதல் (நற்.294:9). 5.பரந்த (அக.28:14). 6.விரிதல் (அக.383:7). 7.தோன்றிய (புற.382:14). 8.படர்ந்த (ஐங்.250).*

***மலர்ப் பலி*** *(பெ.) – கை நிறையக் கொண்டு வழிபாடாக இடும் பூ (நற்.73:3).*

***மலர்ப்பு*** *(வி.) – விரித்தல் (பதி.63:5).*

***மலர்ப்போர்*** *(பெ.) – மலர்த்த வல்லார் (புற.179:3).*

***மலர்பு*** *(வி.) – மலர்தல் (பதி.52:12).*

***மலி*** *(பெ.) – 1.மிகுதல் (குறு.75:4). 2.பூரித்தல் (நற்.43:7). 3.நிறைதல் (நற்.118:4). 4.திரள் (பரி.10:29).*

***மலிர் தல்*** *(வி.) – 1.பெருகுதல் (நற்.117). 2.நீர் முதலியன ஒழுகுதல் (பரி.6:83). 3.பயிலுதல் (பரி.8.54).*

***மலிர்நிறை*** *(பெ.) – 1.பெரு வெள்ளம் (ஐங்.42). 2.நீருற்று (ஐங்.15).*

***மலிவு*** *(பெ.) – உவகை (பரி.19,88).*

***மலை தல்*** *(வி.) – 1.மேற்கொள்ளுதல் (குறள்.657). 2.பொருதல் (புற.36). 3.வருந்துதல் (புற.10).*

***மலை*** *(பெ.) – வளமுள்ள பெரிய இடம் (குறள்.124).*

***மலைக் கவாஅன்*** *(பெ.) – 1.மலையின் துடை போன்ற பகுதி (குறு.262:6). 2.மலையின் நடுவிடம் (நற்.53:4). 3.மலைச் சாரல் (அக.118:1).*

***மலைக்குநர்*** *(பெ.) – மாறுபடுவோர் (புற.61:14).*

**மலைச்சாரல்** *(பெ.) – மலையின் சரிவு (குறு.253:5).*

**மலைச் சிலம்பு** *(பெ.) – 1.மலைச் சாரல் (அக.147:1). 2.பக்க மலை (கலி.46:26).*

**மலைத்தல்** *(பெ.) – மாறுபடுதல் (புற.10:10).*

**மலைத் தாரம்** *(பெ.) – மலையில் உண்டாகும் அகில், மிளகு, கோட்டம், தக்கோலம், குங்குமம் என்ற ஐவகை வாசனைப் பண்டம் (புற.343:7).*

**மலைந்தனன்** *(பெ.) – அணிந்துகொண்டான் (புற.291:8).*

**மலைந்தான்** *(பெ.) – அணிந்தான் (ஐங்.20).*

**மலைந்தோர்** *(பெ.) – மாறுபட்டோர் (புற.61:16).*

**மலைப்பு** *(பெ.) – மாறுபடுத்தல் (புற.78:4).*

**மலைமார்** *(பெ.) – தரித்துக் கொள்ள (அக.345:12).*

**மலைமிசை** *(பெ.) – மலை உச்சி (அக.126:3).*

**மலைமுழக்கு** *(பெ.) – மலைகளினின்று கேட்கும் எதிரொலி (பரி.8:110).*

**மலையமான்** *(பெ.) – மலாடு ஆளும் அரசன் (புற.121).*

**மலையரசன்** *(பெ.) – அரண் நான்கனுள் ஒன்றான மலையாகிய காப்பிடம் (குறள்.742).*

**மலையன்** *(பெ.) – சேரவரசன் (புற.158).*

**மலைவளம்** *(பெ.) – மலைபடுபொருள் (பரி.18,15).*

**மழ** *(பெ.) – மனமயக்கம் (கலி.108).*

**மழகளிறு** *(பெ.) – இளைய ஆண் யானை (நற்.192:2).*

**மழ புலம்** *(பெ.) – மழவரது நிலம் (அக.61:12).*

**மழபுலவர்** *(பெ.) – பள்ளியிற் படிக்கும் சிறுவர் (பரி.11,88).*

**மழலை** *(பெ.) – குழந்தைகளின் திருந்தாச் சொல் (குறள்.66).*

**மண த்தல்** *(வி.) – 1.கலத்தல் (புற.118). 2.நேர்தல் (கலி.46). 3.கூடியிருத்தல் (கலி.25). 4.புணர்தல் (கலி.24).*

**மழவர்** *(பெ.) – 1.ஒரு வகை வீரர் (நற்.52:9). 2.மழ நாட்டவர் (அக.1:2). 3.வெட்சி வீரர் (அக.269:4). 4.மறவர் (அக.337:11). 5.இளையோர் (புற.88:3).*

**மழவன்** (பெ.) – 1.வீரன் (புற.90). 2.மழநாட்டான் (அக.61).

**மழி த்தல்** (வி.) – தலையை மொட்டையடித்தல் (குறள்.280).

**மழித்தலை** (பெ.) – மொட்டைத் தலை (புற.261).

**மழுகு தல்** (வி.) – 1.மழுங்குதல் (அக.24). 2.ஒளி குறைதல் (பரி.,16).

**மழுங்கு தல்** (வி.) – 1.கூர்நீங்குதல் (புற.4). 2.கெடுதல் (கலி.120). 3.ஒளிகுறைதல் (கலி.146).

**மழை** (பெ.) – 1.முகிலிளின்றும் பொழியும் நீர் (குறள்.55). 2.குளிர்ச்சி (குறள்.1239).

**மள்ளன்** (பெ.) – படைவீரன் (கலி.106).

**மற்றும்** (பெ.) – மீண்டும் (குறள்.344).

**மற த்தல்** (வி.) – ஒழித்தல் (குறள்.303).

**மறக்களவழி** (பெ.) – போரிற் பகையழிக்கும் அரசனை உழும் வேளாளனாக மிகுத்துக் கூறும் புறத்துறை (புற.373).

**மறத்தி** (பெ.) – பாலை நிலப் பெண் (புற.181).

**மறப்புகழ்** (பெ.) – வீரச் செயலால் வரும் புகழ் (புற.290).

**மறம்** (பெ.) – கொலைத் தொழில் (கலி.38).

**மறல்** (பெ.) – மறுக்கை (பரி.20,84).

**மறலி** (பெ.) – கூற்றுவன் (புற.13).

**மறவன்** (பெ.) – வீரன் (குறள்.778).

**மறவி** (பெ.) – மறதி (நற்.70).

**மறி த்தல்** (வி.) – 1.மீளுதல் (கலி.121). 2.முறுக்குண்ணுதல் (கலி.15). 3.பலகாலுந்திரிதல் (கலி.46).

**மறு த்தல்** (வி.) – 1.தடுத்தல் (கலி.104). 2.நீக்குதல் (குறள்.260). 3.களங்கம் (பரி.2,30).

**மறுக்கம்** (வி.) – மனக்கலக்கம் (பரி.15,52).

**மறுகால்** (பெ.) – இரண்டாம் முறை சாகுபடி செய்த பயிர் (குறு.82).

**மறுகு தல்** *(வி.)* – *வருந்துதல் (அக.29).*

**மறுகு** *(பெ.)* – *தெரு (குறள்.1139).*

**மறுகுசிறை** *(பெ.)* – *வீதியின் இரு புறத்துமுள்ள வீட்டு வரிசை (பதி.20).*

**மறுத்தரவு** *(பெ.)* – *திருப்புகை, மீட்கை (கலி.81).*

**மறுத்தா தல்** *(வி.)* – *மீட்டல் (கலி.15).*

**மறுத்து** *(பெ.)* – *மீள (குறள்.312).*

**மறுமை** *(பெ.)* – *மறுபிறவி (குறள்.459).*

**மறுமொழி** *(பெ.)* – *மறுசொல் (நற்.106).*

**மறுவா தல்** *(வி.)* – *மனஞ்சுழலுதல் (அக.22).*

**மறை தல்** *(வி.)* – *1.ஒளிந்துகொள்ளுதல் (குறள்.274). 2.தோன்றாத் தொழில் (நற்.239). 3.ஒளித்தல் (குறள்.1253). 4.மூடுதல் (குறள்.846). 5.தீது வாராமற் காத்தல் (குறள்.1029).*

**மறை** *(வி.)* – *1.மறைக்கை (புற.60). 2.மந்தணம் (குறள்.590). 3.சிற்றிலக்கியம் (பரி.3,66). 4.உபதேசப் பொருள் (குறள்.841). 5.களவுப் புணர்ச்சி (குறு.97). 6.புள்ளி (கலி.104).*

**மறைபொருள்** *(பெ.)* – *அறியவியலாத மந்தணம் (பரி.1,13).*

**மன்** *(பெ.)* – *1.மிகுதிக் குறிப்பு (புற.75). 2.கழிவுக் குறிப்பு (புற.235).*

**மன்பதை** *(பெ.)* – *1.மக்கட் பரப்பு (புற.210). 2.படை (பதி.73,3).*

**மன்மகளிர்** *(பெ.)* – *அரசனால் தலைக்கோல் பெற்ற ஆடல் மகளிர்(பரி.7,80).*

**மன்ற** *(வி.எ.)* – *உறுதியாக (புற.114).*

**மன்றம்** *(பெ.)* – *1.குதிரைகளைப் பயிற்றும் செண்டுவெளி (புற.220). 2.மக்கள் கூடும் வெளியிடம் (குறு.301). 3.போர்க்களம் பரப்பின் நடுவிடம் (பதி.35,8). 4.மாட்டுத் தொழுவம் (குறு.64).*

**மன்னன்** *(பெ.)* – *அரசன் (புற.186).*

***மன்னு தல்*** *(வி.) – நிலை பெறுதல் (குறள்.8:1).*

***மனக்கவலை*** *(பெ.) – ஒன்றைப் பற்றி மனத்திலுண்டாகும் கவலை (குறள்.7).*

***மனக்கோட்டை*** *(பெ.) – 1.புலவி நீட்டம் (பரி.10,57). 2.வீணெண்ணம் (பரி.10,57).*

***மனங்குவி தல்*** *(வி.) – மனமொடுங்குதல் (கலி.118).*

***மனவெழுச்சி*** *(பெ.) – பெருமகிழ்ச்சி (கலி.41).*

***மனை*** *(பெ.) – 1.அல்லும் பகலும் வீட்டில் வதியும் மனைவி (குறள்.148). 2.துறவுக்கு எதிரான இல்வாழ்க்கை (குறள்.51).*

***மனைகட்டு தல்*** *(வி.) – சொக்கட்டானில் ஓர் ஆட்டம் வெல்லுதல் (கலி.136).*

***மனை(மரம்)*** *(பெ.) – தேற்றா மரம் (பரி.11,19).*

***மனையாள்*** *(பெ.) – மனைவி (குறள்.904).*

***மனைவாழ்க்கை*** *(பெ.) – இல்வாழ்க்கை (ஐங்.3).*

***மா*** *(பெ.) – 1.குதிரை (குறள்.814). 2.அன்னம் (கலி.92:117). 3.விலங்கு வடிவமாய்ப் பிறக்கும் மானுடம் (புற.28). 4.ஓர் அசைச் சொல் (நற்.178). 5.திருமகள் (புற.7). 6.மாமைநிறம் (புற.147).*

***மாக்கள்*** *(பெ.) – 1.மாந்தர் (குறள்.329). 2.பகுத்தறிவிலார் (குறள்.420).*

***மாக்கோதை*** *(பெ.) – ஒரு சேர அரசன் பெயருடன் வெளிட்ட நாணயங்கள் (புற.245).*

***மாகம்*** *(பெ.) – வீண் (புற.35).*

***மாங்காய்*** *(பெ.) – மாவின் காய் (கலி.100,23).*

***மாசறு தல்*** *(வி.) – குற்றம் நீங்குதல் (குறள்.311).*

***மாட்சி*** *(பெ.) – உயர் தன்மை (குறள்.750).*

***மாட்டு தல்*** *(வி.) – 1.இணைத்தல் (நற்.19). 2.விளக்கு முதலியன கொளுத்துதல் (குறு.398).*

***மாண்(ணு) தல்*** *(பெ.) – 1.மாட்சிமைப்படுதல் (குறள்.665). 2.நன்றாதல் (குறள்.177). 3.நிறைதல் (குறள்.1002). 4.மிகுதல் (குறள்.124).*

***மாண்*** *(பெ.) – மாட்சிமை (கலி.20,15).*

***மாண்டார்*** *(பெ.) – மாட்சிமையுள்ளவர் (குறள்.665).*

***மாண்பு*** *(பெ.) – மாட்சிமை (குறள்.53).*

***மாதர்*** *(பெ.) – பெண் (குறள்.1117).*

***மாந்தர்*** *(பெ.) – 1.ஆடவர் (கலி.145,45). 2.ஊர்க்காவலர் (கலி.142,33).*

***மாந்தரன்*** *(பெ.) – பழைய சேரவரசன் (பதி.90).*

***மாமரம்*** *(பெ.) – மரவகை (பரி.7:14-15).*

***மாமை*** *(பெ.) – அழகு (நற்.304).*

***மாய் தல்*** *(வி.) – 1.அழிதல் (குறள்.898). 2.ஒளி மழுங்குதல் (கலி.143). 3.மறத்தல் (புற.139). 4.தீட்டுதல் (அக.5).*

***மாயம்*** *(பெ.) – 1.வஞ்சனை (குறள்.918). 2.காமம் கலந்த தன்மை (கலி.90).*

***மாயோள்*** *(பெ.) – 1.மாமை நிறமுடையவள் (ஐங்.145). 2.பெண் (அக.86).*

***மாயோன்*** *(பெ.) – கரு நிறமுடையவன் (பரி,1).*

***மார்பு*** *(பெ.) – 1.நெஞ்சு (குறள்.1288). 2.(தடாகம்) குளம் (பரி.15,9).*

***மாரி*** *(பெ.) – 1.மழை (புற.35). 2.மேகம் (குறள்.211).*

***மால்(லு) தல்*** *(வி.) – 1.மயங்குதல் (அக.3). 2.காமம் (பரி.10,24).*

***மாலை*** *(பெ.) – 1.பகலும் இரவுங்கலக்கும் அந்திப் பொழுது (குறள்.1135). 2.இயல்பு (குறள்.1035). 3.தொடுத்த பூந்தொடை (கலி.106,26). 4.கயிறு (பரி.5,67).*

***மாலையந்தி*** *(பெ.) – பகலும் இரவும் சந்திக்கும் அந்தி வேளை (புற.34).*

***மாழை*** *(பெ.) – இளமை (கலி.131).*

**மாற்றம்** *(பெ.) – 1.வஞ்சின மொழி (புற.341). 2.சொல் (குறள்.689).*

**மாற்றலர்** *(பெ.) – பகைவர் (குறள்.749).*

**மாற்றான்** *(பெ.) – பகைவன் (குறள்.471).*

**மாற்று தல்** *(வி.) – 1.நீக்குதல் (குறள்.225). 2.ஓடச் செய்தல் (ஐங்.267). 3.ஒழிதல் (கலி.146). 4.ஒழிக்கை (பரி.4,53).*

**மாற்றோர்** *(பெ.) – பகைவர் (பரி.4:54-5).*

**மாறாநீர்** *(பெ.) – கடல் (குறள்.707).*

**மாறுதல்** *(வி.) – 1.பொய்படுதல் (பரி.6,8). 2.கைவிடுதல் (கலி.15). 3.கழித்தல் (பரி.6,46).*

**மாறு** *(பெ.) – 1.பகை (புற.42). 2.ஒவ்வாது (குறள்.944). 3.மறுமொழி (உத்தரம்) (கலி.116,15). 4.இம்மை நீங்கும் இறப்பு (புற.273). 5.மாறுதல் நேரும் வகை (புற.5).*

**மாறுகோள்** *(பெ.) – பகைமை கொள்ளுதல் (குறள்.945).*

**மாறுபாடு** *(பெ.) – ஒவ்வாமை (குறள்.945).*

**மான்** *(பெ.) – அரிமான் (கலி.13).*

**மான்மறி** *(பெ.) – வள்ளி நாயகி (பரி.9,8).*

**மிக்க** *(பெ.) – மிகுந்திருத்தல் (குறள்.51:4).*

**மிகல்** *(பெ.) – மிகுதல் (புற.62:1).*

**மிகுதி** *(பெ.) – மேம்பாடு (அக.379:16).*

**மிசை** *(பெ.) – 1.மேல் (குறு.200:2). 2.மேலிடம் (நற்.1:3). 3.வானம் (கலி.46:20). 4.இடம் (நற்.333:9). 5.உச்சி (அக.25:22). 6.மேடு (புற.102:3). 7.உணவு (புற.384:9).*

**மிசை பாடும் புள்** *(பெ.) – வானம்பாடி (கலி.46:20).*

**மிசைவான்** *(பெ.) – உண்கின்றவன் (குறள்.9:5).*

**மிசைவு** *(பெ.) – உணவு (புற.236:2).*

***மிஞிலி*** *(பெ.) – ஒரு தலைவன் பெயர் (நற்.265:4).*

***மிஞிறு*** *(பெ.) – 1.வண்டு (அக.159:16). 2.தேனீ (புற.22:6).*

***மிடல்*** *(பெ.) – வலிமை (அக.266:12).*

***மிடறு*** *(பெ.) – கழுத்து (குறு.279:2).*

***மிடை*** *(பெ.) – 1.நெருங்குதல் (குறு.274:7). 2.வளைந்த இடம் (நற்.50:4). 3.பின்னுதல் (நற்.152:2). 4.கலத்தல் (நற்.304:6). 5.பரண் (அக.158:6).*

***மிதப்பு*** *(பெ.) – மேலெழுந்த தன்மை (அக.224:6).*

***மிதவை*** *(பெ.) – 1.கூழ் (அக.37:13). 2.பொங்கல் (அக.86:1).*

***மிதவையர்*** *(பெ.) – தெப்பங்களை உடையவர் (பரி.6:35).*

***மிதி*** *(பெ.) – 1.அடி வைப்பு (குறு.172:6). 2.மிதிக்கை (அக.202:6). 3.செருப்பு (பதி.21:23).*

***மிதி உலை*** *(பெ.) – மிதித்து ஊதும் உலை (அக.202:6).*

***மிதிதோல்*** *(பெ.) – துருத்தி (குறு.172-6).*

***மிழலை*** *(பெ.) – 1.இனிமை (நற்.209:5). 2.சோணாட்டின் ஒரு பகுதி (புற.24:19).*

***மிளகு*** *(பெ.) – உறைப்புச் சுவையுடைய குறிஞ்சி நில வித்துகளுள் ஒன்று (நற்.66:1).*

***மிளிர்ப்பு*** *(பெ.) – கீழ் மேலாக்குதல் (கலி.45:4).*

***மிளிர்வை*** *(பெ.) – குழம்பிலிடும் கறித் துண்டு (நற்.60:4).*

***மிளை*** *(பெ.) – 1.காவற் காடு (குறு.390:5). 2.மிளை என்பதோர் நாட்டின் பெயர் (அக.133:16).*

***மிறை*** *(பெ.) – 1.வளைவு (புற.284:6-7). 2.துன்பம் (குறள்.85:7).*

***மின்*** *(பெ.) – 1.ஒளி விடுதல் (குறு.246:6). 2.ஒளி (நற்.187:9). 3.மின்னல் (நற்.339:9).*

**மின்மினி** *(பெ.) – ஒளி உமிழக் கூடிய ஒரு வகைப் பூச்சி (நற்.44:10).*

**மின்று** *(பெ.) – மின்னல் (குறு.205:1).*

**மீக்கூறும்** *(பெ.) – உயர்த்துக் கூறும் (குறள்.39:6).*

**மீகை** *(பெ.) – மேல் எடுத்த கை (பதி.40:12).*

**மீகையர்** *(பெ.) – தோள் மேல் அணியும் சட்டையை உடையவர் (பதி.81:11).*

**மீட்டல்** *(பெ.) – திரும்பப் பெறுதல் (புற.21:8).*

**மீட்டுதல்** *(வி.) – மீளச் செய்தல் (அக.286:9).*

**மீதூர்கின்றாள்** *(பெ.) – புலம்புகின்றவள் (நற்.348).*

**மீநீர்** *(பெ.) – நீரின் மேற் பரப்பு (பரி.21:40).*

**மீமிசை** *(பெ.) – மேல் இடம் (நற்.169:4-5).*

**மீளி** *(பெ.) – 1.கூற்றுவன் (அக.93:18). 2.திண்மை (அக.373:7). 3.வலிமை (அக.379:4). 4.மறம் (புற.207:8). 5.பாலை நிலத் தலைவன் (கலி.17:21). 6.தலைவன் (பரி.16:22).*

**மீளியாளர்** *(பெ.) – மறத்தினையுடைய வீரர் (புற.260:13).*

**மீன்** *(பெ.) – 1.நீர் வாழ் உயிருள் ஒன்று (குறு.9:5). 2.(நட்சத்திரம்) விண்மீன் (குறு.357:7).*

**மீன் உணங்கல்** *(பெ.) – கருவாடு (அக.80:6).*

**மீன் கெண்டி** *(பெ.) – மீன் வைக்கும் (பாத்திரம்) ஏனம் (அக.10:1).*

**முக்கட் செல்வர்** *(பெ.) – மூன்று கண்களையுடைய பரமர் (புற.6:16).*

**முக்கண்ணான்** *(பெ.) – சிவபெருமான் (கலி.2:4-5).*

**முக்காவனாடு** *(பெ.) – தமிழகத்துப் பழைய சிறு நாடுகளுள் ஒன்று (புற.80).*

**முக்காழ்** *(பெ.) – மூன்று வடம் (கலி.80:2).*

**முகடி** *(பெ.) – மூதேவி (குறள்.936).*

**முகடு** (பெ.) – 1.உச்சி (நற்.89:2). 2.உயர்வு (பரி.10:73).

**முகத்தார்** (பெ.) – முகத்தினர் (அக.90:11).

**முகப்படுத்தல்** (பெ.) – நேர் முகமாகச் செலுத்துதல் (பதி.53:13).

**முகம்** (பெ.) – 1.வாய் (குறு.227:2). 2.முகம் என்னும் உறுப்பு (குறு.252:3). 3.முன் பக்கம் (குறு.304:2). 4.மத்தளத்தின் அடிக்கப்படும் இடம் (நற்.360:1). 5.முனை (அக.144:15). 6.தோற்றம் (அக.7:1). 7.நுனி (அக.24:12). 8.வாயில் (அக.164:12). 9.முன்பு (புற.327:6). 10.இடம் (பதி.38:5). 11.வடிவு (கலி.56:23).

**முகமன்** (பெ.) – புகழுரை (அக.272:13).

**முகவாதல்** (பெ.) – முகர்தல் (அக.393:13).

**முகவை** (பெ.) – 1.முகந்து அளக்கப்பட்டவை (அக.126:11). 2.மிகுதியாகக் கொள்ளப்படும் பொருள் (புற.371:20). 3.நீர் முகக்கும் கருவி (பதி.22:14).

**முகன்** (பெ.) – முகம் (அக.86:28).

**முகில்** (பெ.) – மேகம் (பதி.84:11).

**முகிழ்** (பெ.) – 1.அரும்பு (குறு.17:2). 2.மொக்குள் (கலி.56:23). 3.கொழுந்து (பரி.19:75).

**முகிழ் நகை** (பெ.) – தோன்றிய புன்சிரிப்பு (நற்.179:10).

**முகிழ் நிலா** (பெ.) – அரும்பிய நிலவு (அக.54:17).

**முகை** (பெ.) – 1.அரும்பு (குறு.62:1). 2.குகை (குறு.62:1). 3.முறைஞ்சு (அக.47:6). 4.மொட்டு (அக.130:3). 5.அரும்பி (கலி.40:4).

**முச்சி** (பெ.) – 1.உச்சி (நற்.51:7). 2.கொண்டை (அக.73:1). 3.கூந்தலின் முடி (அக.390:5).

**முசிறி** (பெ.) – மேற்குக் கடற்கரையிலுள்ள பழைய துறைமுகப் பட்டினம் (அக.57:15).

**முசு** (பெ.) – குரங்குகளுள் ஒரு வகை (நற்.119:5).

**முசுண்டை** (பெ.) – ஒரு வகைக் கொடி (அக.94:2).

**முஞ்ஞை** (பெ.) – முன்னைக் கீரை (புற.197:11).

**முட்கள்ளி** (பெ.) – முள்ளையுடைய கள்ளி என்பதோர் செடி வகை (நற்.384:2).

**முட்கால்** (பெ.) – முள்ளையுடைய கால் (குறு.109:1).

**முட்டு** (பெ.) – குறைவு (புற.166:8).

**முட்டுப்பாடு** (பெ.) – தட்டுப்பாடு (கலி.93:36).

**முட்டை** (பெ.) – 1.பறவைகளின் கரு அடங்கிய பொருள் (குறு.38:1). 2.அண்டம் (புற.173:6:7).

**முட்டோடு** (பெ.) – முள்ளையுடைய புறவிதழ் (நற்.131:5).

**முடக் கள்ளி** (பெ.) – வளைவையுடைய கள்ளிச் செடி (குறு.174:2).

**முடக் கால்** (பெ.) – வளைந்த அடி (அக.344:3).

**முடங்கர்** (பெ.) – முடக்கமான இடம் (அக.147:4).

**முடங்கல்** (பெ.) – 1.வளைதல் (குறு.374:5). 2.சுருள் (நற்.358:8).

**முடங்கு** (பெ.) – வளைதல் (குறு.109:1).

**முடச்சினை** (பெ.) – வளைதலையுடைய கிளை (குறு.209:5).

**முடத்தாள்** (பெ.) – வளைந்த அடி மரம் (நற்.137:7).

**முடந்தை** (பெ.) – வளைவு, தலை சாய்தல் (அக.284-3).

**முடம்** (பெ.) – 1.வளைவு (அக.91:16). 2.கோணல் (அக.180:13). 3.கை கால் பயன்பாட்டிற்கின்றிப் போகும் நிலை (புற.307:8).

**முடவன்** (பெ.) – கை கால் பயனின்றி இருப்பவன் (குறு.60:2).

**முடவு** (பெ.) – வளைவு (அக.10:3).

**முடி** (பெ.) – 1.மயிர் முடி (குறு.184:5). 2.முடிச்சு (நற்.49:3). 3.கட்டு (நற்.60:7). 4.தலை (நற்.308:6). 5.கூந்தல் (அக.379:11). 6.கிரீடம் (புற.26:8). 7.கொண்டை (பதி.46:4). 8.முடிவு (பரி.20:93). 9.முடித்தல் (ஐங்.38:4).

**முடித்தல்** *(வி.) – 1.முற்றுவித்தல் (குறு.270:5). 2.நிறைவேற்றுதல் (நற்.102-1). 3.தலையிற் சூடிய (நற்.366:6).*

**முடிநர்** *(பெ.) – நிறைவேற்றுபவர் (குறு.195:3).*

**முடியர்** *(பெ.) – முடியினையுடையவர் (பரி.22:23).*

**முடியன்** *(பெ.) – ஓர் உபகாரியின் பெயர் (நற்.390:9).*

**முடிவலை** *(பெ.) – நூல்கள் முடிந்த மீன் பிடிக்கும் வலை (நற்.49:3).*

**முடிவு** *(பெ.) – 1.எல்லை (குறள்.681). 2.முடிக்கும் வகை (குறள்.676).*

**முடுக்கர்** *(பெ.) – 1.இடைவெளி (அக.97:5). 2.முடுக்கு (அக.240:13).*

**முடுகு** *(வி.) – விரைதல் (நற்.252:10).*

**முடை** *(பெ.) – 1.இறைச்சி (குறு.283:7). 2.தீய நாற்றம் (அக.3:9). 3.புலால் (அக.51:4).*

**முண்டகம்** *(பெ.) – 1.கழி முள்ளிப் பூ (நற்.191:9). 2.கழி முள்ளிச் செடி (நற்.207:2).*

**முண்டித்தல்** *(வி.) – மொட்டையடித்தல் (கலி.11:157).*

**முண்டை** *(பெ.) – முட்டை (பதி.60:6).*

**முத்தம்** *(பெ.) – முத்து (நற்.202:2).*

**முத்து** *(பெ.) – கடலில் விளைவது நவ மணிகளுள் ஒன்று (நற்.23:6).*

**முத்துநீர்** *(பெ.) – பனி நீர்த் திவலை (பரி.10:13).*

**முத்தூறு** *(பெ.) – வேளிர்க்குரியதாயிருந்த பாண்டி நாட்டின் பகுதியான நிலப் பிரிவு (புற.24:22).*

**முதல்** *(பெ.) – 1.இடம் (குறு.250:2). 2.அடிப் பகுதி (குறு.301:1). 3.முதலியன (நற்.58-6). 4.காரணம் (அக.13:19). 5.தலை இடம் (அக.108:3). 6.வேர் (பரி.15:11). 7.முதலாவான் (ஐங்.259). 8.மூலதனம் (குறள்.449). 9.ஆதி (பரி.3:91).*

**முதல்வர்** *(பெ.) – முன்னோர் (பதி.14:20).*

**முதல்வன்** *(பெ.) – 1.இறைவன் (புற.166:2). 2.தந்தை (கலி.75:23-4).*

**முதலாட்டி** *(பெ.) – காரணமாக உள்ளவள் (குறு.10:1).*

**முதலை** *(பெ.) – நீர் வாழ் விலங்கினில் ஒன்று (குறு.324:1).*

**முதாஅரி** *(பெ.) – முதுமையுடையவன் (புற.138:5).*

**முதியர்** *(பெ.) – 1.முன்னோர் (அக.233:8). 2.முதுமையுடையவர் (புற.254:1). 3.பெரியோர் (பதி.70:21).*

**முதியவன்** *(பெ.) – 1.பிரமன் (கலி.2:1). 2.மூத்தவன் (கலி.25:2).*

**முதியன்** *(பெ.) – முதியனூரில் வாழ்ந்த ஒரு வள்ளல் (புற.389:12).*

**முதிர்** *(பெ.) – 1.விளைதல் (குறு.49:1). 2.நிரம்புதல் (குறு.85:3). 3.வயது ஆதல் (நற்.263:7). 4.மூத்தல் (நற்.280:8). 5.மிக்க (அக.6:16).*

**முதிர்கடன்** *(பெ.) – முதிர்ந்தமையால் உண்டான கடமை (நற்.228:2).*

**முதிர்ந்தவன்** *(பெ.) – மூத்தவன் (கலி.130:6).*

**முதிர்ந்தோர்** *(பெ.) – கிழப் பருவம் உற்றோர் (நற்.314:1).*

**முதிர்வினள்** *(பெ.) – மூப்பையுடையவள் (புற.159:5).*

**முதிரத்தோன்** *(பெ.) – முதிர மலைக்கு உரியோன், குமணன் (புற.160:13).*

**முதிரை** *(பெ.) – துவரை அவரை முதலியன (பதி.55:7).*

**முது** *(பெ.) – 1.பேரறிவு (குறு.78:2). 2.வயது ஆதல் (குறு.140:1). 3.அறிவு (நற்.200:4). 4.முதுமை (அக.387:16).*

**முதுகாடு** *(பெ.) – சுடுகாடு (புற.356:4).*

**முதுகுடி** *(பெ.) – பழங்குடி (புற.58:5).*

**முதுசிரல்** *(பெ.) – முதிய சிச்சிலிப் பறவை (அக.106:4).*

**முதுசெம் பெண்டிர்** *(பெ.) – திருமணத்தினைச் செய்து வைக்கும் முதிய மங்கல மகளிர் (அக.86:9).*

**முதுநரி** *(பெ.) – வயது முதிர்ந்த நரி (நற்.352:5).*

**முது நீர்** (பெ.) – 1.பழைய நீர் (குறு.299:1). 2.பழைமையான கடல் (அக.57:15).

**முது பாழ்** (பெ.) – களர் நிலம் (புற.381:9-10).

**முதுபெண்டு** (பெ.) – வயது முதிர்ந்த பெண் (நற்.370:6).

**முது மரம்** (பெ.) – பழைய மரம் (குறு.352:3:4).

**முது முறை** (பெ.) – மூத்த முறைமை (கலி.124:1:2).

**முதுமை** (பெ.) – 1.இளமை நீங்கிய தன்மை (அக.6:15). 2.பழைமை (பரி.2:17).

**முதுமொழி** (பெ.) – 1.சான்றோர் செய்யுள்கள் (கலி.68:4). 2.பிரணவம் (கலி.126:4). 3.வேகம் (பரி.3:42).

**முதுவர்** (பெ.) – அறிவு மிகுந்தவர் (குறள்.715).

**முதுவாய்** (பெ.) – பேரறிவு பொருந்துதல் (குறு.78:2).

**முது வீ** (பெ.) – பழைய பூ (புற.307:5).

**முதை** (பெ.) – 1.பழைமை (குறு.155:1). 2.பழங் கொல்லை (குறு.304:3).

**முதைச் சுவல்** (பெ.) – 1.பழைமையான மேட்டு நிலம் (குறு.204:3). 2.பழங் கொல்லை (அக.88:1).

**முதைப் புனம்** (பெ.) – பழைய தினைப் புனம் (குறு.155:1).

**முதையல்** (பெ.) – பழங்காடு (நற்.121:1).

**முந்திசினோர்** (பெ.) – முன்னோர் (பதி.69:17).

**முந்து** (வி.) – மிகுதல் (நற்.83:4).

**முந்துறல்** (வி.) – முந்துதல் (பரி.20:22).

**முந்துறுதல்** (வி.) – முன்னே செல்லுதல் (அக.261:11).

**முந்தூழ்** (பெ.) – மூங்கில் (குறு.239:6).

**முந்நால்** (பெ.) – பன்னிரண்டு (குறு.287:3).

**முந்நீர்** (பெ.) – கடல் (குறு.130:2).

**முந்நூறு** (பெ.) – மூன்று நூறு (புற.110:3).

**முப்புணர்** (பெ.) – நிலம், ஆகாயம், சுவர்க்கம் மூன்றும் சேர்ந்தது (புற.6:5).

**முயக்கம்** (பெ.) – 1.புணர்ச்சி (நற்.199:11). 2.கூட்டம் (அக.137:9). 3.தழுவுதல் (குறள்.913).

**முயக்கு** (பெ.) – புணர்ச்சி (நற்.333:7).

**முயங்கல்** (பெ.) – தழுவல் (குறு.339:4).

**முயப்பிடி** (பெ.) – நெருங்கிய பெண் யானை (நற்.230:1).

**முயல்** (பெ.) – 1.முல்லை நிலத்துக் கருப் பொருளாகிய விலங்கினுள் ஒன்று (நற்.59:3). 2.சந்திரன் மத்தியில் தோன்றும் ஒரு சிறு களங்கம் (அக.141:7).

**முயல்வு** (பெ.) – முயல் வகை (கலி.17:10).

**முயலுநர்** (பெ.) – முயல்வார் (புற.182:9).

**முயற்சி** (பெ.) – ஊக்கம் (ஐங்.452).

**முயற் பறழ்** (பெ.) – முயல் குட்டி (அக.384:5).

**முயற்று** (பெ.) – முயற்சி (குறள்.616).

**முயறல்** (பெ.) – முயற்சி செய்தல் (குறு.244:2).

**முயிறு** (பெ.) – ஒரு வகைச் செவ்வெறும்பு (நற்.180:1).

**முரசம்** (பெ.) – போர்ப் பறை (அக.246:11).

**முரசம் மூன்று** (பெ.) – வெற்றி முரசு, கொடை முரசு, மங்கல முரசு (புற.58:12).

**முரசினான்** (பெ.) – முரசினை யுடையவன் (பரி.21:38).

**முரசு** (பெ.) – ஒரு வகைத் தோல் இசைக்கருவி (நற்.39:8).

**முரண்** (பெ.) – 1.வலிமை (குறு.88:3). 2.மாறுபாடு (குறு.312:2). 3.பகைமை (நற்.247:1).

**முரம்பு** (பெ.) – 1.பருக்கைக் கல்லையுடைய மேட்டு நிலம் (குறு.400:4). 2.வன்னிலம் (நற்.33:2).

***முரல்*** *(வி.) – ஒலித்தல் (நற்.71:9).*

***முரல்வு*** *(பெ.) – இசை (பரி.8:36).*

***முரவு*** *(வி.) – 1.முறிதல் (அக.373:17). 2.முரிந்த (அக.72:3). 3.முழங்கும் (அக.260:12). 4.சிதைந்த (புற.371:5).*

***முரற்கை*** *(பெ.) – 1.தாளம் (புற.376:13). 2.பாட்டு (ஐங்.137). 3.துள்ளலோசை (ஐங்.402). 4.ஒலி (ஐங்.402).*

***முரற்சி*** *(பெ.) – 1.கயிறு (நற்.222:2). 2.கானம், இன்னோசை (கலி.36:4).*

***முரி*** *(வி.) – வளைதல் (நற்.315:3).*

***முரிவாய்*** *(பெ.) – முரிந்த குறடு (புற.261-3).*

***முருக்கு*** *(பெ.) – முருக்க மரம் (அக.362:5).*

***முருகன்*** *(பெ.) – முருகக் கடவுள் (அக.1:3).*

***முருகு*** *(பெ.) – 1.வெறியாட்டு (குறு.362:1). 2.முருகன் (அக.22:11). 3.மணம் (அக.28:6). 4.தேன் (அக.137:8). 5.தெய்வம் (புற.259:5).*

***முருங்கை*** *(பெ.) – மர வகை (அக.1:16).*

***முருந்து*** *(பெ.) – 1.மயிலிறகின் அடிக் குருத்து (நற்.179:10). 2.வேரின் மேல் தண்டு (அக.62:1).*

***முரைசு*** *(பெ.) – முரசு (புற.62:9).*

***முரைசுமூன்று*** *(பெ.) – வீர முரசு, தியாக முரசு, நியாய முரசு (கலி.132:4).*

***முல்லை*** *(பெ.) – 1.முல்லைப்பூ (குறு.62:1). 2.முல்லைக் கொடி (குறு.108:3). 3.முல்லை நிலத்துக்குரிய பூங் கொடிகளுள் ஒன்று (நற்.59:8). 4.முல்லைப் பண் (ஐங்.408).*

***முல்லை சான்ற கற்பு*** *(பெ.) – முல்லைப் பூ சூடுதற்கு அமைந்த கற்பு (நற்.142:10).*

***முலை*** *(பெ.) – பெண்களின் மார்பகம் (குறு.71:2).*

***முலைப் பால்*** *(பெ.) – தாய்ப் பால் (கலி.84:4).*

**முழ** (பெ.) – *முழவோலை (கலி.70:10).*

**முழக்கம்** (பெ.) – *1.பேரொலி (பரி.7:82). 2.ஆரவாரம் (பரி.8:17).*

**முழங்கல்** (பெ.) – *பேரொலி செய்தல் (புற.81:2).*

**முழங்கு** (பெ.) – *இடித்தல் (குறு.251:7).*

**முழந்தாள்** (பெ.) – *முழங்கால் என்னும் உறுப்பு (குறு.394:1).*

**முழம்** (பெ.) – *முழங்கால் (அக.119:18).*

**முழவன்** (பெ.) – *முழவினையுடையவன் (அக.352:6).*

**முழவு** (பெ.) – *மத்தளம் (குறு.301:1).*

**முழு** (பெ.) – *1.முழுமை என்பதன் சுருக்கச்சொல் (குறு.80:1). 2.நிரம்பல் (நற்.18:3). 3.பருமை (அக.68:7).*

**முழுது** (பெ.) – *1.எஞ்சாமை (நற்.26:5). 2.எல்லாம் (புற.69:7).*

**முழு நெறி** (பெ.) – *1.புறவிதழ் ஒடித்த முழுப் பூ (குறு.80:1). 2.இதழ் ஒடியாத பூ (அக.156:9).*

**முழு முதல்** (பெ.) – *1.அடி மரம் (குறு.24:5). 2.அடித் தண்டு (குறு.361:4). 3.பெரிய அடி (அக.45:10). 4.அடிப் பகுதி (பதி.11:13).*

**முழுமை** (பெ.) – *எஞ்சாமை (கலி.6:2).*

**முழை** (பெ.) – *குகை (அக.168:12).*

**முள்** (பெ.) – *1.தாவரங்களில் கூர்மையாகவுள்ள உறுப்பு (குறு.26:6). 2.கூர்மை (நற்.18:3). 3.மீனின் முள் (குறு.109:1). 4.தாற்று முள் (நற்.21:4). 5.இறகின் அடி (அக.23:3).*

**முள்ளி** (பெ.) – *நீர் முள்ளிச் செடி (அக.26:1).*

**முள்ளூர்** (பெ.) – *மலையமானுக்குரிய ஊர் (குறு.312:3).*

**முளரி** (பெ.) – *1.முள்ளுள்ள சுள்ளி (நற்.384:3). 2.தாமரை (அக.163:8). 3.காடு (அக.301:13).*

**முளவு** (பெ.) – *முள்ளம் பன்றி (நற்.85:8).*

**முளை** (பெ.) – *1.தோன்றுதல் (குறு.119:3). 2.மூங்கில் முளை (குறு.346:1). 3.முளைத்த பகுதி (நற்.116:4). 4.விதையிலிருந்து*

தோன்றிய பகுதி (நற்.172:2). 5.குருத்து (அக.148:13). 6.நெல் முளை (ஐங்.29). 7.முளை (கலி.4:13). 8.வளையம் (கலி.59:2).

**முற்பகல்** (பெ.) – பகலின் முற் பகுதி (குறள்.319).

**முற்றம்** (பெ.) – 1.பரப்பு (நற்.268:8). 2.ஊரின் வெளியிடம் (அக.187-9).

**முற்றல்** (பெ.) – முதிர்தல் (நற்.265:1).

**முற்றியவர்** (பெ.) – புறத்தே சூழ்ந்தவர் (குறள்.748).

**முற்று** (பெ.)– 1.முதிர்தல் (நற்.174:1). 2.சூழல் (புற.29:6). 3.வளைப்பு (பதி.63:11).

**முற்றை** (பெ.) – முன்பு (நற்.374:51).

**முறம்** (பெ.) – தானியங்களைப் புடைத்தற்குரிய ஒரு கருவி (நற்.376:1).

**முறி** (பெ.) – முறிக்கும் தன்மையுடைய தளிர் (குறு.278:2).

**முறுக்கு** (பெ.) – சுற்றுதல் (அக.224:12).

**முறுக்குநர்** (பெ.) – சுற்றுபவர் (பரி.10:80).

**முறுவல்** (பெ.) – 1.சிரிப்பு (குறு.162:4). 2.புன்சிரிப்பு (நற்.44:3). 3.மகிழ்ச்சி (நற்.81:9). 4.பல் (நற்.370:10).

**முறுவலள்** (பெ.) – சிரிப்பினை யுடையவள் (அக.5:5).

**முறை** (பெ.) – 1.வழி (குறு.40:2). 2.ஒழுங்கு (குறு.199:7). 3.நீதி (குறு.276:5). 4.வரிசை (நற்.121:2). 5.பங்கு (நற்.336:6). 6.இடம் (அக.55:4). 7.முறைமை (புற.29:23). 8.ஊழ் (புற.192:10). 9.வழக்கம் (பதி.43:5). 10.தடவை (புற.258:7). 11.நெறி (ஐங்.8). 12.நிலைமை (ஐங்.54). 13.செங்கோல் (குறள்.547). 14.கற்பு (பரி.15:39). 15.பிறப்பு (பரி.11:139).

**முறைமை** (பெ.) – இராச நீதி (புற.39-10).

**முறையர்** (பெ.) – உறவினர் (குறள்.70:8).

**முன்** (பெ.) – 1.முன்னிலை (குறு.9:8). 2.முன்னிடம் (குறு.173:5). 3.முற்காலம் (நற்.93:11). 4.முதல் (நற்.233:6).

**முன்கடை** *(பெ.) – வீட்டு வாயில் (ஐங்.5).*

**முன்கை** *(பெ.) – கையின் முன் பகுதி (குற.15:6).*

**முன் திணை முதல்வர்** *(பெ.) – குல முன்னோருள் முதல்வன் (பதி.14:19-20).*

**முன் நாள்** *(பெ.) – முந்தின நாள் (குறு.394:4).*

**முன்பனி** *(பெ.) – முன் நேரத்தில் பனியையுடைய பருவம் (நற்.224-2).*

**முன்பு** *(பெ.) – 1.வன்மை (குறு.388:5). 2.வலி (புற.5:2). 3.முன்னிடம் (புற.14:4).*

**முன்றில்** *(பெ.) – 1.வீட்டின் முன்னிடம் (குறு.41:4). 2.முற்றம் (குறு.153:1).*

**முன்னத்தான்** *(பெ.) – குறிப்புடையான் (கலி.61:7).*

**முன்னம்** *(பெ.) – 1.குறிப்பு (அக.5:19). 2.கருத்து (புற.3:25).*

**முன்னாள்** *(பெ.) – முந்தின நாள் (புற.382:12).*

**முன்னியது** *(பெ.) – 1.கருதியது (நற்.169:1). 2.வந்தது (பரி.12:7).*

**முன்னிலை** *(பெ.) – முன்னிற்றல் (அக.125:18).*

**முன்னினர்** *(பெ.) – சென்றடைந்தனர் (புற.359:8).*

**முன்னுதல்** *(வி.) – சொல்லுதல் (ஐங்.444).*

**முன்னுவர்** *(பெ.) – முற்படுவார் (அக.197:6).*

**முன்னுறத்தல்** *(வி.) – முன்னே பொருந்துதல் (அக.233:6).*

**முன்னை** *(பெ.) – முன்னர் (பரி.8:87).*

**முன்னோர்** *(பெ.) – 1.குலத் தலைவர் (அக.127:5). 2.பழையோர் (புற.99:4).*

**முனி** *(பெ.) – 1.வெறுத்தல் (குறு.357:1). 2.யானைக் கன்று (நற்.360:9).*

**முனித்துறை** *(பெ.) – சடங்கு (பரி.11:82).*

**முனிதல்** *(பெ.) – வெறுத்தல் (அக.328:7).*

**முனிநர்** (பெ.) – வெறுப்பவர் (குறு.39:4).

**முனிமரபு** (பெ.) – இறைமை (பரி.19:3).

**முனியேன்** (பெ.) – வெறேன் (புற.196:11).

**முனிவர்** (பெ.) – 1.அந்தணர் (புற.6:20). 2.அருந்தவர் (புற.43:4).

**முனிவன்** (பெ.) – தவம் செய்பவன் (புற.201:8).

**முனிவு** (பெ.) – வெறுப்பு (குறு.6:2).

**முனை** (பெ.) – 1.போர் முனை (குறு.80:6). 2.பகைப் புலம் (நற்.100:7). 3.இடம் (நற்.270:4). 4.எயினர் இருப்பு (அக.81:10). 5.போர் (அக.152:10). 6.காட்டரண் (அக.187:17). 7.வெறுப்பு (புற.351:10). 8.மாறுபாடு (பரி.11:131). 9.முன் (அக.199:10).

**முனைமுகம்** (பெ.) – போரின் தொடக்கம் (குறள்.749).

**முனைவர்** (பெ.) – துறவியர் (பரி.1:30).

**மூ** (பெ.) – மூன்று (அக.282:8).

**மூஉய்** (பெ.) – பேழை (பரி.10:13).

**மூஉரு** (பெ.) – அயன், அரி, அரன் என்னும் முக்கடவுளர் வடிவம் (பரி.13:37).

**மூஎயில்** (பெ.) – பொன், வெள்ளி, இரும்பால் ஆன மூன்று மதில்கள் (புற.55:2).

**மூக்கு** (பெ.) – 1.மூக்கு என்னும் உறுப்பு (நற்.6:7). 2.காப்பு (நற்.24:3). 3.முளை தோன்றும் வித்தின் முனை (குறள்.277).

**மூங்கில்** (பெ.) – ஓரறிவுயிரும் புறக்காழதுவுமாகிய புல் இனத்துள் ஒன்று (குறு.179:7).

**மூட்டு** (பெ.) – பற்ற வைக்கும் துரும்பு (அக.257:17).

**மூடப்பட்டார்** (பெ.) – விழுங்கப்பட்டார் (குறள்.936).

**மூடை** (பெ.) – 1.தானியக் கோட்டை (புற.285:5). 2.பொதி (புற.393:13).

**மூத்தோர்** (பெ.) – முதியோர் (அக.90:1).

**மூத்தோன்** (பெ.) – வயதில் மூத்தவன் (புற.183:6).

**மூதள்ளல்** (பெ.) – பழஞ்சேறு (அக.140:12).

**மூதாய்** (பெ.) – தம்பலப் பூச்சி (நற்.362:5).

**மூதாளர்** (பெ.) – முதியோர் (அக.366:10).

**மூதில்** (பெ.) – 1.பழைய குடி (நற்.367:6). 2.முதிய மறக்குடி (புற.19:15).

**மூதிலாளர்** (பெ.) – முது குடி மறவர் (புற.289:5).

**மூதிலாளன்** (பெ.) – மறக் குடி மறவன் (புற.284:4).

**மூதிலை** (பெ.) – முதிர்ந்த இலைகள் (அக.355:3).

**மூதிற் பெண்டிர்** (பெ.) – மறக் குடி மகளிர் (புற.19:15).

**மூது** (பெ.) – தொன்மை (புற.382:12).

**மூதூர்** (பெ.) – பழைய ஊர் (குறு.293:4).

**மூப்பு** (பெ.) – முதுமை (புற.195:3).

**மூய்** (பெ.) – மூடி (குறு.233:7).

**மூய** (வி.) – நெருங்க (பதி.42:20).

**மூயின** (வி.) – நெருங்கச் சூழ்ந்து (பதி.22:14).

**மூரல்** (பெ.) – 1.பல் (குறு.286:5). 2.சோறு (அக.60:4). 3.புன் (அக.390:15).

**மூரல் முறுவல்** (பெ.) – புன்சிரிப்பு (குறு.286:5).

**மூரி** (பெ.) – 1.பெருமை (நற்.15:1). 2.வளமை (அக.88:1). 3.ஊன் (புற.391:5). 4.துண்டம் (புற.393:14). 5.வலிமை (பதி.45:16). 6.சோம்பல் (பரி.20:54). 7.பெரிய (அக.103:6).

**மூரி எக்கர்** (பெ.) – இடப் பெருமையை உடைய இடு மணல் (நற்.203:1).

**மூலம்** (பெ.) – மூலப் பகுதி (பரி.13:24:25).

**மூவர்** (பெ.) – 1.சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தர்கள்

*(அக.31:14). 2.பார்ப்பான், அரசன், வணிகன் ஆகிய மூன்று பேர் (குறள்.41 தமிழ்மரபு உரை). 3.மூன்று பேர் (ஒற்றர்) (குறள்.589).*

**மூவன்** *(பெ.) – ஒரு வீரன் (நற்.18:2).*

**மூவா** *(பெ.) – 1.இளைய (அக.54:17). 2.முற்றாத (அக.335:23). 3.முற்றலில்லாத. முதிராத (பரி.2:70).*

**மூழ்க** *(பெ.) – 1.மூழ்கிட (அக.242:16). 2.குளிப்ப (புற.263:7). 3.அழுத்த (கலி.6:3).*

**மூழ்கார்** *(பெ.) – முழுகார் (புற.62:14).*

**மூழ்கிய** *(பெ.) – 1.மறைந்த (நற்.163:9). 2.முழுகி வந்த (நற்.236:9). 3.சூழ்ந்த (அக.287:7).*

**மூழ்குதல்** *(வி.) – முழுகுதல் (குறு.9:6).*

**மூழ்த்தனர்** *(பெ.) – மூடினர் (புற.336:5).*

**மூழ்த்துதல்** *(வி.) – மொய்த்தல் (பதி.33:5).*

**மூன்று** *(பெ.) – எண்ணின் பெயர் (அக.147:4).*

**மெய்** *(பெ.) – 1.உண்மை (குறள்.354). 2.உடம்பு (குறள்.619). 3.உணர்ச்சி (புற.25).*

**மெய்கண்ட** *(பெ.) – ஆராய்ந்து அறிந்த (புற.10:3).*

**மெய்க்கலவை** *(பெ.) – மெய்யிற்பூசுங் கலவைச் சாந்து (பரி.7:20).*

**மெய்காண்(ணு) தல்** *(வி.) – உண்மையாக ஆராய்ந்தறிதல் (புற.10).*

**மெய்பொருள்** *(பெ.) – உண்மைப்பொருள் (குறள்.385).*

**மெய்பெறுதல்** *(வி.) – எழுத்துகள் திருந்திய ஒலிவடிவு பெறுதல் (கலி.81:2).*

**மெய்யுணர்வு** *(பெ.) – மெய்யறிவு உணர்வு (குறள்.352).*

**மெல்** *(பெ.) – மென்மையான (அக.56).*

**மெல்கு** *(வி.) – மெல்லும் (அக.290:5).*

**மெல்நடை** *(பெ.) – மெல்லிய நடை (அக.85:6).*

**மெல்ல** *(வி.) – 1.மெதுவாக (குறு.290:6). 2.மென்மையாக (நற்.159:5).*

**மெல்லம்புலம்பன்** *(பெ.) – நெய்தனிலத் தலைவன் (குறு.5).*

**மெல்லிது** *(பெ.) – மென்மையான பொருள் (குறள்.1289).*

**மெல்லிய** *(பெ.) – மென்மையானவை (ஐறு.306:1).*

**மெல்லியர்** *(பெ.) – புல்லிய குணங்களை யுடையவர் (புற.106).*

**மெல்லியல்** *(பெ.) – 1.மென்மையான இயல்புடையவள் (நற்.33:9). 2.மென்மைத் தன்மையுடையவள் (அக.12:14).*

**மெல்லியள்** *(பெ.) – மென்மையை உடையவள் (குறு.70:5).*

**மெல்லியன்** *(பெ.) – அறிவுகுன்றியவன் (புற.184).*

**மெல்லென** *(பெ.) – 1.மெதுவாக (நற்.42:7). 2.மென்மையாக (அக.34:16). 3.மெத்தென (அக.49:7).*

**மெலி** *(வி.) – தளர்ந்திட்ட (அக.63:15).*

**மெலிகோல்** *(பெ.) – கொடுங்கோல் (புற.71).*

**மெலிந்த** *(வி.) – தளர்ந்த (அக.107:1-3).*

**மெலிந்தார்** *(வி.) – இளைத்தார் (பரி.10:7).*

**மெலிந்து** *(வி.) – வன்மையற்று (நற்.110:7).*

**மெலிய** *(வி.) – வருந்த (அக.89:18).*

**மெலியர்** *(பெ.) – 1.எளியர் (புற.239:7). 2.வலியற்றவர் (பரி.6:40).*

**மெலிவு** *(வி.) – 1.குறைவு (புற.42:11). 2.இளைப்பு (கலி.104:2).*

**மெழுகி** *(வி.) – சுத்தம் செய்து (புற.234:2).*

**மெழுகு** *(பெ.) – கொழுப்பிலிருந்து (அ) எண்ணெயிலிருந்து உருவாக்கப்படுவதும் எளிதில் உருகக்கூடியதுமான பொருள், தேனடையின் சக்கை, அரக்கு (குறு.155).*

**மென்கொடி** *(பெ.) – மெல்லிய கொடி (குறு.186:2).*

**மென்பறை** *(பெ.) – பறவைக்குஞ்சு (ஐங்.86).*

**மென்பிணி** *(பெ.) – 1.சிறுதுயில் (பதி.50:21). 2.மெல்லிய இதழின் கட்டு (குறு.220:4).*

**மென்புலம்** *(பெ.) – மருதநிலம் (புற.42:18).*

**மென்மை** *(பெ.) – 1.மெத்தென்ற தன்மை (குறு.327:5). 2.கனமில்லாத தன்மை (நற்.40:8). 3.மெல்லிய தன்மை (புற.170:14). 4.வலியின்மை (குறள்.877).*

**மென்று** *(வி.) – பல்லால் அரைத்து (குறு.136:4).*

**மென்னடை** *(பெ.) – மென்மையான நடை (பரி.10:25).*

**மே** *(பெ.) – மேன்மை (நற்.296:5).*

**மேக்கு** *(பெ.) – 1.மேல் (குறு.26:2). 2.மேலிடம் (நற்.91:6).*

**மேகலை** *(பெ.) – 1.மாதர் இடையிலணியும் ஏழு எட்டுக்கோவையுள்ள அணிவகை (கலி.96). 2.இரு வடமாய் ஆடையினுள்ளே, அணிவதோர் அணிகலன் (பரி.7:47).*

**மேதக்க** *(வி.) – மேம்பாடுடைய (கலி.81:35).*

**மேந்தோல்** *(பெ.) – மேற்றோல் (புற.321:2).*

**மேம்** *(வி.) – விரும்பும் (நற்.4:1).*

**மேம்பட்ட** *(வி.) – 1.உயர்வடைந்த (குறு.125:4). 2.சிறந்த (புற.88:5). 3.மேலான (கலி.26:24).*

**மேம்பாடு** *(பெ.) – மேன்மை (பரி.10:38).*

**மேய்தல்** *(வி.) – விலங்கு முதலியன உணவு கொள்ளுதல் (குறள்.273).*

**மேய்ந்த** *(வி.) – 1.விலங்குகள் தின்ற (குறு.320:1). 2.இரையாக உண்ட (நற்.260:1).*

**மேய்பதம்** *(பெ.) – மேயும் உணவு (அக.371:6).*

**மேய்மணி** *(பெ.) – இரை தேடுவதற்கு வெளிச்சம் தந்து உதவும்படி நாகம் உமிழ்வதாகக் கருதப்படும் ஒன்பான் மணிகளுள் ஒன்று (அக.72:14-5).*

**மேயல்** *(பெ.) – 1.உண்ணுதல் (நற்.116:5). 2.மேயும் புல் (அக.14:9).*

**மேரு** *(பெ.) – சத்த தீவுகளின் நடுப் பகுதியிலுள்ளதும் கோள்கள் சுற்றி வருவதாகக் கருத்தப்படுவதுமான பொன்மலை (பரி.19:19).*

**மேல்** *(பெ.) – 1.மேலிடம் (நற்.328:1). 2.வானம் (புற.294:1). 3.உயர்ந்தகுடி (குறள்.41:9). 4.மேலோர் (குறள்.637).*

**மேல்நாள்** *(பெ.) – 1.பின்நாள் (கலி.72:12). 2.முன்நாள் (கலி.93:23).*

**மேல்மலை** *(பெ.) – காவிரி ஆறு தொடக்கமாகும் மலை (பரி.12:2).*

**மேல்வாதல் (மேல்வருதல்)** *(வி.) – எழுதுதல் (குறள்.335).*

**மேலர்** *(பெ.) – மேல் உள்ளவர் (குறள்.1218).*

**மேலாயவர்** *(பெ.) – உயர்ந்தோர் (குறள்.1016).*

**மேலிட்டு** *(வி.) – தலைக்கீடாகக் கொண்டு (குறு.28:2).*

**மேலுலகம்** *(பெ.) – வானுலகம் (குறள்.222).*

**மேலோர்** *(பெ.) – 1.தேவர் (புற.229:22). 2.மேலிடத்துள்ளோர் (பரி.17:41).*

**மேவல்** *(வி.) – 1.விரும்புதல் (நற்.98:2). 2.அடைதல் (அக.29:8). 3.பொருந்துதல் (குறள்.857).*

**மேவலர்** *(பெ.) – விரும்புவார் (அக.95:11).*

**மேவார்** *(பெ.) – பகைவர் (குறு.190:1).*

**மேவுதல்** *(வி.) – 1.விரும்புதல் (குறள்.1073). 2.ஓதுதல் (பரி.8.9). 3.மேலிட்டுக் கொள்ளுதல் (குறள்.877).*

**மேழி** *(பெ.) – கலப்பை (புற.388).*

**மேற்கொண்டு** *(பெ.) – 1.ஏறிக்கொண்டு (நற்.80:3). 2.உதவியாகக் கொண்டு (நற்.111:14).*

**மேற்கொள்(ளு) தல்** *(வி.) – முயலுதல் (குறள்.262).*

**மேற்செல்(லு) தல்** *(வி.) – விரைதல் (குறள்.335).*

**மேற்சென்று** *(வி.) – 1.விரைந்து (குறள்.335). 2.முற்பட்டுச்சென்று (குறள்.794)*

**மேற்பால்** (பெ.) – உயர்குலம் (புற.183).

**மேன்மலை** (பெ.) – மலை (பரி.12,2).

**மேன்மேல்** (பெ.) – பின்னும் பெருக, தொடர்ந்து அதிகமாக (குறள்.368).

**மேன்மை** (பெ.) – சிறப்பு, உயர்வு (குறள்.137).

**மேன்தோன்றுதல்** (வி.) – மேம்பட்டு விளங்குதல் (பதி.89).

**மேனி** (பெ.) – 1.உடம்பு (குறு.62:4). 2.உடம்பின் ஒளி (நற்.8:3).

**மேனியர்** (பெ.) – உடலையுடையவர் (பரி.12:25).

**மேனியள்** (பெ.) – மேனியையுடையவள் (அக.169:9).

**மை** (பெ.) – 1.கருமை (குறு.121:2). 2.குற்றம் (நற்.168:9). 3.எருமை (அக.41:1). 4.கருமேகம் (கலி.43). 5.அழுக்கு (கலி.65).

**மை அணல்** (பெ.) – கரியதாடி (அக.125:5).

**மை ஊன்** (பெ.) – ஆட்டின் இறைச்சி (நற்.83:5).

**மைந்தர்** (பெ.) – 1.ஆடவர் (புற.24:8). 2.வலியோர் (புற.221:5).

**மைந்தன்** (பெ.) – 1.இளையோன் (புற.271:8). 2.விலங்கு (பரி.19:72-3). 3கணவன் (பரி.8:43).

**மைந்து** (பெ.) – 1.வலிமை (அக.75:3). 2.விருப்பம் (பரி.6:30). 3.அறியாமை (பரி.20:69).

**மைம்மீன்** (பெ.) – காரிக்கோள் (புற.117).

**மையல்** (பெ.) – மயக்கம் (குறு.308:3).

**மையா த்தல்** (வி.) – மயங்குதல் (குறள்.1112).

**மையாடல்** (வி.) – மையோலை பிடித்தல் (பரி.11:88).

**மையான்** (பெ.) – எருமை (குறு.279).

**மைவிடை** (பெ.) – செம்மறிக்கிடா (புற.33:21).

**மொக்குள்** (பெ.) – 1.நீர்க்குமிழி (அக.324). 2.முகிழ்ப்பு (குறள்.1274).

**மொசி** (பெ.) – நெருங்கிய (அக.215:14).

**மொசிக்கும்** (வி.) – மொய்க்கும் (அக.257:8).

**மொசித்த** (வி.) – 1.தின்ற (புற.96:7). 2.மொய்த்த (புற.285:8).

**மொய்** (பெ.) – 1.வலி (அக.152:9). 2.இறுகுகை (பரி.18:18).

**மொழிந்த** (வி.) – 1.கூறிய (அக.5:17). 2.உரைத்த (அக.239:14).

**மோசை** (பெ.) – விரலணிகளுள் ஒன்று (நற்.188:4).

**மோட்டு (மோடு)** (பெ.) – 1.உயர் (நற்.124:5). 2.வயிறு (அக.374:12).

**மோதி** (வி.) – புடைத்து (பரி.20:61).

**மோதிரம்** (பெ.) – கணையாழி (கலி.84:21).

**மோப்ப** (வி.) – மோந்து பார்க்க (குறள்.90).

**மோயினள்** (வி.) – மோந்தாள் (அக.5:24).

**மோவாய்** (பெ.) – வாய்க்குள் கீழுள்ள இடம், தாடி (புற.257:3).

**மோழைமை** (பெ.) – நயமொழி (அக.207:15).

**மௌவல்** (பெ.) – முல்லை (குறு.19:4-5).

**யமன்** (பெ.) – தென் திசைக் கடவுள் (உயிர்களைக் கவர்பவன்) (பரி.11:8-9).

**யவனர்** (பெ.) – சோனகர், எகிப்து, கிரேக்கம் முதலிய புற நாட்டினர் (அக.149:9).

**யா த்தல்** (வி.) – 1.அமைத்தல் (குறு.172:66). 2.சூழ்தல் (நற்.342:6-7). 3.சுற்றுதல் (அக.220:7). 4.பூட்டுதல் (அக.224:5-6). 5.தொகுத்தல் (அக.225:9-10). 6.ஊன்றுதல் (புற.216:6). 7.இயற்றுதல் (பதி.6:12). 8.கட்டுதல் (அக.365:17). 9.ஈட்டுதல் (தொகுத்தல்) (புற.184:6).

**யா** (பெ.) – ஒரு வகை மரம் (ஆச்சா மரம்) (நற்.198:1-2).

**யா** (இடை.) – எவை (புற.15:22).

***யாஅ*** *(பெ.) – ஒரு வகை மரம் (குறு.232:5).*

***யாஅம்*** *(பெ.) – 1.நம் (குறு.14:6). 2.யாமரம் (குறு.37-3).*

***யாக்க*** *(வி.) – செய்க (குறள்.793).*

***யா த்தல்*** *(வி.) – 1.கட்டுதல் (அக.368:17). 2.ஈட்டுதல் (தொகுத்தல்) (புற.184:6).*

***யாக்கை*** *(பெ.) – 1.உடம்பு (நற்.40:8-9). 2.வடிவு (புற.167-6).*

***யாங்கனம்*** *(பெ.) – எவ்வாறு (நற்.184-5).*

***யாங்கு*** *(பெ.) – எவ்வாறு (எப்படி) (குறு.132:3).*

***யாங்கும்*** *(பெ.) – எவ்விடத்தும் (நற்.322:1-3).*

***யாங்ஙனம்*** *(பெ.) – எவ்வாறு (நற்.338-6).*

***யாடு*** *(பெ.) – ஆடு (அக.394:13).*

***யாண்*** *(பெ.) – அழகு (நற்.50:7).*

***யாண்டு*** *(பெ.) – 1.ஆண்டு (குறு.57:1). 2.எவ்விடம் (குறு.176-5). 3.வாழ்நாள் (புற.357:4).*

***யாண்டும்*** *(பெ.) – 1.எவ்விடத்தும் (குறு.31:3). 2.எப்பொழுதும் (குறல்.4).*

***யாண்டையன்*** *(பெ.) – எவ்விடத்தான் (குறு.379-1).*

***யாணது*** *(பெ.) – அழகுடையது (நற்.50-7).*

***யாணம்*** *(பெ.) – அழகு (தொல்.பொருள்.1446).*

***யாணர்*** *(பெ.) – 1.புதுவருவாய் (குறு.24-1). 2.செல்வம் (புற.260.8).*

***யாணர்*** *(உரி.) – 1.அழகு (நற்.30:21-3). 2.புதுமை (நற்.398:9). 3.வளம் (அக.57:4-5).*

***யாணர் வைப்பு*** *(பெ.) – வளம் மிக்க ஊர் (புற.2-11).*

***யாத்த*** *(வி.) – 1.அமைத்த (குறு.172:56). 2.கட்டிய (குறு.181:3). 3.யாமரத்தை உடைய (குறு.224:1). 4.சூழ்ந்த (நற்.342:6-7). 5.சுற்றிய (அக.220:7-8). 6.பூட்டிய (அக.224:5-6). 7.தொகுத்த*

*(அக.225:9-10). 8.இயற்றிய (பதி.6:12). 9.ஊன்றிய (திண்ணிய) (புறம்.216:6). 10.அழுத்தின (பெரும்.91). 11.பொருந்திய (கலி.96:8-9).*

***யாத்திரை*** *(வி.) – செலவு (பிரயாணம்) (பரி.19:17-8).*

***யாத்து*** *(பெ.) – 1.கட்டி (அக.368:17). 2.ஈட்டி (புற.184-6).*

***யாது*** *(பெ.) – எது (குறு.197-1).*

***யாதும்*** *(பெ.) – எதுவும், எல்லாம் (புறம்.192-1).*

***யாப்பு*** *(பெ.,வி.) – 1.பிணிப்பு (நற்.21-2). 2.கவசம் (நற்.21:2). 3.கட்டு (குறள்.767). 4.அன்பு (குறள்.1093). 5. அணிகலன் (கலி.54:3).*

***யாம இரவு*** *(பெ.) – நள்ளிரவு (அக.208-1).*

***யாமம்*** *(பெ.) – 1.நள்ளிரவு (குறு.6:1). 2.இரவு (குறு.376-2).*

***யாமை*** *(பெ.) – ஆமை (குறு.152-4).*

***யாய்*** *(பெ.) – தாய் (குறு.40:1).*

***யாவது*** *(பெ.) – எங்ஙனம் (நற்.72:4).*

***யாவதும்*** *(பெ.) – 1.சிறிதும் (குறு.77:1-2). 2.எதுவும் (குறு.113:3-4).*

***யாவரும்*** *(பெ.) – 1.ஒருவரும், எவரும் (அக.1:13:4). 2.எத்தனையவரும், அனைவரும் (அக.16:5).*

***யாடு*** *(பெ.) – ஆடு (அக.394:13).*

***யாழ்*** *(பெ.) – ஓர் இசைக் கருவி (நற்.30:2).*

***யாழ்ப்பாணன்*** *(பெ.) – யாழ் இசைக்கும் தொழிற்குலத்தோன் (அக.346:13).*

***யாறு*** *(பெ.) – ஆறு (நதி) (குறு.271:2).*

***யானை*** *(பெ.) – யானையென்னும் விலங்கு (குறு.1:1:2).*

***யானைக் கோடு*** *(பெ.) – யானை மருப்பு (தந்தம்) (அக.375:14-15).*

***யூகம்*** *(பெ.) – கருங்குரங்கு (கலி.43:12-3).*

***யூபம்*** *(பெ.) – வேள்வித்தூண் (புற.15.21).*

**வகிர்** *(பெ.) – 1.பிளவு (அக.294.5). 2.வகிடு (கலி.55:2).*

**வகுத்த** *(வி.எ.) – 1.பகுக்கப்பட்ட (நற்.160.6). 2.கூறுபடுத்தப்பட்ட (புற.97:23). 3.செய்யப்பட்ட (புற.352:3). 4.அமைத்த (குறள்.377).*

**வகுத்தல்** *(பெ.) – விடுத்தல் (குறள்.385).*

**வகுத்தான்** *(பெ.) – தெய்வம், ஊழ் (குறள்.377).*

**வகுந்து** *(பெ.) – வழி (பதி.57.5).*

**வகுந்து** *(வி.எ.) – கீறி (புற.264:2).*

**வகுந்துறாஅ** *(வி.) – வருத்தி (அக.124.4).*

**வகை** *(பெ.) – 1.(மனையின்) கட்டு, பகுப்பு (நற்.71:7). 2.பாகுபாடு (நற்.140:3). 3.பகுதி (நற்.314:2). 4.கூறுபாடு (அக.69:2-3). 5.முன்னை இயல்பு (அக.69:2-3). 6.திறம் (குறள்.33). 7.இயல்பு (குறள்.514). 8.சொல்லின் திடப்பாடு (குறள்.721). 9.உறுப்பு (குறள்.897). 10.நூல் வகுத்த வகை (குறள்.897). 11.வகுத்துக் கூறல் (கலி.39:47). 12.வகைமை (பரி.10:64).*

**வகை** *(வி.) – வகுத்த (கலி.40:5).*

**வகைஇ** *(பெ.) – 1.வகிர்ந்து (நற்.120:5). 2.வகைப்படுத்தி (நற்.120:5).*

**வகைபெற** *(பெ.) – தொழும்படி (கலி.79:5).*

**வகைமை** *(பெ.) – 1.கூறுபாடு (கலி.137:15). 2.வேறுபாட்டின் தன்மை (குறள்.709).*

**வங்கம்** *(பெ.) – 1.மரக்கலம் (நற்.189:5). 2.வெள்ளி (நற்.341:1). 3.ஓடம் (புற.400:20). 4.பள்ளியோட வையம் (பரி.20:17).*

**வங்கா** *(பெ.) – ஒரு பறவை வகை (குறு.15:1).*

**வங்கூழ்** *(பெ.) – காற்று (அக.255:4).*

**வச்சியம்** *(பெ.) – கவர்ந்து ஈர்த்தல் (வசீகரித்தல்) (பரி.20:84).*

**வச்சிரத்தவன்** *(பெ.) – இந்திரன் (பரி.18:39).*

**வச்சிரத்தான்** *(பெ.) – இந்திரன் (கலி.105:16).*

**வச்சிரம்** *(பெ.) – வச்சிரப்படை (வச்சிராயுதம்) (புற.241:3).*

**வசி** *(பெ.) – 1.பிளப்பு (நற்.82:9). 2.கூர்மை (பதி.42:4).*

**வசிந்து** *(வி.) – வயமாக்கி (புற.383:12).*

**வசிபு** *(வி.) – பிளந்து (நற்.228:1).*

**வசை** *(பெ.) – 1.குற்றம் (குறு.267:4). 2.பழிப்பு (அக.143:10).*

**வசையுநர்** *(பெ.) – பகைவர் (பழிதூற்றுவோர்) (பதி.32:15).*

**வஞ்சம்** *(பெ.) – பொய் (கலி.89:9).*

**வஞ்சர்** *(பெ.) – ஏமாற்றுந் தன்மையுடையவர் (குறள்.824).*

**வஞ்சி** *(பெ.) – 1.மரவகை (அக.216:4). 2.சேரன் தலைநகர் (அக.263:12). 3.கருவூர் (சேரன் தலைநகர்) (புற.11:5:6). 4.மேற்செலவு (புற.15:24).*

**வஞ்சித்தல்** *(வி.) – ஏமாற்றுதல் (குறள்.366).*

**வஞ்சினம்** *(பெ.) – 1.உறுதிமொழி (குறு.36:5). 2.சூள் (குறு.318:17).*

**வட்கர்** *(பெ.) – பகைவர் (புற.1-3).*

**வட்டம்** *(பெ.) – வட்டக்கல் (அக.340-16).*

**வட்டா** *(பெ.) – வட்டு போன்ற உடல் உடையவளே (கலி.94:27-8).*

**வட்டி** *(பெ.) – ஓலைப்பெட்டி (குறு.155-1:2).*

**வட்டி த்தல்** *(வி.) – 1.சுழன்று (அகம்.218-5). 2.சுழற்றுதல் (புற.42-22). 3.இடைத்தல் (ஒலித்தல்) (புற.398:13). 4.கட்டுதல் இயக்குதல் (புற.2). 5.எறிதல் (பரி.33).*

**வட்டு** *(பெ.) – 1.விளையாட்டுக் கருவி (நற்.3:4). 2.வட்டம் (நற்.193-1). 3.சூதாடுகருவி (அகம்.108-17). 4.உண்டை, செண்டு, (குறள்.401). 5.நீர்விடுகருவி (பரி.11-55).*

**வடக்கிருத்தல்** *(வி.) – உயிர் துறக்கத் துணிந்து வடக்கு நோக்கி நோன்பு நோற்றல் (அக.55:11-2).*

**வடக்கு** *(பெ.) – நாற்றிசையுள் ஒன்று (புறம்.6-1).*

**வடதெற்கு** *(பெ.) – வடக்கும் தெற்கும் (பதி.31:16).*

**வடந்தை** *(பெ.) – வாடைக்காற்று (நற்.31:16).*

**வடபால்** *(பெ.) – வடபக்கம் (புற.201-8).*

**வடபுலம்** *(பெ.) – 1.வடநாடு (புற.52:5). 2.உத்தரகுரு (பதி.68:13).*

**வடபெருங்கல்** *(பெ.) – இமயமலை (புறம்.17:1-2).*

**வடபொழில்** *(பெ.) – வடக்கிலுள்ள நிலப்பரப்பு வடகூறு (பரி.5-8).*

**வடம்** *(பெ.) – கயிறு (பதி.1-69).*

**வடமலை** *(பெ.) – இமயம் (புற.67-7).*

**வடமீன்** *(பெ.) – அருந்ததி (புற.122-8).*

**வடமொழி** *(பெ.) – சமற்கிருதம் (கலி.25-1).*

**வடவன்** *(பெ.) – வடநாட்டவர் (அக.340-16).*

**வடாஅது** *(பெ.) – வடக்குள்ளது (அக.59:3-4).*

**வடி** *(பெ.) – 1.மாம்பிஞ்சு (குறு.331:5-6). 2.வாரி முடிக்கை (நற்.23:2). 3.கூர்மை (நற்.48:7). 4.திருத்தம் (நற்.74:1). 5.முறுக்கு, ஆய்வு (நற்.139:4). 6.மாம்பிஞ்சின் பிளவு (அக.29:5-7). 7.வடித்தல் (அக.159:9). 8.வார்த்தல் (அக.350:7).*

**வடித்தல்** *(வி.) – 1.திருந்து, திருத்து (பதி.31:5). 2.கிள்ளியெடுத்தல் (அக.37:8).*

**வடிம்பு** *(பெ.) – காலின் விளிம்பு (புற.378:4).*

**வடிவு** *(பெ.) – 1.அழகு (நற்.133:2). 2.உருவம் (கலி.90:8).*

**வடு** *(பெ.) – 1.பழி (குறு.88:4-5). 2.குற்றம் (நற்.130:1). 3.தழும்பு (நற்.222:2). 4.சுவடு, அடையாளம் (அக.5:3). 5.புண் (புற.303:4). 6.தாழ்வு (குறள்.689).*

**வடுகர்** *(பெ.) – வேங்கடத்தின் வடக்கே இருந்த ஒரு பிரிவினர் (தெலுங்கர்) (குறு.11:5).*

**வண்டல்** *(பெ.) – 1.மகளிர் விளையாட்டு (குறு.238:4). 2.மகளிர்*

சிற்றில் புனைந்து விளையாடுதல் (நற்.9:8). 3.மகளிர் இழைத்து விளையாடும் சிற்றில் (ஐங்.69). 4.வண்டற்பாவை (கலி.29:5).

**வண்டு** (பெ.) – 1.வண்டு, சுரும்பு, தேன், ஞிமிறு என நால் வகைப்பட்ட அறுகால் சிறு பறவை (குறு.21:1). 2.மறவரில் ஓர் அறுகால் சிறு பறவை (குறு.263:4). 3.வளையல் (பரி.1:30-1).

**வண்ணநீர்** (பெ.) – அரக்குநீர் (பரி.11:55).

**வண்ணம்** (பெ.) – 1.நிறம் (நற்.148:1). 2.அகம் (அக.69:3). 3.இயற்கையழகு (அக.119:2). 4.கலவை (புற.32:3). 5.இடைப்பாட்டு வகை (புற.152:13). 6.இயல்பு (பதி.62:8). 7.பொருட்டு (குறள்.561).

**வண்மை** (பெ.) – 1.கொடை (நற்.336:6). 2.வள்ளன்மை (புற.306:5).

**வணக்கம்** (பெ.) – 1.பணிவு (குறள்.827). 2.வளைவு (குறள்.827).

**வணக்கு தல்** (வி.) – தாழ்விக்கும் (புற.200:14).

**வணங்கல்** (பெ.) – பணிதல் (பதி.84:14)

**வணங்கி** (பெ.) – 1.தொழுது (நற்.68:6). 2.தாழ்ந்து (புற.68:6). 3.ஏவல் செய்து (கலி.76:2). 4.வளைந்து (கலி.131:39-40).

**வணங்கிய** (பெ.எ.) – 1.எளிய (பதி.48:9). 2.பணிந்த (குறள்.419). 3.வளைந்த (கலி.128:2).

**வணங்கு** (வி.) – வளை (குறு.364:5).

**வணர் தல்** (வி.) – 1.குழைதல் (குறு.82:1). 2.வளைதல் (நற்.373:8).

**வணிகர்** (பெ.) – வணிக மரபினர் (பதி.1:25).

**வதி** (பெ.) – தங்குமிடம் (கலி.119:11).

**வதி தல்** (வி.) – 1.தங்குதல் (குறு.5:2). 2.வாழ் (பதி.48:15).

**வதுவை** (பெ.) – திருமணம் (நற்.125:17).

**வந்த** (பெ.எ.) – 1.முளைத்த (குறு.14:1-2). 2.தோன்றிய (குறு.332:1). 3.வளர்ந்த (நற்.15-9-10).

**வந்தக்கடை** *(வி.எ.) – வந்தவிடத்து, தோன்றியவிடத்து; (கலி.22:22).*

**வந்தக்கால்** *(வி.எ.) – வர, வந்தால் (கலி.38-10).*

**வந்தமாறு** *(வி.) – வந்த (அக.427-1).*

**வந்தற்று** *(பெ.) – வந்தாற்போலும் (குறள்.1054).*

**வந்தன்று** *(வி.) – வந்தது (குறு.106:4).*

**வந்தன** *(வி.) – தோன்றின (குறு.254:2-3).*

**வந்தனம்** *(வி.) – வந்தோம் (நற்.6:11).*

**வந்தனென்** *(வி.) – வந்தேன் (குறு.114:2).*

**வந்தனை** *(வி.) – வந்தாய் (நற்.362:2).*

**வந்திக்க** *(வி.) – வணங்க (பரி.20:69).*

**வந்தீ** *(வி.) – வருவாய் (கலி.85:20).*

**வந்தீக** *(வி.) – வருக (நற்.221:12).*

**வந்தீத்தந்தாய்** *(வி.) – வந்தாய் (கலி.96:4).*

**வந்தீத்தனர்** *(வி.) – வந்தீர் (கலி.86:28).*

**வந்தீமே** *(வி.) – வருக (அக.80:13).*

**வந்தீயாய்** *(வி.) – வாராய் (கலி.114:5).*

**வந்தீயான்** *(வி.) – வாரான் (கலி.71:14).*

**வந்தை** *(வி.) – வாராய் (கலி.63:12-3).*

**வம்** *(வி.) – 1.வா, வாராய் (நற்.307:7). 2.வாரும் (புற.221:10).*

**வம்ப** *(வி.) – 1.நிலையின்மை (குறு.66:5). 2.புதுமை (குறு.186:5).*

**வம்ப மாரி** *(பெ.) – காலம் அல்லாத காலத்துப் பெய்யும் மழை (குறு.66:5).*

**வம்பலர்** *(பெ.) – 1.வழிப்போக்கர் (குறு.77:3). 2.அயலார் (நற்.126:5). 3.புதியவர் (அக.15:6).*

**வம்பு** *(பெ.) – 1.நிலையின்மை. 2.காலம் அல்லாத காலம். 3.புதிய கொடி மரம். 4.மணம் (வாசனை) (நற்.141:10). 5.முலைக்கச்சு (அக.150:2). 6.யானைக்கச்சு (புற.37:12).*

**வம்பு** *(பெ.) – புதுமை (புற.3:21).*

**வம்மீன்** *(வி.) – வாரீர் (புற.32:6).*

**வய** *(பெ.) – மிகுதி (பரி.11:40).*

**வய** *(உரி.) – வலி (குறு.88:2).*

**வயக்கி** *(வி.) – விளக்கி (பரி.12:20).*

**வயக்கு** *(பெ.) – விளக்கம் (அக.344:10).*

**வயக்கு தல்** *(வி.) – விளக்குதல் (கலி.17:6).*

**வயங்கல்** *(பெ.) – 1.விளக்கம் (தொல்.20:1). 2.கண்ணாடி (கலி.33:3).*

**வயங்கி** *(வி.) – விளக்கி (புற.367:15-6).*

**வயங்கு தல்** *(வி.) – 1.விளங்குதல் (நற்.32:2). 2.சிறப்பாகுதல் (நற்.142:1). 3.எழுதல், தோன்றுதல் (அக.24:6). 4.ஒளிவீசுதல் (ஐங்.210). 5.மிகுதல் (பரி.3:51).*

**வயம்** *(பெ.) – 1.வலி (அக.93:17). 2.வழி (பரி.6:78). 3.வெற்றி (பரி.9:51).*

**வயமா** *(பெ.) – 1.புலி (ஐங்.307). 2.குதிரை (ஐங்.449).*

**வயமான்** *(பெ.) – 1.அரிமா (சிங்கம்) (நற்.192-1). 2.குதிரை (நற்.267:12). 3.மான் (நற்.276:2). 4.யானை (கலி.37.2).*

**வயமீன்** *(பெ.) – சுறாமீன் (அக.340:10).*

**வயல்** *(பெ.) – நன்செய் நிலம் (நற்.8:5-6).*

**வயலை** *(பெ.) – பசலைக்கொடி (நற்.179:1).*

**வயவர்** *(பெ.) – 1.வீரர் (நற்.276:2-3). 2.பகைவர் (புற.282:6).*

**வயவன்** *(பெ.) – வீரன் (நற்.260:6).*

**வயவு** *(பெ.) – 1.கருவுற்ற பெண்களுக்கு உண்டாகும் நோய் (மசக்கை) (குறு.30:4-5). 2.வருத்தம் (நற்.263:5-6). 3.வேட்டை (அக.72:12). 4.சூல் (புற.20:14). 5.வலிமை (பதி.36:2). 6.விருப்பம் (பரி.11:67).*

**வயா** *(பெ.) – வேட்கை நோய் (கருப்பிணிகாலத்தில் பெண்களால் விரும்பப்படும் பொருள்களின் மேல்) (கலி.40:27).*

**வயாஅ** *(பெ.) – வயா(மசக்கை) (கலி.40:27). (ஐங்.504).*

**வயாஅம்** *(வி.) – விரும்பும் (ஐங்.51).*

**வயிர்** *(பெ.) – 1.ஊதுகொம்பு (நற்.304:3). 2.மூங்கில் (ஐங்.395).*

**வயிரம்** *(பெ.) – வயிரமணி (புற.365:4).*

**வயிரியர்** *(பெ.) – 1.கூத்தர் (நற்.100:10). 2.பாணர் (பரி.10:130-1).*

**வயிறு** *(பெ.) – 1.உடல் உறுப்புகளுள் ஒன்று (நற்.179:3). 2.நடுவிடம் (அக.29:7-8). 3.அகடு (அகம்.130:7).*

**வயின்** *(பெ.) – 1.இடம் (குறு.150:2). 2.பக்கம் (அக.273:3). 3.வானம் (பதி.24:1).*

**வயின்** *(இடை.) – 1.ஏழாம் வேற்றுமையின் சொல்லுருபு (குறு.20:2). 2.பொருட்டு (அக.299:1). 3.முறை (புற.77:8).*

**வர** *(வி.) – 1.வருமாறு (குறு.210:6). 2.வருதலைச் செய்ய (குறு.344:8). 3.பொருந்த (அக.37:11). 4.தோன்ற (அக.117:5).*

**வரம்** *(பெ.) – இறைவனால் பெறும் பேறு (பரி.8:105).*

**வரம்பு** *(பெ.) – 1.வரப்பு (குறு.238:2). 2.முடிவு (அக.109:8). 3.எல்லை (அக.273:10). 4.பற்றுக்கோடு (அக.392:23). 5.கரை (பதி.33:6).*

**வரலாறு** *(பெ.) – வருகின்றவை (பரி.6:42).*

**வரவு** *(பெ.) – 1.வருகை (குறு.75:5). 2.வருதல் (குறு.230:6). 3.வரலாற்று முறைமை (புற.149:4). 4.குடிப்பிறப்பு (குறள்.1043). 5.வரலாறு (பரி.1:32). 6.வெளிப்பாடு (பரி.21:32). 7.வழி (பரி.8:29). 8.வணங்குகை (பரி.20:72:3).*

**வரன்** *(பெ.) – மிக்கது (குறள்.24).*

**வரால்** *(பெ.) – மீன் வகை (புற.18:7-9).*

**வரி** *(பெ.) – 1.கோடு (குறு.91:1). 2.தேமல் (குறு.180:6). 3.பத்திக்கீறல் (குறு.185:45). 4.புள்ளி (குறு.232:4-5). 5.கோலம் (நற்.123-8). 6.நிறம் (நற்.130:7-8). 7.கைவரி (இரேகை) (நற்.309:1). 8.ஒழுங்கு (அக.31:8). 9.திதலை (அக.33:16). 10.புலி (அக.58:4). 11.வண்டல் (விளையாட்டு) (அக.90:2). 12.அழகு (அக.192:3-5). 13.அலை*

*(அகம்.327:8-9). 14.மறு (அக.387:5). 15.எழுத்து (புற.33:16). 16.தழும்பு (பதி.58:3). 17.வரிசை (பதி.83:2). 18.சுணங்கு (கலி.22:19). 19.வளை (கலி.60:4). 20.தொய்யில் (கலி.76:2). 21.எலும்பு (கலி.104:40). 12.கட்டு (பரி.5:65). 13.வண்டு (பரி.18:49).*

**வரிக்கும்** *(வி.) – 1.அழகுபட எழுதும் (நற்.267:5). 2.அழகு செய்யும் (நற்.286:3).*

**வரிசை** *(பெ.) – 1.முறை (புற.6:16). 2.சிறப்பு (புற.47:6). 3.மேம்பாடு (புற.53:14-5). 4.தகுதி (புற.121:3). 5.தரம் (புற.184:8). 6.முறைமை (புற.200:14). 7.பாராட்டு (கலி.53:34-5).*

**வரிந்த** *(வி.) – 1.அழகுபெற்ற (நற்.232:8). 2.வரிபட்ட (புற.288:1).*

**வரிப்ப** *(வி.) – 1.வரிவரியாக ஊர்ந்துசெல்ல (அக.14:2-3). 2.கோலம் செய்ய, அழகுசெய்ய (அக.108:5).*

**வரிபு** *(வி.) – அழகுசெய்து (நற்.223).*

**வரிய** *(வி.) – வரிகளையுடைய (புற.28:8).*

**வருக** *(வி.) – 1.வருவாளாக (குறு.56-4). 2.வருவானாக (குறு.11:5-6). 3.வருவதாக (குறு.236:1). 4.வருவாயாக (131:14). 5.வருவீராக (புற.207:6).*

**வருடை** *(பெ.) – 1.மலையாடு (நற்.7:8). 2.ஒருவகை மான் (அக.378:6). 3.மேழ (மேடராசி) (பரி.11:5-6).*

**வருத்தம்** *(பெ.) – 1.துன்பம் (குறு.307:6). 2.வருந்துதல் (குறு.316:2). 3.கலக்கம் (நற்.9:3). 4.மெலிவு (நற்.64:13). 5.களைப்பு (நற்.330:3-4). 6.பசி (நற்.385:3-5). 7.இளைப்பு (அக.110:8-9).*

**வருவல்** *(வி.) – வருவோம் (நற்.162:6).*

**வருவாய்** *(வி.) – வருதலைச் செய்வாய் (பரி.20:74-5).*

**வருவேம்** *(வி.) – வருவோம் (குறு.358:4).*

**வருவை** *(வி.) – வருவாய் (நற்.19:7-9).*

**வருவோள்** *(பெ.) – வருபவள் (நற்.308:3).*

**வரை** *(பெ.) – 1.மலை (குறு.26:7). 2.மலைப்பக்கம் (குறு.106:2). 3.எல்லை (குறு.218:6). 4.காலம் (குறு.364:6). 5.துறுகல் (நற்.2:10). 6.மூங்கில் (நற்.7:2). 7.கொடுமுடி, சிகரம் (நற்.236:7-8). 8.இடம் (நற்.249:8). 9.பொழுது (அக.13:8).*

**வரை அடுக்கம்** *(பெ.) – மலைப்பக்கம் (நற்.34:4-5).*

**வரைக் கவாஅன்** *(பெ.) – மலையினது நடுவிடம் (குறு.353:2).*

**வரைகோள்** *(பெ.) – வரைந்து கொள்ளுதல் (தடை செய்தல்) (குறு.233:6).*

**வரைத்து** *(வி.) – அளவுக்குட்படாமல், எல்லையிலுள்ளது (நற்.12:10).*

**வரைதல்** *(வி.) – விலக்குதல் (துறத்தல்) (கலி.133:17).*

**வரைதி** *(வி.) – கூறுபடுத்தி (புற.8:7).*

**வரைந்த** *(வி.) – 1.குறித்த, வரையறுத்த (அக.282:16). 2.வரையறுக்கப்பட்ட (புற.367:9).*

**வரைந்தனர்** *(வி.) – 1.நீங்கினார் (புற.151:1). 2.அறுதியிட்டு விட்டார் (கலி.45:24).*

**வரைந்தான்** *(பெ.) – நீங்கினான் (கலி.146:11).*

**வரைந்து** *(வி.) – 1.வரையறுத்து (குறு.366:1). 2.மணம் செய்து கொண்டு (நற்.125:6). 3.குறித்து (புற.325:2).*

**வரைப்பகம்** *(பெ.) – 1.இல்லிடம் (அக.63:2). 2.மலையிடம் (அக.266:19).*

**வரைப்பு** *(பெ.) – 1.எல்லை கோலப்பட்ட இடம் (நற்.122:3). 2.வீட்டின் எல்லை (நற்.182:2). 3.இடம் (நற்.324:6). 4.மலை (அக.266:19). 5.எல்லை (அக.227:18). 6.பக்க மலை (அக.372:3). 7.நாடு (புற.391:7).*

**வரைய** *(வி.) – 1.மணம் செய்து கொள்ள (நற்.393:9). 2.மலையிலுள்ள (நற்.394:2).*

**வரையர மகளிர்** *(பெ.) – மலையில் வாழும் தெய்வப் பெண்டிர் (ஐங்.191).*

**வரையலள்** *(பெ.) – மணந்து கொள்ளாள் (புற.343:12).*

**வரையா** *(பெ.) – 1.நீங்காத, நீக்குதல் இல்லாத (குறு.292:6). 2.அளவுபடாத (நற்.135:3). 3.பாகுபாடு செய்யாமல் (புற.19:40). 4.குறைபடாமல் (புற.10:8). 5.முடிவில்லாத (புற.25:11). 6.மறுத்தலில்லாத (புற.376:21).*

**வரையா ஈகை** *(பெ.) – பெருங்கொடை (புற.17:40).*

**வரையாது** *(வி.) – போற்றாமல், வேறுபாடு கருதாமல் (புற.2:16).*

**வரையா நுகர்ச்சி** *(பெ.) – களவிற் புணர்ச்சி (பரி.8:41).*

**வரையாமை** *(பெ.) – 1.மணம் செய்து கொள்ளாமை (நற்.390:8). 2.கொள்ளாமை (நற்.390:8).*

**வரையாள்** *(பெ.) – எல்லைக் கண் நிற்பாள் மனைவி (குறள்.140).*

**வரையின்** *(வி.) – 1.கொள்ளுவனாயின் (நற்.390:7-9). 2.மணம் செய்துகொண்டால் (நற்.390:7-9).*

**வரைவும்** *(வி.) – வரைந்து கொள்வான் (ஐங்.152).*

**வரைவு** *(பெ.) – மணத்தல், மணந்துகொள்ளல் (அக.119:4).*

**வரைவோர்** *(பெ.) – உதவுவோர் (புற.393:6).*

**வல்** *(பெ.) – சூது ஆடு கருவி (புற.52:15).*

**வல்** *(வி.) – வன்மையுள்ள (குறு.11:6).*

**வல்** *(உரி.) – 1.மிக (நற்.17:7). 2.வல்ல (அக.74:2). 3.மிக்க (அக.79:3). 4.விரைவு (அக.125:15).*

**வல்அரண்** *(பெ.) – அழியாத நகரி (கோட்டை) (குறள்.737).*

**வல்அவை** *(பெ.) – கற்றுவல்ல அவை (குறள்.721).*

**வல்சி** *(பெ.) – 1.உணவு (குறு.295:4). 2.அரிசி (அக.224:12).*

**வல்லர்** *(பெ.) – 1.வல்லவர் (புற.27:18). 2.திறமையுடையவர் (குறள்.999).*

**வல்லவர்** *(பெ.) – 1.தேர்ந்தவர் (கலி.32:9). 2.நூல்வல்லவர் (கலி.68:2). 3.திறவோர் (பரி.6:102).*

**வல்லவன்** *(பெ.) – 1.தேர்ந்தவன் (கலி.56:7). 2.வலிமையுள்ளவன் (கலி.137:10).*

**வல்லவை** *(பெ.) – கற்று வல்ல நூற் பொருள்கள் (குறள்.721).*

**வல்லன்** *(பெ.) – 1.வல்லவன் (புற.103:12). 2.தேர்ந்தவன் (ஐங்.37). 3.வல்லமை உடையவன் (குறள்.647). 4.வகுக்கும் ஆற்றல் உடையோன் (குறள்.683). 5.தேர்ந்தவன் (கலி.143:31).*

**வல்லா** *(பெ.) – 1.மாட்டாதவை (குறு.219:5). 2.வல்லமையில்லாத (ஐங்.333).*

**வல்லா** *(வி.) – 1.முடியாத, மாட்டாத (அக.53:14). 2.வல்லமையில்லாத (பரி.1:37).*

**வல்லாங்கு** *(வி.) – 1.வல்லபடி (அக.79:10). 2.சதுரப்பட (புற.163:6).*

**வல்லாதீமே** *(வி.) – வல்லமை இன்றி இருக்க (ஐங்.149).*

**வல்லாதீமோ** *(வி.) – வல்லமையின்றி இருப்பாயாக (ஐங்.149).*

**வல்லாதோர்** *(பெ.) – மாட்டாதவர் (நற்.84:12).*

**வல்லாமாறு** *(பெ.) – வன்மையில்லாமை (குறு.309:8).*

**வல்லாய்** *(வி.) – 1.திறமையுடைய அல்லை (ஐங்.297). 2.வல்லமை உடையாய் (பரி.18:41).*

**வல்லார்** *(பெ.) – வல்லுநர் அல்லார், மாட்டார் (அக.153:19).*

**வல்லாறு** *(வி.) – இயன்றவரை (ஐங்.370).*

**வல்லான்** *(பெ.) – 1.வலிமையுள்ளவன் (குறள்.387). 2.வல்லவன் (கலி.38:16).*

**வல்லி** *(வி.) – (வன்மையுடையை) வலிமை (அக.19:11).*

**வல்லிகை** *(பெ.) – குதிரைக் கழுத்தில் கட்டும் வடம் (கலி.96:10).*

**வல்லிதின்** *(வி.) – 1.விரைந்து (நற்.68:6). 2.திறமையால் (நற்.120:5).*

**வல்லிய** *(வி.) – திறமை பெற்ற (நற்.137:10).*

**வல்லியம்** *(பெ.) – புலி (நற்.2:5).*

**வல்லியர்** *(பெ.) – (மன) வலிமையுடைவர் (அக.223:1).*

**வல்லியோர்** *(பெ.) – வன்மையுடையோர் (குறு.266:5).*

**வல்லினம்** *(பெ.) – மாட்டுவேம் (அக.299:3).*

**வல்லினர்** *(பெ.) – வன்மையுடையோர் (அக.185:5).*

**வல்லினும்** *(வி.) – அறியினும் (புற.161:23).*

**வல்லு** *(பெ.) – 1.சூதாடும் கருவி, சூதாடும் இடம் (அக.377:7-8). 2.சூது (கலி.94:13).*

**வல்லுந** *(பெ.) – வன்மையுடையன (நற்.171:6-7).*

**வல்லுநர்** *(பெ.) – 1.வன்மையுடையவர் (குறு.395:3). 2.சிறந்தவர் (புற.24:34). 3.திறமை உடையவர் (ஐங்.238).*

**வல்லுநள்** *(பெ.) – வலியள் (குறு.356:5).*

**வல்லுப்பலகை** *(பெ.) – சூதாடுபலகை (கலி.94:13).*

**வல்லுவள்** *(பெ.) – வல்லமையுடையவள் (கலி.24:9).*

**வல்லுவை** *(வி.) – 1.வன்மையை உடைய (அக.257:12). 2.வல்லாய் (ஐங்.310).*

**வல்லுவோர்** *(பெ.) – வன்மையுடையோர் (குறு.38:6).*

**வல்லென்றது** *(வி.) – வலிதாயிற்று (ஐங்.28).*

**வல்லென** *(வி.) – விரைவுக் குறிப்பு (அக.229:9).*

**வல்லே** *(உ.) – விரைய (குறு.111:5:6).*

**வல்லேம் அல்லேம்** *(பெ.) – வன்மையிலாதேம் (புற.126:5).*

**வல்லேன்** *(வி.) – 1.வன்மையுடையேன் (நற்.275:9). 2.வன்மையில்லேன் (புற.161:23).*

**வல்லை** *(பெ.) – 1.திறமையுடையை (நற்.162:12). 2.வல்லமையுடையை (நற்.380:7).*

**வல்லை** *(உ.) – விரைவாக (நற்.310:8).*

**வல்லோர்** *(பெ.) – அறிவுடையோர், திறமையுடையோர் (நற்.283:4).*

**வல்லோன்** *(பெ.) – 1.திறமையுடையோன் (நற்.77:8). 2.வன்மையுடையோன் (அக.314:9-10).*

**வல்வதாக** (வி.) – வலிமையுறுவதாக (அக.171:11).

**வலக்கும்** (வி.) – சுற்றும் (புற.52:10).

**வலத்தர்** (பெ.) – வெற்றியினர் (அக.89:15).

**வலத்திர்** (வி.) – வலக்கையில் ஏந்தி (கலி.4:7-8).

**வலந்த** (வி.) – 1.பின்னின (நற்.105:1). 2.கட்டப்பெற்ற (அக.30:1). 3.பின்னப் பெற்ற (அக.199:5).

**வலந்தது** (பெ.) – கட்டியது (பரி.4:43).

**வலந்தன** (வி.) – பிணித்தன (கலி.103:27).

**வலந்தனள்** (வி.) – சுழற்றினளாகி (நற்.149:4).

**வலந்தனைய** (வி.) – கட்டியனபோல (அக.293:2-3).

**வலந்து** (வி.) – கட்டுண்டு (கலி.97:18).

**வலந்துழி** (வி.) – பிணித்த பொழுது (பரி.4:13).

**வலம்** (பெ.) – 1.வலப்பக்கம் (குறு.22:3). 2.வண்ணம் (குறு.125:5). 3.இடம் (நற்.81:6). 4.வெற்றி (நற்.285:6). 5.திறம் (அக.34:10). 6.வலிமை (அக.36:20). 7.வலி (அக.38:4).

**வலம்** (இ.) – ஏழாம் வேற்றுமை உருபு (புற.152:18).

**வலம்கொளீஇ** (வி.) – வலம் செய்வித்து (கலி.84:7).

**வலம்சுரி** (வி.) – வலமாகச் சுருள் (குறு.22:3).

**வலம்பட** (வி.) – வலப்பக்கம் விழ (அக.238:8).

**வலம்படு** (வி.) – வெற்றி தரும் (அக.252:17).

**வலம்படுத்த** (வி.) – வெற்றி உண்டாகச் செய்த (அக.74:1).

**வலம்படுப்ப** (வி.) – வெற்றி உறுவிக்க (அக.61:3).

**வலம்புரி** (பெ.) – வலப்பக்கத்தே வளைந்த சங்கு (நற்.172:8-9).

**வலயம்** (பெ.) – 1.ஒரு வகைத் தலைக்கோலம் (பரி.10:77). 2.தோள் வளை (பரி.13:52).

**வலவ** (பெ.) – வலப்பக்கத்து உடையாய் (பரி.3:89).

**வலவயின்** *(பெ.) – 1.வலக்கையில் (அக.25:4). 2.யானையின் கண் (பரி.1:11).*

**வலவன்** *(பெ.) – 1.தேர்ப்பாகன் (குறு.311:2). 2.பாகன் (புற.27:8).*

**வலன்** *(பெ.) – 1.வலப்பக்கம் (குறு.237:5). 2.வெற்றி (அக.215:6). 3.வலக்கை (கலி.49:20).*

**வலாஅர்** *(பெ.) – வளார் (மிலாறு) (புற.324:6).*

**வலாளன்** *(பெ.) – வல்லாண்மையுடையவன் (குறு.30:2).*

**வலான்** *(பெ.) – வல்லவன் (கலி.105:17).*

**வலி** *(பெ.) – 1.வலிமை (குறு.343:3). 2.அகங்காரம் (பரி.3:49).*

**வலித்த** *(வி.) – 1.செறிந்த (நற்.25:11-2). 2.துணிந்த (நற்.293:8-9). 3.கருதிய (அக.231:4). 4.உறுதிபூண்ட (அக.289:5). 5.எண்ணிச் செய்த (புற.87:4).*

**வலித்தன்று** *(பெ.) – துணிந்தது (கலி.137:27).*

**வலித்தனை** *(வி.) – துணிந்தனை (அக.327:6).*

**வலித்தி** *(வி.) – துணிவாய் (கலி.17:6).*

**வலித்திசின்** *(வி.) – துணிந்துளேன் (அக.303:20).*

**வலிப்ப** *(வி.) – 1.உறுதி கொள்ள (குறு.341:6). 2.உடன்பட (நற்.252:5). 3.இழுக்க (நற்.262:8-9). 4.வலிதாக (புற.389:1). 5.வற்புறுத்த (அக.53:14). 6.உறுதி செய்ய (பதிற்.81:17).*

**வலிப்பல்** *(வி.) – துணிவேன் (கலி.11:5).*

**வலிப்பென்** *(வி.) – துணிவேன் (கலி.29:19).*

**வலிய** *(பெ.) – 1.கடிய சொற்கள் (அக.191:17). 2.வலிமை (புற.14:11).*

**வலியர்** *(பெ.) – 1.வலியவர் (புற.239:5-6). 2.வன்நெஞ்சினர் (ஐங்.334).*

**வலியர் அல்லோர்** *(பெ.) – மெலியர் (பரி.6:39).*

**வலியன்** *(பெ.) – வன்மை உள்ளவன் (குறு.187:4).*

**வலியா** *(வி.) – துணியாத (குறு.341:6).*

**வலியார்** *(பெ.) – வலிமை உள்ளவர் (பதி.30:31).*

**வலியுறுக்கும்** *(வி.) – 1.உலோபம் செய்யும் (புற.190:4). 2.வன்மையைச் சேர்க்கும் (பதி.76:4).*

**வலியுறுத்தனை ஆயின்** *(வி.) – வற்புறுத்தினையானால் (அக.319:18).*

**வலியுறுப்ப** *(வி.) – வற்புறுத்த (அக.373:7).*

**வலை** *(பெ.) – விலங்குகளைப் பிடிப்பதற்கு உரிய நூலால் இயற்றப்பட்ட கருவி (குறு.171:2-3).*

**வலைஞர்** *(பெ.) – பரதவர் (புற.249:3).*

**வலைப்பட்ட** *(பெ.) – வலையில் அகப்பட்ட (கலி.97:6-7).*

**வலைப்பட்டார்** *(பெ.) – சூழ்ச்சிக்கு உட்பட்டார் (கலி.47:14).*

**வலையம்** *(பெ.) – மலர் வளையம் (பரி.20:30).*

**வலைவர்** *(பெ.) – 1.வலைஞர் (ஐங்.180). 2.வலையிட்டுப் பறவை விலங்குகளைப் பிடிப்போர் (கலி.23:17).*

**வவ்வல்** *(பெ.) – பற்றிக் கொள்ளுதல் (அக.396:15).*

**வவ்வலின்** *(வி.) – 1.கவர்தலால் (அக.136:23). 2.ஈர்த்துச் சென்றமையால் (அக.222:8). 3.பறித்துக் கொள்ளுதலால் (அக.291:14).*

**வவ்வி** *(வி.) – பற்றிக்கொண்டு, கவர்ந்து கொண்டு (அக.346:23).*

**வவ்விய** *(வி.) – கவ்வி உண்ட (புற.4:9).*

**வவ்வு** *(பெ.) – கவர்ந்துகொள்ளுதல் (பரி.6:79-80).*

**வவ்வும்** *(வி.) – கவர்ந்துகொள்ளும் (அக.148:6).*

**வழக்கம்** *(பெ.) – இயக்கம் (பரி.10:118).*

**வழக்கிற்று** *(வி.) – நீரோட்டத்தை உடையது (பரி.11:71).*

**வழக்கு** *(பெ.) – 1.வழங்குதல், செல்லுதல் (குறு.324:2). 2.இயங்குதல் (அக.51:1).*

**வழங்க** *(வி.) – 1.செலுத்த (புற.14:9). 2.அசைய (புற.22:9).*

**வழங்கல்** *(பெ.) – 1.வருதல் (அக.190:10). 2.இயங்கல் (அக.309:14). 3.உலாவுதல் (கலி.52:17). 4.திரிதல் (கலி.112:13).*

**வழங்கலார்** *(வி.) – கூறமாட்டார் (குறு.21:5).*

**வழங்கா** *(வி.) – 1.பலி இடப்படாத (அக.242:12). 2.சொல்லாத (அக.291:13-5).*

**வழங்காத்தேர்** *(பெ.) – பேய்த்தேர் (கலி.7:2-3).*

**வழங்காது** *(வி.) – பெய்யாது (குறள்.29).*

**வழங்காப்பொழுது** *(பெ.) – உச்சிக்காலம் (கலி.112:12).*

**வழங்கார்** *(பெ.) – செல்லார், இயங்கார் (அக.362:5-6).*

**வழங்கி** *(வி.) – 1.சொரிந்து (புற.166:22). 2.நிலை பெற்று (குறள்.21). 3.ஊர்ந்து (கலி.96:6).*

**வழங்கினன்** *(வி.) – இயக்கினான் (புற.239:14).*

**வழங்கினை** *(வி.,பெ.) – செலுத்தினாய் (புற.15:5-6).*

**வழங்கு** *(வி.) – கொடுத்தல், கொடை (புற.382:15).*

**வழங்கு** *(வி.) – 1.நட (குறு.207:5). 2.திரி (நற்.107:6). 3.வீசு (நற்.174:4). 4.இயங்கு (நற்.227:8).*

**வழங்குக** *(வி.) – வெயில் வீசி ஒடுங்குவதாகுக (நற்.146:5-6).*

**வழங்குதல்** *(பெ.) – நடமாடுதல் (நற்.257:9).*

**வழங்குந்து** *(வி.) – திரியும் (புற.396:1).*

**வழங்குநர்** *(பெ.) – 1.வழிச்செல்வோர் (குறு.283:5-6). 2.போய் வருவார் (அக.18:11).*

**வழங்கும்** *(வி.) – 1.உலவும் (குறு.237:6). 2.ஓடும் (குறு.354:5). 3.வீசும் (நற்.46:8). 4.இயங்கும் (நற்.67:7). 5.முழங்கும் (நற்.174:4). 6.துள்ளும் (அக.80:1). 7.திரியும் (அக.108:9).*

**வழங்குவது** *(பெ.) – 1.சொல்லுவது (குறள்.99). 2.கொடுக்கும் பொருள் (குறள்.955).*

**வழலை** *(பெ.) – ஒரு வகைப் பாம்பு (நற்.92:2).*

**வழாஅ** *(வி.) – தவறாத (நற்.233:8-9).*

**வழாஅது** *(வி.) – 1.வழுவாமல் (அக.142:8). 2.பிழையாது (புற.25:2-3).*

**வழாஅமை** *(வி.) – வழுவாமை (கலி.2:17-8).*

**வழாத** *(வி.) – குற்றம் இல்லாத, குறையாத (கலி.10:53).*

**வழாது** *(வி.) – தவறாமல் (புற.263:3-4).*

**வழாமை** *(பெ.) – வழுவாமல் (அக.280:10).*

**வழி** *(பெ.) – 1.விதம் (குறு.40:3). 2.இடம் (குறு.144:4). 3.முறை (குறு.173:4).*

**வழிச் செலவு** *(பெ.) – நன்னெறிக்கண் சேறல் (குறள்.766).*

**வழிநாள்** *(பெ.) – மறுநாள் (நற்.157:2).*

**வழிப்பட்ட** *(வி.) – பின்சென்ற (நற்.107:7-8).*

**வழிப்படாஅர்** *(வி.) – வழியில் வாரார் (பதி.75:4-5).*

**வழிப்படுநர்** *(பெ.) – வழிச் செல்வோர் (நற்.240:8).*

**வழிப்படூஉம்** *(வி.) – 1.வழியிற் செல்லும் (நற்.247:7). 2.குறிப்பிற்படும் (அக.113:2). 3.பின் செல்லும் (புற.31:1-2).*

**வழிபட்ட** *(வி.) – வணங்கிய, பூசித்த (கலி.132:21).*

**வழிபட்டு** *(வி.) – வணங்கி, சார்ந்து ஒழுகி (கலி.47:23).*

**வழிபடுவோர்** *(பெ.) – பணிந்து ஒழுகுவோர் (புற.10:1).*

**வழிபு** *(வி.) – வழிந்து (பதி.47:5).*

**வழிமுறை** *(பெ.) – 1.தலைமுறை (புற.201:11). 2.பின்னர், பின்பு (கலி.82:6-7).*

**வழிமொழிந்து** *(வி.) – 1.பணிமொழிகூறி (அக.24:2-3). 2.வழிபட்டு (புற.8:1).*

**வழிமொழிய** *(வி.) – வழிபாடு கூற, தாழ்வு சொல்ல (புற.17:1-4).*

**வழிமொழியலன்** *(வி.) – வழிபாடு கூறி அறியான் (புற.239:6).*

**வழியடை** *(பெ.) – தடை, இடையூறு (பதி.22:1-4).*

**வழியது** *(வி.) – பின்பக்கம் (பரி.11:34-5).*

**வழியீர்** *(பெ.) – வழித்துக் கொள்ளுங்கள், துடைத்துக் கொள்ளுங்கள் (கலி.13:3).*

**வழீஇ** *(வி.) – வழுவி, தப்பி, நழுவி (கலி.106:26).*

**வழு** *(பெ.) – 1.குற்றம் (நற்.143:5-6). 2.மறச் செயல் (புற.34:4). 3.தப்பு (புற.61:15-6). 4.தவறு (புற.216:3).*

**வழுக்காடை** *(வி.) – ஒழியாமல், குலையாமல், இகழாமை (குறள்.535).*

**வழுக்கிய** *(வி.) – தவறிவீழ்ந்த (அக.193:9).*

**வழுதி** *(பெ.) – பாண்டிய மன்னன் (நற்.150:4).*

**வழும்பு** *(பெ.) – நிணம் (நற்.97:1).*

**வழுவ** *(வி.) – குற்றமுடைத்தாக (பரி.12:65).*

**வழூஉ** *(பெ.) – தவறு, பிழை, குற்றம் (கலி.106:5).*

**வழூஉச் சொல்** *(பெ.) – பிழைச் சொல் (கலி.106:5).*

**வழை** *(பெ.) – சுரபுன்னை மரம் (குறு.260:6).*

**வள்** *(பெ.) – 1.கூர்மை (குறு.67:3). 2.வளமை (குறு.76:3). 3.கொடை (குறு.199:3). 4.பொறுமை, நீளம் (குறு.201:3).*

**வள்பு** *(பெ.) – 1.கடிவாளத்தின் வார் (நற்.11:8). 2.வார் (புற.50:1).*

**வள்ளம்** *(பெ.) – கிண்ணம் (நற்.297:1).*

**வள்ளல்** *(பெ.) – வன்மையுடையோன் (அக.142:3).*

**வள்ளன்மை** *(பெ.) – கொடுக்கும் தன்மை (புற.393:6).*

**வள்ளி** *(பெ.) – 1.வள்ளிக்கொடி (குறு.216:1-2). 2.வள்ளிநாச்சியார் (நற்.82:4). 3.கொடி (நற்.269:7). 4.தண்டு (புற.63:12).*

**வள்ளியம்** *(பெ.) – வன்மையை யுடையோம் (குறள்.598).*

**வள்ளியன்** *(பெ.)* – *பெருங்கொடை உடையவன் (புற.394:4).*

**வள்ளியோர்** *(பெ.)* – *வண்மையை உடையோர் (புற.47:1).*

**வள்ளூரம்** *(பெ.)* – *பசுவின் மாமிசம் (புற.219:2).*

**வள்ளை** *(பெ.)* – *1.உரற்பாட்டு (குறு.89:1). 2.கொடிவகை (அக.6:17).*

**வள** *(பெ.)* – *1.வளம் (நற்.25:5-6). 2.செல்வம் (நற்.351:1-2). 3.வளப்பம் (கலி.43:13-14).*

**வளகு** *(பெ.)* – *புதல் நீண்ட மரவகை (கலி.43:20).*

**வளத்தக்காள்** *(பெ.)* – *வருவாய்க்குத்தக்க வாழ்க்கை உடையவள் (குறள்.5).*

**வளத்தன** *(பெ.)* – *செல்வத்தை உடையவை (குறள்.749).*

**வளப்பாடு** *(பெ.)* – *பெருக்கம் (பரி.2:64).*

**வளம்** *(பெ.)* – *1.வளப்பம் (குறு.116:2). 2.செல்வம் (குறு.126:1). 3.சிறப்பு (நற்.315:4). 4.செழிப்பு (அக.10:13).*

**வளமை** *(பெ.)* – *1.செல்வம், பொருள் (நற்.126:9-10). 2.வளப்பம் (கலி.15:23-4).*

**வளர்** *(வி.)* – *1.வளர்தல் (குறு.90:2). 2.வளர்கின்ற (குறு.289:1). 3.தோன்றுகின்ற (நற்.6:1). 4.படர்கின்ற (நற்.151:6-7).*

**வளர்த்த** *(வி.)* – *பெருகச் செய்த (அக.324-5).*

**வளர்த்தது** *(பெ.)* – *வளரச் செய்தது (நற்.172:3).*

**வளர்ந்த** *(வி.)* – *வளர்தல் உற்ற (அக.310:8).*

**வளர்ந்திட்ட** *(வி.)* – *வளர்ந்த (நற்.344:1).*

**வளர்ப்பர்** *(வி.)* – *மூட்டுவர் (கலி.4:14).*

**வளர்ப்பவர்** *(பெ.)* – *பேணிக்காப்பவர் (கலி.50:21-2).*

**வளர** *(வி.)* – *1.மிக வேண்டுமென்று (புற.260:1). 2.பெருமிக (அக.313:2).*

**வளரா** *(வி.)* – *1.வன்மை பெறாத (நற்.241:4). 2.வளர்ச்சி பெறாத (நற்.356:5).*

**வளரும்** *(வி.) – மிகும் (புறம்.390:1).*

**வளவன்** *(பெ.) – சோழன் (புற.34:16).*

**வளன்** *(பெ.) – 1.வளம், செல்வம் (புற.136:27). 2.வருவாய் (புற.230:12).*

**வளாஅகம்** *(பெ.) – உலகம் (கலி.146:28).*

**வளாய்** *(வி.) – கலந்து (பரி.11:104-5).*

**வளாவ** *(வி.) – 1.கலந்து கொடுக்க (புற.292:2). 2.சூழ (பரி.15:27).*

**வளி** *(பெ.) – 1.காற்று (குறு.28:4). 2.தென்றற் காற்று (நற்.56:2). 3.கோடைக்காற்று (நற்.174:4). 4.ஐம்பூதங்களுள் ஒன்று (புற.2:3).*

**வளிமகன்** *(பெ.) – வீமன் (கலி.25:7).*

**வளிமறை** *(பெ.) – வீடு (புற.196:12).*

**வளை** *(பெ.) – 1.கையில் அணியும் அணி (குறு.11:1). 2.சங்கு (நற்.25:1). 3.வளையம் (நற்.60:11). 4.தோள்வளை (நற்.136:1). 5.வளைவு (அக.370:1).*

**வளை** *(வி.) – வளைந்த (குறு.67:1-2).*

**வளைஇ** *(வி.) – 1.வளைத்து (அக.84:3). 2.போர்த்தி (அக.136:20). 3.சுற்றி (அக.188:2). 4.சூழப்பட்டு (புற.18:1). 5.சூழ்ந்து (புற.69:7).*

**வளைஇய** *(வி.) – 1.வளைந்த (குறு.101:1). 2.சூழப்பட்ட (புற.19:1). 3.வளைத்த (கலி.85:1).*

**வளைந்தன்ன** *(வி.) – வளைந்தாற் போன்ற (குறு.227:1).*

**வளையவர்** *(பெ.) – வளையினை உடைய இளையோர் (கலி.29:5).*

**வற்புலம்** *(பெ.) – மேட்டு நிலம் (புற.173:6).*

**வற்றல்** *(பெ.) – 1.பசுமையற உலர்ந்த காய் (குறு.39:2). 2.ஒரு வகை மரம் (அக.145:3). 3.உலர்ந்த மரம் (அக.199:5). 4.வற்றல் தன்மை (புற.41:5).*

**வறந்தன** *(வி.) – வறண்டன (கலி.11:49).*

**வறந்து** *(வி.) – வறண்டு (கலி.145:19-20).*

**வறம்** *(பெ.) – 1.வறட்சி, நீரின்மை (நற்.186:4). 2.வற்றுகை (நற்.230:8). 3.பட்டுப்போதல் (நற்.238:1). 4.வறுமை (அக.42:15).*

**வறல்** *(பெ.) – 1.வற்றல் (அக.303:17). 2.சுள்ளி (புற.75:9). 3.வறந்த நிலம் (கலி.13:2). 4.வறட்சி (பதி.28:9).*

**வறள** *(வி.) – வற்ற (பரி.3:25).*

**வறன்** *(பெ.) – 1.வற்றல் (நற்.64:5-6). 2.வறுமை (நற்.90:3). 3.வறட்சி (நற்.92:4). 4.உலர்தல் (அக.49:11).*

**வறாஅற்க** *(வி.) – வற்றாதொழிக (பரி.16:5).*

**வறிதாக** *(வி.) – வெறுமை உடையதாக (நற்.64:7).*

**வறிது** *(பெ.) – 1.உள்ளீடு இல்லாதது (நற்.64:9). 2.வறுமை (அக.125:9). 3.குறையாக இருப்பது (கலி.138:3-4).*

**வறிது ஆகின்று** *(வி.) – வறுமையை உடைதாயிற்று (ஐங்.17).*

**வறிய** *(பெ.) – வறுமை உடையன (அக.143:3).*

**வறுங்கை** *(பெ.) – பொருள் இல்லாமை (அக.15:6).*

**வறுநீர்** *(பெ.) – வற்றிய நீர் (நற்.183:10).*

**வறும்** *(பெ.) – வறுமை என்பதன் விகாரம் (நற்.352:1).*

**வறுமை** *(பெ.) – 1.வற்றிய தன்மை (அக.121:2-3). 2.பொருள் இன்மை (அக.123:6-7).*

**வறுமையர்** *(பெ.) – வறுமையுடையர் (குறு.19:1).*

**வறுவிது** *(பெ.) – வெறுமை (புற.375:17).*

**வறுவியன்** *(பெ.) – பயன் நுகராதவன் (அக.362:9).*

**வறுவியேன்** *(வி.) – வறியேன் (புற.209:12).*

**வறை** *(பெ.) – வறுவல் (புற.386:3).*

**வன்கண்** *(பெ.) – 1.அருள் இல்லாக் கொடுமை (குறு.73:5). 2.கொடுமை (குறு.274:4). 3.தறுகண்மை (நற்.329:6). 4.வீரத்தன்மை (நற்.346:6). 5.திண்மை (அக.263:9).*

**வன்கண்ணள்** *(பெ.) – தறுகண்மை யுடையள் (கலி.116:8:9).*

**வன் கண்ணி** *(பெ.) – அஞ்சாமை உடையள் (அக.385:16-7).*

**வன்கணாளர்** *(பெ.) – கொடுமையை உடையவர் (நற்.89:9-10).*

**வன்கணாளன்** *(பெ.) – கொடுமை யுடையவன் (அக.154:5).*

**வன்கனி** *(பெ.) – செங்காய் (புற.207:11).*

**வன்கை** *(பெ.) – வன்மையைச் செய்யும் கை (புற.90:11).*

**வன்சொல்** *(பெ.) – கடுஞ்சொல் (குறள்.109).*

**வன்பர்** *(பெ.) – வன்நெஞ்சினர் (குறு.180:7).*

**வன்பரல்** *(பெ.) – வலிய பருக்கைக் கற்கள் (குறு.65:1).*

**வன்பால்** *(பெ.) – 1.முல்லை நிலம் (புற.384:4). 2.வன்னிலம் (குறள்.87).*

**வன்பு** *(பெ.) – உள்ளத் திண்மை (குறு.368:3).*

**வன்புலம்** *(பெ.) – 1.முல்லை நிலம் (நற்.59:6). 2.குறிஞ்சி நிலம் (புற.42:17). 3.மேட்டுநிலம் (புற.173:6). 4.வலிய நிலம் (புற.181:4).*

**வன்புறை** *(பெ.) – வற்புறுத்துதல் (அக.74:13).*

**வன்மான்** *(பெ.) – 1.யானை (குறு.141:4). 2.குதிரை (புற.304:7).*

**வன்மை** *(பெ.) – 1.உறுதி (குறு.283:3). 2.வலிமை (நற்.170:9). 3.வல்லதன்மை (புற.3:26).*

**வன்னி** *(பெ.) – ஒரு வகை மரம் (புற.372:1).*

**வன்னி மன்றம்** *(பெ.) – வன்னி மரம் நிற்கும் பொதுவிடம் (பதி.44:23).*

**வனப்பு** *(பெ.) – 1.அழகு (குறு.105:4). 2.பொலிவு (கலி.17:13). 3.இயல்பு, பண்பு (பரி.7:49-50).*

**வனம்** *(பெ.) – அழகு (புற.337:22).*

**வனிதையர்** *(பெ.) – பெண்கள் (கலி.2:37).*

**வனை** *(வி.) – செய்தல் (புற.228:13).*

**வனைந்து** *(வி.) – 1.எழுதி (நற்.29:7). 2.பண்ணி செய்து (அக.58:7).*

**வனைமோ** *(வி.) – வனைவாயாக (புற.256:5-6).*

**வா** *(வி.) – தாவுகை (நற்.54:1-2).*

**வா** *(வி.) – வரு (புற.136.7).*

**வாக்கல்** *(பெ.) – வடிக்கப்பட்ட சோறு (புற.215:1).*

**வாக்க** *(வி.) – வடிக்க (புற.115:3).*

**வாக்கி** *(வி.) – வார்த்து (புற.398:22).*

**வாகை** *(பெ.) – 1.பாலைநிலத்திற்குரிய ஒரு மரம் (குறு.7:5). 2.ஓர் இடம் (குறு.393:3). 3.ஓர் ஊர் (புற.351-6). 4.புறப்பொருள் திணைகளுள் ஒன்று (தொல்.20:15).*

**வாங்கு** *(வி.) – 1.வளைக்க, பெயர்க்க (குறு.112:3-4). 2.பெற்றுக்கொள்ள, கவர்ந்துகொள்ள (நற்.15:7-8). 3.பற்றிக் கொள்ள, இழுக்க (நற்.30:10). 4.வலிக்க (அக.36:6). 5.கொள்ள (ஐங்.356).*

**வாங்கா** *(வி.) – அகற்றாமல், நீக்காமல் (பரி.116).*

**வாங்கி** *(வி.) – 1.பெயர்த்து எடுத்து, கொண்டுதந்து (குறு.255:3). 2.பற்றியீர்த்து (கறந்து) (நற்.57:5). 3.வலித்து (அக.84:11). 4.பிடுங்கி (புற.274:6). 5.எடுத்து, கழற்றி (பரி.12:58-9). 6.அகற்றி (பரி.19:31).*

**வாங்கு** *(வி.) – 1.வளை (குறு.125:6). 2.செறி (குறு.172:6). 3.கைக்கொள் (குறு.304:3-4). 4.அடக்கிக்கொள் (குறு.376:4-5). 5.எய் (செலுத்து) (அக.175:1-2). 6.கவர் (கலி.39:15). 7.அலை (பரி.7:14).*

**வாச்செல** *(வி.) – வாவுதலாகச் செல்ல (அக.314:10).*

**வாச்செலல்** *(வி.) – தாவிச்செல்லும் செலவு (புற.197:1).*

**வாசம்** *(பெ.) – 1.வாசனை (குறு.309:2). 2.பஞ்சவாசம் (பரி.12:28).*

**வாட்டாய்** (வி.) – கெடாய், கெடுக்கமாட்டாய் (கலி.110:12).

**வாட்டிய** (வி.) – வாடும்படிசெய்த (நற்.260:9).

**வாட** (வி.) – 1.குறைய (வாடும்படி) (குறு.180:2). 2.கெட (நற்.282:2). 3.சோர (நற்.345:8). 4.குன்ற (அக.169:1). 5.அழிய (அக.323:1-2). 6.மெலிய (கலி.66:9).

**வாடல்** (பெ.) – வற்றல் (குறு.320:2).

**வாடல** (வி.) – 1.அழகுகெடுதல் இல்லாதன (நற்.359:7). 2.வாடுதலையுடைய (நற்.359:7).

**வாடற்க** (வி.) – வாடாது ஒழிக (பரி.6:105).

**வாடுக** (வி.) – உலர்வதாக (புற.6:21-2).

**வாடை** (பெ.) – வாடைக்காற்று (குறு.76:5).

**வாணன்** (பெ.) – ஒரு வள்ளல் (நற்.340:9).

**வாதம்** (பெ.) – தருக்கம் (கலி.96:36).

**வாப்பறை** (வி.,பெ.) – 1.தாவிப்பறத்தல் (நற்.54:1-2). 2.தாவும் சிறகு (அக.273:2).

**வாய்** (பெ.) – 1.வாய் எனும் உறுப்பு (குறு.26:6). 2.இடம் (குறு.59:2). 3.அலகு (குறு.67:1-2). 4.உண்மை (குறு.232:2). 5.வாக்கு (புற.36:16-7). 6.கூர்மை (புற.284:7).

**வாய்** (வி.) – 1.வாய்த்த (குறு.328:3). 2.பொருந்து (குறு.378:3-5). 3.தப்பாத (அக.115:7-8). 4.கொள் (அக.370:1).

**வாய்க்க** (வி.) – 1.வெற்றிபெறுக (நற்.126:11-2). 2.கைகூடுவதாக (நற்.148:11-2).

**வாய்த்த** (வி.) – 1.பொருந்திய (பெற்ற) (குறு.299:4). 2.மேற்கண்ட (நற்.153:4-5). 3.எழுந்தன (அக.100:14-5). 4.உண்டாக்கப்பட்ட (புற.98:12-3).

**வாய்த்தனை** (வி.) – உண்மை கூறினாள் (நற்.147:10-11).

**வாய்த்தன்று** (வி.) – 1.வாய்த்தது (வாய்ப்புடையதாயிருந்தது) (பரி.11:87). 2.பயந்தது (பரி.16:31).

**வாய்த்தனம்** (வி.) – 1.காணப்பெற்றோம் (அக.66:5-6). 2.வாய்ப்பச் செய்தனம் (ஐங்.394).

**வாய்த்தனை** (வி.) – உண்மைகூறினாள் (நற்.147:10-11).

**வாய்த்து** *(வி.) – 1.கிடைக்கப்பெற்று (நற்.316:6-7). 2.பெய்தமையால் (அக.394:4).*

**வாய்த்தென** *(வி.) – கைகூடிற்று ஆக (அக.70:1).*

**வாய்ந்த** *(வி.) – 1.வாய்ப்புடைத்து ஆகிய (குறள்.737). 2.வாய்களையுடைய (கலி.59:5-6). 3.பொருந்திய (பரி.11:10).*

**வாய்ப்பட** *(வி.) – 1.இடம் உண்டாக (புற.295:4). 2.வழிப்பட (புற.343:14).*

**வாய்ப்பு** *(பெ.) – பொருந்துதல் (பதி.20:6).*

**வாய்ப்புள்** *(பெ.) – நற்சொல், நன்நிமித்தம் (முல்.17-8).*

**வாய்மை** *(பெ.) – 1.உண்மை (நற்.55:1). 2.திரிபில்லாமை (குறள்.963). 3.தப்பாத மொழி (கலி.35:245). 4.புகழ் (பரி.17:28-9).*

**வாய்விடூஉம்** *(வி.) – 1.கூறாநிற்கும் (கலி.46:15). 2.அலகும் (கலி.72:8).*

**வாய்விட்ட** *(வி.) – அலர்ந்த (கலி.29:21 -2).*

**வாய்வைத்த** *(வி.) – ஊதிய (கலி.105:9).*

**வாய** *(வி.) – வாயையுடைய (குறு.245:3).*

**வாயடை** *(பெ.) – உணவு (பரி.2:69).*

**வாயர்** *(வி.) – வாயையுடையவராய் (அக.265:18).*

**வாயாக** *(வி.) – உண்மையாக (அக.203:12).*

**வாயாது** *(வி.) – 1.கிடைக்கப் பெறாமல் (நற்.215:12). 2.பெய்யாமல் (அக.347:9-10).*

**வாயில்** *(பெ.) – 1.வீட்டுவழி (குறு.118:3). 2.வழி (நற்.260:7). 3.வாயிற்காவலர் (புற.67:10). 4.வாய்தலை (வாய்க்காலின் தலைப்பு)(புற.136:25).*

**வாயிலோய்** *(பெ.) – வாயில் காப்பவனே (புற.206:1).*

**வாயினர்** *(பெ.) – சொல்லை உடையவர் (குறள்.419).*

**வாயுறை** *(பெ.) – தாள் உருவி (மகளிர் காதணி) (நெடு.39:40).*

**வார்** *(பெ.) – 1.நீட்சி (குறு.82:1). 2.நேர்மை (நற்.35:1). 3.நெடுமை (நற்.191:2). 4.தோல்வால் (அக.249:2-3). 5.நீர் (அக.356:1-2). 6.முலைக்கச்சு (அக.361:4-5). 7.பெரிய (பதி.31:7).*

**வார்** (வி.) – 1.சொரி, ஒழுகு (குறு.22:1). 2.நீர் (குறு.247:2). 3.வெளிய (நற்.354:4). 4.வழி (அக.224:7). 5.ஒழுங்குபடு (புற.53:1). 6.தடவு (புற.302:6).

**வார்ந்தன்ன** (வி.) – 1.நீண்டுபடிந்தாற் போன்ற (குறு.116:3). 2.ஒழுகினாற் போன்ற (குறு.256:1). 3.நீட்டி வைத்தாற் போன்ற (நற்.203:4). 4.வடித்தாற் போன்ற (நற்.300:8). 5.இழுத்தாற் போன்ற (அக.219:12). 6.நீண்டு வளைந்தாற் போன்ற (அக.400:8-9).

**வார்ந்து** (வி.) – 1.நேராகி (குறு.14:2). 2.உரித்து (அக.69:13-4). 3.வடிந்து (அக.155:9). 4.ஒழுகப்பெற்று (அக.371:10). 5.சொரிந்து, பெருகி (பதி.16:7).

**வார்பு** (வி.) – 1.நிரம்பி (குறு.198:3). 2.ஒழுக்கி (குறு.344:4-6). 3.வடிந்து (அக.25:14). 4.முதிர்ந்து (அக.28:3). 5.ஒழுகி (அக.128:12).

**வாரணம்** (பெ.) – 1.கோழி (நற்.21:8). 2.யானை (அக.172:8).

**வாரல்** (வி.) – வாராதே (வாராதொழிக) (குறு.69:6).

**வாரலென்** (வி.) – வரமாட்டேன் (அக.245:21).

**வாரா** (வி.) – 1.வாராத (குறு.66:3). 2.வரமாட்டா (குறு.254:3).

**வாராக்கால்** (வி.) – வாராத ஞான்று (வாரானாயினும்) (குறள்.1179).

**வாரி** (வி.) – 1.சீவி (நற்.140:3). 2.கோதி (அக.8:15-6). 3.தழுவி (பொரு.23).

**வாரி** (பெ.) – 1.விளைவு (புற.35:27). 2.வருவாய் (புற.330:5-6). 3.நீர் (குறள்.14).

**வால்** (பெ.) – 1.தூய்மை (குறு.45:2). 2.வெண்மை (குறு.267:4). 3.மெய்ம்மை (பெருமை) (குறள்.12).

**வாழ்** (வி.) – 1.வசி, தங்கு (குறு.35:1-2). 2.உயிரோடு இரு (நற்.314:2). 3.உளதாகு (அக.390:10-11). 4.பொருந்து (பதி.38:11). 5.உடம்பொடு பொருந்து (குறள்.4:8). 6.வாழப்படு (கலி.77:24).

**வாள்** (பெ.) – 1.ஒளி (குறு.44:1-2). 2.வாள் எனும் போர்க்கருவி (குறு.157:34). 3.ஈர்வாள், வாளரம் (கருக்கு அமைந்த வாயையுடைய கருவி) (குறு.245:3). 4.அராவும் கருவி (நற்.77:8-9). 5.வெட்டும் கருவி (நற்.81:10). 6.தத்தி (நற்.132:2). 7.கூர்மை (அக.24:1). 8.கொடுமை (நற்.255:4). 9.வாள் வீரர்படை (புற.378).

**வாளி** *(பெ.) – 1.அம்பு (குறு.172:6). 2.வாளினையுடையவர் (வாள்வீரர்) (பரி.9:54).*

**வானம்** *(பெ.) – 1.ஆகாயம் (குறு.130:1). 2.மேகம் (குறு.287:8). 3.மழை (நற்.254:11). 4.வானம்பாடிப்புள் (அக.67:1-2). 5.வீட்டுலகம் (குறள்.353).*

**வானவூர்தி** *(பெ.) – 1.விமானம் (புற.27:7-9). 2.ஆகாய விமானம் (புற.27:8).*

**வாரும்** *(வி.) – 1.ஒழுகும் (குறு.242:3). 2.வம்மின் (வாருங்கள்) (பரி.14:8-9).*

**விக்குள்** *(பெ.) – விக்கல் (குறள்.335).*

**விசி** *(வி.) – 1.கட்டு (நற்.220:5-6). 2.இறுக்கு (அக.91:13).*

**விசும்பு** *(பெ.) – 1.வானம் (குறு.74:2). 2.தேவருலகம் (மதுரை.494:5). 3.மேகம் (பரி.13:7-8).*

**விசை** *(பெ.) – 1.வேகம் (குறு.158:2). 2.ஆற்றல் (மது.486).*

**விட்ட** *(பெ.) – 1.கட்டினின்று விடுக்கப்பட்ட (குறு.74:1). 2.வெளியிட்ட (அக.198:3). 3.விடைகொடுதனுப்பிய (புற.382:11). 4.வீசிய (கலி.73:3).*

**விட்டோர்** *(பெ.) – பற்று அற்றார் (புற.358:6).*

**விட** *(வி.) – 1.வழிகாட்ட (அக.8:14). 2.அற (அக.150:2-3). 3.பிளக்க (அக.173:13-4). 4.நீங்க (அக.208:17). 5.செலுத்த (புற.3:21). 6.வீச (குறள்.1118). 7.நெகிழ (கலி.33:28).*

**விடர்** *(பெ.) – 1.பிளப்பு (குறு.218). 2.மலைப்பிளப்பாலாகிய குகை (நற்.116:7-8). 3.மலைப்பிளப்பு (நற்.318:8). 4.மலையின் கண் இயல்பில் அமைந்த குகை (அக.22:12). 5.நிலவெடிப்பு (பதி.28:7).*

**விடல்** *(பெ.) – 1.விடுதல் (விரிதல்) (குறு.300:8). 2.அனுப்புதல் (குறள்.1303). 3.அனுப்புதல் (கலி.28:22). 4.சொல்லுதல் (கலி.68:9).*

**விடல்** *(வி.) – 1.ஒப்படைக்க (குறள்.517). 2.நிறுத்தி வைக்க (விட்டுவைக்க) (குறள்.876). 3.விடுக (தவிர்க) (குறள்.113). 4.விடாதே (விடற்க) (கலி.86:16).*

**விடலை** *(பெ.) – 1.தலைவன் (அக.7:12). 2.வீரன் (அக.237:14).*

**விடு** *(வி.) – 1.நீங்கிய (குறு.54:3). 2.உண்டாக்குகின்ற (குறு.174:2). 3.வெளியிடுகின்ற (குறு.240:2). 4.ஏவப்பட்ட (குறு.242:5). 5.தொங்கவிட்ட (குறு.246:6). 6.எய்கின்ற (குறு.274:3). 7.திரிகின்ற (நற்.311:1). 8.தூண்டப்படுகின்ற (அக.14:18). 9.மலர்ந்த (அக.36:4). 10.பிளந்த (அக.53:3). 11.விடப்படுகின்ற (அக.64:9). 12.நெகிழ்ந்த (அக.158:4). 13.விடுகின்ற (அக.179:7). 14.எழுப்புகின்ற (அக.191:8). 15.ஒழிந்த (அக.207:8). 16.செய்கின்ற (அக.256:3). 17.ஒழுகிய (அக.337:14). 18.போகப்பட்ட (போடப்பட்ட) (புற.28:12). 19.விடுவாயாக (அனுப்புக) (புற.136:24). 20.திறக்கப்பட்ட (புற.182:15). 21.தருகின்ற (புற.159:23). 22.தா (புற.169:8). 23.இடப்பெற்ற (புற.378:4). 24.பிடித்த (புற.399:15). 25.தோற்றுவிக்கின்ற (நெடு.94). 26.சொல்லிவிட்ட (குறள்.689). 27.விட்டுவிடு (குறள்.1247).*

**விடை** *(பெ.) – 1.ஏறு.(காளைமாடு) (அக.214:10-11). 2.இடாய் (புற.31:21). 3.காட்டுப்பூனையின் ஆண் (புற.324:1). 4.மரையானின் ஆண் (காட்டுப்பசு) (மலை.331).*

**விண்** *(பெ.) – 1.வானம் (குறு.144:7). 2.மழை (குறள்.13). 3.தேவர் உலகம் (மது.352).*

**வித்து** *(பெ.) – 1.விதை (நற்.209:3). 2.காரணம் (குறள்.138).*

**வித்தகர்** *(பெ.) – 1.சதுரப்பாடு உடையவர் (குறள்.235). 2.வல்லுநர் (இல.27:155-6).*

**விதலை** *(பெ.) – நடுக்கம் (பரி.11:75).*

**வியவற்க** *(வி.) – மதியாதொழிக (குறள்.439).*

**விரிச்சி** *(பெ.) – 1.நிமித்தம் (அறிகுறி) (நற்.40:4). 2.நற்சொல் (புற.280:6).*

**விரிநீர்** *(பெ.) – கடல் (குறு.226:7).*

**விரிநூல்** *(பெ.) – ஆகமம் (பரி.11:78).*

**விரை** *(பெ.) – 1.வேகம் (நற்.21:1). 2.மணம் (வாசனை) (நற்.315:6).*

**விலங்கி** *(வி.) – 1.குறுக்கிட்டு (நற்.126:4). 2.விலகி (அக.28:10). 3.கடந்து (அக.295:14). 4.விலக்கி (புற.295:4).*

**விலைவன்** *(பெ.) – விற்பவன் (புற.152:9).*

**விழு** *(பெ.) – துன்பம் (நற்.389:4).*

**விழு** *(வி.) – 1.பெய்கின்ற (அக.198:4). 2.உதிருகின்ற (பரி.9:5).*

**விளக்கு** *(பெ.) – 1.ஒளிதரும் கருவி(தீபம்) (நற்.69:6). 2.விளக்கம் (அக.184:1). 3.ஒளி (புற.2:22-3).*

**விளங்க** *(வி.) – 1.புலப்பட (நற்.153:2). 2.ஒளிவீச (நற்.221:9). 3.தெளிவுபட (புற.50:15-6). 4.தோன்ற (புறந.141:2). 5.சீலத்தராக (மது.464). 6.நிலவ (பெரும்.465). 7.பொலிவுபெற (மது.508:9). 8.மேம்பட்டுத்தோன்ற (பதி.2:5).*

**விளி** *(பெ.) – 1.ஓசை (குறு.207:3). 2.வீளைஒலி (நற்.142:6). 3.அழைத்தல் (நற்.304:3). 4.அழிவு (அக.55:4).*

**விளை** *(பெ.) – பட்டறிவு (குறள்.177).*

**விளை** *(வி.) – 1.முற்றிய (குறு.39:2). 2.விளைந்த (குறு.141:1). 3.உண்டாகின்ற (குறு.269:6).*

**விளையாட்டு** *(பெ.) – இன்பச்செயல் (குறு.194:6).*

**விற்றல்** *(பெ.)– ஒன்றுக்கு ஈடாக (மாற்றாக) வேறு ஒன்றைத் தருதல் (குறள்.1070).*

**விறகு** *(பெ.) – 1.எரிபொருளாகும் கட்டை (புற.16:5). 2.வேள்விக்குரிய கட்டைகள் (பெரும்.499).*

**விறந்த** *(வி.) – 1.செறிந்த (அக.286:5-6). 2.அஞ்சி (அக.378:7).*

**விறல்** *(பெ.) – 1.மிடுக்கு (குறு.125:4-5). 2.வெற்றி (குறு.218:1). 3.தன்மை (நற்.37:1). 4.மேன்மை (நற்.85:2). 5.வலிமை (நற்.153:7-8). 6.சிறப்பு (அக.3:6). 7.பெருமை (அக.174:3). 8.பெரிய உரு (பதி.31:17). 9.உறுதி (பதி.49:16). 10.மிகுதி (அக.75:14).*

**விறலி** *(பெ.) – 1.உள்ளக்குறிப்புக் புறத்தே தோன்றக் கூத்தாடும் மகள் (நற்.328:11).*

**வினவல்** *(பெ.) – ஒன்றையறியும் பொருட்டுக் கேட்டல் (நற்.109:4).*

**வினை** *(பெ.) – 1.செயல் (குறு.63:2). 2.காரியம் (குறு.247:2). 3.தொழில் (குறு.309:1). 4.ஏவல் (குறு393:4). 5.ஊழ்வினை (நற்.210:6). 6.போர் (அக.44:1). 7.வேலைப்பாடு (அக.157:13). 8.கருமச்சூழ்ச்சி (புற.179:7). 9.புண்ணியப் பாவச் செயல்கள் (குறள்.15). 10.நீத்தார்க்கடமை (குறள்.63). 11.முயற்சி (குறள்.519).*

**வினைஞர்** *(பெ.) – தொழில் புரிவோர் (அக.84:13-4).*

**வினையர்** *(பெ.) – தொழில் புரிவோர் (நற்.48:7).*

**வீ** *(பெ.) – 1.மலர் (குறு.47:1). 2.வறட்சி (நற்.271:7). 3.நீக்கம் (அக.19:16). 4.மகரந்தம் (அக.85:11).*

**வீங்கிய** *(வி.) – 1.பருத்த (அக.279:4-8). 2.மிக்க (அக.289:7-8). 3.திரண்ட (அக.336:23). 4.தோற்றிய (பதி.2:16). 5.பூரித்த (குறள்.1233).*

**வீச** *(வி.) – 1.தாக்க (அக.255:15-6). 2.எறிய (ஐங்.421).*

**வீசி** *(வி.) – 1.அசைத்து (நற்.20:5). 2.தாக்கி (நற்.89:5-6). 3.பெய்து (அக.23:1). 4.இட்டு (அக.30:9). 5.வழங்கி (புற.74725. 6.எறிந்து (மது.381). 7.உதைத்து (நெடு.10:1).*

**வீசு** *(வி.) – 1.அசைகின்ற (நற்.241:6). 2.மோதுகின்ற (நற்.264:5). 3.வழங்குகின்ற (நற்.381:7-9).*

**வீட்டி** *(வி.) – 1.போக்கி (அக.301:9). 2.தோள்பித்து (பதி.5:6).*

**வீட** *(வி.) – நீங்க (குறு.333:5).*

**வீடு** *(வி.) – 1.விடுபடல் (புற.393:12). 2.விடுகை (குறள்.791).*

**வீந்து** *(வி.) – 1.அழிந்து (குறு.149:4). 2.இறந்து (பதி.56:8).*

**வீய** *(வி.) – ஒழிய (கலி.31:4).*

**வீழ்ந்த** *(வி.)– 1.பெய்த (குறு.395:5). 2.இடந்த (நற்.2:1). 3.கீழேசென்ற (நற்.24:1). 4.விரும்பிய (நற்.174:9). 5.இறங்கிய (நற்.197:6). 6.இறந்த (அக.115:8). 7.செறிந்த (அக.138:16).*

**வீழ்பு** *(பெ.) – விழுதல் (குறு.306:5).*

**வீழ்பு** *(வி.) – வீழ்ந்து (நற்.30:8).*

**வீழ்மின்** *(வி.) – வெட்டுங்கள் (புற.262:1).*

**வீழ்வார்** *(பெ.) – 1.விரும்பப்படுபவர் (காதலர்) (குறள்.1103). 2.விரும்பியவர் (காதலர்) (பரி.10:31).*

**வீழ** *(வி.) – 1.ஒப்ப (குறு.323:3). 2.இறப்ப (புற.152:3-4). 3.விழ (நெடு.10). 4.நீங்க (பரி.12:5).*

**வீழும்** *(வி.) – 1.விழுகின்ற (நற்.280:1-4). 2.பாயும் (அக.172:2-4). 3.சாயும் (குறள்.1020).*

**வீளை** *(பெ.) – 1.ஒலி (நற்.268:3). 2.சிள் என்னும் ஒலி (அக.33:5). 3.சீழ்க்கை (அக.274:9).*

**வீற்றிருக்கை** *(வி.) – அரசிருக்கை (குறள்.789).*

**வீறு** *(பெ.) – 1.சிறப்பு (குறு.225:3-4). 2.பெருமை (நற்.190:7). 3.தனிச்சிறப்பு (பொரு.167-68). 4.போற்றுதல் (குறள்.904).*

**வீறுவீறு** *(இ.) – வேறுவேறாக (புற.173:8).*

**வெஃகா** *(வி.) – விரும்பாத (குறள்.179).*

**வெஃகாது** *(வி.) – விரும்பாமல் (பதி.22:7).*

**வெஃகாமை** *(பெ.) – கவரக் கருதாமை (குறள்.171).*

**வெஃகார்** *(வி.) – விரும்பார் (அக.112:11).*

**வெஃகி** *(வி.) – விரும்பி (அக.69:5).*

**வெஃகிய** *(வி.அ.) – விரும்பிய (அக.205:10).*

**வெஃகின்** *(வி.அ.) – பிறன் பொருளைக் கவர்ந்தால் (குறள்.171).*

**வெஃகி** *(பெ.) – விரும்பி (அக.69:5).*

**வெஃகு தல்** *(வி.) – பிறன் பொருளை விரும்புதல் (குறள்.74).*

**வெக்கை** *(பெ.) – நெற்களம் (பதி.71:3).*

**வெகுண்டு** *(வி.எ.) – சினம் கொண்டு கூற்று வெகுண்டு வரினும் ஆற்றும் ஆற்றலையே (பதி.14:10).*

**வெகுள் தல்** *(வி.) – சினமடை (புற.324:1).*

**வெகுள்வர்** *(பெ.) – சினம் கொள்வர் (கலி.93:32).*

**வெகுள்வாய்** *(பெ.) – சினம் கொள்வாய் (கலி.92:23).*

**வெகுளல்** *(பெ.) – பகைத்தல் (குறள்.860).*

**வெகுளாமை** *(பெ.) – சினவாமை (குறள்.308).*

**வெகுளி** *(பெ.) – சினம் (புற.6:23).*

**வெங்கடற்று** *(பெ.) – கொடிய மலைச் சாரல் (நற்.164:9).*

**வெங்கடுவளி** *(பெ.) – சூறாவளி (அக.71:17).*

**வெங்கதிர்ச் செல்வன்** *(பெ.) – வெப்பமான கதிர்களையுடைய கதிரவன் (புற.56:22).*

**வெங்கதிர்** *(பெ.) – கதிரவன் (அக.1:10).*

**வெங்கலுழி** *(பெ.) – வெப்பமான கலங்கல் நீர் (குறு.356:4).*

**வெங்கள்** *(பெ.) – களி மயக்கூட்டும் கள் (புற.29:15).*

**வெங்களரி** *(பெ.) – வெப்பமான நாடு (அக.293:5).*

**வெங்காமம்** *(பெ.) – மிக்க விருப்பம் (அக.15:1).*

**வெங்காளை** *(பெ.) – வலிய இளைஞன் (அக.397:8).*

**வெட்சி** *(பெ.) – செடி வகைகளுள் ஒன்று (குறு.309:5).*

**வெட்டிய** *(வி.எ.) – கூறுபடுத்திய (நற்.271:9).*

**வெடி** *(பெ.) – 1.ஓசை (அக.392:15). 2.நிமிர் (புற.302:1). 3.கேடு (மது.230:3). 4.பிளவு (பரி.4:20).*

**வெடிபட்டு** *(வி.எ.) – சிதறி (புற.93:3).*

**வெண்மை** *(பெ.) – வெள்ளை நிறம் (குறு.246:1).*

**வெண்கல் அமிழ்தம்** *(பெ.) – உப்பு (அக.207:2).*

**வெண்கலம்** *(பெ.) – வெள்ளி ஏனம் (வெள்ளிப் பாத்திரம்) (புற.390:17).*

**வெண்களர்** *(பெ.) – வெள்ளிய களர் நிலம் (அக.74-6-7).*

**வெண்களரி** *(பெ.) – வெள்ளிய களர் நிலம் (அக.353:9).*

**வெண்காக்கை** *(பெ.) – கழுத்தில் வெண்ணிறமுள்ள காக்கை (நற்.31:2).*

**வெண்காழ்** *(பெ.) – 1.வெள்ளிய வித்து (அக.7:21). 2.வெள்ளிய அரிசி (அக.393:10). 3.வெள்ளிய செறிவுள்ள கட்டை (சந்தனக் கட்டை) (புற.369:9). 4.வெளுத்த குறுந்தட்டி (ஐங்.44).*

**வெண்கிடை** *(பெ.) – வெள்ளிக் கிடை (நெட்டி) (புற.75:8).*

**வெண்கிழி** *(பெ.) – வெண்மையான துணி (நற்.328:8).*

**வெண்குருடு** *(பெ.) – வெள்ளிய நாரை (குறு.113:3).*

**வெண்கூதாளம்** *(பெ.) – வெள்ளை நறுந்தாளி (குறு.283:6).*

**வெண்கூந்தல்** *(பெ.) – பெண்டிரின் வெளுத்த தலைமயிர் (புற.276:1).*

**வெண்கை** *(பெ.) – 1.வளையலணியாத வெறுங்கை, சங்குவலை அணிந்த கை (பதி.29:6). 2.(அபிநயமில்லாத) தாளமிடும் வெறுங்கை (பதி.61:16).*

**வெண்கொடி** *(பெ.) – வெற்றிக்கு அடையாளமாகிய கொடி (புற.362:5).*

**வெண்கோடு** *(பெ.) – 1.வெள்ளிய மரக் கொம்பு (குறு.24:3). 2.யானைத்தந்தம் (நற்.10:7). 3.வெண்ணிறச் சங்கு (நற்.58:6). 4.நீர்த் தேக்கத்தின் வெள்ளிய கரை (நற்.67:4). 5.பன்றியின் கொம்பு (நற்.336:4).*

**வெண்கோள்** *(பெ.) – வெள்ளிய தோற்றம் (புற.257:12).*

**வெண்சுடர்** *(பெ.) – வெள்ளிய ஒளி, வெள்ளொளி (பதி.18:26).*

**வெண்ஞெமை** *(பெ.) – மர வகையுள் ஒன்று (அக.145:5).*

**வெண்ணி** *(பெ.) – சோழ நாட்டிலுள்ள ஓர் ஊர் (நற்.390:3).*

**வெண்ணெய்** *(பெ.) – தயிரிலிருந்து கடைந்தெடுக்கப்படுவது (குறு.58:4).*

**வெண்தலை** *(பெ.) – 1.வெண்மையான மேற்பகுதி (குறு.144:2). 2.நுரைத்தலை (குறு.146:3). 3.வெள்ளிய தலை (அக.117:6).*

**வெண்தலை (வெண்டளை)** *(பெ.) – வெண்பாவிற்குரிய தளை (தொல்.26:60).*

**வெண்திங்கள்** *(பெ.) – வெண்ணிலா (குறு.129:4).*

**வெண்துகில்** *(பெ.) – வெள்ளாடை (கலி.105:17).*

**வெண்துவை** *(பெ.) – வெள்ளிய துவையல் (ஊண் வகை) (பதி.55:7).*

**வெண்தேர்** *(பெ.) – 1.தந்தத்தாலான தேர் (குறு.189:2). 2.பேய்த்தேர் (கானல் நீர்) (நற்.84:4).*

**வெண்தோடு** *(பெ.) – 1.வெள்ளிய குருத்தோலை (குறு.281:2). 2.வெள்ளிய தொகுதி (குறு.304:6). 3.வெள்ளிய இதழ் (அக.346:4).*

**வெண்தோல்** *(பெ.) – வெள்ளிய கிடுகுப் படை (புற.285-8).*

**வெண்நரி** *(பெ.) – நரிவகைகளுள் ஒன்று (பதி.22:35).*

**வெண்நார்** *(பெ.) – 1.வெள்ளிய (உலர்ந்த) (குறு.302:7). 2.வெள்ளிய நார்க்கயிறு (அக.83:6).*

**வெண்நிணமூரி** *(பெ.) – வெள்ளிய ஊன் துண்டம் (புற.393:14).*

**வெண்நீறு** *(பெ.) – சாம்பல் (புற.356-5).*

**வெண்துளை** *(பெ.) – வெள்ளிய முனை (அக.109:7).*

**வெண்நெல்** *(பெ.) – நெல்வகை (அக.340:17).*

**வெண்நெற்று** *(பெ.) – வெள்ளிய முற்றிய காய் (குறு.7:5).*

**வெண்பரல்** *(பெ.) – வெள்ளிய பரல் கற்கள் (அக.337:16).*

**வெண்பறை** *(பெ.) – வெள்ளிய சிறகு (குறு.166:1).*

**வெண்பா** *(பெ.) – பா வகை (தொல்.26:18).*

**வெண்பிடவு** *(பெ.) – வெள்ளிய பிடவ மரம் (அக.184:7).*

**வெண் புழுக்கல்** *(பெ.) – வெள்ளிய புழுக்கிய சோறு (நற்.83:5).*

**வெண்புறக்கு** *(பெ.) – வெள்ளிய உடற்புறம் (அக.139:10).*

**வெண்புறம்** *(பெ.) – வெள்ளிய முதுகு (நற்.74:8).*

**வெண்பொன்** *(பெ.) – வெள்ளிக்கோள் (புற.389:4).*

**வெண்போத்து** *(பெ.) – வெள்ளிய ஆண் வாளைமீன் (அக.276:2).*

**வெண்போழ்** *(பெ.) – வெள்ளிய பனங் குருத்து (நற்.169:8).*

**வெண்மண்டை** *(பெ.) – வெள்ளிய உண் கலம் (புற.286:5).*

**வெண்மணல்** *(பெ.) – வெள்ளிய மணல் (குறு.53:2).*

**வெண் மருப்பு** *(பெ.) – வெண்மையான கொம்பு (ஐங்.265).*

**வெண்மழை** *(பெ.) – வெண்முகில் (அக.133:6).*

**வெண்மறி** *(பெ.) – வெள்ளாட்டுக் குட்டி (அக.104:9).*

**வெண்முகை** *(பெ.) – வெள்ளிய அரும்பு (நற்.366:7).*

**வெண்முற்றம்** *(பெ.) – நிலவொளி தவழும் (நெடு.95).*

**வெண்மை** *(பெ.) – 1.வெள்ளை நிறம் (குறு.277:2). 2.புல்லறிவுடைமை (குறள்.844). 3.பொய்ம்மை (பொருளற்ற சொல்) (கலி.88:6).*

**வெதிர்** *(பெ.) – மூங்கில் (குறு.304:2).*

**வெதிர் உழக்கு** *(பெ.) – மூங்கில் உழக்கு (கலி.96:27).*

**வெதிர்ங்குழல்** *(பெ.) – மூங்கிற் குழல் (கலி.119:8).*

**வெதிர் நெல்** *(பெ.) – மூங்கில் நெல் (கலி.42:7).*

**வெதிரம்** *(பெ.) – மூங்கில் (நற்.62:1).*

**வெந்த** *(வி.எ.) – 1.வெப்பம் கொண்ட (குறு.356:3). 2.காய்ந்த (ஐங்.317). 3.இரணமாகிய (கலி.83:30).*

**வெந்தது** *(பெ.) – இரணமாகியது (கலி.120:17).*

**வெந்திறல்** *(பெ.) – 1.மிக்க வலிமை (குறு.39:7). 2.கொடிய வலிமை (புற.37-1).*

**வெந்து** *(வி.எ.) – 1.காய்ந்து (அக.71:6). 2.மனம் புழுங்கி (புற.295:2).*

**வெந்துப்பு** *(பெ.) – மிகு வலிமை (குறள்.85).*

**வெந்நோய்** *(பெ.) – கொடுநோய் (கலி.142:32).*

**வெப்பம்** *(பெ.) – சூடு (குறு.277:4).*

**வெப்பர்** *(பெ.) – சூடான உணவு (புற.269:4).*

**வெப்பு** *(பெ.) – 1.கொடுமை (புற.11:8). 2.வெம்மை (புற.24:5). 3.துன்பம் (புற.397:17).*

**வெப்புள்** *(பெ.) – வெம்மை (புற.120:1).*

**வெம்ப** *(வி.எ.) – 1.கொதிக்க (நற்.258:3). 2.நடுங்க (நற்.287:1). 3.கருக (புற.174:24). 4.வாட (கலி.10:4).*

**வெம்பி** *(வி.எ.) – 1.வாடி (அக.189:1). 2.சோர்ந்து (மலை.190:4).*

**வெம்பிய** *(பெ.எ.) – 1.வெப்ப முற்ற (நற்.186:4). 2.காய்ந்த (அக.185-8).*

**வெம்பு** *(பெ.) – வெப்பம் கொண்ட (நற்.84:9).*

**வெம்பும்** *(பெ.) – வருந்தும் (அக.153:3).*

**வெம்முனை** *(பெ.) – 1.கொடிய பகைப்புலம் (நற்.3:5). 2.கொடிய இடம் (அக.329:7). 3.போர்க்களம் (புற.33:15).*

**வெம்மை** *(பெ.) – 1.வெப்பம் (நற்.43:6). 2.விருப்பம் (நற்.273:2). 3.கொழுமை (அக.389:19).*

**வெய்து** *(பெ.) – 1.தீங்கு (அக.203:13). 2.வெம்மை (அக.224:10).*

**வெய்துயிர்த்தல்** *(பெ.) – வெப்பமாக மூச்சு விடுதல் (குறு.317:3).*

**வெய்துயர்** *(பெ.) – கொடிய வருத்தம் (கலி.136:8).*

**வெய்துற்றனை** *(பெ.) – விரும்பினை (குறு.165:2).*

**வெய்துற்று** *(பெ.) – வெம்மையுற்று (குறு.106:3).*

**வெய்ய** *(வி.எ.) – 1.வெப்பமுடையன (குறு.196-4). 2.விரும்பத்தக்க (குறு.277:4). 3.வெம்மையாக (அக.325:10).*

**வெய்யள்** *(பெ.) – விருப்பமுடையவள் (குறு.51:4).*

**வெய்யோள்** *(பெ.) – விரும்புபவள் (அக.49:1).*

**வெய்யோன்** *(பெ.) – விரும்புபவன் (புற.56:6).*

**வெயில்** *(பெ.) – 1.கதிரொளி (குறு.38:2). 2.கதிரவ வெப்பம் (குறு.213:5).*

**வெயிலோன்** *(பெ.) – கதிரவன் (புற.19:24).*

**வெரிநு** *(பெ.) – முதுகு (அக.65:14).*

**வெரு** *(பெ.) – அச்சம் (அக.228-11).*

**வெருகு** *(பெ.) – காட்டுப் பூனை (குறு.240:3).*

**வெருக்குவிடை** *(பெ.) – காட்டுப் பூனையின் ஆண் (புற.324:1).*

**வெருவந்த** *(பெ.) – அஞ்சத்தக்க செயல் (குறள்.563).*

**வெருவந்து** *(பெ.) – அஞ்சி (குறள்.589).*

**வெருவருதூமம்** *(பெ.) – அச்சமூட்டும் புகை (கலி.104:43).*

**வெருவார்** *(பெ.) – அஞ்சாதவர் (புற.370-23).*

**வெருவு** *(பெ.) – அச்சம் (தொல்.21:21).*

**வெருள்பு** *(பெ.) – மருண்டு (கலி.42:12).*

**வெல் தல்** *(பெ.) – வெல்லுதல் வெற்றி பெறல் (பதி.46:13).*

**வெல்லல்** *(பெ.) – எதிரியைக் கீழ்ப்படுத்தித் தான் மேம்படுதல் (வெற்றி கொள்ளுதல்) (குறள்.647).*

**வெவ்வர்** *(பெ.) – விரும்பியோர் (பதி.41:20).*

**வெவ்வாய்** *(பெ.) – கொடிய வாய் (குறு.373:3).*

**வெவ்வினை** *(பெ.) – கொடுந் தொழில் (நற்.189-6).*

**வெள்ளில்** *(பெ.) – 1.விளாம் பழம் (நற்.24:5). 2.பாடை (புற.360:16). 3.வெற்றிடம் (புற.363:10).*

**வெள்ளேறு** *(பெ.) – வெள்ளை எருது (கலி.105:44).*

**வெள்வசி** *(பெ.) – வெறும்பிளப்பு (நிலப் பிளப்பு) (நற்.82:7).*

**வெள்ளத்தானை** *(பெ.) – பெருஞ்சேனை (அக.142:13).*

**வெள்ளம்** *(பெ.) – 1.எண்ணலளவைப் பெயர் (மது.22). 2.நீர்ப் பெருக்கு (மது.109). 3.நீர் (குறள்.595).*

**வெள்ளயிர்** *(பெ.) – கண்ட சருக்கரை (நெடு.56).*

**வெள்ளி** *(பெ.) – 1.ஒரு வகை மாழை (நற்.124-6). 2.வெள்ளிக் கோள் (சுக்கிரன்) (நற்.230-4). 3.வெண்ணிறமுடையது (புற.41:10).*

**வெள்ளிக் கோல்** *(பெ.) – வெள்ளிக் கம்பி (அக.37:123).*

**வெள்ளிடை** *(பெ.) – வெற்றிடம் (புற.245:3).*

**வெள்ளிய** *(பெ.) – வெள்ளியாலாகிய (கலி.73:3).*

**வெள்ளெலி** *(பெ.) – எலி வகை (அக.133:1).*

**வெள்ளை** *(பெ.) – 1.வெள்ளாடு (அக.104:9). 2.வெண்ணிறம் (புற.286:1). 3.வெள்ளெருது (கலி.101:27). 4.பலதேவன் (பதி.3:81).*

**வெள்ளோத்திரம்** *(பெ.) – பாலை நில மரவகை (ஐங்.301).*

**வெளிப்படாது** (வி.எ.) – அறியப்படாது (அக.276:13).

**வெளிப்படாமை** (பெ.) – தெரியாமல் (நற்.61:6).

**வெளியது** (பெ.) – வெள்ளாடை (புற.385:7).

**வெளியார்** (பெ.) – அறிவில்லாதவர் (குறள்.714).

**வெளில்** (பெ.) – 1.தயிர் கடைதற்கு நடப்பட்ட தூண் (நற்.12:2). 2.அணில் (அக.12:7). 3.யானைகட்டும் தூண் (கட்டுத்தறி) (புற.44:3).

**வெளிறு** (பெ.) – 1.வயிரமின்மை (நற்.261:7). 2.இளமை (நற்.302:6). 3.குற்றம் (அக.106:11). 4.ஒளி (புற.177:2). 5.அறியாமை (குறள்.503).

**வெற்பு** (பெ.) – மலை (குறு.335-4).

**வெற்றி** (பெ.) – மேம்படுதல் (ஐங்.461).

**வெற்று** (பெ.) – வெறுமையான (புற.261:4).

**வெறி** (பெ.) – 1.வெறியாட்டம் (குறு.53:3). 2.மணம் (நற்.40:5). 3.கடுப்பு (நற்.66:4). 4.தெய்வக்குற்றம் (நற்.173:4). 5.அச்சம் (நற்.226:3). 6.தெய்வக் கடமை (தொல்.21:5). 7.ஒழுங்கு (மது.617). 8.மயக்கம் (கலி.43:1). 9.வெறிப்பாட்டு (பரி.5:14). 10.தேன் (பதி.11:62).

**வெறிக்களம்** (பெ.) – வெறியாட்டு நிகழுமிடம் (மது.284).

**வெறிது** (பெ.) – பயனின்றி (கலி.72:17).

**வெறிமனை** (பெ.) – வெறியாடுதலை யுடைய வீடு (நற்.34:9).

**வெறிய** (பெ.) – அறிவற்ற செயல் (குறள்.175).

**வெறியாட்டு** (பெ.) – தெய்வமேறி ஆடுதல் (தொல்.20:5).

**வெறுமை** (பெ.) – பிறிதொன்றுமில்லை (கலி.144:46).

**வெறுக்கை** (பெ.) – 1.செல்வம் (அக.1:9). 2.வாழ்வின் அடிப்படையாயுள்ளது (பதி.15:21). 3.மிகுதி (குறள்.600).

**வெறுத்த** (வி.எ.) – 1.மிக்க (அக.2:11). 2.விருப்பமற்ற (அக.207:17). 3.செறிந்த (மலை.93).

**வெறுத்தக்க** (வி.எ.) – செறியத்தக்க (குறள்.993).

**வெறுப்ப** (பெ.எ.) – மிக (அக.33:1).

**வெறுப்பு** *(பெ.) – விருப்பின்மை (குறள்.70:6).*

**வென்வேல்** *(பெ.) – வெற்றிவேல் (நற்.18:4).*

**வென்ற** *(வி.எ.) – அடக்கிய (அக.202:3).*

**வென்றது** *(பெ.) – வெற்றி பெற்றது (புற.288:2).*

**வென்றி** *(பெ.) – வெற்றி (குறு.111:1).*

**வென்றியர்** *(பெ.) – வெற்றியாளர் (புற.197:6).*

**வேகம்** *(பெ.) – சினம் (புற.37:2).*

**வேங்கை** *(பெ.) – 1.வேங்கைமரம் (குறு.26:1). 2.புலி (வகைகளுள் ஒன்று) (நற்.381:1-5). 3.ஒரு மலை (புற.336:9-10).*

**வேசரி** *(பெ.) – கோவேறு கழுதை (பரி.22:24).*

**வேசனைநாற்றம்** *(பெ.) – ஆற்று வெப்ப மணலில் புது வெள்ளம் வரும் பொழுது உருவாகும் நாற்றம் (பரி.20:12-13).*

**வேட்கும்** *(வி.) – விரும்பும் (புற.280:4).*

**வேட்கை** *(பெ.) – 1.விருப்பம் (குறு.287:4-5). 2.தாகம் (புற.154:2-3). 3.காமவிருப்பம் (கலி.110:3). 4.ஆசை (மணி.26:5).*

**வேட்கைத்து** *(வி.) – விரும்பும் தன்மையது (ஐங்.51).*

**வேட்கையம்** *(வி.) – விரும்பினோம் (ஐங்.359).*

**வேட்கையர்** *(பெ.) – விரும்புநர் (புற.270:10).*

**வேட்கோ** *(பெ.) – குயக்குல மகன் (புற.32:8-9).*

**வேட்ட** *(பெ.) – விரும்பிய (குறு.143:4).*

**வேட்ட** *(வி.) – 1.பெய்த (இட்ட) (நற்.14:5). 2.வேள்வி செய்த (அக.36:22).*

**வேட்டது** *(பெ.) – விரும்பியது (நற்.136-3).*

**வேட்டம்** *(பெ.) – 1.வேட்டை (குறு.56:1). 2.வேட்கை (ஆசை) (புற.31:5). 3.விருப்பம் (புற.214:6-7). 4.விரும்பிய பொருள் (கலி.46:1-2).*

**வேட்டல்** *(பெ.) – வேள்வி செய்தல் (பதி.24:6).*

**வேட்டவை** *(பெ.) – விரும்பியவை (கலி.141:2).*

**வேட்டற்று** *(வி.) – விரும்பும் தன்மைத்து (குறள்.1145).*

**வேட்டனை** *(வி.) – விரும்பினை (நற்.398:10).*

**வேட்டாங்கு** *(வி.) – விரும்பினாற்போல (குறு.178:3).*

**வேட்டு** *(பெ.) – வேட்டை (நற்.285:6).*

**வேட்டு** *(வி.) – 1.விரும்பி (குறு.154:3). 2.எரியச் செய்து (பதி.3:3). 3.கொன்று (பதி.4:11). 4.வேள்விசெய்து (பதி.9:15).*

**வேட்டுவர்** *(பெ.) – 1.வேட்டை மேற்செல்பவர் (அக.270:3). 2.வேட்டுவச் சாதியினர் (வேடர்) (புற.324:3).*

**வேட்டேம்** *(வி.) – விரும்பினேம் (ஐங்.10).*

**வேட்டோர்** *(பெ.) – விரும்பினோர் (நற்.216:11).*

**வேட்ப** *(வி.) – வருந்துவர் (புற.270:3-4).*

**வேட்பன** *(பெ.) – விரும்புபவை ஆகிய செயல்கள் (குறள்.697).*

**வேட்பிக்க** *(வி.) – செய்விக்க (பதி.3:2).*

**வேட்பு** *(பெ.) – விருப்பம் (பதி.21:27).*

**வேண்ட** *(வி.) – 1.விண்ணப்பம் செய்ய (நற்.34:9). 2.கேட்டுக்கொள்ள (புற.269:7). 3.விரும்ப (குறள்.362).*

**வேண்டலம்** *(வி.) – விரும்பேம் (புற.205:2).*

**வேண்டலன்** *(வி.) – 1.விரும்பேன் (குறு.280:4-5). 2.விரும்பான் (புற.216:7).*

**வேண்டற்க** *(வி.) – விரும்பாதொழிக (குறள்.177).*

**வேண்டற்பாற்று** *(பெ.) – விரும்பும் தன்மையது (குறள்.2).*

**வேண்டா** *(வி.) – 1.விரும்பாத (நற்.254:11). 2.தேவைஇல்லாத (புற.16:10). 3.வேண்டுவதில்லை (புற.101:10). 4.விரும்பாமல் (புற.371:18).*

**வேண்டாதார்** *(பெ.) – 1.பகைவர் (குறள்.584). 2.விரும்பாதவர் (குறள்.922).*

**வேண்டாது** *(பெ.) – 1.விரும்பாமல் (நற்.328:8). 2.விரும்பாது (குறள்.660). 3.வேண்டாதசெயல் (கலி.67:10).*

**வேண்டாமை** *(பெ.) – 1.விரும்பாதிருத்தல் (வெறுத்தல்) (குறள்.4). 2.அவாவாமை (குறள்.362).*

**வேண்டார்** *(பெ.) – 1.பகைவர் (புற.135:20). 2.ஏற்றுக்கொள்ளாதவர் (குறள்.660).*

**வேண்டார்** *(வி.) – விரும்பார் (புற.345:12-13).*

**வேண்டாள்** *(வி.) – விரும்பாள் (புற.346:2).*

**வேண்டிய** *(பெ.) – 1.விரும்பியவை (குறு.349:5). 2.படைத்தபொருள்கள் (குறள்.373).*

**வேண்டிய** *(வி.) – 1.விரும்பிய (அக.52:3). 2.தேவையான (பெரும்.426).*

**வேண்டியது** *(பெ.) – 1.விரும்பிய பொருள் (புற.38:9). 2.விரும்புதல் (அக.389:38).*

**வேண்டியாங்கு** *(வி.) – விரும்பியபடி (புற.171:5).*

**வேண்டின்** *(வி.) – விரும்பின் (அக.98:20).*

**வேண்டு** *(வி.) – 1.விரும்பிய (குறு.195:3). 2.விரும்பு (குறு.321:8). 3.தேவையான (பதி.13:26).*

**வேண்டுநர்** *(பெ.) – 1.வேண்டுவோர் (தேவைப்படுபவர்) (புற.366:17). 2.விரும்புவோர் (பரி.17:8).*

**வேண்டுபவர்** *(பெ.) – 1.காதலிப்பவர் (குறள்.173). 2.விரும்புவர் (குறள்.310).*

**வேண்டுவ** *(பெ.) – தேவைப்படுவன (பொரு.128).*

**வேண்டுவன** *(பெ.) – 1.தேவைப்படுவன (ஐங்.105). 2.ஆவன (ஐங்.119).*

**வேண்டேம்** *(வி.) – விரும்பேம் (புற.146:2).*

**வேதநெறி** *(பெ.) – மறையொழுக்கம் (புற.2:18).*

**வேதல்** *(பெ.) – சுடுதல் (ஐங்.327).*

**வேந்தன்** *(பெ.) – அரசன் (நற்.153:7-8).*

**வேந்து** *(பெ.) – 1.அரசன் (குறு.242:5). 2.அரர்சாதி (குறள்.681). 3.அரசபதவி (குறள்.899).*

**வேப்பு** *(பெ.) – வேம்பு (அக.176:8).*

**வேபாக்கு** *(பெ.) – வெப்பமுறல் (குறள்.1128).*

**வேம்பி** *(பெ.) – ஓர் ஊர் (அக.249:9).*

**வேம்பு** *(பெ.) – வேப்பமரம் (குறு.224:1).*

**வேய்** *(பெ.) – மூங்கில் (குறு.7:6).*

**வேய்** *(வி.) – 1.மூடிய (குறு.235:5). 2.பொருந்திய (அக.27:17). 3.சூடிய (அக.391:4).*

**வேய்வை** *(பெ.) – குற்றம் (புற.369:20-21).*

**வேர்** *(பெ.) – 1.தாவரங்களின் தரையில் ஊன்றிநிற்கும் பகுதி (குறு.18:1). 2.வேர்வை (புற.69:3). 3.அடி (புற.229:3). 4.வெட்டிவேர் (விலாமிச்சவேர்) (பரி.12:16).*

**வேரல்** *(பெ.) – 1.சிறுமூங்கில் (குறு.18:1). 2.சிறுமூங்கில்பூ (குறு.71).*

**வேரி** *(பெ.) – 1.மது (புற.152:27). 2.தேன் (சில.17:6:2).*

**வேல்** *(பெ.) – 1.போர்க்கருவிகளுள் ஒரு வகை (குறு.11:6). 2.கூர் முள் மர வகை (நற்.256:9).*

**வேலம்** *(பெ.) – வேலமரம் (நற்.302:8).*

**வேலன்** *(பெ.) – 1.வெறியாட்டாளன் (குறு.53:3). 2.வேற்படை தாங்கியவன் (புற.69:13).*

**வேலான்** *(பெ.) – முருகன் (கலி.27:16).*

**வேலி** *(பெ.) – 1.முள் கழி முதலியவற்றால் அமைக்கப்படும் பாதுகாப்பு (குறு.18:1). 2.நாற்புறமும் சூழ்வது (குறு.18:1). 3.எல்லை (குறு.345:7). 4.மருதவைப்பு (நற்.339:10). 5.காவல் (அக.122:21). 6.நில அளவு (பொரு.246:247). 7.தற்பாதுகாப்பு (குறள்.1016).*

**வேழம்** *(பெ.) – 1.யானை (குறு.37:2). 2.கரும்பு (நற்.241:5). 3.கொறுக்கைச்சி (அக.6:7). 4.பரணிநாள் (மேடராசி) (பரி.11:2).*

**வேழமுகவை** *(பெ.) – யானைப்பரிசில் (புற.369:27).*

**வேள்** *(பெ.) – 1.முருகன் (குறு.111:2). 2.சிற்றரசன் (குறுநிலமன்னன்) (அக.1:3). 3.வேளிர் குடி (அக.208:15). 4.விருப்பம் (வேட்கை) (கலி.20:9).*

**வேள்வி** *(பெ.) – 1.களவேள்வி (அக.13:11). 2.யாகம் (அக.220:5-6) 3. ஐவகைவேள்விகளுள் ஒன்று (விருந்தோம்பல்) (குறள்.87).*

**வேள்வித்தூண்** *(பெ.) – வேள்விச்சாலையில் நடும் தூண் (புற.400:19).*

**வேள்விப்பயன்** *(பெ.) – விருந்தோம்பலின் பயன் (குறள்.87).*

**வேளா** *(வி.) – 1.வேள்வி செய்யாத (அக.24:1). 2.மணஞ் செய்யப்படாத (புற.341:10). 3.விரும்பாத (கலி.68:21).*

**வேளாண்மை** *(பெ.) – உதவி (குறள்.91).*

**வேளா முயக்கம்** *(பெ.) – விரும்பாத புணர்ச்சி (கலி.68:21).*

**வேளிர்** *(பெ.) – தமிழ் அரச குலத்தார் (குறு.164:3).*

**வேளை** *(பெ.) – கீரைவகைகளுள் ஒன்று (புற.23:21).*

**வேற்றார்** *(பெ.) – பகைவர் (பரி.20:71).*

**வேற்றுப்புலம்** *(பெ.) – பகைவர் நாடு (புற.31:12).*

**வேற்றுமை** *(பெ.) – 1.வேறுபாடு (வித்தியாசம்) (புற.23:3). 2.வேறாந்தன்மை (புற.183:8). 3.உயர்வுதாழ்வு (குறள்.972). 4.பகைமை (கலி.12:17). 5.மெய்வேறுபாடு (கலி.88:15).*

**வேற்றோர்** *(பெ.) – அயலோர் (புற.367:3).*

**வேறல்** *(பெ.) – செல்லுதல் (புற.45:6).*

**வேறு** *(பெ.) – 1.அயல் (குறு.176:6-7). 2.மாறுபாடு (குறு.362:3). 3.கூறு(பிளவு) (அக.29:6-7). 4.மற்றொன்று (குறு.366:3). 5.வேற்றுமை (அக.73:9). 6.தனித்தனி (அக.147:2). 7.பகை (புற.17:31). 8.கூறு (வகை) (குறள்.374). 9.புதிது (கலி.95:5-6. 10.தீங்கு (கலி.95:7).*

**வேறுபுலம்** *(பெ.) – வேறாகிய நிலம் (வேற்றுநாடு) (புற.22:37).*

**வேனல்** *(பெ.) – வேனிற்காலம் (புற.307:4).*

**வேனில்** *(பெ.) – 1.கோடைக் காலம் (குறு.22:4). 2.வெம்மை (அக.69:9).*

**வேனிலான்** *(பெ.) – காமன் (கலி.30:4).*

**வை** *(பெ.) – வைக்கோல் (அக.37:5).*

**வை** *(பெ.) – கூர்மை (குறு.14:2).*

**வைகல்** *(பெ.) – 1.நாள் (குறு.137:3-4). 2.விடியல் பொழுது (குறு.285:1). 3.காலை (நற்.306:8-9). 4.வேளை (புற.248:4-5). 5.நிலைபேறு (புற.392:11). 6.கழிதல் (பதி.71:16). 7.தங்குதல் (கலி.78:26).*

**வைகறை** *(பெ.) – விடியற்பொழுது (குறு.157:4).*

**வைகாவைகல்** *(பெ.) – கழியாதநாள்கள் (குறு.285:1).*

**வைகினை** *(பெ.) – தங்கினை (பரி.6:81).*

**வைகுந்து** *(வி.) – நிறைந்திருக்கும் (புற.384:9).*

**வைகுநிலை** *(பெ.) – இரவு புலரும் காலம் (அக.299:11).*

**வைத்த** *(வி.) – 1.தங்கச்செய்த (நற்.142:6). 2.காத்த (அக.60:12-3). 3.இட்ட(புற.234-3).*

**வைத்தது** *(பெ.) – வைக்கப்பெற்றது (புற.357:4-5).*

**வைத்து** *(வி.) – 1.தங்கச் செய்து (நற்.360:8-9). 2.இட்டு (அக.265:13). 3.கொண்டு (ஐங்.207). 4.காத்து (குறள்.228). 5.கருதி (குறள்.1269). 6.பொருத்தி (கலி.54:10). 7.சேர்த்து (பரி.19:41).*

**வைத்தூறு** *(பெ) – வைக்கோல் போர் (குறள்.435).*

**வைத்தென** *(வி.) – நீங்க (நற்.315:4).*

**வைந்நுதி** *(பெ.) – கூரியநுனி (நற்.205:3-4).*

**வைந்நுனை** *(பெ.) – கூரியநுனி (அக.4:1).*

**வைப்பு** *(பெ.) – 1.செல்வம் (சேமநிதி) (குறு.71:1). 2.ஊர் (அக.126:13). 3.இடம் (அக.189:3). 4.நாடு (பதி.53:4). 5.உலகம் (குறள்.149).*

**வைப்புழி** *(பெ.) – சேமிப்பிடம் (குறள்.226).*

**வையகம்** *(பெ.) – பூமி (உலகம்) (நற்.130:10-11).*

**வையத்தார்** *(பெ.) – உலகினர் (குறள்.238).*

**வையம்** *(பெ.) – 1.வண்டி (குறு.61:1). 2.பூமி (உலகம் (புற.8:1).*

**வையார்** *(வி.) – 1.மனத்தில் கொள்ளார் (மதியார்) (குறள்.155).*

**வையினர்** *(வி.) – வைத்தனர் (கலி.134:19).*

**வெளவ** *(வி.) – கவர (கைக்கொள்ள) (ஐங்.125).*

**வெளவல்** *(பெ.) – 1.கைப்பற்றல் (நற்.379:1-5). 2.சிதைத்தல் (கலி.5:6). 3.கவர்தல் (கலி.133:13). 4.பற்றிக்கொள்ளல் (சார்தல்) (பதி.8:84).*

**வெளவி** *(வி.) – கைப்பற்றி (கொள்ளை கொண்டு) (நற்.360:3).*

**வெளவினர்** *(வி.) – கவ்வினர் (அக.236:12-3).*

**வெளவுநர்** *(பெ.) – ஆறு அலைப் போர் (வழிபறிப்பவர்) (அக.1:14).*

**வெளவுபு** *(வி.) – உள்ளடக்கி (புற.260:1).*

******